# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

**DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION**

**TIRUNELVELI 627012, TAMIL NADU.**

# உரையாசிரியர்களும் உரை மரபும்

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி — 627 012.**

## உரையாசிரியர்களும் உரை மரபும்

L T P C

2 4 0 4

**நோக்கம்:**

1. உரையாசிரியர்கள், இலக்கியம் மற்றும் இலக்கணத்தின் உயிரோட்டத்திற்கு அளித்த மாபெரும் பங்கினை அறியச் செய்தல்.
2. உரை மரபு, உரை திறன் ஆகியவற்றின் சிறப்புகளைப் புலப்படுத்துதல்.
3. உரையின் பயனை உணர்த்துதல்.

**பயன்:**

1. உரையாசிரியர்களின் இன்றியமையாமையை உணர்தல்.
2. உரைமரபின் வாயிலாக, இலக்கண, இலக்கிய நுண்ணறிவைப் பெறுதல்.
3. உரைமரபின் பல்வேறு பரிமாணங்களை உணர்தல்.

**அலகு - 1:**

**உரையாசிரியர்களும் உரை மரபும் - அறிமுகம்:**

உரையின் தோற்றமும் வளர்ச்சியும் - உரையாசிரியர்கள் - உரையின் வகைகள் - உரை செய்யும் உதவி.

(5L10T)

**அலகு - 2:**

**இலக்கண உரையாசிரியர்களும், உரை மரபும்:**

இறையனார் அகப்பொருள் உரை - தொல்காப்பிய உரையாசிரியர்கள் - இளம்பூரணரின் உரைமரபு - சேனாவரையின் உரைச் செம்மை - பேராசிரியரின் உரைச்சிறப்பு.

(7L15T)

**அலகு - 3:**

**இலக்கிய உரையாசிரியர்களும், உரை மரபும்:**

நச்சினார்க்கினியரின் பத்துப்பாட்டு உரை வளம் - பரிமேலழகரின் திருக்குறள் உரைச் செறிவு - அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரை நயம்.

(7L10T)

**அலகு - 4:**

**சமய நூல் உரையாசிரியர்களும், உரை மரபும்:**

நாலாயிர திவ்வியப் பிரபந்த உரைகள் - திருமுறை உரைகள் - உரைமணி மு.கதிரேசன் செட்டியாரின் செந்தமிழ் உரை மரபு - உரை வித்தகர் பெரியவாச்சான் பிள்ளையின் மணிப்பிரவாள நடைத்திறன்.

(6L15T)

**அலகு - 5:**

**பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்களும், உரை மரபும்:**

சரவணப் பெருமாள் ஐயர், ஆறுமுக நாவலர், இராமலிங்க அடிகள், டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர், ந.மு.வேங்கடசாமி நாட்டார், திரு.வி.க ஆகிய உரையாசிரியர்களும், அவர்களின் உரை மரபுகளும்.

(5L10T)

(30L+60 L =90 Hours)

## அலகு - 1

## உரையின் தோற்றமும் வளர்ச்சியும்

"உரை எழுதுவது தமிழ் மொழியில் ஒரு தனித்துறையாக வளர்ந்துள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றில் நூலாசிரியர்களுக்குச் சமமாக உரையாசிரியர்கள் இடம் பெற்றுள்ளனர். மிகப் பழமையான இலக்கியங்கள் நிறைந்த தமிழ் மொழிக்கண் உரைகள் தோன்றுவது இயல்பே" **(வ.சு.ப.மாணிக்கம், சிந்தனைக் களங்கள், ப. 313)** என்பர் அறிஞர் வ.சு.ப.மாணிக்கம். அவர் கூறுவது போல், தமிழ் இலக்கிய வரலாற்றில் பழந்தமிழ் நூல்களுக்குத் தோன்றியுள்ள உரைகள் மிகச் சிறந்த இடத்தினைப் பெறுகின்றன. அவ்வுரைகள் யாவும் ஒரே காலத்தில் தீடிரென்று தோன்றியவை அல்ல. அவை, காலப் போக்கிற்கு ஏற்றவாறு, முதலில் சிறிய அளவில் அரும்பி, மெல்ல மெல்ல வளர்ந்து, படிப்படியாய் முழுமை பெற்றனவாகும். இக்காலத்தில் நூல் மதிப்பீடு செய்யப்படுவது போல், பழங்காலத்தில் நூலை அரங்கேற்றும் வழக்கம் இருந்து வந்தது. நூல் அரங்கேற்றம் என்பது அக்காலத்தில் அவையில் கூடி இருக்கும் புலவர்களின் நன்மதிப்பையும் போற்றுதலையும் ஒரு நூல் பெறுவதாகும். நுண்மாண் நுழைபுலம் சான்ற புலவர்கள் அந்நாளில் அவைக்கு வரும் நூல்களை நுணுகி ஆராய்வர், அவற்றின் சொற்பொருட் செவ்விகளைத் தன் அறிவென்னும் துலாக்கோலில் இட்டு மதிப்பிடுவர். இங்ஙனம் நூலின் அரங்கேற்றத்தால் நூல்களை நுணுகி ஆராயும் முறைமையும், சிறந்த பகுதிகள் இவை, சிறவாத பகுதிகள் இவை எனப் பகுத்துக் காட்டும் நெறியும், நூலின் முழுத் தகுதியினையும் காணும் நல்ல ஆராய்ச்சி நெறிமுறை ஆகும்.

சீவகசிந்தாமணிக்கு நச்சினிா்க்கினியா் எழுதிய முதல் உரை சமணப் பெரியோா்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்றும், சமண மரபுகளையும் மெய்ம்மைகளையும் நன்கு கற்றபின் அவா் எழுதிய இரண்டாவது உரையே ஏற்றுக்கொள்ளப்பட்டது. இச்செய்தியால் நூல் அரங்கேற்றம் போல உரை அரங்கேற்றமும் நிகழ்ந்தமை அறியப்படும்.

'கற்றலின் கேட்டலே நன்று' என்பது அக்காலத்தவா் கொள்கையாக இருந்தது. நூல்களுக்கு உரை எழுதாமல், வாயால் விளக்கிச் சொல்லும் வழக்கமும், செவியில் கேட்டு உணா்ந்து புலமை பெறும் வழக்கமும் அக்காலத்தில் நாடெங்கும் பரவி இருந்தன. ஆசிரியா் தம் மாணவா்களுக்கும், தந்தை தம் மக்களுக்கும் வாய்மொழியாகப் பழைய நூல்களுக்கு உரையும் விளக்கமும் கூறி வந்தனா். இவ்வழக்கம் வாழையடி வாழையாக - வழி வழியாக - தொடா்ந்து வந்தது. இதன் பயனாக, ஒரு நூல் பல தலைமுறைகளைத் தாண்டி வரும்போது, ஒவ்வொரு தலைமுறைக்கும் உரிய கருத்துக்களையும் விளக்கங்களையும் சோ்த்துக் கொண்டு வளா்ந்து வந்தது. இங்ஙனம் வாய் மொழியாகப் பல்லாண்டுகள் வழங்கி வந்த இக்கருத்துக்களும் உரை விளக்கங்களும் காலப்போக்கில் ஏடுகளில் எழுதப்பட்டன.

'இறையனாா் களவியல் உரை' நக்கீரனாா் காலம் தொடங்கி நீலகண்டனாா் காலம் வரையில் கா்ண பரம்பரையாக வழங்கி வந்தது. இவ்வாறு ஒன்பது தலைமுறைகள் வாய்மொழியாக வழங்கி வந்த இவ்வுரையானது கி.பி. 8 ஆம் நூற்றாண்டளவில் ஏட்டு வடிவில் அமையலாயிற்று. "நூலுக்கு உரை எழுதும் பழக்கம் சங்க காலத்தில் இல்லை. சங்க கால இலக்கியங்களாகிய பத்துப்பாட்டு போன்றவற்றுக்கும், தொல்காப்பியத்திற்கும், சிலப்பதிகாரத்திற்கும் மிகவும் பிற்காலத்திலேயே பல அறிஞா்கள் உரை எழுதியுள்ளாா்கள். பாட்டுக்கு உரை

என்ற வகையில் முதலில் தோன்றிய உரை இறையனார் களவியல் உரையே எனக் கொள்ள வாய்ப்பு இருக்கின்றது'' **(அ.மு.பரமசிவானந்தம், தமிழ் உரைநடை, ப. 79)** என்னும் பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தத்தின் கருத்து இங்கே நினைவுகூரத் தக்கதாகும்.

வாய்மொழி வாயிலாக வளர்ந்து வந்த உரை, ஏட்டில் எழுதப்பட்ட பின்னரும் உரையாடுவது போன்ற நிலையிலேயே அமைந்தது. ஆசிரியர் பாடம் கூற, அதைக் கேட்கும் மாணாக்கன் ஐயங்களை எழுப்ப, ஆசிரியர் அவற்றிற்குத் தக்க விடைகளைச் சொல்லி விளக்கும் முறையிலேயே உரைகள் அமைந்தன. நேரே ஏட்டில் உரை எழுதிய உரையாசிரியர்களும் தம்மை அறியாமலே இம்முறையினை மேற்கொண்டனர். இங்ஙனம் வாய்மொழி தன் செல்வாக்கை எழுத்திலும் நிலைநாட்டியது. ''உரையாசிரியர்கள் என்று நாம் போற்றும் முன்னோரெல்லாம் பாடஞ்சொல்லிய வகுப்பாசிரியர்கள் என்பதனை நினைவு கொள்ள வேண்டும். பாடத்திற் சொல்லிய உரைகளே அவர்கள் எழுதிய உரைகளாம்'' **(வ.சு.ப. மாணிக்கம், தொல்காப்பியத் திறன், ப. 29)** என்பர் அறிஞர் வ.சு.ப.மாணிக்கம்.

இறையனார் அகப்பொருள் உரையும், சேனாவரையர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு எழுதிய உரையும், பேராசிரியர் திருக்கோவையாருக்கு எழுதிய உரையும், காலிங்கர் திருக்குறளுக்கு எழுதிய உரையும் ஆசிரியர் மாணாக்கர்களுக்குப் பாடம் கூறும் வகையில் வினா விடையாக அமைந்துள்ளன.

**உரையின் வளர்ச்சி**

ஒரு நூலுக்கு முதன்முதலில் உரை எழுத முயன்றவர்கள் எடுத்த எடுப்பில் பெரிய அளவில் விரிவுரையோ விளக்கவுரையோ எழுதவில்லை. அவர்கள், முதலில் செய்யுளில் உள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் எழுதினர், சொற்களைக்

கொண்டு கூட்டி முடிக்கும் வகையினைச் சுட்டி, இன்றியமையாத சில வரலாற்றுக் குறிப்புக்களை வரைந்து, சில பகுதிகளுக்கு மிகச் சுருக்கமாக உரை நயம் எழுதினர். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்திற்கு முதலில் தோன்றியது அரும்பதவுரையே ஆகும். இவ் அரும்பதவுரை தன் பெயருக்கேற்ப, ஆங்காங்கு உள்ள திரிசொற்களின் பொருளை மட்டுமே ஒருவாறு புலப்படுத்திச் சிற்சில இடத்து மேற்கோள்களை உடையதாய், மிகவும் சுருக்கமாக நூல் முழுமைக்கும் அமைந்துள்ளது. பதிற்றுப்பத்து, புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகிய சங்க நூல்களின் பழையவுரைகளும் குறிப்புரைகளாகவே உள்ளன.

தொடக்க நிலையில் நூல்களுக்குக் குறிப்புரைகள் எழுதியவர்களைப் பற்றிய வரலாறு எதுவும் தெரியவில்லை. ‘ஊர் வேண்டேன், பேர் வேண்டேன்’ என்று எல்லாவற்றையும் துறந்து, ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்னும் ஆன்றோர் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்து, அருந்தொண்டாற்றிய பெருமக்களாக அவர்கள் விளங்குகிறார்கள்.

**விளக்கவுரை**

ஒரு நூலுக்குக் குறிப்புரை தோன்றிய பின், காலம் செல்லச் செல்ல அந்நூலைப் பற்றிய கருத்துக்கள் வளர்ந்தன. குறிப்புரை மெல்ல மெல்ல விரிவடைந்து விளக்கவுரை ஆயிற்று. உரை வளர்ந்தபோது பல மேற்கோள்கள் இடம் பெற்றன. இவ்வாறு ஒரு நூலுக்குச் சிறிய அளவில் தோன்றிய குறிப்புரை, காலப்போக்கில் விளக்கவுரை ஆயிற்று.

ஒரு நூலுக்கு, பல உரைகள் தோன்றிய பின்னர், விளக்கவுரை தோன்றுகிறது. அது, தனக்கு முன் தோன்றிய உரைகளின் கருத்துக்களை எல்லாம் தொகுத்துத் தரும் வாய்ப்பைப் பெறுகின்றது. முன்னைய எல்லா உரைகளிலிருந்து

நல்லவற்றை மேற்கொள்ளவும், அவற்றில் உள்ள தவறான கருத்துக்களைத் திருத்தவும், கால வளர்ச்சிக்கு ஏற்ற புத்தம் புதிய கருத்துக்களைச் சேர்க்கவும் விளக்கவுரைக்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இக்காரணங்களால் பின்னே தோன்றிய விளக்கவுரைகள் செல்வாக்கு எய்தின, நிலைத்த வாழ்வு பெற்றன. முன்னே தோன்றிய உரைகளோ படிப்பாரற்றுப் போயின, புறக்கணிக்கப்பட்டன.

இளம்பூரணர் தொல்காப்பியத்திற்கு எழுதிய உரைக்குப் பின்னே தேன்றிய சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் ஆகியோரது உரைகள் சிறப்பிடம் பெற்றன. நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழிக்கு இறுதியில் தோன்றிய ஈடு (36,000 படி) முதன்மை பெற்றது. திருக்குறளுக்கு ஒன்பது உரைகளுக்குப் பின் தோன்றிய பரிமேலழகர் உரை நிலைபெற்றது. மயிலைநாதர், சங்கர நமவசிவாய ஆகிய இருவர்க்கும் பின் தோன்றிய சிவஞான முனிவர் இயற்றிய நன்னூல் விருத்தியுரை செல்வாக்குப் பெற்றது. சிவஞான போதத்திற்குப் பல உரைகள் தோன்றிய பின்னர் எழுந்த ‘சிவஞான பாடியம்’ சிறப்புப் பெற்றது.

**மறுப்புரை**

ஒரு நூலுக்கு உரை எழுதுவோர், தமக்கு முன் அந்நூலுக்கு உரை கண்டோரைச் சில இடங்களில் மறுப்பது உண்டு. ஆனால் ஒரு நூலையே மறுத்து ஓர் உரை தோன்றியுள்ளது. திருவாரூர் வைத்தியநாத தேசிகர் எழுதிய ‘இலக்கண விளக்கம்’ என்னும் நூலை மறுத்து, சிவஞான முனிவர் ‘இலக்கண விளக்கச் சூறவாளி’ என்னும் பெயரில் ஒரு நூலை இயற்றியுள்ளார்.

**வசனம்**

கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், செய்யுள் வடிவில் உள்ள புராண இதிகாசக் கதைகளை உரைநடையில் தரும் முயற்சி தோன்றியது. இராமாயணம், பாரதம், பெரியபுராணம், கந்த புராணம் அகியவற்றைப் பொது மக்களிடம் பரப்பும் பணியில் சில அறிஞர்கள் ஈடுபட்டனர். எழுதப் படிக்கத் தெரிந்து, சிறிதளவு கல்வியறிவு உடையவரும் கற்றுப் பயனடையும் வகையில், செய்யுளின் கருத்தை விரித்து 'வசனம்' என்ற பெயரில் அவர்கள் எழுதினர்.

அருட்புலவர்கள் இயற்றிய பக்திப் பனுவல்களைப் பன்முறை ஓதி உணர்ந்து இன்புற வேண்டும் அன்றி, அவற்றிற்கு உரை எழுதக் கூடாது' என்ற கொள்கை பல ஆண்டுகளாகச் சமய உலகில் நிலவி வந்தது. எனினும் இராமானுசர் காலத்தில் ஆழ்வார்கள் அருளிய பக்திப் பாடல்களுக்கு உரை காணும் முயற்சி தோன்றியது. அக்காலத்தில் இருந்த வைணவப் பெரியோர்கள் அம்முயற்சியை முதலில் வரவேற்கவில்லை. இருப்பினும், வைணவச் சான்றோர்கள் பொதுமக்களிடையே ஆற்றிய சமயச் சொற்பொழிவுகள் **'கால் கொம்பு சுழி ஏறாமல்'** அடியவர்களால் எழுதி வைக்கப்பட்டன. இதனால் ஆழ்வார்களின் பாடல்களுக்கு உரைகள் வாய்ந்துவிட்டன.

**தெளிவுரைகள்**

அண்மைக் காலத்தில் உரைகளின் வரலாற்றில் புரட்சி ஏற்பட்டுள்ளது. பழம்பெரும் நூல்களுக்கு மிக எளிய முறையில் உரைகள் எழுதி அவற்றைப் பொதுமக்களிடையே பரப்பும் முயற்சி இன்று தமிழகத்தில் முனைப்போடு நடைபெற்று வருகிறது. இம் முயற்சிக்கு வித்து இட்டவர் அறிஞர் மு. வரதராசன் ஆவார். அவரது 'திருக்குறள் தெளிவுரை' என்னும் நூல் இவ்வகையில்

முன்னோடியாகக் கருதத்தக்கதாகும். ‘திருக்குறள் தெளிவுரை’ யின் 175 ஆவது பதிப்பு அண்மையில் (2003) வெளிவந்துள்ளது. அறிஞர் மு.வ.வை அடியொற்றிப் பலர் இன்று தொல்காப்பியம் முதல் ஆத்திசூடி வரை உள்ள பழந்தமிழ் நூல்களுக்குத் தெளிவுரைகள் எழுதியுள்ளனர்.

**உரைகளைப் பற்றிய ஆய்வு முயற்சிகள்**

உரைகளைப் பற்றிய ஆய்வு முயற்சிக்குக் கால்கோள் இட்ட பெருமை அறிஞர் மு.வை. அரவிந்தனையே சாரும். அவரது ‘உரையாசிரியர்கள்’ என்னும் நூல் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற அந்நூலின் விரிவும் திருத்தமும் பெற்ற மூன்றாம் பதிப்பு 1995 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

மு.வை அரவிந்தனை அடியொற்றி அறிஞர் பலர், உரைகளைப் பற்றிய ஆய்வு முயற்சிகளில் ஆர்வத்தோடும் முனைப்போடும் ஈடுபட்டுள்ளனர். பேராசிரியர் மு.அண்ணாமலையின் ‘நச்சினார்க்கினியார்’. (1956), அறிஞர் ச.வே.சுப்பிரமணியனின் அடியார்க்குநல்லார் உரைத் திறன்’ (1976), அறிஞர் மு.கோவிந்தசாமியின் ‘பரிமேலழகர்’ (1978), பேராசிரியர் மு. அருணாசலத்தின் ‘இளம்பூரணர்’ (1981), அறிஞர் சோ.ந.கந்தசாமியின் ‘தெய்வச்சிலையார் உரைத்திறம்’ (1981), அறிஞர் இ.சுந்தரமூர்த்தியின் ‘பரிமேலழகரின் திருக்குறள் உரைத்திறன்’ (1985), முனைவர் மு.சந்தானத்தின் ‘பேராசிரியர் உரைத்திறன்’ (1991), முனைவர் சா.கிருட்டிணமூர்த்தியின் ‘இளம்பூரணர் உரை’ (2002) ஆகிய நூல்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவையாகும். இந்த நிலையில், ஆசிரியர் - மாணவர் என்ற சார்பும், தந்தை - மகன் என்ற பிணைப்பும் பெற்றது, கற்ற பரம்பரையிடையே செல்வாக்கு அடைந்து உரைகள் வளர்ந்து வந்தன. ஆசிரியர் தம்

மாணவர்களுக்கும், தந்தை தம் மக்களுக்கும் தாம் வழிவழியாகக் கேட்டுவந்த உரைகளை மரபு பிறழாமல் எடுத்துக் கூறி விளக்கினர். மாணவன், ஆசிரியர் ஆனான், மகன், தந்தை ஆனான், ஆனபோது முன்னோர் மொழிந்தவற்றைப் பின்னோர்க்கு அவர்கள் எடுத்துரைத்தனர். இவ்வாறு வாழையடி வாழையாக உரைகள் பரவிவந்தன. கேட்போர் நெஞ்சத்தில் நிலை பெற்று, thàமொழியாகப் பரவிவந்த உரைகள் பல உண்டு. புலவர்களின் நினைவாற்றலை நம்பி, செவியும் வாயும் செய்த துணையால் வாழ்ந்து வந்த உரைகள் காலப்போக்கில் ஓலைகளில் எழுதப்பட்டன. இறையனார் களவியலுரை இவ்வாறு பல தலைமுறைகள் வாய்மொழியாக வழங்கிவந்தது என்பதை அவ்வுரையே கூறுகின்றது.

**உரையும் உரைநடையும்**

உரைகள், தமிழ்மொழி, இலக்கியம், மற்றும் பண்பாட்டு வரலாற்றில் மிக முக்கியமான, குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்துள்ளன. அவற்றின் சிறப்பான பகுதியாகவும் அவை இருக்கின்றன. மேலும், பின்னால், உரைநடை (Prose) என்னும் வகைமை, ஆகப்பெரும் சக்திவாய்ந்த ஒரு வகையினமாகவும் ஊடுவாயிலாகவும் (Medium) தனித்துவமாக வளர்ச்சி பெறுவதற்கு அதற்கு முன், உரை (Commentary) என்பது ஒரு வாயிலாகவும், பூர்வாங்கமாகவும் இருந்துவந்துள்ளது.

உரையே கூடக் கவிதை அல்லது பாநிலை என்ற வரன்முறைப்படுத்தப்பட்ட வடிவத்திலிருந்து வேறுபட்டு அமைவதுதான். இதனைத் தொல்காப்பியம், செய்யுளியலிலும் மரபியலிலும் பேசுகின்றது. நன்னூலும் பேசுகிறது. இருப்பினும், பின்னால் ‘நடை’ என்ற ஒரு சொல்லைப் பின்னொட்டாகப் பெற்று, உரைநடை என்று தனியே ஒரு சொல் வழக்கு அமைந்தது. இன்று அது தனிநிலை பெற்ற ஒரு

இலக்கிய வகைமையாகும். உரைக்கின்ற வழக்கிலிருந்து வேறுபட்டு, அதிலிருந்து வித்தியாசமான நோக்கத்தோடும் செயல்பாட்டோடும் தனிவீச்சுக்களோடும் உரைநடை என்பது உருவாகியிருக்கிறது, வளர்ந்திருக்கிறது.

உரை, உரைநடை என்ற சொல்வழக்குகளைத் தவிரவும், கட்டுரை என்ற சொல்வழக்கும் உண்டு. அது, சிலம்பிலேயே பல இடங்களில் காணப்படுகிறது. ‘கட்டுரை’ என்பது. ‘கட்டுரைத்த’ (கட்டியுரைத்த) என்ற பொருளையுடையதாக அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார். ஆனால் ஆது, புனைந்துரைத்தல் அல்ல. திட்டமிட்டுக் கட்டியதாகிய - செய்யுள் வடிவமல்லாத - உரையின் ஒரு வடிவமேயாகும்.

உரை, உரைநடை, கட்டுரை ஆகிய சொல்வழக்குகள், தம்முள் நெருக்கமான உறவு கொண்டவை. உரை, முதன்மையானது, முதலில் வந்தது. தொடர்ந்து உரைநடை, கட்டுரை ஆகியன, அதன் வளர்ச்சியிலிருந்து தேவையும், சூழ்நிலையும், கருதி வந்தவை, தனித்தன்மைகளை வரித்துக்கொண்டு வளர்ந்தவை.

இறுதியாக இன்று உரைகள், புதிதாகத் தோன்ற வாய்ப்புக்கள் மிகக் குறைவு. அதன் முக்கியமான பணியை இன்று திறனாய்வு பிடித்துக் கொண்டுவிட்டது. அதனுடைய இன்னொரு பகுதியை - வடிவத்தையும் பண்பையும் - உரைநடை என்பதும், அதனோடு கூடவும் ஒரு தனி இலக்கிய வகைமை என்ற அளவில் கட்டுரை என்பதும் எடுத்துக்கொண்டுவிட்டன. ஆயின், உரையிலிருந்து அதனுடைய வளர்ச்சியாக வந்தவைத்தான் உரைநடையும் கட்டுரையும்.

செல்வக் கேசவராய முதலியார், உரைநடை ஆசிரியரின் சிறப்பைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“கவிகள் போலவே கட்டுரை எழுதுவோரும், கருவிலே திருவுடையவர். நாநலமுடைமை பிறவிக் குணங்களில் ஒன்று ‘தெய்வப் புலவனுக்கு நா உணரும், சித்திர ஓடாவிற்குக் கை உணரும்’ என்பது கவி நடைக்கு மாத்திரமேயன்றிக் கட்டுரை நடைக்கும் பொருந்துவது என்பது, சிறந்த வசன நடையின் திறங்களைக் கூர்ந்து உய்த்து உணர்ந்தவர் கண்டபடி வசனத்தில், உரிய சொற்களாகிய நன்மொழி புணர்த்தியும், நவின்றோர்க்கு இனிமை தருவதான ஓசையூட்டியும் செவ்வி செய்த நடையாகிய நவநீதம் தெய்வப் புலவர் எனப்படும் வாக்கிகட்கே கைவல்யம்” (தமிழ் வியாசங்கள், ப.120).

இப்பகுதியைக் படிக்கும் போது ஆர்.எல்.ஸ்டீவன்சன் என்னும் ஆங்கிலநாட்டு அறிஞர், உரை நடை எழுதுபவர்க்குக் கூறிய அறிவுரைகள் நினைவுக்கு வருகின்றன. சிறந்த உரைநடைக்கு அமையவேண்டிய நல்ல இயல்புகளை அவர் பின்வருமாறு கூறுகின்றார்.

“உரை நடை எழுதுபவர் முதலாவதாக கேட்போர் செவிக்கு இனிமையும், விழுமிய ஓசையும் பயக்கும் சொற்களை எடுத்தாள வேண்டும். இரண்டாவதாக, கற்பவர் வாய் மணக்கும் வகையில் இன்னிசையோடு தொடர்களை அமைக்க வேண்டும். மூன்றாவதாக, சிறந்த கருத்துக்களை அழகாகவும் முறையாகவும் வெளியிட வேண்டும். இறுதியாக, பொருத்தமும் தெளிவும் பெற்று நெஞ்சத்தில் ஆழப்பதியும் இயல்புடைய சொற்களைக் கையாளுவதில் வல்லவராக விளங்கவேண்டும்.” (தமிழ் வியாசங்கள், 1926, ப.116)

உரையாசிரியர்களின் நடை, பல்வேறு வகையாய் உள்ளன. ஒவ்வொருவரும் தமக்கென்று சில இயல்புகளை வளர்த்து, சில வரம்புகளை ஏற்படுத்திக் கொண்டு தம்தம் தனிச் சிறப்புக்களை நிலைநாட்டிச் செல்கின்றனர்.

பன்மொழிப் புலவர் தெ.பா.மீனாட்சி சுந்தரனார், உரையாசிரியர்களின் உரைநடை இயல்பை ஆராய்ந்து பின்வருமாறு கூறுகின்றார். ‘‘இறையனார் அகப்பொருள் உரை ஒரு சிறந்த உரைநடை நூல், சூத்திரத்திற்குப் பொருள் கூறுவதோடு சோலை முதலியவற்றைப் பற்றிய புனைந்துரையும், அன்பு முதலியவற்றைப் பற்றிய தத்துவ விளக்கமும் அங்கு உண்டு. ஆனால், அங்குப் பாட்டு நடை காதில் கேட்காமல் இல்லை. எதுகை மோனைகள் அளவுக்குமீறி இன்ப மூட்டுகின்றன.

## உரையாசிரியர்கள்

‘தமிழர் பொற்காலம்’ எனச் சிறப்பிக்கப்படும் பிற்காலச் சோழர் காலத்தில் கி.பி.11 முதல் 14 வரையிலான காலகட்டத்தில் - தமிழகத்தின் பல்வேறு இடங்களில் - பல்வேறு பகுதிகளில் - தோன்றியவர்கள் உரையாசிரியர்கள். நூலாசிரியர்தம் உள்ளப்பாங்கினை உற்று அறிந்து, அவரவர் பாடிய பாடல்களுக்கும் நூற்பாக்களுக்கும் ஏற்ற பெற்றி அறிந்து உரை கண்டு நின்ற இவ்வுரையாசிரியர்களுக்குத் தமிழ் உலகம் என்றென்றும் கடமைப்பட்டதாகும். இவ்வுரையாசிரியர்கள் இலரேல் தமிழ் உரைநடை இலக்கியம் இன்று இருக்கும் நல்ல நிலையில் இருந்திராது என்பதை வரலாற்றாளர் நன்கு அறிவர்.

உரையாசிரியர்கள் தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டு மலையினும் மாணப் பெரிதாகும். அன்னோரது தமிழ்த் தொண்டு. நூல்களுக்கு உரை எழுதுவது என்ற அளவில் முடிந்து விடவில்லை, அன்னோர் தம் செவ்விய உரைகளின் வாயிலாகப் பழந்தமிழ் மீட்சி இயக்கத்தைத் (Return to Classicism) தோற்றுவித்தனர், பழந்தமிழ் நூல்களின் மீது பற்றுக் கொண்டு கற்குமாறு பொதுமக்களைத் தூண்டினர்.

இங்ஙனமாக மீட்சியியக்கத்தைத் தோற்றுவித்தவர்களுள் இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவ் உரையாசிரியர்கள் அனைவரும் கி.பி.பதினோராம் நூற்றாண்டிற்கும், பதினான்காம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வாழ்ந்து அன்னைத் தமிழ் மொழிக்கு அருந்தொண்டாற்றினர்.

**உரை இல்லாத காலம்**

பேராசிரியர் தொல்காப்பிய உரையில், ‘‘உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டு’’ (மரபியல்-98) என்றும், ‘‘உதாரணங்காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரைநடந்த காலமும் உடையவாகும் முற்காலத்து நூல்கள்’’ (மரபியல்-101) என்றும் கூறியுள்ள கருத்துக்கள் சிந்திக்கத்தக்கன.

‘கற்றலின் கேட்டலே நன்று’ என்பது அக்காலத்தவர் கொள்கை, கேள்வி என்று தனியாக ஓர் அதிகாரம் வகுத்துக் கொண்டு ‘கற்றிலன் ஆயினும் கேட்க, என்ற திருவள்ளுவர் அறிவுரை கூறுகின்றார். ‘செந்தமிழும் நாப்பழக்கம்’ என்று ஔவையார் பாடியுள்ளார். இவை எல்லாம் உரை எழுதி நூல்களைப் படிப்பதைவிட, ஒருவர் சொல்லக் கேட்டு கல்வி பயின்ற வழக்கம் மிகுதியாய் இருந்ததை உணர்த்தும் சான்றுகள்.

அக்காலத்து எழுது கருவிகளும், எழுதும்கலை விரைவில் வளரத் தடையாய் இருந்தன. பனையோலைகளில் எழுத்தாணி கொண்டு ஒரு நூலைப் பல நாட்கள் எழுதிச் சேர்த்து, சுவடியாக்கிப் போற்றிக்காக்க வேண்டிய நிலை இருந்து வந்தது. ஒரே சுவடியைப் பலர் கூடிக் கற்றனர். ஒருவர் படிக்க மற்றவர்கள் காதால் கேட்டு அறிந்தனர். மிகுதியாக எழுதி விளக்க வேண்டியவற்றை எழுதாமல், வாயால்

கூறியே விளக்கி வந்தனர். ''விரிப்பின் பெருகும். விரிவஞ்சி வித்தாம். வல்லார் வாய்க் கேட்டுணர்க. வந்தவழிக் காண்க'' என்று உரையாசிரியர்கள் இடையிடையே எழுதிச் செல்லும் வழக்கம், அவர்கள் காலத்தில் எழுதுவதில் இருந்த இடர்ப்பாடுகளை உணர்த்தும், நூல்களுக்கு உரை எழுதாமல், வாயால் விளக்கிச் செவியால் அறிந்து கல்வி கற்றுப் புலமை பெறும் வழக்கம் அக்காலத்தில் நாடெங்கும் பரவியிருந்தது.

நாலடியாரில் (அவையறிதல் என்ற அதிகாரத்தில்) சில பாடல்களில் உள்ள,

**“நாப்பாடம் சொல்ல நயம் உணர்வார்” (312)**

**“பாடமே ஓதிப் பயன் தெரிதல் தேற்றாத மூடர்” (316)**

**“கற்றதூஉம் இன்றிக் கணக்காயர் பாடத்தால்**
**பெற்றதாம் பேதை ஓர் சூத்திரம்” (34)**

என்ற வரிகளும், பழமொழி நானூற்றுப் பாடலில் உள்ள,

**“பல்காலும்**
**நாடுக தான் கண்ட நுட்பத்தை” (195)**

என்ற வரியும் பழங்காலத்து மக்கள் கல்வி பயின்ற முறையை நமக்கு அறிவிக்கின்றன.

உரையாசிரியர்கள் அனைவரும் புலமையாளர்கள். அவர்கள் தம் வாழ்நாளின் முற்பகுதியை நல்ல நூல்கள் பலவற்றைத் தேடிக்கற்பதிலும் அவற்றின் பொருளைத் தெளிவாக உணர்வதிலும் செலவிட்டுப் பெரும் புலமை பெற்ற பின், தம் வாழ்நாளின் பிற்பகுதியில், சிறந்த நூல் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதற்கு ஒப்பற்ற உரை காண்பதில் ஈடுபட்டுத் தொண்டு புரிந்து தம் வாழ்நாளைப் பயனுள்ள முறையில் கழித்தனர்.

“ஒரு நூலின் கருத்தையோ பாட்டின் பொருளையோ காண்பதற்குப் பல அறிவுக்கூறுகள் வேண்டும். இது இன்ன காலத்துத் தோன்றிய நூல் என்ற கால அறிவும், இக்காலத்து இச்சொல்லுக்கு இப்பொருள் என்ற சொல்லறிவும், இன்ன காலத்து இருந்த பழக்க வழக்கங்கள் இவை என்ற சமுதாய அறிவும், இத்தொடர் ஓடிக்கிடக்கும் முறை இது என்ற நடையறிவும், இன்ன பிறவும் இருந்தால்தான் பொருளை முரணின்றிக் காண முடியும்”. **(வ.சு.ப. மாணிக்கம்,சிந்தனைக்களங்கள் 1975 பக்.313).**

இத்தகைய பல துறை அறிவுக்கூறுகள், எல்லா உரையாசிரியர்களிடமும் உள்ளன. அவர்களின் பல்கலைப் புலமை, அகராதிக் கலையாக - இலக்கண ஆராய்ச்சியாக - இலக்கியச் சுவையாக - திருத்தமான பாடங்காணும் திறனாய்வாக - சமயக் கருத்தாக - வாய்மொழி இலக்கிய ஊற்றாக - நாகரிகம் பண்பாடு குரலாக - போலி உரைக்கு எதிர்ப்புக் குரலாக - நாட்டு வரலாறாக வெளிப்படுகின்றது.

**நூலாசிரியரும் உரையாசிரியரும்**

மூல நூலாசிரியர்களுக்கு இணையாக உரையாசிரியர்களையும் போற்றுவது தமிழ் மரபு. இதனை, மகத்துவம் வாய்ந்த அகத்தியன், ‘ஒல்காப் புலமைத் தொல்காப்பியன்’, ‘தெய்வப் புலவன் திருவள்ளுவன்’, ‘பல்கலைக் குரிசில் பவணந்தி’ என்பது போல், ‘உளங்கூர் கேள்வி இளம்பூரணர்’, ‘ஈனாப் பெருமைச் சேனாவரையர்’, ‘உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்’ என வரும் சிறப்புப் பெயர்க் கிளவிகளால் நன்கு உணரலாம்.

இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகிய பண்டை உரையாசிரியர்கள் தமிழ்

நிலைபேற்றுக்கும் தமிழுக்கும் ஆற்றிய தொண்டு தமிழினம் உள்ளளவும் மறத்தற்கரியதாகும்.

ஆக்கியோர் பெயரை நூல்கள் பெற்றது போலவே, உரையாசிரியர்களின் பெயரால் உரை நூல்கள் பெயர் பெற்று வழங்கின. இளம்பூரணர் உரையை இளம்பூரணம் என்றும் சேனாவரையர் உரையைச் சேனாவரையம் என்றும், பேராசிரியர் உரையைப் பேராசிரியம் என்றும், நச்சினார்க்கினியர் உரையை நச்சினார்க்கினியம் என்றும் சுட்டும் வழக்கம் இலக்கிய உலகில் பல்லாண்டுகளுக்கு முன்னரே ஏற்பட்டுள்ளது.

## உரையாசிரியர்கள் கையாண்ட நடை வகைகள்

உரையாசிரியர்கள் சங்க நூல்களுக்கு மட்டுமன்றி, பல்லவர் காலத்தில் எழுந்த திருக்கோவையாருக்கும், சோழப் பெருமன்னர் காலத்தில் எழுந்த சீவக சிந்தாமணி, யாப்பருங்கலக் காரிகை, வீரசோழியம் முதலிய இலக்கண நூல்களுக்கும் உரைகள் வகுத்துள்ளனர். ஆழ்வார்கள் பாடியருளிய நூல்களுக்கு உரையாசிரியர்கள் காலத்திலே உரைகள் வகுக்கப்பட்டன எனினும், அவை யாவும் மணிப்பிரவாள நடையில் உள்ளன. தமிழ் நடையில் உரை வகுத்த ஆசிரியர்களுள் இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் ஆகிய ஆறு உரையாசிரியர்கள் கையாண்ட நடைகள் குறிப்பிடத்தக்கவை.

இறையனார் அகப்பொருள் உரையே தமிழ்மொழியில் தோன்றிய முதல் உரை நூலாகும். பழந்தமிழ் உரை நடையின் சிறப்பை எல்லாம் எடுத்துக் கொண்ட பொருளைத் தெளிவாக விளக்குவதிலும், பிறர் கருத்தைக் காரணத்தோடு மறுப்பதிலும் இவ்வுரையாசிரியரின் திறமை ஒப்புயர்வற்றது. வலிவும் வனப்பும் ஒருங்கே வாய்ந்த இதன் உரைநடை, தமிழிலக்கியவுலகம் அதற்குமுன் கண்டிராத

ஒரு புதுமையாய் அமைந்தது. இந்த உரைநடையைத்தான் பிற்காலத்தில் தோன்றிய உரையாசிரியர்கள் அனைவரும் கற்றுத் தேர்ந்து பின்பற்றினர்.

உரைநடையில் காணப்படும் பண்புகளுள் முக்கியமானது தெளிவு. அது இளம்பூரணர் நடையிலே சிறப்பாக அமைந்துள்ளது. வடமொழி கலவாத வகையிலே சிறுசிறு வாக்கியங்களில் பொருளைத் தெளிவாக அமைத்துச் செல்லுதலை அவர் உரையில் எங்கும் காணலாம்.

பேராசிரியர், இளம்பூரணர் காட்டிய வழியைப் பின்பற்றித் தமிழ் மரபு தழுவிப் பொருளதிகாரத்தின் இறுதி நான்கு இயல்களுக்கு உரை வகுத்துள்ளார். இளம்பூரணர் நடையைப் போலவே அவர் நடையும் சிறுசிறு வாக்கியங்களைக் கொண்ட ஒரு தெளிந்த நடையாக உள்ளது. தமிழ் உரைநடை பேராசிரியர் காலந்தொட்டு ஒரு புது வழியில் வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. இலக்கண நூற்பாக்களை விளக்குவதை நோக்கமாகக் கொண்டு வழங்கிவந்த உரைநடை, இலக்கிய நயங்களை எடுத்துக்கூறும் கருவியாகவும் பேராசிரியர் காலத்தில் கையாளப்படத் தொடங்கிற்று. பேராசிரியரது நடை இலக்கணமுடையது. தெளிவும் எளிமையும் வாய்ந்தது. செப்பமும் எளிமையும் உடைய உரைநடைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இவரது உரை நடையைக் கூறலாம்.

திருக்கோவையாருக்கு உரைகண்ட பேராசிரியரின் உரைநடை சொல்லோவியம் உடையது, இனிய ஓசை உடையத செறிவான கருத்தை எளிய முறையில் தருவது.

பேராசிரியர் காலத்திற்குப் பிறகு சேனாவரையர் காலத்திலே தமிழ் உரைநடை பிறிதொரு புதிய வழியில் வளர்ச்சியுறுதலைக் காணலாம். தருக்க முறைப்படி பிறர் மதம் மறுத்துத் தம் மதம் நிறுவுவதற்கு ஏற்ற கருவியாகத் தமிழ் நடை அவர் காலத்தில் வடிவு கொண்டு அமையத் தொடங்கிற்று. தொல்காப்பியச்

சொல்லதிகாரத்திற்கு உரை வகுத்தவர்களுள் சேனாவரையரே முதலில் வடமொழி மரபைத் தழுவி உரை வகுத்தவர் ஆவார்.செறிவும் திட்பமும் வாய்ந்த சேனாவரையர் நடை, உற்று நோக்கிப் பலமுறை பயின்று தெளிவும் வகையில் உள்ளது.

**“ஒல்லேம் குவளைப் புலாஅல் மகன்மார்பிற்**

**புல்லெருக்கங் கண்ணி நறிது”**

என்புழி, குவளை புலால் நாறுதற்கும் எருக்கங்கண்ணி நறிதாதற்கும் காரணம் கூறாமையின் வழுவாம் பிற எனின், புதல்வற் பயந்த பூங்குழல் மடந்தை பரத்தையிற் பிரிந்து வந்த கிழவனோடு புலந்து உரைக்கின்றாளாகலின் குவளை புலால் நாறுதற்கு அவன் தவற்றோடு கூடிய அவள் காதல் காரணம் என்பதூஉம், உருக்கங்கண்ணி நறிதாதற்கு மகிழ்நன் செய்த துனிகூர் வெப்பம் முகிழ் நகை முகத்தால் தணிக்கும் புதல்வன் மேல் ஒருகாலைக்கு ஒருகால் பெருகும் அன்பு காரணம் என்பதூஉம் பெறப்படுதலின் வழுவாகாது என்பது” (சொல்.55)

**அடியார்க்கு நல்லாரின் உரைநடை.**

அக்காலத்தில் வாழ்ந்த உரையாசிரியர்களுள் அடியார்க்கு நல்லார்க்கே இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் நிரம்பிய அறிவு இருந்தது என்பதை அவர் உரை கொண்டு அறியலாம். அவர் உரை இன்றேல், சிலப்பதிகாரக் காப்பியத்தை நாம் கற்றுச் சுவைத்தல் முடியாது. அவர் நடையிலே ஓசைப் பண்பையும் உணர்ச்சிக் கலப்பையும் நாம் சிறப்பாகக் காண முடியும். பாட்டு மட்டுமன்றி உடைநடையும் உணர்ச்சியைப் புலப்படுத்தவல்லது என்பதைக் காட்டுவதற்கு உரிய வகையில் அமைந்தது அடியார்க்கு நல்லாரின் உரைநடை.

அடியார்க்கு நல்லார் உரைநடை சில இடங்களில் செய்யுள் போல இருக்கும். சில இடங்களில் இலக்கிய சுவை வெளிப்படும், உணர்ச்சியும் உயிர்ப்பும் தோன்றும்.

**பரிமேலழகர்**

பரிமேலழகர் உரை செறிவுக்கும் தெளிவுக்கும் பெயர் பெற்றதாகும். அவர் வாக்கியங்களில் உள்ள சொற்களுள் ஒன்றை நீக்கவோ அல்லது ஒன்றை மாற்றி வேறொன்றை அமைக்கவோ அல்லது புதிதாக ஒரு சொல்லைப் புகுத்தவோ முடியாது. ஒன்றன் பின் ஒன்றாக வரும் குறட்பாக்களுக்கு இடையே உள்ள தொடர்பினை இயைபினை எடுத்துக்காட்டுவதிலும் பிறர் கருத்தை மறுத்துத் தம் கருத்தை நிறுவும்போது ஒரு கண்ணியமான முறையைத் தழுவிக் கூறுவதிலும் அவர் ஆற்றலையும் உளப் பாங்கினையும் அறியலாம்.

பரிமேலழகர் உரை நடையின் சிறப்பை வ.வே.சு.ஐயர் பின்வருமாறு புகழ்கின்றார். ‘‘பரிமேழலகரின் உரைநடை (நச்சினார்க்கினியர்க்கு மாறாக) மிகுந்த அழுத்தமும் சில இடங்களில் எளிதில் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு சுருக்கமும் வாய்ந்தது. குறிப்பிடத்தக்கதோர் சிறப்பு இவரது உரைநடையில் உண்டு. உயர்ந்த கவிஞர்களைப் போல இவரது நடையில் உள்ள உண்டு. உயர்ந்த கவிஞர்களைப் போல இவரது நடையில் உள்ள செறிவே அச் சிறப்பாகும். இவர் அமைத்த வாக்கியத்திலிருந்து ஒரு சொல்லைக்கூட எடுத்துவிட்டு அதற்கு இணையாக வேறு ஒரு சொல்லை அமைக்க முடியாது தேவையற்ற சொல் ஒன்றினையம் இவர் ஆளுவதில்லை.’’

பரிமேலழகர் உரைக்கு உதாரணம் கீழே தரப்படுகின்றது, ‘‘இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தமில் இன்பத்து அழிவில் வீடும், நெறியறிந்து

எய்துதற்கு உரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம் பொருள் இன்பம் வீடு என்பன. அவற்றுள் வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவது அல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றும் ஆம்.

**நச்சினார்க்கினியர்**

உரையாசிரியர்களுள் தமிழ்ப் பற்றிலும், நூல் ஆராய்ச்சியிலும் மிகச் சிறந்தவராகப் பிற்காலங்களில் பாராட்டப்பட்டவர் நச்சினார்க்கினியர். பிற உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டாத இலக்கண, இலக்கிய நுண்கருத்துக்களை எடுத்துக்காட்டும் பேராற்றல் படைத்தவர் அவர். தமிழ் இலக்கியப் பரப்பிலே அவருக்கு நிகரான புலமை உடையவராக வேறு எவரையும் கூற முடியாது. அவரை ஒரு சிறந்த இலக்கண உரையாசிரியர் என்று கூறுவதிலும் கவிநயங்களை நுண்ணியதாக ஆராய்ந்து கூறும் ஒரு சிறந்த இலக்கிய உரையாசிரியர் என்று கூறுவர்..சேனாவரையர் உரையில் காணப்படும் தருக்க முறையாக விளக்கும் பண்பையோ, பரிமேலழகர் உரையில் உள்ள செறிவையோ, நாம் நச்சினார்க்கினியர் உரையில் காண இயலவில்லை. கல்வி காரணமாக இவருக்கு ஏற்பட்டிருக்கும் பெருமிதத்தை இவரது உரைநடையில் காணலாம். இவரது உரைநடை எழிலும் எடுப்பும் உடையது. கலைப் பொலிவும் கவிதைச் சுவையும் வாய்ந்தது, கற்போர்க்குப் பேரின்பம் ஊட்ட வல்லது. தமிழ் உரைநடையை வளம் பெறச் செய்தவர் இவர் என்னலாம். இவரை இலக்கண உரையாசிரியர் என்று கூறுவதை விட, கவிநயம் கண்டு நுண்ணிதாக ஆய்ந்து கூறும் சிறந்த இலக்கிய உரையாசிரியர் என்பது பொருந்தும்.

இவரது உரைநடையை, இ.மு. சுப்பிரமணிய பிள்ளை பின் வருமாறு புகழ்கின்றனர்.

“செய்யுள் நடை வாய்ந்த நக்கீரர் உரை நடையும் விளக்கம் குறைந்த இளம்பூரணமும், கட்டுரைச் சுவை செறிந்த சேனாவரையரது இலக்கண நடையும், பொருட் செறிவுடைய பேராசிரியர் உரைநடையும் இவரது உரை நடைக்குப்பின் விளங்குவன அலல். ஆயின், நச்சினார்க்கினியர் உரை நடையில் தெளிவும் சந்தர்ப்பத்ற்கு ஏற்ற மேற்கோளும் பொருந்தி இருக்கின்றன.” (தமிழ் இலக்கியத் திரட்டு, 1939, ப.37)

வ.வே.சு.ஐயர் நச்சினார்க்கினியர் நடையைப் பின்வருமாறு பாராட்டுகின்றனார், “இவரது நடை எளிமையும் எழிலும் உடையது. சில இடங்களில் கவிதையாய்ப் பொலிவும் தங்குதடையற்ற உயிரோட்டம் நிறைந்திருக்கும். நச்சினார்க்கினியரிடமிருந்தே சிறந்த உரைநடை தொடங்கிற்று என்று நன்றாகக் கூறலாம்.

**மயிலைநாதர்**

மயிலைநாதரின் உரைநடை, பரந்த இலக்கியப் புலமையில் மலர்ந்துள்ளது. இலக்கியமணம் அதில் கமழும், இலக்கண நுட்பம் ஒளிவிடும், தூய்மை நிலவும்.

நன்னூலின் சிறப்புப் பாயிரத்தில் வரும்,

**“கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்**
**திருந்திய செங்கோல் சீய கங்கன்”**

என்ற இரண்டு அடிகளுக்கு மயிலைநாதர் பின்வருமாறு உரை எழுதியுள்ளார்.

**சங்கர நமசிவாயர்**

சங்கர நமசிவாயரின் உரைநடை சிவஞான முனிவரால் போற்றி மேற்கொள்ளப்பட்ட பெருமையுடையது. அதில் தமிழ் மணத்துடன் சைவமணமும் இணைந்து கமழும், அன்பும் அறனும் எங்கும் வெளிப்படும்.

**சிவஞான முனிவர்**

உயர்ந்த பொருளைப் பற்றி, தெளிவாக விளங்கக் கூடிய வகையில், தனித்தமிழில் விளக்கமாக ஆராய்ந்து கூறும் உரைநடைக்கு வித்திட்டு வளர்த்துப் பரப்பியவர் சிவஞான முனிவர். இவருடைய நடை எப்பொருள் பற்றியும் தெளிவாகச் சிந்திக்கவும், வன்மையான கண்டனம் எழுதவும் மரபு வழுவாமல் மொழி பெயர்க்கவும் ஏற்றதாய் உள்ளது. இவர் நடை பின் வருமாறு.

“அதிகாரம் - அதிகரித்தல், அஃது இருவகைப்படும். அவற்றுள் ஒன்று, வேந்தன் இருந்துழி இருந்து தன் நிலம் முழுவதும் தன் ஆணையின் நடப்பச் செய்வதுபோல ஒரு சொல் நின்றுழி நின்று பல சூத்திரங்களும் பல ஓத்துக்களும் தன் பொருளே நுதலிவரச் செய்வது. ஒன்று சென்று நடாத்தும் தண்டத் தலைவர் போல ஓரிடத்து நின்று சொல் பல சூத்திரங்களோடும் சென்று இயைந்து தன் பொருளைப் பயப்பிப்பது. இவற்றிற்கு முறையே வட நூலார் யதோத்தேச பக்கம் எனவும் காரிய காலபக்கம் எனவும் கூறுப. இது சேனாவரையர் உரையானும் உணர்க.”

**ஆறுமுக நாவலர்**

ஆறுமுக நாவலர் பழைய நூல்களுக்கு உரை இயற்றி உரையாசிரியர் என்ற பெயரைப் பெற்றதோடு, தனியாக உரை நடை நூல்கள் இயற்றிப் புகழ் பெற்றார். பழங்கால உரைநடையை மாற்றியமைத்துப் புதிய உரை நடைக்குக் கால்கோள்

செய்தார். இவர் உரைநடையில் செய்த மாறுதல்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்திக் கூறலாம்.

1. கடினமான சந்திகளை விலக்கிப் பிரித்து எழுதி உரை நடையை எளிமையாக்கினார்.

2. எல்லோருக்கும் விளங்கவேண்டும் என்பதற்காகப் பேச்சு மொழியை, (மணிப்பிரவாள உரையாசிரியரைப் போல்) பயன்படுத்தாமல் திருத்தமான சொற்களையே ஆண்டார்.

3. ஆங்கிலேயர் உரைநடைக்குப் பயன்படுத்திய நிறுத்தக் குறிகளை இடமும் பொருளும் அறிந்து பயன்படுத்தினார்.

4. பெயரெச்சம் வினையெச்சங்களை அடுக்கிக் கொண்டே போய் மிக நீளமான வாக்கியங்கள் எழுதாமல் சிறு சிறு வாக்கியங்களே எழுதினார்.

5. பொருள் இயைபு கருதிப் பத்தி பிரித்து எழுதினார்.

இவரது உரைநடையின் சிறப்பியல்புகளைப் பன்மொழிப் புலவர் தெ.பா. மீனாட்சி சுந்தரனார் பின்வருமாறு கூறுகின்றார்.

‘‘சிறு சிறு வாக்கியங்களின் திட்பம், அவை கோவையாகப் பத்திபத்தியாக ஒற்றுமை நயம்பட்டு விளங்கும் நுட்பம், கட்டுரை முழுதும் ஒரே பொருளாய் அமையும் இனிமை கருத்தின் தெளிவு, சொற்களின் எளிமை, அழகு, ஆரவாரம் இல்லாது பிறர் அறியாமல் உள்ளுக்குள்ளேயே அமைந்து விளங்கும் இலக்கண நயம்’’ இவை எல்லாம் இவர் உரைநடையில் உண்டு.

## உரையாசிரியர்களின் உதவி

உரையாசிரியர்களின் உதவி இல்லையாயின், பழம்பெரும் நூல்களாம் கருவூலங்களில் தொகுத்து வைக்கப்பட்டுள்ள விலை மதிப்பில்லாத பொருள்மணிக் குவியல்களை நாம் பெற முடியாமலே போய் இருக்கும். பண்டைய உயர் நூல்களின் உண்மைக் கருத்துக்களைத் தம் மதி நுட்பத்தால் கண்டு உரை வரைந்த ஆசிரியர்களின் பெருமையைப் பற்றிக் குறிப்பிடும்போது, ''இவரெல்லாம், மிக விரைவாக ஓடிச் செல்லும் ஒரு பேரியாற்றை எதிர்த்து நீந்தி அந்நீரோட்டத்தின் வன்மையை இற்றென உணர முற்படுவார் போலத் தாம் உரையெழுத மேற்கொண்ட சான்றோர் செய்யுள்களிலுள்ள சொற்களின் செலவை எதிர்த்தாராய்ந்து உண்மைப் பொருள் கண்டு உலகிற்குதவியவராவர்'' எனக் கூறுகின்றார் பண்டிதமணி **(மு.கதிரேசச் செட்டியார், உரைநடைக் கோவை (இரண்டாம் பகுதி), ப.13)**. மேலும் அவர், ''நூலாசிரியர் உள்ளக் கிடக்கையை நுணுகி ஆராய்ந்து தெளிவு பெற எடுத்தெழுதும் வன்மையாளரே உண்மை உரையாசிரியராவர்'' **(மு.கதிரேசச் செட்டியார், உரைநடைக் கோவை (இரண்டாம் பகுதி), ப.26)** என்றும், ''ஒரு புலவன் காலக் கழிவு நோக்காது நெடிதாராய்ந்து தம் வாணாளில் ஒரு நூற்கு உண்மையுரை எழுதி முடிப்பினும் போதியதே'' **(மு.கதிரேசச் செட்டியார், உரைநடைக் கோவை (இரண்டாம் பகுதி), ப.27)** என்றும் உரையாசிரியர்களின் தமிழ்ப் பணியை வியந்து போற்றுகின்றார்.

## உரையின் வகைகள்

உரைகள், ஒரே தளத்தில் அல்லது ஒரே தளத்தின் பொருட்டு அமைவன அல்ல. அவற்றிற்குப் பல தளங்கள் உண்டு. உரைகளை, அவை இடம் பெறுகின்ற தளங்களை வைத்து, நான்காக வகைப்படுத்தியறியலாம்.

முதலில், இலக்கியத்திற்கான உரைகள் என்றும் இலக்கியங்களுக்கான உரைகள் என்றும் இரண்டு, இலக்கியங்களுக்கான உரைகளில் இரு நிலைகள் உண்டு. அவை, சமய இலக்கியங்களுக்கானவை, மற்ற இலக்கியங்களுக்கானவை என்ற இரண்டு நிலைகளில் வெளிப்படுகின்றன. சமய இலக்கியங்களுக்கான உரைகளில் வைணவ உரைகள் குறிப்பிடத் தகுந்தவை. தமிழில் இலக்கண நூல்களுக்கு உரைகள் அதிகம். இலக்கணம் என்பது, மொழி பற்றிய அறிவியல். எனவே பல நுட்பங்கள் கொண்ட இலக்கணத்திற்கு உரையின் தேவை, மிக முக்கியம், இலக்கண வரலாற்றிலுள்ள மாற்றங்களையும் உரைகளின் பெருக்கத்தையும் மனதிற்கொண்டு இலக்கண உரைகளை இரண்டு உட்பகுப்புகளாகப் பிரிக்கலாம். அவை. பொருள் இலக்கணத்துக்கான உரைகள், எழுத்து, சொல் உள்ளிட்ட மொழியமைப்புக் குறித்த இலக்கணங்களுக்கான உரைகள் என்று பகுத்தறியலாம். இறுதியாகச், சமயம் மற்றும் தத்துவம் தொடர்பான பனுவல்களுக்கான உரைகள். இறுதியிலுள்ள சமய, தத்துவ உரைகள், பிறவற்றினும் ஒப்பிட்டு நோக்கும் போது எண்ணிக்கையில் குறைவேயாகும்.

மேலும், உரைகள் சுருக்கமாகவோ விளக்கமாகவோ அமைதலைப் பொறுத்து, அவற்றை அவ்வடிப்படையிலும் வகுத்துக் காணலாம். இவ்வாறு வகைப்படுத்துகிற முயற்சிகளை நன்னூல் காலத்தில் பார்க்கிறோம். தொல்காப்பியம், உரைகளை வகைப்படுத்தவில்லை. ஆனால், நன்னூல் வகைப்படுத்துகிறது. பொதுப்பாயிரம் என்ற அதன் முன்னுரைப் பகுதியில், காண்டிகையுரை, விருத்தியுரை என்று அது இரண்டாகப் பாகுபாடு செய்கிறது. நூற்பாவின் பொருள் தோன்றுகிற விதமாகக் கருத்து, பதப்பொருள், எடுத்துக்காட்டு மற்றும் வினா, விடை ஆகிய ஐந்து கூறுகள் அமைவது காண்டிகையுரை என்கிறது

நன்னூல். மேலும் தொல்காப்பியம் மரபியலில் 'உரை' என்று சொல்லுகிற பொது வரையறையைக் கொஞ்சம் விரிவுபடுத்தி, நன்னூல் அதனை விருத்தியுரை என்கிறது.(நன்னூல்.23) பாடல் பெரும்பாலான உரைகள், இந்தக் தன்மையைக் கொண்டிருப்பினும், மிக விளக்கமாகவும் விரிவாகவும் இருக்கின்ற சில உரைகளே விருத்தியுரைகள் எனப்படுகின்றன. ஆயின், இறையனாராகப் பொருளுரை, இந்தத் தன்மைகளை நிறைவாகவே பெற்றிருப்பினும் அது விருத்தியுரை என்று அழைக்கப்படுவதில்லை. இந்தப் பாகுபாடு, அதன்பிறகே வந்தது ஒரு காரணம். முதலில், 'விருத்தியரை' என்ற பெயரோடு காணப்படுவது 'யாப்பருங்கல விருத்தியுரை'யே யாகும். ஆனால், யாப்பியலின் செய்திகளை இன்னொரு வடிவத்தில் வரையறைகள் செய்கிற யாப்பருங்கலக் காரிகை என்னும் நூலுக்கு உள்ள உரை, சுருக்கமானதாக இருப்பினும் அது காண்டிகையுரை என்ற பெயரோடு அழைக்கப்படவில்லை. அதுபோல, யாப்பருங்கலத்துக்கோ 'காண்டிகையுரை' என்று ஒன்று பேசப்படவில்லை. விருத்தியுரை மட்டுமே பேசப்படுகிறது.

எனவே, யாப்பருங்கலத்துக்கு - விருத்தியுரை, யாப்பருங்கலக்காரிகைக்கு அப்படி எந்தத் தனிப் பெயரும் இல்லை. அதே போது, நன்னூலுக்கு மட்டுமே, காண்டிகையுரை, விருத்தியுரை என்று தனித்தனியே உரைகள், அந்தப் பெயர்களோடு வழங்குகின்றன.

நன்னூலுக்கு விருத்தியுரை எழுதியவர், 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சங்கர நமச்சிவாயர். இந்த உரைக்குத் திருத்தங்கள் செய்தவர் சிவஞானமுனிவர். இவரே, தொல்காப்பியம் முதற் சூத்திரத்திற்கு (மட்டும்) பாயிரவிருத்தி என்ற பெயரில் ஒரு உரையும் எழுதியிருக்கிறார்.

இலக்கணங்களுக்குத்தான் இந்தப் பகுப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதுவும், எல்லா நூல்களுக்கும் அல்ல, ஒருசில நூல்களுக்குத்தான் இந்தப் பெயர்கள்

வழங்குகின்றன. மேலும், இலக்கியங்களுக்கான உரைகளில் இந்தப் பகுப்பே செய்யப்படவில்லை. மேலும், இலக்கிய உரை எதுவும் அந்தச் சொற்களால் அழைக்கப்படவில்லை. அவையெல்லாமே விளக்கவுரைகள்தான். சுருக்கமான உரைகள், 'குறிப்புரைகள்' எனத் தனியே சொல்லப்படுகின்றன.

தொல்காப்பியர் செய்யுளியலில்,

**"நூல்எனப் படுவது நுவலும் காலை**
**முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்**
**தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி**
**உள்நின்று அகன்ற உரையொடு புணர்ந்து**
**நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே" (செய்.159)**

என்று கூறுகின்றார். "உள் நின்று அகன்ற உரை" என்று கூறி இருப்பது உற்று நோக்கத் தக்கது. செய்யுளியலில் அகன்ற உரை என்று கூறினரே அன்றி உரையின் வகைகளைக் கூறவில்லை. ஆனால் மரபியலில் உள்ள சூத்திரங்கள் உரையினைக் காண்டிகை உரை என இரண்டாகக் கூறி விளக்குகின்றன. உரை என்ற சொல், விருத்தி என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.

**"பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்**
**கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்" (மர.102)**

**"விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்**
**சுட்டின சூத்திரம் முடித்தற் பொருட்டா**
**ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்**
**மேவாங்கு அமைந்த மெய்ந்நெறித் ததுவே" (மர.104)**

என்ற சூத்திரங்கள் இரண்டும் காண்டிகை உரையின் இயல்பினைக் கூறுகின்றன.

**“சூத்திரத்து உட்பொருள் அன்றியும் யாப்புற**

**இன்றி யமையாது இயைபவை எல்லாம்**

**ஒன்ற உரைப்பது உரைஎனப் படுமே”** (மர.105)

**“மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்**

**தன்னு லானும் முடிந்தநூ லானும்**

**ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்**

**தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்**

**துணிவோடு நிற்றல் என்மனார் புலவர்”** (மர.106)

இவை (விருத்தி) உரை பற்றியவை.

இச்சூத்திரங்கள் நான்கிற்கும் பேராசிரியர் எழுதியுள்ள விளக்கம் படித்து இன்புறத் தக்கதாகும். இறையனார் களவியலுரை, உரை நான்கு வகைப்படும் என்று கூறுகின்றது. ‘‘சூத்திரம் உரைக்கின் அது நான்கு வகையான உரைக்கப்படும். கருத்துரைத்து, கண்ணழித்து, பொழிப்புத் திரட்டி அகலம் கூறல் என’’.அவற்றுள் கருத்துரைத்தலாவது, சூத்திரத்துள் சொற்பொருள் உரைத்தல்.கண்ணழித்தலாவது சூத்திரத்துள் சொற்தோறும் பொருள் உரைத்தல்.‘‘பொழிப்புத் திரட்டலாவது, சூத்திரப் பொருளை எல்லாம் தொகுத்து உரைத்தல், ‘‘அகலங் சூறலாவது, சூத்திரப் பொருளைத் தூய்மை செய்தற்குக் கடாவும் விடையும் உள்ளுறுத்து விரித்து உரைத்தல்’’. நாலடியார், ஒரு நூலுக்குச் சிறந்தவுரை எவ்வாறு அமைந்திருக்கவேண்டும் என்பதை,

**“பொழிப்புஅகலம் நுட்பம்நூல் எச்சம்என்று ஆற்றக்**

**கொழித்துஅகலம் காட்டாதார் சொற்கள் - பழிப்பில்**

**நிரைஆமா சேக்கும் நெடுங்குன்ற நாட!**

**உரைஆமோ நூலிற்கு நன்று"        (நாலடி.319)**

என்று கூறுகின்றது.

நீதி நூலாகிய நாலடியார், ஒரு நூலிற்கு அமைய வேண்டிய உரையின் சிறப்பியல்புகளைக் கூறுவது வியப்பாக உள்ளது. உரையின் பல்வேறு இயல்புகளைப் பொதுவாக எல்லோரும் அறிந்திருந்தனர், சிந்தித்து வந்தனர் என்று கருத நாலடியார் இடத்தருகின்றது.

நன்னூலின் பொதுப்பாயிரம் உரையின் பொது இலக்கணத்தைப் பின் வருமாறு கூறுகின்றது,

**"பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்**

**தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்**

**விரிவு அதிகாரம் துணிவு பயனோடு**

**ஆசிரிய வசனம் என்று ஈரேழ் உரையே"    (பொதுப்.20)**

இச்சூத்திரத்திற்கு மயிலைநாதர் பின்வருமாறு பொருள் கூறுகின்றார். ''பாடம் சொல்லலும், கருத்துரைத்தலும், சொல் வகுத்தலும், சொற்பொருள் உரைத்தலும், பொழிப்புரைத்தலும், உதாரணம் காட்டலும், வினாத் தோற்றலும், விடை கொடுத்தலும், விசேடம் காட்டலும், விரிவு காட்டலும், அதிகார வரவு காட்டலும், துணிவு கூறலும், பயனொடு படுத்தலும், ஆசிரிய வசனம் காட்டலும் என்னும் இப்பதினான்கு பகுதியானும் உரைக்கப்படும் சூத்திரப் பொருள்''.

மயிலைநாதர் உரையின் வேறு வகைகளைத் தொகுத்துக் கூறுகின்றார். அவர் உரை பின்வருமாறு,

1. ‘‘தொகுத்துக் கண்ணழித்தல், விரித்துக் கொணர்ந்து உரைத்தல் என்னும் இரு கூறும்.

2. பொழிப்பு, அகலம், நுட்பம் ஏ்னனும் மூவகையும்,

3. எடுத்துக் கோடல், பதங் காட்டல், பதம் விரித்தல், பதப்பொருள் உரைத்தல், வினாதல், வித்தல் என்னும் அறுகூறும்.

4. பொழிப்பு, அகலம், நுட்பம், நூல்எச்சம், பதப் பொருள் உரைத்தல், ஏற்புழிக் கோடல், எண்ணல் என்னும் ஏழும்.

5. சொல்லே, சொல்வகை, சொற் பொருள், சோதனை, மறை நிலை, இயேசு, எச்சம், நோக்கே, துணிவே, கருத்தே செலுத்தல் என்று ஈரைந்து கிளவியும் நெறிப்பட வருவது பனுவல் உரையே என்னும் இப்பத்தும்,

6. சூத்திரம் தோற்றல், சொல் வகுத்தல், சொற் பொருள் உரைத்தல், வினாதல், விடுத்தல், விசேடங் காட்டல், உதாரணங்காட்டல், ஆசிரிய வசனங் காட்டல், அதிகார வரவு காட்டல் தொகுத்து மடித்தல், விரித்துக் காட்டல், துணிவு கூறல், பயனோடு புணர்த்தல் என்னும் இப்புதின முப்பகுதியுமான இம்மத விகற்பம் எல்லாம் இப்பதினான்கினுள்ளே (பாடம் கருத்தே’ என்னும் சூத்திரத்தில் கூறப்பட்டவை) அடங்கும் எனக் கொள்க.

மயிலைநாதர் மேலே ஆறாவதாகச் கூறிய சூத்திரம் தோற்றல், சொல் வகுத்தல் முதலிய பதின்மூன்றினோடு கருத்துரைத்தல் என்ற ஒன்றைக்கூட்டி உரை பதினான்கு வகைப்படும் என்று வீரசோழியம் கூறுகின்றது.

பல்வேறு இலக்கண நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் உரையின் வகைகளைக் குறித்துக் கூறியுள்ள கருத்துக்களை இப்பகுதியில் காணலாம்.

**தொல்காப்பியம்**

தொல்காப்பியர் மரபியலில் காண்டிகை, உரை என்னும் இரு வகையான உரைகளைச் சுட்டி, அவற்றிற்கு இலக்கணமும் கூறுகின்றார். ‘உரை’ என்ற சொல், விருத்தி என்ற பொருளில் அவரால் ஆளப்பட்டுள்ளது.

**“பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்**

**கரப்பின்று முடிவது காண்டிகை யாகும்” (பொருள்.647)**

என்னும் நூற்பா காண்டிகை உரையின் இலக்கணத்தை உணர்த்துகின்றன.

**“சூத்திரத்து உட்பொருள் அன்றியும் யாப்புற**

**இன்றி யமையாது இயைபவை எல்லாம்**

**ஒன்ற உரைப்பது உரை எனப் படுமே” (பொருள்.649)**

என்னும் உரையின் (விருத்தியின்) இயல்பினை எடுத்துரைக்கின்றன.

**இறையனார் அகப்பொருள்**

இறையனார் அகப்பொருள் உரை, உரையின் நான்கு வகைகளை விளக்கிக் கூறுகின்றது, அது நான்கு வகையான் உரைக்கப்படும்.

கருத்துரைத்தலையும் பொழிப்புத் திரட்டலையும் முதல் நூற்பாவின் அடிப்படையில் பொதுநிலையில் விளக்கி கண்ணழித்தலுக்கும் அகலங்கூறலுக்கும் சிறப்பு நிலையில் விளக்கம் கூறுகின்றது இறையனார் அகப்பொருள்.

**நம்பியகப் பொருள்**

நாற்கவிராச நம்பியின் அகப்பொருள் விளக்கம், நான்கு வகை உரைகளின் இயல்புகளையும் பின்வருமாறு விளக்குகின்றது,

“பொருளுரை நான்கு வகைப்படும். கருத்துரைத்தலும் கண்ணழித்துரைத்தலும் பொழிப்புத் திரட்டலும் அகலங்கூறலும் என.

**நன்னூல்**

பவணந்தி முனிவரின் நன்னூல் பொதுப் பாயிர நூற்பா ஒன்று (21) உரையின் பொது இலக்கணத்தை உணர்த்துகின்றது. அந்நூற்பா வருமாறு

> **“பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்**
> **தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்**
> **விரிவுஅதி காரம் துணிவு பயனோடு**
> **ஆசிரிய வசனம்என்று ஈரேழ் உரையே”**

பாடம் சொல்லலும், கருத்துரைத்தலும், சொல் வகுத்தலும், சொற்பொருள் உரைத்தலும், பொழிப்புரைத்தலும், உதாரணம் காட்டலும், வினாத் தோற்றலும், விடை கொடுத்தலும், விசேடம் காட்டலும், விரிவு காட்டலும், அதிகார வரவு காட்டலும், துணிவு கூறலும், பயனொடு படுத்தலும், ஆசிரிய வசனம் காட்டலும் என்னும் இப்பதினான்கு பகுதியானும் உரைக்கப்படும் சூத்திரப் பொருள்” என்பது மயிலைநாதர் இந் நூற்பாவிற்கு எழுதிய உரை விளக்கம் ஆகும்.

**வீரசோழிய உரை**

மயிலைநாதர் கூறும் சூத்திரம் தோற்றல், சொல் வகுத்தல் முதலிய பதின்மூன்றினோடு, கருத்துரைத்தல் என்ற ஒன்றைக் கூட்டி, உரை பதினான்கு வகைப்படும் என்பர் வீரசோழிய உரைகாரர் **(வீரசோழிய உரை, 1781)**.

“தமிழ் இலக்கியத்தின் வரலாற்றில் உரைகள் தமிழ் மொழிப் பயிற்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் இவை பேருதவி செய்திருக்கின்றன. இடைக்காலத்தில் இவ்வித உரை நூல்கள் எழுதப்பெற்றது தமிழரின் பாக்கியம்” என்னும் அறிஞர்

**(ஏ.வி.சுப்பிரமணிய அய்யர், தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, ப. 238)** கருத்து நூற்றுக்கு நூறு உண்மை.

**உரைகள் - இலக்கியங்கள்**

மூல நூல்களைப் போலவே உரை நூல்களும் இலக்கியம் போல் இன்பம் ஊட்டுகின்றன. மூல நூல்களில் உள்ள எல்லாச் சிறப்புக் கூறுகளும் உரை நூல்களில் உள்ளன. உரைகளில், கற்பனைச்சிறப்பு வாய்ந்த உவமைகள் உள்ளன, எண்ண எண்ண இனிக்கின்ற இலக்கியச் சுவை மிகுந்த பகுதிகள் உள்ளன. சிந்தனையாளர்களை வியப்பில் ஆழ்த்துகின்ற பல வகையான ஆராய்ச்சிகள் உள்ளன. எதுகை மோனைகள் அமைந்த ஓசையின்பம் தருகின்ற வகை வகையான அழகிய உரை நடை, நூல் முழுதும் அமைந்துள்ளன

நூலியற்றிய ஆசிரியர் கருத்து, காலந்தோறும் அந்த நூலைப் பயின்றவர் போற்றி உரைத்த நயம், காலவேறுபாட்டால் தோன்றிய கருத்துப் புதுமை, மாறுபட்ட கருத்தினர் தோற்றுவித்த சிந்தனைவளம் ஆகிய அனைத்தும், ஓரிடத்தில் திரண்டு நிற்கும் புலமைக் களஞ்சியமே உரை நூல்கள்.

ஏட்டில் எழுதாத இலக்கியச் செல்வங்களைக் காத்த பெருமையும் உரையாசிரியர்களுக்கு உண்டு. அவர்கள் தம் காலத்துப் பேச்சுமொழி, வட்டார வழக்கு, மரபுத் தொடர், பழமொழி ஆகியவற்றை அறிந்து, ஏட்டில் எழுதிவைத்து அழியா வாழ்வு நல்கினர்.

வாய்மொழியாக வந்த சிறந்த தனிப் பாடல்களை - பெரும் புலவர்கள் பாடிய தனியன்களை - திரட்டித் தந்த பெருமை உரையாசிரியர்களுக்கு உண்டு. நாட்டிலே வழங்கி வந்த கதைகள் சிலவற்றை உரைகளில் தந்தனர். தமிழகப் பழங் கதைகளில் தமிழர் நாகரிகம், நெஞ்சப் பாங்கு, குறிக்கோள்யாவும் அடங்கியுள்ளன.

இவற்றிற்கு மேலாக உரையாசிரியர்கள் செய்த பணியொன்று உண்டு. நாட்டுப் பாடல்கள் சிலவற்றை எழுதியும் விடுகதைப் பாடல்களையும் தந்துள்ளனர். இவை மிகுதியாக இல்லை என்றாலும், ஆற்றங்கரையில் ஒதுங்கிக்கிடக்கும் பொன் மணல் போலப் பளிச்சிடுகின்றன. வாய்மொழி இலக்கியத்திற்கு வாழ்வு தந்து போற்றிவந்த உரையாசிரியர்கள் என்றும் போற்றத்தக்கவர்கள்.

உரையாசிரியர்கள் தம் காலத்து மக்கள் நிலை, வாழ்க்கைமுறை, நாகரிகம், பழக்கவழக்கம், பண்பாடு, அரசியல் போக்கு ஆகியவற்றை ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றனர். தமிழ் நாட்டு வரலாறு எழுதுவோர், பழைய உரைகளின் வாயிலாகக் காலத்தின் குரலைக் கேட்கலாம், வரலாற்று நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழலாம். வரலாற்று ஆசிரியர்கள் பழைய உரைகளைச் சிறந்த வரலாற்று மூலங்களாகக் கருதி அவற்றைக் கற்றுத் தெளிந்து தமிழக வரலாற்றை உருவாக்க வேண்டும்.

உரையாசிரியர்கள் வாழ்ந்த காலம் பழமையானது. இலக்கிய மரபுக்கும் இலக்கண நெறிக்கும் சமயக் கொள்கைக்கும் உட்பட்டு அவர்கள் உரை எழுதினர். ஆனால் சுதந்திரத்தை இழந்துவிடவில்லை. அவர்கள் மொழிக் கலையின் முழுமையைக் கண்டு உயர்ந்து சென்றும், கருத்துக் கடலில் மூழ்கியும் திளைத்தவர்கள். ஆனால் சிறிதளவு கற்றவரும் அவர்களிடம் சென்று நெருங்கிப் பழகி உரைகளைப் பயின்று பயன் பெற முடிகின்றது.அவர்கள் பழைய நூல்களுக்கு உரை எழுதி, பழைய மரபை வளர்க்கவும் முன்னோர் கருத்துக்களை வெளிப்படுத்தவும் முயன்று வெற்றி பெற்றனர்.

## உரை செய்யும் உதவி

இலக்கிய வரலாற்றில் உரைகளுக்கு மிக உயர்ந்த இடமுண்டு. தமிழ்மொழி வளர்ச்சிக்கும், இலக்கண இலக்கியப் பயிற்சிக்கும் உரைகள் பேருதவி புரிந்திருக்கின்றன. உரைகள் தோன்றியது நமது நற்பேறாகும். அவை தோன்றி

இராவிடில், பழம்பெரும் இலக்கண இலக்கியச் செல்வங்கள் அழியாமல் இருந்திருப்பினும் விளங்காமல் இருந்திருக்கும்.

உரைகளின் பணிகள் என்ன? தமிழ் இலக்கிய இலக்கணங்களுக்கு அவை எவ்வாறு உதவி செய்திருக்கின்றன? உதவி செய்துகொண்டிருக்கின்றன? முதலில் பல தலைமுறை வேறுபாடுகளைத் தாண்டிப் பிற்காலத்தியவர்கள் அவ்விலக்கியங்களை அவ்வவற்றின் தளங்களில் வைத்தும், உரிய கால, இடச் சூழ்நிலைகளைக் கொண்டு, அறிந்துகொள்ளுவதற்கு உரைகள் உற்ற துணைகளாக இருக்கின்றன.

இலக்கிய, இலக்கண நூல்களில் கடினமான சொற்களும், சொல்வழக்குகளும், மரபுகளும் இருத்தல்கூடும். இவை தடைக்கற்களாக இல்லாமல், மூல நூல்களை முறையாகப் புரிந்துகொள்ளுவதற்கு உரைகள் உதவுகின்றன. முக்கியமாகச் சொற்பொருள் விளக்கம் மூலமாக இது நிகழ்கிறது. காட்டாகப், புனற்பூசல் (புற.நா.42) என்பதற்கு “நீர் விளையாட்டால் உண்டாகும் சண்டை” என்று உரையில் விளக்கம் சொல்லப்படுகிறது.

ஆழமான சில கருத்தியல்களும், வேரூன்றிக் கிடக்கின்ற அவ்வக்காலத்திய ஆழமான பழக்க வழக்கங்களும் பண்பாடுகளும் உரைகள் மூலமாகப் புலப்படுகின்றன. (காட்டாக, களவியல்காரர், பெரும் நிலக்கிழார்களின் வீடுகளின் உட்பகுதிகளை அட்டகாரம், கோட்டகாரம், கூடகாரம், பள்ளியம்பலம் என்று வகையிட்டுக் கூறுவதைக் காணலாம். இளம்பூரணர் கூழுக்குக் குற்றேவல் செய்தலைக் குறிப்பிடுகிறார்) இளம்பூரணர், இறையனார் அகப்பொருளுரைகாரர், நச்சினார்க்கினியர் முதலிய பலருடைய உரைகளில் அவர்களின் தத்துவக் கருத்துக்களும் மற்றும் பண்பாட்டு மரபுகளும் பேசப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாம்.

அருகிக்கிடந்து, பின்னர் காலப்போக்கில் காணாமல் போன இசை, நாடகம், போன்ற கலைவடிவங்கள் பற்றிய செய்திகளையும் அவைகுறித்த பல நூல்களையும் (இசைநுணுக்கம், கூத்தநூல், மதிவாணன் நாடகம் போன்றன), பல பாடல்களையும் (காட்டாக, பாண்டிக்கோவை), பல அரிய இலக்கியப் பனுவல்களையும் (காட்டாக, தகடூர்யாத்திரை) மற்றும், பல இலக்கண நூல்களையும் (காட்டாக, செயிற்றியம், காக்கைபாடிணியம், சிறுகாக்கை பாடினியம்) உரைகள் வழியாக காணமுடிகிறது.

இலக்கியங்களுக்கிடையேயான சில உறவுகளையும், அவற்றிற்கிடையே ஊடிழைப் பனுவல்களாக (Intertextural) உள்ளவற்றையும் உரைகள் அடையாளங்கண்டு சொல்கின்றன. உறவுகளையும், ஒப்பீடுகளையும் உரைகள் வழியாக நாம் அறிந்துகொள்கிறோம். சிலம்பின் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார், உரையின் பல இடங்களில், சிலப்பதிகார அடிகளுக்கு இணையாக உள்ள சீவகசிந்தாமணியின் பாடல் அடிகளை எடுத்துக்காட்டுகிறார். இது, தாக்கம் (Influence) என்பதனையோ, கடன் பேறு (Borrowing) என்பதனையோ காட்டக் கூடியதாக இருக்கலாம்.

மேலும் உவமம் உள்ளிட்ட உத்திமுறைகள், பாடல் அமைப்புமுறைகள், பாவடிவங்கள், அவற்றிடையே ஏற்பட்ட மாற்றங்கள் முதலியவற்றையறியவும் உரைகள் துணை செய்கின்றன. சிலம்பின் மங்கலவாழ்த்துப் பாடல், கண்ணகியை அங்ஙண் உலகின் அருந்ததியன்னாள் என்று வருணிக்கும். உரை எழுதுகின்ற அரும்பத உரைகாரர் இதனை இல்பொருளுவமை என்று இனங்காட்டுவார். அதாவது, அருந்ததியை இல்லாத பொருள் (கற்பனை?) என்று அவர் குறிப்பிடுகிறார்.

இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட வரலாற்றுச் செய்திகள், புராணக்கதைகள், தொன்மங்கள் முதலியன பற்றி இவ்

உரைகள், பல குறிப்புகள் தருகின்றன. இலக்கிய வரலாறு எழுத மட்டுமல்லாமல் இலக்கியத்திலிருந்து வரலாறு எழுதவும் உரைகள் உதவுகின்றன. மேலும் உரைகளே, தத்தமளவில் வரலாற்றுச் செய்திகள் முதலியவற்றைத் தரவும் செய்கின்றன. காட்டாக, இறையனாரகப் பொருள் உரை, பாண்டிய நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் பஞ்சம் ஏற்பட்டதையும் அதன்போது அறிவாளிகள் புலம் பெயர்ந்து சென்றதையும் குறிப்பிடுகின்றது. வற்கடம் (பஞ்சம்) தீர்ந்து, நிலைமை திருந்தியவுடன், மீண்டும் அவர்கள் பாண்டிய நாடு திரும்பினர். காணாமல் போன அறிவுச் செல்வங்களைத் திரும்பக் கொண்டுவர முயன்றனர்.

முக்கியமாக, இந்த உரைகள் அன்றைய இலக்கியத் திறனாய்வாக அறியப்படக் கூடியவை. இலக்கியத் திறனாய்வுக்குரிய பல முறைமைகளையும். உணர்வுகளையும் கொண்ட உரைகள் அன்றைய இலக்கியத் திறனாய்வாக அறியப்படக் கூடியவை. இலக்கியத் திறனாய்வுக்குரிய பல முறைமைகளையும் உணர்வுகளையும் உரைகள் கொண்டிருக்கின்றன. எனவே, இலக்கிய நெறிகள் மற்றும் கோட்பாடுகள் பற்றிய புரிதல்களுக்கு உரைகள் உரைகல்லாக இருக்கின்றன.

தமிழ் மொழியின் அமைப்பு, காலந்தோறும் எவ்வாறு மாறுதல் அடைந்து வந்துள்ளது என்பதையும், தமிழ் மக்களின் வாழ்க்கை நிலை, அரசியல் மாறுதல், பழக்கவழக்கம் ஆகியவற்றையும் உரைகள் உணர்த்துகின்றன.

கிடைத்தற்கரிய - இலக்கியச் சுவை மிகுந்த தனிப் பாடல்களைத் திரட்டி உரைகளே நமக்கு உதவுகின்றன.

ஏடுகளில் இருந்த பழைய நூல்களைப் பதிப்பித்தவர்களுக்கு, மூலத்தை அறிய உரைகளே துணைபுரிந்து வந்தன. ‘‘உரையைக் கொண்டு மூலத்தையும், மூலத்தைக் கொண்டு உரையையும் பல சமயங்களில் அறிந்துகொண்டதுண்டு’’

உரையாசிரியர்கள் மேற்கோளாகத் தரும் பாடல்கள், மூல நூல்களில் ஏற்படும் ஐயத்தைப் போக்கவும் நல்ல பாடல் வேறுபாடு அறிந்து பாடல்களின் பொருளை அறியவும் பயன்படுகின்றன.

சில பழைய நூல்களில் மறைந்தும் குறைந்தும் உள்ள பகுதிகளுக்கு உரிய பாடல்களை உரைகளே நமக்குத் தந்துள்ளன. தொல்காப்பியம், குறுந்தொகை, திருக்குறள், சிந்தாமணி, நன்னூல் ஆகிய நூல்களின் பழைய அமைப்பு, அளவு, உட்பிரிவு ஆகியவை பற்றி உரைகள் நமக்கு அறிவிக்கின்றன.

மறைந்துபோன தமிழ் நூல்களின் பெயர், அவற்றை இயற்றிய புலவர்களின் பெயர், அந்நூல்களின் சில பகுதிகள் ஆகியவற்றைப் பேணிக்காத்து வருபவை உரைகளேயாகும்.

தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய இரண்டிற்கும் அமைந்துள்ள உரை விளக்கங்கள் மொழியியல் ஆராய்ச்சிக்குத் துணைபுரிகின்றன. இவ்வாறே பிற்கால இலக்கண உரைகளும் அவ்வக்காலத்துத் தமிழ் மொழி அமைப்பை அறிவிக்கின்றன. தொல்காப்பியப் பொருளதிகார உரைகள் இலக்கியத் திறனாராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுகின்றன. யாப்பு, அணி, பாட்டியல் பற்றிய உரை விளக்கங்கள் செய்யுளின் வடிவம் பற்றி அறிய உதவுகின்றன.

**உரையும் திறனாய்வும்**

முற்காலத்தில் புதிய நூல் இயற்றிய ஆசிரியர் தமிழறிந்த மன்னன் தலைமை தாங்கிய புலவர் பேரவையில் தம் நூலைப் படித்துக் காட்டிப் பொருளை விளக்கிக் கூறுவார். அப்போது தேவையான இடங்களில் அவைப் புலவர்கள் வினா எழுப்புவர், அதற்கு நூலாசிரியர் விடை கூறுவார். திருத்த வேண்டிய மாற்ற வேண்டிய பகுதி இருப்பின் அவையோர் சுட்டிக்காட்டிக் குற்றங் குறைகளை

நீக்குவர். நூல் திருத்தம் பெற்றபின் அவையோர் அந்த நூலை ஏற்பர். அதன் அருமை பெருமைகளை விளக்கியும், அதனை இயற்றியவர் புலமைத் திறனைப் போற்றியும் சாற்றுக் கவிகள் வழங்குவர். சாற்றுக் கவிகள் பெற்ற நூலே நல்ல நூல் என்று பலராலும் கொண்டாடப்படும், நாடெங்கும் பரவும் பள்ளிதோறும் பயிலப்படும், மாணவர் உலகம் கற்றுப் பயனடையும்.

நூல் அரங்கேறும் அவையே திறனாய்வுக்களமாக அக்காலத்தில் விளங்கியது. நூல் அரங்கேற்றம் பற்றியும், அரங்கேறும் போது நடந்த நிகழ்ச்சிகள் பற்றியும் அபிதான சிந்தாமணி, விநோதரச மஞ்சரி, உ.வே.சாமிநாதய்யரின் வாழ்க்கை வரலாறு, அவரது மற்ற உரைநடை நூல்கள் ஆகியவை விளக்கமாகக் கூறுகின்றன. நூல் அரங்கேற்றத்தின் போது எழுந்த வினா விடைகள், சிறந்த திறனாய்வுகளாய் உள்ளன. மூல நூல்களைப் போலவே உரையும் அரங்கேற்றப்பட்ட செய்தியை நச்சினார்க்கினியரின் சிந்தாமணி உரை பற்றிய வரலாறு வாயிலாக அறிய முடிகின்றது.

முற்காலத்துத் திறனாய்வின் வகைகளையும் முறைகளையும் அறிவிக்கின்ற சொற்கள் பல உள்ளன. நூல்நயம், பா நயம், செய்யுள் நலன் பாட்டுத்திறன் போன்ற தொடர்கள் உளளன. ஆய்வு ஆராய்ச்சி நோக்கு போன்ற சொற்கள் உள்ளன. சுவை அழகு நடை ஆழம் திட்பநுட்பம் செறிவு போன்ற சொற்கள் உள்ளன. மரபு முறை வழக்குநெறி போன்ற சொற்கள் உள்ளன. இச்சொற்கள் ஆளப்பட்டுள்ள இடங்களை எல்லாம் தேடிக் கண்டு தொகுக்க வேண்டும், அவற்றிற்குப் பொருள்விளக்கம் காண வேண்டும்.

நூலின் அமைய வேண்டியப பத்து அழகுகளைத் தொகுத்துக் கூறியவர்கள் சிறந்த திறனாய்வாளர்களே.

**“கருங்கச் சொல்லல்**

**விளங்க வைத்தல்**

**-------------------------**

**விளங்கு உதாரணத்தது ஆகுதல்”**

என்று அவற்றை நன்னூல் அடுக்கிக் கூறுகின்றது. நூலில் இடம் பெற் கூடாத பத்துக் குற்றங்கள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன.

**“குன்றக் கூறல்**

**மிகைபடக் கூறல்**

**---------------------**

**நின்று பயனின்மை”**

இவையாவும் திறனாய்வு உலகில் பயன்பட வேண்டிய அருமையான கலைச் சொற்கள். இவையேயன்றி திறனாய்வுடன் தொடர்புடைய பகுதிகள் உள்ளன. ‘பாட்டு ஆராய்ந்தான்’ என்ற தொடரை உதாரணம் காட்டுகின்றார் இளம்பூரணர் (எழுத்.195). திருக்குறளுக்கு உரை கண்ட பதின்மரைக் குறிப்பிடுகின்ற வெண்பா, அவர்கள் ‘எல்லைஉரை’ கண்டதாகக் கூறுகின்றது. மிகாமலும் குறையாமலும் அளவோடு அமைந்த உரை என்ற கருத்தை ‘எல்லை எரை’ என்ற தொடர் கொண்டுள்ளது.

**“ஆயும் தொறும் தொறும் இன்பம் தரும் தமிழ்”**

என்ற சான்றோர் வாக்கு எண்ணிப் பார்க்கத் தகுந்ததாகும்.

முற்காலத்தவர் ஆய்வுமுறை இருவகையாய் அமைந்துள்ளன. ஒன்று புற ஆய்வு மற்றொன்று அக ஆய்வு இவ்விரு பிரிவுகளிலும் பல உட்பகுதிகள் உள்ளன.

<table>
<tr><td rowspan="3">ஆய்வு</td><td>புற ஆய்வு</td><td>மூலம்<br>வகை<br>அமைப்பு<br>மரபு</td></tr>
<tr><td rowspan="2">அக ஆய்வு</td><td>பொருள்<br>சுவை<br>அழகு<br>நயம்</td></tr>
<tr><td>குறிப்பு<br>உள்ளுறை<br>இறைச்சி<br>வேறுபொருள்</td></tr>
</table>

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் வளர்த்த வள்ளலாய் கவிபாடும் வித்தகராய் விளங்கிய பொன்னுசாமித் தேவரின் (1837-1870) கவித்திறனை, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை வியந்து பின்வருமாறு பாடியுள்ளார்.

**“சொன்னயமும் பொருள்நயமும் அணிநயமும்**
**கற்பனையாச் சொல்லா நின்ற**
**நன்னயமும் தொடைநயமும் வனப்புநய**
**மும்பிறிது நாட்டா நிற்கும்**
**எந்நயமும் சிற்சிலவே பிறர்க்கையும்,**
**நினைக்கமைந்த எல்லாம் என்னில்**
**பன்னியமும் உணர்பொன்னுச் சாமிமகி**
**பா! நினது பாட்டுளற் றாமே!”**

எத்தனை வகையில் நயம் நோக்கப்பட்டது என்பதை இந்தப் பாடல் அறிவிக்கின்றது.

**தகுதியும் பண்பும்**

திறனாய்வாளர்களிடம் இயல்பாகவே இருக்க வேண்டிய பண்புகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, அவர்கள் விருப்பு வெறுப்பு அற்றவராய்-குற்றம் குணம் இரண்டையும் ஆராயும் பண்புடையவராய் இருத்தல் வேண்டும் என்பர். தமிழிலக்கிய உலகில் நடுநிலைமையின் சிறப்பைக் காலந்தோறும் எடுத்துரைக்கும் குரல்கள் ஒலித்துள்ளன.

**"காமம் செப்பாது கண்டது மொழிமோ" (குறுந்.2)**

**"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்" (குறள்.504)**

**"வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்**
**தீரக் காய்ந்துழி நல்லவும் தீயவாம்" (சீவக சிந்தாமணி.888)**

**"காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்**
**ஆய்தல் அறிவுடையார் கண்ணதே - காய்வதன்கண்**
**உற்ற குணம்தோன்றா தாகும் உவப்பதன்கண்**
**குற்றமும் தோன்றாக் கெடும்" (அறநெறிச்சாரம்.23)**

**நடுநிலைமை**

விருப்ப வெறுப்பு அற்ற நிலையில் இருந்து, ஆராய்ச்சியில் ஈடுபட்டு, குற்றமும் குணகும் நாடி மதிப்பிட்ட திறனாய்வாளர்கள் உரையாசிரியர்கள். சமயப்பற்று மிகுந்திருந்த காலத்தில் சமயமே வாழ்வின் உயிர் என்று கருதிய மக்கள் நடுவில் தம்மை ஆதரிக்கின்ற புரவலர் கருத்திற்கு மாறுபடும் சூழலில் வாழ்ந்து கொண்டு உரையாசிரியர்கள் நடுநிலைமை தவறாமல் திறனாய்வுப் பணியாற்றினர்.

சிலப்பதிகாரத்திற்கு உரை கண்ட அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் எல்லாச் சமயத்தையும் ஒரே வகையாய் நோக்கி, அந்த அந்தச் சமயங்களுக்குரிய தெய்வம்களையும் சமயச் சான்றோர்களையும் போற்றி மரபு மாறாமல் உரை எழுதியுள்ளனர். சைவராகிய நச்சினார்க்கினியர் ஜைன காப்பியமாகிய சீவசிந்தாமணிக்கு மிகச் சிறந்த உரை எழுதினார். ஜைனப் புலவர் பவணந்தியாரின் நன்னூலுக்குச் சைவராகிய சங்கர நமசிவாயரும் சிவஞான முனிவரும் நல்லுரை கண்டுள்ளனர். உரையாசிரியர்கள், தாம் எந்தச் சமயத்தவர் ஆயினும் தாம் உரை எழுத மேற் கொண்ட நூல்களின் சமயக் கருத்துக்களைத் தெளிவாக அறிந்து விளக்கினர்.

இருபதாம் நூற்றாண்டில் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நடுநிலைமை தவறாதவராய் விளங்கினார். தாம் சைவராய் இருந்தும் பல வேறு சமய நூல்களைப் பதிப்பித்தார். அந்நூல்களில் உள்ள சமயக் கருத்துக்களை அறியப் பெரிதும் முயன்றார். நன்றாக அறிந்து தெளிவு பெற்ற பின்னரே விளக்கம் எழுதினார். அவர் பதிப்பித்த நூல்களில் சீவக சிந்தாமணி, நன்னூல் மயிலை நாதர் உரை ஆகியவை ஜைன சமயத்தவர் படைத்தவை. மணிமேகலை பௌத்த சமய நூல். இவற்றில் பிற சமயத்தவர் கொள்கைகளை மறுக்கும் இடங்கள் பல உள்ளன. இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல், அவற்றிற்கு விளக்கம் எழுதிப் பதிப்பித்தார். டாக்டர் உ.வே.சா. தலைசிறந்த சைவப் பெரியாரிடம் கல்வி பயின்றவர், சைவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர், கடைசிவரை சைவ சமயப்பற்று உடையவராய் வாழ்ந்தவர், அவர் வாழ்ந்த காலம், சுற்றுச் சூழல், மக்களின் போக்கு மேற்கொண்ட சமயம், குடும்பத்துப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைக் கடந்து, தமிழுக்குத் தொண்டு செய்த பெரியவரைத் தமிழனம் என்றும் போற்றும். அவரைக் கவிமணி,

**“சித்திரத்திற் பார்ப்போம் சிலைசெய்து கும்பிடுவோம்**

**புத்தகத்திற் போற்றிப் புகழ்த்திடுவோம் - இத்தரையில்**

**சந்தப் பொதிகைத் தமிழ்முனிஎன் றுன்னைநிதம்**

**சிந்தையிற் கொண்டு தெளிந்து”**

என்று போற்றுகின்றார்.

### சமன் செய்து சீர்தூக்கல்

நல்லாசிரியர், துலாக்கோல போன்ற இயல்புடையவராய் இருக்க வேண்டும் என்று நன்னூற்பாயிரம் கூறி, துலாக்கோலின் இயல்பை,

**“ஐயந் தீரப் பொருளை உணர்த்தலும்**

**மெய்ந்நடு நிலையும் மிகுநிறை கோற்கே”**

என்று விளக்குகின்றது. திருவள்ளுவர்,

**“சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**

**கோடாமை சான்றோர்க்கு அணி” (குறள்.118)**

என்று கூறுகின்றார்.

### உரைத் திறனாய்வு

உரையாசிரியர்களின் திறனாய்வு முறைகள் இருவகையாய் அமைந்துள்ளன,

1. மூல நூலை ஆழ்ந்து கற்று, நூலாசிரியன் உள்ளக் கருத்தறிந்து நூலுக்குப் பொருள் கூறி விளக்குதல்.

2. தமக்கு முன் இருந்த உரையாசிரியர்கள் எழுதிய உரைகளை மதிப்பிட்டுக் கூறுதல்.

**மூலநூல் மறுப்பு**

மூல நூலையே மறுத்து அதில் உள்ள குற்றங் குறைகளை எடுத்துக்காட்டியவர் சிவஞான முனிவர். 'இலக்கண விளக்கம்' என்னம் நூலை மறுத்து, அவர் இலக்கண விளக்கச் சூறாவளி இயற்றினார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் உள்ள உரைநடையில் பல மறுப்புரைகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் பெரும்பான்மையானவை சமயச் சார்பானவை, இலக்கணத் தொடர்புடையவை.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் செந்தமிழ் இதழில் இலக்கண மறுப்புக் கட்டுரைகள் தொடர்ச்சியாய் வந்துள்ளன. சில பாடல்களுக்குப் பொருத்தமான பொருள் எது என்ற புலமைப் பூசலில் மலர்ந்தன சில ஆய்வுகள், பொருத்தமான பாடம் தேர்ந்தறியும் முயற்சியில் தோன்றின சில படைப்புகள் இவற்றை எல்லாம் தொகுத்தால் 'ஆராய்ச்சிக் களஞ்சியம்', தமிழுக்குக் கிடைக்கும் ஆய்வுலகில் 'புலமைப் புதையல்' வெளிப்படும்.

**இருமொழிப் புலமையின் விளைவு**

தமிழோடு வடமொழியோ, ஆங்கிலமோ பயின்ற புலமைச் செல்வர்களுக்கு,

**"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**
**தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்"**

என்று பாரதியார் வேண்டுகோள் விடுத்தார். இருமொழிப் புலமையாளர்கள், தமிழ் மொழியை வளப்படுத்தப் பிறமொழிப் புலமையைப் பயன்படுத்தல் வேண்டும். பிற மொழியில் எழுத்தும் சொல்லும் பயின்றதோடு நில்லாமல், பொருளும் அறிந்து நல்லனவற்றைத் தமிழுக்குக் கொண்டு வருதல் வேண்டும் அதுதான் இருமொழிப் புலமையின் பயன். அவ்வாறு செய்யாமல் தமிழுக்கு எந்த அளவிலும் நன்மை

செய்யாது, பிறமொழிப் புலமையை எண்ணி எண்ணித் தம்மைத் தாமே வியந்து கொள்வதில் பயனில்லை! தமிழ் ஒன்றையே முறையாக செப்பமாக ஆழ்ந்து கற்றவர்களால் தமிழுக்கு ஏற்படும் பயன்கள் கூட இருமொழிப் புலமையாளர்களால் ஏற்படா.

பன்னெடுங் காலமாகத் தமிழ் நாட்டில் வடமொழியும் தென் மொழியும் பயின்றவர்கள் பலர் இருந்திருக்கின்றனர். அவர்கள் தமிழ் மட்டும் அறிந்தவர்களிடம் வடமொழிக் கருத்தைக் கூறி மருட்டினர், வடமொழி அறிந்தவர்களிடம் தமிழ்க் கருத்தை எடுத்துரைத்து மயக்கினர். இந்த நிலையைத் தாயுமானவர்,

**"…….வடமொழியிலே**

**வல்லான் ஒருத்தன் வரவும் த்ராவிடத்திலே**

**------------------------------------------------------**

**வித்தை என் முத்தி தருமோ!"** **(சித்தர்கணம்.10)**

என்று தம் மீது ஏற்றிக் கூறி நகைக்கின்றார். அவர்களை நோக்கி,

**"கற்றதும் கேட்டதும் தானே ஏதுக்காக,**

**கடபட என்று உருட்டுதற்கோ?"**

என்று வினவுகின்றார்.

இருபதாம் நூற்றாண்டிலும் இந்த அவல நிலைவெல்லாமல் எவரையும் மருட்டுகின்ற வித்தை நிலவி வந்தது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலம் பயின்ற தமிழர்கள், ஆங்கிலத் திறனாய்வு நூல்களைக் கற்று, தமிழ் மட்டும் வல்ல புலவர்களைக் குறை கூறினர். ஆனால், ஆங்கிலேயர்களிடம் தமிழன் பெருமையைப் பேசிச் சிறப்படைந்தனர். இந்த நிலையில் பழைய உரைகளில் பொதிந்து கிடக்கின்ற திறனாய்வுக்கூறுகள் போற்றுவா ரின்றிப் புறக்கணிக்கப்பட்டன.

**காலத்திற்கேற்ற கருத்து**

பழைய உரைகளைத் திறனாய்வு என்றும், உரையாசிரியர்களைத் திறனாய்வாளர் என்றும் கூறும் கருத்துக்களை ஏற்கத் தயங்குபவர் சிலர் உள்ளனர். அவ்வாறு தயங்குபவர்களுக்கு ஆங்கில அறிஞர் டி.எஸ்.எலியட் (Function of Criticism என்னும் கட்டுரையில்) கூறும் கருத்துக்கள் பெரும் பயனைத் தரும். பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ. 'பாட்டிலே புரட்சி' என்னும் நூலில் (பக்கம்.82) எலியட் அவர்களின் கருத்துக்களைத் தந்துள்ளார்.

"கலையில் எந்தப் பரம்பரையும் முன்சென்ற பரம்பரையைப் போல ஒரே வகையான ஈடுபாடு கொள்வதில்லை. கலையில் திளைக்கும் பொழுது தனித்தனி ஆட்களைப் போல ஒவ்வொரு தலைமுறையும் தனக்கே சிறப்பாக அமைந்த சுவை வகையினைத் வேண்டியதனையே கலையிடமிருந்து கேட்கிறது, தனக்கு வேண்டிய கலையைப் பயன்படுத்திக் கொள்ளுகிறது.

இந்தக் கருத்துக்களை நினைவில் கொண்டு உரையாசிரியர்கள் தம்காலத்திற்கு ஏற்றவாறு ஆராய்ச்சிகளை எழுதினர் என்றும், உரைகளும் காலத்திற்கேற்ற தேவையான ஆராய்ச்சிகள் என்றும் தெளியவேண்டும்.

இன்றைய ஆராய்ச்சியாளர்கள் தமக்குமுன் தோன்றி உரை எழுதி ஆராய்ச்சி நிகழ்த்திய உரையாசிரியர்களைப் போற்ற வேண்டும். அவர்கள் என்ன கருதினார்கள் என்று அறிய வேண்டும். அப்போதுதான் புதுமையும் பழமையும் இணையம். முன்னோர்கள் விட்டதிலிருந்து நாம் தொடர முடியும்.

## வினாக்கள்

1. உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.
2. 18-ம் நூற்றாண்டிற்குப் பின் உரைநடை வளர்ச்சிப் போக்கினை விவரி
3. உரையாசிரியர்கள் தமிழ்மொழிக்குச் செய்துள்ள தொண்டினை விளக்குக.
4. உரையின் வகைகளை விளக்கியுரைக்க
5. உரையும் திறனாய்வும் - கட்டுரை வரைக
6. உரை செய்யும் உதவியினை எடுத்துரைக்க
7. உரை – உரைநடை விளக்குக.
8. நூலின் அமைய வேண்டிய பத்து அழகுகளை விளக்குக

## அலகு - 2

## இறையனார் அகப்பொருள் உரை

உரைகளில் காலத்தால் முற்பட்டது ‘இறையனார் அகப்பொருளுரை’ யாகும். இதுவே தமிழில் தோன்றிய முதல் உரைநூல். பின்னர்த் தோன்றிய மற்ற எல்லா உரைகளுக்கும் இது வழிகாட்டியாய் விளங்குகின்றது. ‘இறையனார் அகப்பொருள்’ சிறந்த அகப்பொருள் இலக்கண நூல். இதனை இறையனார் களவியல் என்றும் வழங்குவதுண்டு. இந்நூல் களவு, கற்பு என்ற இரு பிரிவுகளை உடையது. களவினுள் 33 நூற்பாக்களும், கற்பினுள் 27 நூற்பாக்களுமாக 60 நூற்பாக்கள் உள்ளன. ஒட்டக்கூத்தர், இதனை ‘அமுத சூத்திரம் அறுபதாய்ச் சமை நூல்’ என்று போற்றியுள்ளார். இது களவு, கற்பு என இருபிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்நூலின் விரிசடைப் பெருங்கடவுளாகிய ஆலவாய் அழகனே மேற்கண்ட அறுபது நூற்பாக்கள் கொண்ட இறையனார் களவியலை இயற்றியருளினார் என்று இதனுரை குறிப்பிடுகிறது. தெய்வத்தோடு தொடர்புடையதாகக் கூறப்படும் களவியலுரை வரலாறு போலும் வேறு எவ்வுரையும் கூறப்பெறவில்லை. நூல் தோன்றிய வரலாற்றை, “அக்காலத்துப் பாண்டியனும் சங்கத்தாரும் பொருளிலக்கணம் பெறாது, இடர்ப்படுவாரைக் கண்டு ஆலவாயிற்பெருமான் அடிகளால் வெளிப்படுத்தப்பட்டது” என்று சுருக்கமாகக் கூறுகின்றது. இவ்வாறு சோமசுந்தரக் கடவுள் அருளியதாகக் கூறி இந்நூலை, ‘முதல்நூல்’ என்றே உரை குறிப்பிடுகின்றது. ஆனால், இவ் அகப்பொருள் இலக்கணம், தொல்காப்பியத்தைப் பின்பற்றி அமைந்துள்ளது. தொல்காப்பியம் கூறும் அகப்பொருள் இலக்கணத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும்

எளிமையாகவும் இந்நூல் கூறுகின்றது. எனவே. இதனைத் தொல்காப்பியத்தின் வழி நூல் என்பது பொருந்தும்.

இவ்வுரை இனிய இலக்கியம் போல், தொட்ட இடமெங்கும் இவ்வுரையில் இலக்கியச்சுவை தேங்கிக் கிடக்கின்றது. எண்ணுந்தோறும் இனிக்கின்ற உவமை, எளிதில் பொருளுணர்ந்து மகிழத்தக்க வகையில் அமைந்த தெளிவான போக்கு, அறிவிற்கு விருந்தாய் உள்ள சிறந்த மேற்கோள், வாகை கூடி வெற்றிப் பெருமிதத்துடன் நடந்து செல்லும் வீரனின் பீடு நடை ஆகியவை யாவும் இவ்வுரையில் உண்டு.உரையாசிரியர் நம் எதிர் நின்று உரையாடுவது போன்ற மன நிலையை உரையின் வாயிலாக உண்டாக்கி விடுகிறார்.

இவ்வுரையின் நடையழகும், இலக்கியச் சுவையும் காலந்தோறும் புலவர் உள்ளத்தைக் கவர்ந்திருக்கின்றன. செந்தமிழ் உரைநடை எழுதுவதில் வல்லவராய் - பிறர்க்கு வழி காட்டியாய் விளங்கிய மறைமலையடிகள் இவ்வுரையைப் பின் வருமாறு போற்றிப் புகழ்கின்றார்.

‘‘பளபளப்பான பல நிறச் சலவைக் கற்கள் அழுத்திப் பொன் மினுக்குப் பூசிப் பல பல அடுக்கு மாடங்கள் உடைத்தாய் வானமுகடு களாய், காண்பார் கண்ணுங் கருத்தும் கவரும் நீர்மைத்தாய் உயர்ந்தோங்கி நிற்கும் எழுநிலை மாடம்போல், ஆசிரியர் நக்கீரனாரது உரை நிவந்து நிற்றலும், அம்மாடத்தின் அருகே புல் வேய்ந்த குடிலும், ஓடு மூடியதொரு சிற்றிலும் ஏழைமைத் தோற்றமும் உடையவாய்த் தாழ்ந்து நிற்றல்போல் இளம்பூரணர் பேராசிரியர் உரைகள் பீடு குறைந்து நிற்றலும், பிரிந்து இனிது விளங்கா நிற்கும்’’. **(மணிவாசகர் வரலாறும் காலமும், ப.628)**

தமிழறிஞர் க.வெள்ளை வாரணனார், இவ்வுரையைச் சிறந்த உரை நடை இலக்கியம் என்று பாராட்டுகின்றார்.

‘‘நூலின் பொருளை வினாவிடைகளால் விளக்கும் தருக்க நூல் மரபும், இயற்கைக் காட்சிகளையும் ஆடவர் மகளிராகிய இருபாலாரின் உள்ளத் துணர்வுகளையும் சொல்லோவியமாகப் புனைந்துரைக்கும் கற்பனைத் திறமும், பாடல்களின் பொருள்களை நயம்பெற விளக்கும் இலக்கியச்சுவை நலமும், உலக வாழ்க்கையின் நுட்பங்களைச் சிறந்த உவமைகளாலும் பழமொழிகளாலும் புலப்படுத்தும் நுட்பமும், தமிழ்மொழியின் இலக்கணங்களைத் தெளிய விளக்கும் திட்பமும் ஒருங்கே பெற்றுத் திகழும் சீரிய உரைநடை இலக்கியம் இறையனார் களவியலுரையாகும்’’. **(இலக்கணச் சிந்தனைகள் (1973), ப.142, 145)**

‘‘முதன் முதல் உரைநடை நூலாக அமைந்தது இவ்விறையனார் களவியல் உரையே எனலாம். அதுவும் உரைநடை சிறக்கத் தோன்றாத அந்தக் காலத்தில் இத்துணை அழகாகத் திறம்பட உரை எழுதி, தமக்குப் பின்வரும் அனைவருக்கும் வழிகாட்டியாக - தமிழ் உரைநடைப் பாதையிலே ஒரு சிறந்த மைல் கல்லாக - அமைந்த இவ்விறையனார் களவியலுரையை அறிஞர் அறிந்து, ஆய்ந்து அமைந்து, பயில் தொறும் இன்பம் காண்பார்களாக’’. அ.மு.பரமசிவானந்தம்.

### இறையனார் களவியல் உரையின் காலம்

‘‘சங்க காலத்தில் எழுந்த இறையனாரகப் பொருளுக்குச் சங்க புலவராகிய நக்கீரரே முதன் முதலாக உரை கூறினாரென்றும் அவ்வுரை பல ஆண்டுகளாகக் கர்ண பரம்பரையாக வந்த பின்னரே ஏட்டு வடிவத்தில் அமைந்ததென்றும் தெரிகின்றது. நக்கீரனார் காலந்தொடங்கி நீலகண்டனார் காலம் வரையும் இவ்வாறு கர்ண பரம்பரையாக வந்த உரை கி.பி.8 -ஆம் அல்லது 9 -ஆம் நூற்றாண்டளவில்

ஏட்டு வடிவத்தில் அமையலாயிற்றெனக் கொள்ளுதற்கு அவ்வுரையிலேயே ஆதாரம் காணப்படுகிறது'' என்று பேராசிரியர் **(செல்வநாயகம்,வி. தமிழ் உரைநடை வரலாறு, ப.19-20)** இவ்வுரையின் காலத்தினைக் கணிக்க முற்படுகின்றார்.

அறிஞர் மு.வரதராசன், ''எட்டாம் நூற்றாண்டில் களவியல் என்னும் நூலுக்கு உரையாசிரியர் எழுதிய உரையே அது செறிவும் செழுமையும் உடையது. ஆயினும் செய்யுளில் சீர்கள் அமைப்பது போலவே சொற்கள் அளவுபட்டு அமைந்து எதுகையும் மோனையும் நிரம்பிய அந்த நடை உரைநடையாக இல்லாமல், செய்யுள் நடை போன்றே உள்ளது'' **(வரதராசன்,மு. தமிழ் இலக்கிய வரலாறு, ப.193)** எனச் சிறப்பித்துரைப்பார்.

மூலநூலையும் அதன் உரையையும் இணைத்துப் புகழ எண்ணிய மு.கோவிந்தசாமி, ''தெளிந்த இனிய மிடுக்குடைய நடை முதலிரண்டு மூன்று சூத்திர உரைகள் இன்றுவரை உரைநடை நூல்களிலேயே இதனைச் சிறந்ததாக்கி விட்டன மூலம் அகப்பொருளைப் பேசுகிறது, உரை வீடு பேற்றை அதனில் இணைக்கின்றது. கடவுள், வீடுபேறு பற்றிய உணர்ச்சி வளர்ந்த காலம். பழைய அகத்தையும் புதிய கடவுளியலையும் விட்டுவிடாமல் ஒன்றாகப் பிணைக்கிறது உரை'' **(கோவிந்தசாமி,மு. இலக்கியத் தோற்றம், ப.99)** எனப் புகழாரம் சூட்டுகின்றார்.

''நக்கீரர் இயற்றிய இறையனாரகப் பொருள் உரையைப் படிக்கும் பொழுது இலக்கண நூல் ஒன்றைப் படிக்கின்றோம் என்ற எண்ணம் எழுவதில்லை. நல்லதோர் இலக்கியத்தைப் படிப்பது போன்ற உணர்ச்சி தோன்றுகின்றது'' என்பது **(வி.கணபதி, தமிழ் இலக்கண இலக்கிய அறிமுகம், ப.104)** என்பாரின் பாராட்டு மொழி.

உரையாசிரியர்களைக் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ள மு.வை.அரவிந்தன் பின்வருமாறு கூறுகின்றார், ‘‘தென்றல் தவழும் இனிய மலர்ச் சோலையுட் புகுந்து வண்ண வண்ண மலர்களையும் செடி கொடிகளையும் கண்டு மகிழும் போது ஏற்படும் இன்ப உணர்வே, இவ்வுரையைக் கற்கும் போது ஏற்படுகின்றது’’ **(அரவிந்தன்,மு.வை, உரையாசிரியர்கள், ப.69)**

**உரை மரபு**

‘‘நூல் முழுவதும் நூலாசிரியரின் குரலைவிட, உரையாசிரியரின் குரலே மேலோங்கி நிற்கின்றது, உரையாசிரியர் கூறும் கருத்தும் விளக்கமுமே கற்போர் நெஞ்சத்தில் ஆழப்பதிகின்றன. உரையாசிரியர் நம் எதிரே நின்று உரையாடுவது போன்ற மனநிலையை உரையின் வாயிலாக உண்டாக்கி விடுகின்றார்’’ **(அரவிந்தன்,மு.வை. உரையாசிரியர்கள், உரை, ப.69).**

ஏனைய இலக்கண, இலக்கிய நூல்களுக்கு இல்லாத சிறப்பியல்புகள் பல இக்களவியலுரைக்கு மிகவுண்டு, இச்சிறப்புக்களுள் ஒன்று இவ்வுரையின் தொடரமைப்பு. சிறுசிறு தொடராக அமைத்து அத்தொடரை முடித்து, முடிக்கும் வினைமுற்றை, வினைஎச்சமாக்கி அடுத்து வரும் தொடரின் தொடக்கச் சொல்லாக்குகின்ற நடையமைப்பினை மிகுதியாக இவ்வுரையில் காண முடிகிறது. இவ்வாறு மிகுதியாக எழுதிப் போகும் அந்தாதிப் போக்கினை வேறு உரையாசிரியர்களிடம் காண்பது அரிது.

**செய்யுளோசை சிறத்தல்**

களவியலுரையில் செய்யுளோசை சிறந்து நிற்கின்றது. அக்கால உரைநடையின் வளர்ச்சிப் படிநிலையை இவ்வியல்பு வலியுறுத்தும். இவ்வியல்பினை ஆராயும் இடத்து, ‘‘நக்கீரர் உரையை தமிழில் முதன் முதலாகத் தோன்றிய

உரைநடையாகும். ஆகவே ஏட்டில் எழுதும்போது, செய்யுளையே எழுதிப் பழகியவர்களுக்கு, செய்யுளல்லாத மற்றொன்றை எப்படி அமைப்பது என்ற திகைப்பு இருந்திருத்தல் இயல்பே. அதனாலும் நக்கீரர் தம் உரை நெடுங்காலம் வாய்மொழியாகவே வழங்கி வந்தமையாலும், இதனுள் செய்யுளோசை அதிகம் பயிலக் காணலாம். சிறப்பாக இவர் வருணனை சொல்லுமிடங்களில் செய்யுளோசை அதிகம் பயிலக் காணலாம்'' என்று **(மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு 10 -ஆம் நூற்றாண்டு, ப.258) ஆய்வுரை வழங்குவார்.**

எதுகை மோனைகள், அளபெடைகள், தனிச்சொற்கள் விழுமிய சொற்கள், எழிலார்ந்த இயற்கை வருணனைகள் போன்ற செய்யுள் மரபுகளைக் களவியலுரையில் கண்டுணர முடிகின்றது.

''கரு வமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயில் மாடம் போலவும் தகைமாண்ட நெடுஞ்சுவர்க்கு வகைமாண்ட பாவை போலவும் என்பது'' (இறை. 1, உரை, ப.2) என வருகின்ற உரைப்பகுதியில் எதுகை மோனைகளும் இயைபுத் தொடைகளும் நிறைந்து வந்துள்ளன.

பேராசிரியர் மு.வை. அரவிந்தன் கூறுவது போன்று, ''செய்யுளுக்குரிய எல்லா இயல்புகளும் இவ்வுரையில் உள்ளன. விழுமிய ஓசை, வளமான சொற்கள், கற்பனை நயம் வாய்ந்த பொருள், கற்குந்தோறும் இன்பமூட்டும் இலக்கியச் சுவை ஆகியவை யாவும் இவ்வுரையில் இடம் பெற்றுள்ளன.'' **(மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.78)**

**வினா - விடைப் போக்கு**

''உலக வழக்கிலே ஒரு பொருளைக் குறித்து வினாவுவாரும் செப்புவாரும் கூறுங்கூற்றை ஒத்ததோர் நடை இவ்வுரையின்கண் வந்துள்ளது.

**சொற்பொருள் விளக்கம்**

சில சொற்களின் பொருளை இறையனார் களவியல் உரையாசிரியர் மிக நுணுக்கமாக விளக்குகின்றார். பாயிரம் என்ற சொல்லுக்கு இவ்வுரையாசிரியர் கூறுகின்ற விளக்கம் வருமாறு, ‘‘பாயிரம் என்ற சொற்குப் பொருள் யாதோ எனின் புறவுரை என்றவாறு (இறை. 1, உரை, ப.2)என்கிறார்.

**‘‘கண்ணழித்தல் என்பது பதப்பொருள் சொல்லுதல்’’**

**(இறை. 1. உரை, ப.15)**

**‘‘அன்பு எனப்பட்டது, தான் வேண்டப்பட்ட பொளின்கண்**
**தோன்றும் உள்ள நிகழ்ச்சி’’ (இறை. 1. உரை, ப.16)**

**‘‘நிறை என்பது என்னோ எனின், காப்பன காத்துக்**
**கடிவன கடிந்து ஒழுகுமத் ஒழுக்கம்**
**ஓர்ப்பு என்பது ஒரு பொருளை ஆராய்ந்து உணர்தல் என்பது.**
**கடைப்பிடி என்பது கொண்ட பொருள் மறவாமை’’**

**(இறை. 2. உரை, ப.33)**

**‘‘மொழிமாற்றுதல் என்பது, செய்யுள் கிடந்தவாறு**
**செய்யலாகாத வழிச் செய்வது’’ (இறை. 3. உரை, ப.58)**

இவ்வுரை கூறும் சொற்பொருளில் எல்லாம் தலை சிறந்து விளங்கும் சொற்பொருள், தமிழ் என்ற சொல்லிற்குக் கூறும் பொருள் ஆகும். ‘‘இந்நூல் என் நுதலிற்றோ எனின், தமிழ் நுதலிற்று என்பது’’ (இறை. 1, உரை, ப.5). இங்கே தமிழ் என்ற சொல்லிற்கு அகப்பொருள் என்ற பொருளை இவ்வுரை குறிக்கின்றது.

**கருத்து விளக்கம் கூறல்**

களவியல் உரைகாரர் சில கருத்துகளை விளக்கும் போது மிக நயமாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளார்.

**நாடகப் பாங்கு**

''உரையாசிரியர் சிக்கலில்லாமல் ஓர் நாடகப் பாங்கில் நேர்முகமாகவே பொருளைச் சொல்லிக் கொண்டு போகிறார். வருணனை யொன்று தான் நீண்டுபோகுமே ஒழிய ஏனைய பகுதிகள் யாவும் சிறுசொற்களால் புனைந்து சிறு சொற்களாகவே நிற்கும்... இவ்வாறே இவரது உரையுள், கிளவிக் குரியாரைப் பாத்திரமாக வைத்துக் காட்டுமிடமெல்லாம். சில சொற்களோடு கொண்ட சிறு வாக்கியங்களாய் அமைத்து எழுதுகிறார். அதனால், இவ்விடங்கள் ஒவ்வொன்றும் ஒரு நாடகக் கட்டம் போலவே நடைபெறும்.'' **(மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு 10 -ஆம் நூற்றாண்டு, ப.260-261)**

**இலக்கண விளக்கம்**

களவியல் நூல் அகப்பொருள் சார்ந்தது. எனினும் இதன் உரையினூடே ஆசிரியர் பலவிடங்களில் இலக்கணச் செய்திகளை மிக நயமாகவும் தெளிவாகவும் விளக்கிப் போகின்றார். தொல்காப்பிய நூற்பாக்களுக்குச் சுருக்கமான முறையில் மிகத் தெளிவாகக் களவியல் உரைகாரர் விளக்குகின்றமை இவண் அறியத் தகும் செய்தியாகும்.

**“இனி, என்மனார் என்பது ‘என்ப’ என்னும் முற்றுச் சொல்,**

**குறைக்கும் வழிக் குறைத்தல் (எச்சவியல்.7)**

என்பதனாற் பகரம் குறைத்தல்.

**“விரிக்கும் வழி விரித்தல்” (எச்சவியல். 7)**

என்பதனால், ‘மன், ஆர்’ என்பன இரண்டு இடைச்சொற்பெய்து விரித்து, ‘என்மனார்’ என்று ஆயிற்று’’ (இறை. 1 உரை, ப.28) என்பது இவ்வகையில் குறிப்பிடத்தக்க சான்றாகும்.

**தொகைப் பொருள்களை விளக்குதல்**

களவியலுரையாசிரியர் தம் உரையினகத்து ஆங்காங்கே தொகை கொடுத்துக் கூறப்படும் செய்திகளை - தொகைப்படுத்தப் பெறும் குறியீடுகளை - விரிவாக விளக்கிச் சென்றுள்ளார்.

**இயைபு கூறல்**

திருக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர் ஒரு அதிகாரத்திற்கும் அடுத்த அதிகாரத்திற்கும் இயைபு கூறிப் பொருத்தம் காட்டுவார். இறையனார் களவியலுரை ஆசிரியரும் ஒரு நூற்பாவிற்கும் அடுத்த நூற்பாவிற்கும் உரிய இயைபினை எடுத்து விளக்கும் நுட்பத்தைக் கையாண்டுள்ளார்.

**உவமை நயம்**

கருத்தைத் தெளிவுபடுத்த வருவது உவமை. அவ்வகையில் இவ்வுரை நூலார் பற்பல நல்ல உவமைகளைக் கையாண்டு உரையின் நயத்தினைப் பெருக்கியுள்ளார். ‘‘இவ்வுரை முழுவதும் சிறந்த உவமைகள் பல இடம் பெற்றுள்ளன. வேறு எவ்வுரையிலும் இத்தனை உவமைகள் இல்லை என்னலாம். உவமைகளின் சிறப்பே உரையாசிரியரின் புலமை மாண்பை வெளிப்படுத்தும் சிறந்த அளவு கோலாய் உள்ளது. இவ்வுரையில் இடம் பெற்றுள்ள பல உவமைகளைப் பிற்கால உரையாசிரியர்கள் எடுத்தாண்டுள்ளனர்’’ என்பத பேராசிரியர் **(மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.79)** கருத்து.

**பழக்க வழக்கங்களைக் கூறல்**

உரை விளக்கத்தின்போது உரையாசிரியர்கள், தம் கால நடைமுறை வழக்கங்களைச் சுட்டிப் போவது இயல்பே. அக்காலத்து மக்கள் உறையூரையே சிறந்த ஊராகக் கருதினர் என்பதனை, ‘‘ஊர் எனப்பவது உறையூர் என்ற இடத்துப் பிறவும் ஊருண்மை சொல்லி, அவற்றுளெல்லாம் உறையூர் சிறப்புடைமை சொல்லுப: (இறை. 1, உரை. ப.25) என வருகின்ற உரைப்பகுதி கொண்டு தெளிய முடிகின்றது.

## உரையில் தருக்க நெறி

இறையனார் களவியல் உரைகாரர் தொல்காப்பிய இலக்கண மரபைப் பின்பற்றியே உரைகூறிச் செல்கின்றார். அவ்வாறு இவர் உரைகூறும்போது, காட்சி, கருதல், பிறன் கோட்கூறல், பிறர் உடம்பட்டது தானுடம்படல், பொருட்பேறு அளவை (அருத்தாபத்தி), வந்தது கொண்டு வாரதது முடித்தல் இனைய பல்வேறு உத்திகளையும் உள்வாங்கிக் கொண்டு விளக்கிப் போகின்றார்.

மூன்று சங்கங்களைப் பற்றிய குறிப்புக்களை இவ்வுரையிலிருந்தே முதற்கண் பெறுகின்றோம். (இறை. 1, உரை, ப.5-6) மேலும் இந்நூலின் உரையில் பாண்டிக்கோவைப் பாடல்கள் 327 எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இதன் அடிப்படையை எண்ணும்போது கோவை நூலின் தொடக்க கால வளர்ச்சி பெறப்படும். இக்களவியலுரைக்காரர் பரிபாடல் முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை, அகத்தியம், கலி, குருகு, வெண்டாளி, வியாழமலை அகவல், தொல்காப்பியம், மாபுராணம், இசைநுணுக்கம், பூதபுராணம், நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, சிற்றிசை, பேரிசை போன்ற பற்பல நூல்களின் பெயர்களையும் குறிப்பிடக் காண்கின்றோம்.

## தொல்காப்பிய உரையாசிரியர்கள்

தொல்காப்பியம் என்னும் பழம்பெரும் இலக்கண நூல் தமிழ் மொழியின் தொன்மைக்கும் சிறப்பிற்கும் சான்றாய் விளங்குகின்றது. வளமாக வாழ்ந்த தமிழினத்தின் உயர்ந்த கொள்கைகளையும் எண்ணங்களையும் உலகிற்கு உணர்த்தும் விழுமிய நூலாய் இது ஒளிர்கின்றது. இதனை இயற்றிய தொல்காப்பியரின் குரல், காலத்தையும் இடத்தையும் கடந்து வந்து தெளிவாக ஒலிக்கின்றது. தொல்காப்பியம் தனக்குப் பின் தோன்றிய பல இலக்கண இலக்கியங்களுக்கு எல்லாம் தலைமை தாங்கி வழி காட்டி நடத்திச் செல்கின்றது.

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணரே முதன் முதலில் உரை கண்டார். இவரது காலம் பதினோராம் நூற்றாண்டு என்பர். இளம்பூரணர் காலம் வரை - தொல்காப்பியம் தோன்றிய பல நூறு ஆண்டுகள் வரை, உரை இல்லாமலே கற்கப்பட்டு வந்ததா என்ற வினா எழக்கூடியதே. ஆனால் இந்நாள் வரை, இளம்பூரணரே தொல்காப்பியத்தின் முதல் உரையாசிரியர் என்ற கருத்து நிலவி வருகின்றது. இளம்பூரணர் தம் உரைகளில் பிற உரைகளாகச் சில கருத்துகளைத் தெரிவிக்கின்றார். உரை இயற்றியவர் பெயரைக் குறிப்பிடவில்லை.

தொல்காப்பியம் முழுமைக்கும் முதன் முதலாக உரை இயற்றியதால் இளம்பூரணர்க்கு ‘உரையாசிரியர்’ என்ற பெயர் ஏற்பட்டது. இவருக்குப் பின் வந்த தொல்காப்பிய உரையாசிரியர்கள் அனைவரும் இவர் உரையைக் கற்றுத் தெளிந்த பின்னரே தம் கருத்தை விளக்கிப் புதிய உரை கண்டனர்.

இளம்பூரணர்க்குப் பின்னர்த் தோன்றிய சேனாவரையர் சொல்லதிகாரத்திற்கு மட்டும் சிறந்ததோர் உரை இயற்றினார்.

பேராசிரியர், பொருளதிகாரத்திற்கு விரிவாக உரை இயற்றினார். நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் முழுமைக்கும் விரிவான உரை கண்டார். இவருக்குப் பின், தெய்வச் சிலையார், கல்லாடர் ஆகிய இருவரும் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை இயற்றினார். பழைய உரை ஒன்றும் சொல்லதிகாரத்திற்கு உள்ளது. பழங்காலத்தில் தோன்றிய உரைகள் இவைகளே ஆகும்.

இளம்பூரணர் உரை தமிழ் மரபை உணர்த்தும் உரை எனலாம். சேனாவரையர் உரை வடமொழி இலக்கணக் கொள்கையைத் தமிழின்மீது திணிக்கும் உரை என்பது பொருந்தும். பேராசிரியர் உரை இலக்கண இலக்கிய ஆராய்ச்சி நிரம்பிய உரையாக உள்ளது. நச்சினார்க்கினியர் உரை இலக்கியச் சுவை நுகர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது. தெய்வச்சிலையார் உரையில் சில இடங்களில் புதுமை ஒளி காணப்படுகின்றது. கல்லாடர் உரை முன்னைய உரைகளைத் தழுவி எழுதப்பட்ட சார்பு உரையாக உள்ளது.

பதினேழாம் நூற்றாண்டில் மீண்டும் தொல்காப்பிய ஆராய்ச்சி தொடங்கியது. இதனைத் தொடங்கி வைத்தவர் சிவஞான முனிவர். தொல்காப்பியப் பாயிரம், முதற் சூத்திரம் ஆகிய இரண்டிற்கும் விருத்தியுரை எழுதினார் இவர். இவ்விருத்தியுரை இலக்கண ஆராய்ச்சிக் கருவூலமாய்த் திகழ்கின்றது. இவரை அடுத்துச் சோழவந்தான் அரசன் சண்முகனார் தொல்காப்பியப் பாயிரத்திற்கும் முதற் சூத்திரத்திற்கும் விருத்தியுரை எழுதினார். அரசன் சண்முகனார் எழுத்ததிகாரத்தில் நுன் மரபு, மொழி மரபு என்ற இரு பகுதிகளுக்கும் உரை எழுதினார் என்றும், அவ்வுரைப் பகுதிகள் கிடைக்கவில்லை என்றும் கூறுவர். **(தொல்காப்பியச் செல்வம், 1965 : ப.113)**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து, தமிழ்த்தொண்டு ஆற்றிய டாக்டர் ச.சோமசுந்தர பாரதியார் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்றிற்கும் ஆராய்ச்சி உரை இயற்றியுள்ளார்.

பின்னங்குடி ச.சுப்பிரமணிய சாஸ்திரியார் சொல்லதிகாரத்திற்கு உரை இயற்றியுள்ளார். இவ்வுரையில் வடமொழி இலக்கணக் கொள்கையை வலிந்து புகுத்திய இடங்களும், தமிழ்மொழி மரபுடன் பொருந்தாத முடிபுகளும் உள்ளன.

தொல்காப்பியத்தையும், உரைகளையும் பதிப்பித்த போது அடிக்குறிப்பாகப் பல அரிய ஆராய்ச்சிக் குறிப்புரைகளைப் பலர் எழுதியுள்ளனர். இளவழகனார், சி.கணேசையர் இருவரும் தொல்காப்பியம் முழுமைக்கும் குறிப்புரை எழுதியுள்ளனர். எழுத்ததிகாரத்திற்கு ஞா. தேவநேயப் பாவாணரும் சொல்லதிகாரத்திற்கு ஆ. பூவராகம் பிள்ளையும், கு. சுந்தரமூர்த்தியும் குறிப்புரையும் விளக்கமும் எழுதியுள்ளனர்.

இக்காலத்தில் தொல்காப்பிய ஆராய்ச்சி நூல்களிலும் பல உரைவிளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. மு.இராகவ ஐயங்கார் இயற்றிய பொருளதிகார ஆராய்ச்சி, கா.சுப்பிரமணிய பிள்ளை இயற்றிய பழந்தமிழர் நாகரிகம் (கொருளதிகார ஆராய்ச்சி), கி.வா.ஜகந்நாதன் எழுதிய பயப்படாதீர்கள் (எழுத்ததிகார விளக்கம்), வாழும் தமிழ் (சொல்லதிகார ஆராய்ச்சி), வெங்கடராஜுலு ரெட்டியார் எழுதிய எழுத்ததிகார ஆராய்ச்சி, க.வெள்ளைவாரணனார் எழுதிய தொல்காப்பியம், லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார் இயற்றிய தொல்காப்பியச் செல்வம், சி.இலக்குவனார் இயற்றிய தொல்காப்பிய ஆராய்ச்சி ஆகிய நூல்கள் குறிப்பிடத் தகுந்தவை. தமிழறிஞர் சுப்பு ரெட்டியாரும்

புலவர் குழந்தையும் பொருளதிகாரத்திற்குச் சிறந்த முறையில் ஆய்வுரை எழுதியுள்ளனர்.

## இளம்பூரணரின் உரைமரபு

பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் முழுமைக்கும் முதன் முதலில் உரைகண்டு அதனைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு நன்கு அறிமுகப்படுத்திய பெருமை இளம் பூரணரையே சாரும். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தில் வேனிற்காதையின் தொடக்கத்தில் ''உரையாசிரியரான இளம்பூரண அடிகள்'' என்று குறிப்பிடுவதால், இளம்பூரணரே உரையாசிரியர் என்று உணரலாம்.

### காலம்

இளம்பூரணர் தம் உரையில் புறப்பொருள் வெண்பா மாலை, யாப்பருங்கல விருத்தி ஆகியவற்றிலிருந்து மேற்கோள் தந்து விளக்குவதால் அந்நூல்களுக்குப்பின் வாழ்ந்தவர் எனலாம். இவரது கருத்தை நன்னூலார் மேற்கொண்டிருப்பதால் இவர் காலம் பதினோராம் நூற்றாண்டாக இருக்கலாம்.

### உரையின் இயல்பு

இளம்பூரணர் பிற மொழிப்பயிற்சி மிகுதியாக இல்லாதவர், தமிழ்க் கடலுள் பல கால் மூழ்கித் திளைத்தவர், தமிழ் மரபு நன்கு அறிந்த சான்றோர். இவரது தமிழ்நெஞ்சம் பல இடங்களில் வெளிப்படுகின்றது. இவரைச் சிவஞான முனிவர், 'தமிழ் நூல் ஒன்றே வல்ல உரையாசிரியர்' என்று தொல்காப்பியச் சூத்திர விருத்தியில் குறிப்பிடுகின்றார்.

இளம்பூரணர் தம் காலத்தில் வழங்கிய புதிய இலக்கணக் கொள்கைகளை ஆங்காங்கே கூறிச் செல்கின்றார், தொல்காப்பியத்திற்குப் பழைய நூல்களில்

இருந்து மட்டுமின்றித் தம் காலத்திற்குச் சிறிது முன்னர்த் தோன்றிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டவும் தயங்கவில்லை. புறத்திணையியலில், புறப்பொருள் வெண்பா மாலையிலிருந்து பல வெண்பாக்கள் உதாரணமாக காட்டப்படுகின்றன. உவமையியலில் பிற்கால அணிநூல் கருத்துகள் இடம்பெறுகின்றன. செய்யுளியலில் யாப்பருங்கலம் போன்ற பிற்கால யாப்புநூல்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. பொருளியலை இவர், அகம் புறம் என்ற இரண்டிற்கும் புறனடை என்று கூறுகின்றார்.

தொல்காப்பியர் கருத்தையும் இலக்கணக் கொள்கையையும் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு இவர் பெரிதும் முயன்றுள்ளார். காலயிடையீடம், புதிய இலக்கணக் கொள்கைகளும் பழைய இலக்கணம் பற்றிய பல வேறு கருத்தும் இவருக்குத் தயக்கமும் மலைப்பும் உண்டாக்கின எனலாம். அதனால் நடுநிலைமை பிறழாத உள்ளம் கொண்ட இவர், தாம் உரைத்த கருத்துகளையும், பொருளையும் முற்ற முடிந்த முடிபுகளாகக் கருதவில்லை. பல நூற்றாண்டுகள் கழித்து, அந்நூலின் கருத்தை உள்ளவாறு அறிய முயன்று, முதன் முதலில் உரை எழுதிய இவர்க்கு இத்தகைய தயக்கமும் ஐயமும் ஏற்பட்டதில் வியப்பு ஒன்றுமில்லை.

சொல்லதிகாரத்தில், ‘‘நிலப்பெயர் குடிப்பெயர்’’ என்று தொடங்கும் சூத்திரத்தில் (சொல்-162 இளம்), ‘இன்றிவர் என்னும் எண்ணியற் பெயர்’ என்ற அடிக்கு ‘‘ஒருவர் , இருவர், மூவர், என்பன’’ என்று விளக்கம் எழுதியபின், ‘‘இன்றிவர் என்பது, இத்துணைவர் என்னும் பொருட்டுப் போலும்’’ என்று ஐயத்தோடு கூறுகின்றார்.

## உரை மரபுகள்

இளம்பூரணர்க்குப் பின்வந்த உரையாசிரியர்களும், இளம்பூரணரையே பின்பற்றி, இவரது பொருள் விளக்கம், மேற்கோள், எடுத்துக்காட்டு ஆகியவற்றைப் போற்றி மேற்கொண்டு உரை எழுதுகின்றனர்.

மூல நூலாசிரியரிடத்துப் பெருமதிப்பு வைத்து எழுதுதல், பிற மொழிப் பயிற்சியோடு உரை எழுதுதல், வினாவிடைப் பாங்கு, சொற்பொருள் தருதல், பலதுறையறிவோடு உரை வரைதல், பல்வேறு நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுதல், தம் காலத்து வாழ்வியல் புலப்படும் வகையில் எழுதுதல், பாடவேறுபாடுகளைத் தருதல் முதலான உரை மரபுகள் பலவற்றைக் கையாண்டு உரை எழுதியுள்ளார் இளம்பூரணர்.

## நூலாசிரியரின் கருத்தை வெளிப்படுத்தல்

“நூலாசிரியரின் கருத்தை வெளிப்படுத்துவதே உரையின் ஒழுக்கம். தன் கருத்து எதுவாக இருந்தாலும் இன்னொருவன் எழுதிய நூலில் அதனை ஏற்றிக் கூறலாகாது. அப்படிச் செய்வது உரை வழுவாகும்” என்பர் **(வ.சுப.மாணிக்கம், சிந்தனைக் களங்கள், ப.128)** நூலுள் ஆழந்திருக்கும் ஆசிரியரின் உள்ளத்தைக் காண்பதே - அவரது கருத்தை வெளிப்படுத்துவதே - உரை மரபுகளுள் அடிப்படையானதும் தலைமையானதும் ஆகும். இளம்பூரணர் மூல நூலாசிரியரான தொல்காப்பியரிடத்துப் பெருமதிப்பு வைத்து உரை எழுதியுள்ளார்.

## தமிழ் மரபிற்கு முதன்மை நல்கல்

வடமொழிச் சார்பைக் காட்டும் சான்றுகள்தான் இல்லையே தவிர வடமொழி அறிவைக் காட்டும் சான்றுகள் அவரது உரையில் நிறையவே காணப்படுகின்றன. காட்டாகச் சிலவற்றைக் காண்போம்.

புகழ்பெற்ற வடமொழி இலக்கண நூலான பாணினீயத்தை இரண்டு முறை இளம்பூரணர் தம் உரையுள் குறிப்பிட்டுள்ளார். அவர் பாணினீய ஆசிரியரைப் பாணினியார் (பொருள். 656) என மதிப்போடு சுட்டுவதும் கருதத்தக்கதாகும்.

மனைவியின் இயல்பினைப் பற்றிக் கூறும் வடமொழிக் காம தந்திர நூலினை இளம்பூரணர் கற்பியல் உரையுள் குறிப்பிட்டுள்ளார். 'அவை, மனையாளைப் பற்றி வருதலிற் காம தந்திரத்துட் பாரியாதிகாரமெனக் கூறப்பட்டன. (பொருள். 151) என்பது அவரது உரைக் குறிப்பு.

வடமொழிச் சொல்மூலம் காட்டும் போக்கும் இளம்பூரணரிடம் ஆங்காங்கே காணப்படுகின்றது.

**"படிமை' என்பது ப்ரதிமா' என்னும் வடமொழித் திரிபு". (பொருள்.30)**

**"ஆணையென்பது ஆக்கினை, வடமொழித் திரிபு" (பொருள்.495)**

**வினா - விடை நெறி**

வினா விடைப் பாங்கில் எழுதிச் செல்வது என்பது பண்டைய உரையாசிரியர்கள் கடைப்பிடித்த நெறிகளுள் ஒன்றாகும். கற்பவர்க்குக் தெளிவு செய்யும் நோக்குடன் அன்னோர் இடையிடையே வினாக்களைத் தொடுத்து, தக்க விடைகளையும் எழுதிச் சென்றனர்.

(பொருள். 99) என வரும் களவியல் நூற்பா விளக்கத்தில் ஆசிரிய நிலையில் இருந்து, வினாத் தொடுக்கும் மாணவனைப் பாராட்டும் பாங்கில் எழுதிச் செல்கின்றார் இளம்பூரணர்.

**சொற்பொருள் தருதல்**

இளம்பூரணர்தம் உரையுள் ஆங்காங்கே சுவையான நயமான - சொற்பொருள் விளக்கங்களை எழுதிச் செல்கின்றார். அவ்விளக்கங்கள் அருமையும் எளிமையும் அழகும் பெற்றுத் திகழ்கின்றன.

‘தொடர்பு பற்றாதே வருத்தமுற்றார்மேல் செல்வது அருள், தொடர்பு பற்றிச் செல்வது அன்பு’ என்னும் பரிமேலழகரின் விளக்கம் (குறள்.757) இன்று பலராலும் பாராட்டிக் கூறப்படுகின்றது. ஆயின் பரிமேலழகருக்கு முன்பே, இளம்பூரணர் அருள் என்பதற்கும் அன்பு என்பதற்கும் இத்தகையதொரு விளக்கத்தினை அளித்திருக்கிறார் என்பதை அறியும் போது வியப்பினும் வியப்பாக உள்ளது. அருளாவது எல்லாவுயிர்க்கும் அருளி செய்தல், அன்பு என்பது பயின்றார் மாட்டுச் செல்லுங் காதல்’ (பொருள்.256) என்பது இளம்பூரணர் மெய்ப்பாட்டியல் நூற்பா ஒன்றில் எழுதியுள்ள விளக்கம்.

இனமான சொற்களுக்கு இடையே விளங்கும் நுட்பமான பொருள் வேறுபாடுகளை எடுத்துக்காட்டுவதில் ஆர்வமும் ஆற்றலும் மிக்கவர் இளம்பூரணர்.

**பலதுறையறிவு**

‘‘ஒரு நூல் இலக்கிய அறிவை மாத்திரம் தருவதில்லை மக்கள் வாழ்வின் பல்வேறு கூறுகளும் அமையப் படைப்பதுதான் இலக்கியம். அத்தகைய இலக்கியக் கலைக்குப் பொருள் காணவேண்டும் எனின். பொருள் காண்பார்க்குப் பலதுறையறிவு வேண்டும் என்பது தானே விளங்கும்’’ **(பக்.313-314)** என்பர் அறிஞர் இளம்பூரணரின் தொல்காப்பிய உரையினைப் பயில்வார்க்கு அவரது பலதுறையறிவு நன்கு விளங்கும். நாட்டுப்புறவியலிலும் இளம்பூரணருக்கு நல்ல தோய்வு உள்ளது. ‘‘உன்னம்’’ என்பது மரம். அது தன் நாட்டகத்துக் கேடு வருங்கால் உலறியும், வாராத காலம் குழைந்தும் நிற்கும் (பொருள்.63) என அவர் நாட்டிலே வழங்கும் நம்பிக்கையைப் புறத்திணை இயலில் கரந்தைத் திணை பற்றிய நூற்பாவின் விளக்கத்தில் எடுத்துக்காட்டுகின்றார்.

**மேற்கோள் காட்டுதல்**

இளம்பூரணர் தொல்காப்பிய நூற்பாவுக்குத் தரும் உரை விளக்கம் ஒவ்வொன்றிற்கும் இயன்ற வரை தமக்கு முன் தோன்றிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டிக் கொண்டே செல்கிறார். எல்லோருக்கும் நன்கு அறிமுகமான நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுவதுடன் நில்லாது. இன்று மறைந்துபோன அரிய பல நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டியிருப்பது, இளம்பூரணர் தமிழ் உலகிற்கு ஆற்றியுள்ள பேருதவி ஆகும்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள், திருக்குறள் நாலடியார், பழமொழி, திரிகடுகம், களவழி நாற்பது, கார் நாற்பத திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது திணைமொழி ஐம்பது, கைந்நிலை என்னும் பதினொரு நூல்களிலிருந்தும் இளம்பூரணர் மேற்கோள் காட்டியுள்ளார். அவர் கைந்நிலைப் பாடல்கள் பலவற்றைக் காட்டுவது குறிப்பிடத்தக்கதாகும்.

காப்பியங்களுள் சிலப்பதிகாரத்தை இளம்பூரணர் மிகுதியாகக் குறிபபிட்டுள்ளார் காட்டாக, “சேரன் செங்குட்டுவனார் கண்ணகியைக் கடவுள் மங்கலம் செய்தற்குப் பிரிந்து பிரிவு சிலப்பதிகாரத்திற்கு கண்டு கொள்க” (பொருள்.30) என வரும் உரைப் பகுதியைச் சுட்டலாம். மணிமேகலை சிந்தாமணி, சூளாமணி ஆகியன இளம்பூரணர் எடுத்தாண்டுள்ள பிற காப்பியங்கள் ஆகும்.

புறப்பொருள் வெண்பா மாலை, இறையனார் களவியல், பிங்கல நிகண்டு, தமிழ் நெறி விளக்கம் ஆகியன இளம்பூரணர் மேற்கோள் காட்டியுள்ள இலக்கண நூல்கள் ஆகும்.

மறைந்து போன தமிழ் நூல்களான அகத்தியம், செயிற்றியம், காக்கைபாடினியம், பரிமாணச் சூத்திரம், பன்னிரு படலம் ஆகியவற்றையும் இளம்பூரணர் தம் உரையுள் எடுத்தாண்டுள்ளார்.

இளம்பூரணர் மேற்கோள் காட்டியுள்ள பிற நூல்களுள் ஆசிரிய மாலை, குணநாற்பது, சிற்றெட்டகம், தகடூர் யாத்திரை, பாண்டிக் கோவை பெரும்பொருள் விளக்கம் மார்க்கண்டேயனார் காஞ்சி, முத்தொள்ளாயிரம், விளக்கத்தனார் கூத்து என்பன குறிப்பிடத் தக்கன.

**பாட வேறுபாடுகள்**

பொருளதிகாரத்தின் ஏழாவது இயலை இளம்பூரணர் உவமையியல் எனச் சுட்ட பேராசிரியரோ உவமவியல் எனக் குறிப்பிடுவார்.

**சொல் நயங்கள்**

வெல்லும் சொல் இன்மை அறிந்து, திறன் மிகுந்த சொற்களைக் கையாளுவது (குறள். 645) பெரும்புலவரின் இயல்பு. அவர் கையாண்டுள்ள சொற்களின் வன்மையையும் வனப்பையும் எடுத்துக்காட்டுவது தேர்ந்த உரையாசிரியரின் இயல்பு. தொல்காப்பியர் மாசற்ற சில சொல்லில் வல்லவர் (குறள.649), சொற்களை வலியறிந்து காலம் அறிந்து இடன் அறிந்து அளவறிந்து ஆளும் ஆற்றல் மிக்கவர். இளம்பூரணரோ தொல்காப்பியரது சொற்களில் காணலாகும் நயங்களை எடுத்துக்காட்டுவதில் ஆற்றல் மிக்கவர்.

**அடைமொழி நயங்கள்**

பொருள் பொதிந்த அடைமொழித் தொடர்கள் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாக்களில் மண்டிக்கிடக்கின்றன. ‘எண்ணரும் பாசறைப் பெண்ணோடும் புணரார்’ என்னும் கற்பியல் நூற்பாவில் (பொருள்.173) வரும் ‘எண்ணரும் பாசறை’ என்ற அடைமொழித் தொடருக்கு இளம்பூரணர் எழுதியுள்ள உரைவிளக்கம் படிப்பவர் நெஞ்சை அள்ளுவதாகும். “நினைத்தற்கரிய பாசறைக்கண் தலைமகளிரோடும் புணரார் தலைமக்கள் என்றவாறு நினைத்தற்கருமை மாற்றாரை வெல்லுங் கருத்து மேற்கோடலிற் றலைமகளிரை நினைக்கலாகாதாயிற்று”. மாற்றாரை வெல்லும்

குறிக்கோள் கொண்ட தலைமகன் பாசறையில் இருக்கும் போது தலைமகளை நினைக்க மாட்டான் என்னும் இளம்பூரணரின் கருத்து விளக்கம் நயமும் நுட்பமும் பொருந்தியதாகும்.

**தொடர் நயங்கள்**

தொல்காப்பியத்தில் காணலாகும் அழகிய தொடர்களில் தம் நெஞ்சைப் பறி கொடுத்தவர் இளம்பூரணர். அவர் காட்டும் தொடர் நயங்கள் பன்முறை பயின்று இன்புறத் தக்கனவாகும்.

**“முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங் காலை முறைசிறந் தனவே**
**பாடலுட் பயின்றவை நாடுங் காலை”**

என்பது அகத்திணை இயலில் வரும் மூன்றாம் நூற்பா (பொருள்.3) இந்நூற்பாவில் இடம் பெற்றுள்ள ‘முறை சிறந்தன’ என்னம் தொடருக்கு இளம்பூரணர் எழுதியுள்ள இனிய உரை விளக்கம் வருமாறு “முறைமையாற் சிறத்தலாவது யாதானும் ஒரு செய்யுட்கண் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் வரின், முதற்பொருளால் திணையாகும் என்பதுஉம், முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டும் வரின் கருப்பொருளால் திணையாகும் என்பதூஉம், உரிப்பொருள் தானே வரின் அதனால் திணையாகும் என்பதூஉம் ஆம். அவை ஆமாறு முன்னர்க் காணப்படும். அ.்.தேல், ஒரு பொருட்கு ஒரு காரணம் கூறாது மூன்று காரணம் கூறியது என்னை எனின், உயர்ந்தோர் என்றவழிக் குலத்தினால் உயர்ந்தாரையும் காட்டும், கல்வியின் உயர்ந்தாரையும் காட்டும் செல்வத்தான் உயர்ந்தாரையும் காட்டும் அதுபோலக் கொள்க.

**எடுத்துக்காட்டு நயங்கள்**

எவ்வகைப் படைப்பும் பலருக்கு எளிதாக விளங்க வேண்டுமெனில் எடுத்துக்காட்டுக்கள் பலர் அறிந்த வழக்கினவாக இருத்தல் வேண்டும். மக்களின் நடைமறைப் பேச்சுக்களினின்றும் வழக்க ஒழுக்கங்களினின்றும் இந்த எடுத்துக்காட்டுக்கள் அமையவேண்டும். 'விளங்கு உதாரணத்தது ஆகுதல்' என்பது நூலுக்குச் சொல்லப்படும் பத்து அழகுகளுள் ஒன்றாகும் (நன்னூல், நு,13). இளம்பூரணர் இவ்வகையில் எளிமையானவர், படிப்பவர்க்கு எளிதில் புரியும் பொருட்டு நயமான எடுத்துக்காட்டுக்களை ஆங்காங்கே கையாள்பவர்.

நிலம் தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும், கலந்த மயக்கம் உலகம் என்பது மரபியலில் வரும் ஒரு நூற்பாவின் (பொருள்.635) தொடக்கப் பகுதி இதில் இடம்பெற்றுள்ள கலத்தல், மயக்கம் என்ற இரு சொற்களை விளக்கும்போது இளம்பூரணர் "கலத்தலாவது, முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவனாற் போறல் மயக்கமாவது, பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கியொன்றாதல் போறல்" என்னும் இரு உவமைகளை எடுத்தாண்டுள்ளார்.

**கருத்து நயங்கள்**

தொல்காப்பிய நெறியை அடியொற்றி, தம் காலத்து வளர்ச்சியையும் நினைவில் இருத்தி இளம்பூரணர் கூறும் சில கருத்துக்கள் நயம் நிறைந்து பொருள் பொதிந்தவையாகும்.

ஓதற் பிரிவு என்பது அகத்திணை கூறும் பிரிவு வகைகளுள் ஒன்று (பொருள்.27). தலைவன் படிப்பதற்காக மேற்கொள்ளும் பிரிவு தமிழ்நாட்டிற்குள்ளேயே நிகழுமா? பிற நாட்டகத்தும் நிகழுமா? இவ்வினாவுக்கு இனியதொரு விடையினை அளிக்கின்றார். இளம்பூரணர். "ஓதற்குப் பிரிதலாவது, தமது நாட்டகத்து வழங்காது பிற நாட்டகத்து வழங்கும் நூல் உளவன்றே,

அவற்றினைக் கற்றல் வேண்டிய பிரிதல்'' என்பது அவர் கருத்து. இக் கருத்து இந் நூற்றாண்டிற்கும் முழுதும் பொருந்துகின்றது. உயர் கல்வி கற்பதற்கும் ஆய்வு செய்வதற்கும் நம்மவர் அயல்நாடுகளுக்குச் செல்லும் பயணத்தை இந்த அகலப் பிரிவு குறிக்கின்றது. திருமணமானவுடன் பட்டம் பெற்றவுடன் பதவியில் அமர்ந்தவுடன் நம் நாட்டில் பலரது கல்விக்கு முற்றுப்புள்ளி விழுந்து விடுகின்றது. திருமணத்திற்குப் பின்னும் ஆய்வுப் பட்டம் பெற்று உயர்பதவியில் அமர்ந்த பின்னும் தலைவன் பிற மொழியில் வழங்கும் நூல்களைப் பயில வேற்று நாட்டுக்குப் போதல் வேண்டும் என்னும் தொல்காப்பியரின் கருத்தினை நம் மனங்கொள்ளும் வகையில் வெளியிடுகின்றார். இளம்பூரணர். நூற்கல்வியேயன்றிக் கையாற் பயிலும் தொழிற் கல்வியும் சிற்பக் கல்வியும், படைக்கலக் கல்வியும் வேண்டும் என்பது அவரது குறிப்பு ஆகும்.

**அளவுப்பெயர்கள்**

இளம்பூரணர் எழுத்ததிகாரத்தில்

> **“அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுத லாகி**
> **உளஎனப் பட்ட ஒன்பதிற்று எழுத்தே**
> **அவை தாம்**
> **கசதப என்றா நமவ என்றா**
> **அகர உகரமோடு அவைஎன மொழிப”** (எழுத். 170)

என்ற சூத்திரம் இளம்பூரணர் உரை இன்றேல் விளங்காது அளவுப் பெயர்களும் நிறைப் பெயர்க்கும் முதலில் வரும் எழுத்துகள் ஒன்பது. அவை கசதப நமவ அஉ என்பன. இவ்எழுத்துகளை முதலில் கொண்ட அளவுப் பெயர்களாகப் பின் வருவனவற்றை இளம்பூரணர் காட்டுகின்றார்.கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு.

**நிறைப் பெயர்கள்**

கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை, (உகரத்தை முதலெழுத்தாகக் கொண்ட பெயர் இளம்பூரணர் காட்டவில்லை. அக்காலத்திலேயே வழக்கிழந்து விட்டது. நச்சினார்க்கினியாரும் இதற்கு உதாரணம் காட்டவில்லை.

**சூத்திர அமைப்பும் உரைப்போக்கும்**

இளம்பூரணர் இரண்டு சூத்திரங்களாக அமைத்தவற்றைப் பின்வந்தோர் ஒன்றாகவே எழுதி உரைகண்டனர், ஒன்றாகக் கொண்டதைப் பிரித்து இரண்டாக்கியதும் உண்டு.

**“எழுத்ததிகாரம் பிறப்பியலுள”  (19,20)**

‘எல்லா எழுத்தும்,’ என்றும் ‘அ.்.றிவண் நுவலாது’ என்றும் தனித்தனியே இளம்பூரணர் பிரித்து உரை கண்டவற்றை நச்சினார்க்கினியர் ஒரே சூத்திரமாக்கி, உரை எழுதுகின்றார்.

**உவமைகள்**

இளம்பூரணர் தம் உரையில் மிகச் சில உவமைகளையே எடுத்தாண்டுள்ளார். அவ்வுவமைகள், கூறக்கருதிய பொருளை இனிது விளக்குகின்றன.

எழுத்ததிகாரத்தில் (2), ‘‘சந்தனக்கோல் குறுகின விடத்தும் பிரப்பங்கோல் ஆகாது. அதுபோல, இகர உகரங்கள் குறுகின விடத்தும் அவை உயிர் ஆகற் பாலன்’’ என்று தக்க உவமை கூறி விளக்குகின்றார்.

**நாகரிகமும் பண்பாடும்**

இளம்பூரணர் உரையிலிருந்து அக்காலத்துத் தமிழ் நாட்டு நாகரிகமும் பண்பாடும் அறிய முடிகின்றது. எட்டி, காவிதி போன்ற பட்டம் பெற்றவர்களுக்குப் பூ அளித்தலும், புரவு (நிலம்) அளித்தலும் அக்காலத்தில் வழக்கமாய் இருந்தன.

அவற்றை இளம்பூரணர், “எட்டிப்பூ எட்டிப்புரவு, காவிதிப்பூ காவிதிப் புரவு” (எழுத்ததிகாரம்,155) என்று குறிப்பிடுகின்றார்.

அரசியல் அலுவலர்களையும், தொழிலாளிகளையும் இளம்பூரணர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“எல்லாக் கொல்லரும் சேவகரும் தச்சரும் புலவரும் எனவும், எல்லா நாயகரும் மணியகாரரும், வணிகரும் அரசரும் எனவும் வரும்” (எழுத்.325)

அக்காலத்தில் அம்புகளை வைக்கக் கொட்டிலும், போர்க் காலத்தில் கோட்டையிலிருந்து பகைவர்மீது எய்ய அம்புப்புழை, துளை முதலியனவும் இருந்தன. அவற்றை இளம்பூரணர். “ஏஎக்கொட்டில், சாலைதுளை புழை” என்று குறிப்பிடுகின்றார் (எழுத்.2770). வில்லும் அம்பும் சிறந்த போர்க்கருவிகளாகப் பயன்பட்டன. குதிரையை மத்திகைக் கோல் (சாட்டை) கொண்டு அடித்து ஓட்டினர் என்ற செய்தியைப் பின்வரும் உரைப் பகுதியால் உணரலாம்.

வட்டம், சதுரம், கோணம் முதலிய வடிவங்கள் அமைக்கவும், கோணத்துள் கோணமும் கோணத்துள் வட்டமும் அமைக்கவும் அக்காலத்தவர் அறிந்திருந்தனர் என்பத நமக்கு வியப்பு அளிக்கிறது. இச்செய்தியினை, “வடிவாவது வட்டம் சதுரம் கோணம் முதலாயின” (உவமையியல். 1) என்றும், “கோணா கோணம் கோணா வட்டம்” (எழுத்.312) என்றும் இளம்பூரணர் குறிப்பிடுவதால் உணரலாம்.

இளம்பூரணர் காலத்தில், ‘ஆசீவகப் பள்ளியும் குமரக்கோட்டமும் இருந்தன. (எழுத்.154). பெண்கள் தைந்நீராடினர். மக்கள் அறச்செலுக்காகத் தம்மிடம் உள்ள பசுக்களின் பாலைக் கறந்து தந்தனர். மாடுகள், தினவுபோகத் தேய்த்துக்கொள்ள மரமோ கல்லோ பொது இடங்களில் நடப்பட்டது (சொல்.50)

அக்காலத் தலைமகன், தனது நாட்டகத்து வழங்காது, பிற நாட்டகத்து வழங்கும் நூலைக் கற்றுவரவும், வாரியுள் யானை காணவும், நாடுகாணவும், புனலாடவும், கடவுளரை வழிபடவும் தலைவியைப் பிரிந்து செல்லுதல் வழக்கமாக இருந்தது (அகத்.27, 47). கணிவன் ‘பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளும் தூமமும் மீன்வீழ்வும் கோள் நிலையும் மழைநிலையும் பார்த்துப் பயன்’ கூறினான் (புறத்.16).

சிற்றூர்களில் கோழிகளை வளர்த்து அவற்றைப் போரிடச் செய்து அவற்றின் வெற்றி தோல்விகளைக் கண்டு மக்கள் மகிழ்ந்தனர் என்பதை, “மேலைச்சேரிக் கோழி அலைத்தது என, கீழைச்சேரிக் கோழி அலைப்புண்டமை சொல்லாமையே முடிந்ததாம்” என்ற உரைப்பகுதியால் அறியலாம் (சொல்.61).

‘அண்ணாத்து ஏரி’ என்று ஓர் ஏரியை இளம்பூரணர் சுட்டுகின்றார் (எழுத்.134). இது, திருவண்ணாமலையில் இருந்த பெரிய ஏரியைக் குறிக்கலாம் என்பர் மே.வீ.வேணுகோபால பிள்ளை.

உறையூரிற் பெரியது கருவூர்’ என்ற தொடர், கருவூரின் பழஞ்சிறப்பை நினைவூட்டுகின்றது. (சொல்.106).

செப்பும் வினாவும் வழுவாது வருவதற்கு. “நும் நாடு யாது என்றால், தமிழ் நாடு என்றல்” என்பதை உதாரணங் காட்டுகின்றார் (சொல்.13). தமிழர் வாழும் நாட்டைத் தமிழ்நாடு என்று வழங்கிய வழக்கம் அக்காலத்தில் இருந்தது என்பதை அறிய முடிகிறது.

வினாவிற்கு விடையாக உறுவது கூறுதலும் வழுவாகாத என்பதற்கு, “சாத்தா, உறையூர்க்குச் செல்லாயோ எனின், கடமுடையார் வளைப்பர், பகைவர் எறிவர் என்பது” என்று உதாரணம் காட்டுகின்றார் (சொல்.15).

எழுத்ததிகாரத்தில்,

**வெண்ணுக்கரை (வெண்ணாற்றங்கரை)**

**எண்ணுப்பாறு (எள் ஏற்றிய தோணி)**

**எண்ணநோலை (எள் உருண்டை)**

**ஈமக்குடம் (பிணத்தை இடும் மிடா)**

ஆகியவற்றை உதாரணம் காட்டுகின்றார். இவை, இவர் அறிந்திருந்த இடம், மக்கள் உணவு, பழக்க வழக்கம் ஆகியவற்றை நமக்கு அறிவிக்கின்றன.

கூழுக்குக் குற்றவேல் செய்யும் (சொல்.74), பசித்தேன் பழஞ்சோறு தாஎன நின்றாள் (435) என்ற உதாரணங்கள், அக்காலத்தில் வாழ்ந்த ஏழைமக்களின் நிலையினை உணர்த்துகின்றன.

தம் காலத்தில் வழங்கி வந்த விடுகதை (பிசி) ஒன்றை உரையாசிரியர் குறிப்பிடுகின்றார்.

**"அச்சுப் போலப்**
**பூ பூக்கும்!**
**அமலே என்னக்**
**காய் காய்க்கும்" (பூசுணைக் கொடி).**

## சேனாவரையரின் உரைச் செம்மை

பழந்தமிழ் இலக்கண நூலாம் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை வகுத்தவர்கள் ஐவர் ஆவர். இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர்,

தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகிய ஐவரும் இதற்கு உரை வகுத்துள்ளனர். இவ் ஐவரின் உரையுள் சேனாவரையர் உரையே மிகச் சிறந்து விளங்குகின்றது.

சேனாவரையர் என்ற சொல்லுக்குப் படைத்தலைவர் என்பது பொருள். சேனை அரையர் எனப்பிரித்துப் படைத் தலைவர் என்று பொருள் கொள்வர். நன்னூலின் உரையாசிரியராகிய மயிலைநாதர், சிறப்பால்பெறும் பெயருக்கு ‘ஆசிரியன், படைத்தலைவன், சேனாவரையன்’ என்பனவற்றை உதாரணமாகக் காட்டியுள்ளார். (நன். பெய.19). ஆதலின், பண்டைத் தமிழ்மன்னர்கள், தம் படைத்தலைவர்களுக்குச் ‘சேனாவரையர்’ என்ற சிறப்புப் பெயரை இட்டுவழங்கினர் என்று அறியலாம். சேனாவரையர் என்பது இயற் பெயராகவும் ‘கல்வெட்டுகளில் வழங்கியுள்ளது. உரையாசிரியராகிய சேனாவரையரைப் படைத்தலைவர் என்று கொள்வதற்குச் சான்று எதுவும் இல்லை. ஆதலின், அதனை இயற்பெயராகவே கருத வேண்டியுள்ளது. இவரது முன்னோர்கள் படைத்தலைவர்களாக இருந்திருக்கக்கூடும். அக்காரணம் பற்றி, இவருக்குச் சேனாவரையர் என்ற பெயர் வழங்கி இருக்கலாம்.

**வாழ்ந்த இடம்**

இவர், தென்பாண்டி நாட்டில் வாழ்ந்தவர் என்பதற்கு இவரது உரையில் சான்றுகள் சில உள்ளன.திசைச் சொற்களை விளக்கிக் கூறுமிடத்தில், “தென்பாண்டி நாட்டார் ஆ, எருமை என்பவற்றைப் பெற்றம் என்றும், தம்மாமி என்பதனைத் தந்துவை என்றும் வழங்குப” என்று உதாரணம் காட்டுகின்றார் (சொல்.400) ஏனைய நாட்டு வழக்கிற்கு எடுத்துக்காட்டு எதுவும் தரவில்லை.

சேனாவரையர் என்ற பெயர்க்குப் படைத்தலைவர் என்பது பொருளாகும். ‘அவற்றுள் கிளையென் குழூஉ... **(நன். பெயரியல், 19 உரை)** என்னும் நன்னூல் நூற்பாவின் உரையில் சிறப்பால் பெறுகின்ற பெயர்க்கு ‘ஆசிரியன்,

படைத்தலைவன், சேனாவரையன்' என்பவற்றை மயிலைநாதர் குறிப்பிடுகின்றார். அரையர் என்றால் தலைவர். சேனை அரையர் என்று கொண்டால் படைத்தலைவர் என்று பொருள்.

படைத்தலைவர் என்ற பொருள் கொண்டது சேனாவரையர் என்ற சொல் அவருடைய முன்னோர்க்கு வழங்கப் பெற்ற சிறப்புப் பெயர் தொல்காப்பிய உரைகாரருக்கு இயற்பெயராயிற்று. ஆனால் அவர் படைத்தலைவராகப் பணியாற்றவில்லை. மாறாக அவர் ஆசிரியாக பணியாற்றியவர் என்பது புலனாகின்றது.

ஆற்றூர்ச் சேனாவரையர் என்பார் தம் முன்னோரிடமிருந்து ஆசிரியர் மாணவர் முறையில் தாம் பெற்ற நிலம், மனை முதலியவற்றை அவ்வூர்ச் சிவன் கோவிலுக்குக் கி.பி.1275 -ல் அளித்தார் என்று ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இதனால் அவர் ஆசிரியராக இருந்தவர் என்பது புலனாகும்.

சேனாவரையர் ஆசிரியராயிருந்து தமிழ் நூற்களைக் கற்பித்தவர் என்பது அவருடைய உரைப் பகுதியிலிருந்தும் தெளிவாகின்றது. ''மாணாக்கர்க்கு உணர்வு பெருகல் வேண்டி வெளிப்படக் கூறாது, உய்த்துணர வைத்தல் அவர்க்கு இயல்பாகலான் செய்யுள் முடிபென்பது கூறாராயினார்.'' (தொல். சொல்.1 உரை, ப.4)

''இவர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை வரைந்த பெரியார்களுள் ஒருவர், வடமொழியும் தமிழும் நன்கு பயின்றவர் இவ்விருபெரிய மொழிகளும் இருவேறு தனி மொழிகள் என்பதை மறந்து வடநூல் முடிபுகளையும் கொள்கைகளையும் தமிழ்மொழிக்குரிய இலக்கணங்களில் புகுத்தி அவற்றிற்கு அமைதி கூறியவர். இவரது வடமொழிப் பயிற்சியொன்று பற்றியே இவர்

உரையாசிரியர்களுள் சிறந்தவர் என்று இக்காலத்தாரால் பாராட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது'' என்பது அறிஞர் **(தி.வை.சதாசிவ பண்டராத்தார், தமிழ் இலக்கிய வரலாறு (13, 14, 15 -ஆம் நூற்றாண்டுகள்) ப.40)** பாராட்டுரை.

''சேனாவரையர் தொல்காப்பியத்தின் இரண்டாம் பகுதிக்கு உரை எழுதினார். திட்பநுட்பம் செறிந்த நடை அவருடையது வடமொழிப் புலமையும் நிரம்பியவர் அவர்'' என்கிறார் அறிஞர் **(மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.193)**

''சேனாவரையர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதியவர். அவர் வேறு எந்த நூற்கும் உரை எழுதினார் என்பது திட்டமாகத் தெரியவில்லை என்றாலும், இந்த ஓர் உரையே அவரது உரைத் திறனை நன்கு விளக்கப் போதிய சான்றாய் அமைந்து விட்டது'' என்று பேராசிரியர் **(அ.மு.பரமசிவானந்தம், தமிழ் உரைநடை, ப.112)** கூறுவார்.

''சேனாவரையர் சொல்லதிகாரம் ஒன்றிற்கே உரை கண்டிருப்பினும், தொல்காப்பியம் பற்றி முழு நோக்கு உடையவர். எழுத்தையும் பொருளையும் அவர் சிங்க நோக்காகக் கண்டு விளக்கம் எழுதுகின்றார். சொல்லதிகார அமைப்பையும் முழுமையாக நோக்கி, இயல் அடைவிலும், சூத்திரங்களின் அமைப்பு, பாட வேறுபாடு ஓசை ஆகியவற்றிலும் ஈடுபடுகின்றார்'' என்ற பேராசிரியர் **(மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.119)** கூற்று சேனாவரையரின் உரை நலத்தை நம் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றது.

**நடைச்சிறப்பு**

சேனாவரையர் தாம் உரை எழுதப்போவது ஓர் இலக்கண நூலுக்கு என்பதனை நன்கு நினைவிற் கொண்டே எழுதுகின்றார். சேனாவரையர், தாம் எழுதப் புகுந்த உரையின் சிறப்பினைக் கருத்திற்கொண்டு சின்னஞ்சிறு தொடர்களை

அமைத்து விளக்கிச் செல்கின்றார். அத்தொடர்களும் செறிவும் சீர்மையும் உடையனவாய்த் திட்ப நுட்பம் நிறைந்தனவாய் அமைந்துள்ளன.

**வடமொழிப் பயிற்சி**

முன்னைய உரையாசிரியராகிய இளம்பூரணர் கருத்துக்களை ஆங்காங்கே மறுத்துரைக்கும் போதும் பிறவிடத்தும் சேனாவரையர் வடநூற் கருத்துக்களைத் தகுந்த முறையில் மேற்கோளாகக் கையாண்டு உரை எழுதிச் செல்வர். அவ்வாறு வடநூற் செய்திகளை மேற்கோள் காட்டி எழுதினமையினால் 'வடநூற் கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர்' என்று சிவஞான முனிவர் அவரைப் பாராட்டுவார். சொல்லதிகார உரையில் ஏறத்தாழப் பதினைந்து இடங்களில் அவர் தம்முடைய வடமொழிப் புலமையை வெளிப்படுத்தியுள்ளார்.வடமொழியின் இலக்கணக் கோட்பாடுகளையும் விதிகளையும் சேனாவரையர் மிகத்தெளிவாக விளக்கிச் செல்கிறார். அதிகாரம் என்னும் சொல்லிற்கு அவர் சொல்லும் பொருளுக்குத் துணைச் சான்றாக வடமொழி இலக்கணத்தைக் கூறியுள்ளார்.

சேனாவரையர் வடமொழி இலக்கண மரபுகளையும் நன்கு ஆய்ந்துணர்ந்து புலப்படுத்தியமை கருதியே "வடமொழியும் தமிழும் நன்கு பயின்றவர். இவ்விரு பெரிய மொழிகளும் இருவேறு தனிமொழிகள் என்பதை மறந்து வடநூல் முடிபுகளையும் கொள்கைகளையும் தமிழுக்குரிய இலக்கணங்களில் புகுத்தி அவற்றிற்கு அமைதி கூறியவர்" என்று அறிஞர் **(தி.வை.சதாசிவ பண்டாரத்தார், தமிழ் இலக்கிய வரலாறு (13, 14, 15 -ஆம் நூற்றாண்டுகள்) ப.4)** குறை கூறுவார். வடமொழிப் புலமை மிகுந்திருந்தமையினால் சேனாவரையர் தொல்காப்பியரை வடநூலொடு மாறுபடாமல் நூல் இயற்றியவர் என்று கருதுகின்றார்.

**பன்னூற் பயிற்சி**

சேனாவரையர் தம் உரையில் சங்கப் பாடல்களை மேற்கோள்காட்டிச் செல்வதனைக் காண முடிகின்றது. இலக்கண விதிகளை விளக்குமிடத்து அவர் நன்னூற் கருத்துக்களையும் தவறாது எடுத்தாண்டுள்ளார்.

‘‘வினையெச்ச வகைகளை விளக்குமிடத்துப் ‘‘பின்முன் கால் கடை’’ என்று தொடங்கும் நூற்பாவில், அவர் ‘‘அன்ன மரபிற் காலங் கண்ணிய வென்ன கிளவியு மென்ற தனான், உண்பாக்கு வேபாக்கு எனவரும் பாக்கீறும்.... கொள்க’’ (தொல்.சொல்.229, உரை,ப.151) என்று கூறுவார். இது நன்னூல் 343 ஆம் நூற்பாவை அடியொற்றி அமைந்துள்ளது.

**‘‘பழையன கழிதலும் புதியன புகுதலும்**

**வழுவல கால வகையி னானே’’ (நன்.462)**

என்ற நன்னூல் நூற்பாவை அடியொற்றி அவர், ‘‘கடிசொல் இல்லை காலத்துப் படினே’’ என்ற நூற்பாவை விளக்கும்போது ‘‘இனி ஒன்றென முடித்தலாற் புதியன தோன்றினாற் போலப் பழையன கெடுவனவும் உளவெனக் கொள்க’’ (தொல். சொல், 425, உரை, ப.241) என்று கூறுகின்றார். நன்னூற் கருத்துக்களையும் வேண்டுமிடங்களில் அவர் பயன்படுத்தியுள்ளமை தெளிவாகின்றது.

இசைத்தமிழ்ப் புலமையும் சேனாவரையருக்கு இருந்தது என்பதனை, தமிழ் நூல்களிலிருந்து பல சான்றுகளை மேற்கோள்காட்டி அவர் விளக்கிச் செல்லும் பாங்கு சிறப்பாக அமைந்துள்ளது. திருக்குறளைப் பல இடங்களில் அவர் மேற்கோள் சுட்டுவார்.

விளிவேற்றுமை, இடையியல், உரியியல் ஆகிய இயல்களில் மிகுதியான இலக்கியச் சான்றுகளையும் புறநானூற்று அடிகளையும் அவர் பல இடங்களில்

காட்டியுள்ளார். இவ்வாறு பழந்தமிழ் நூல்களை நன்கு கற்று, அவற்றுள் பயின்று வருகின்ற சான்றுகளை எல்லாம் தேர்ந்து தெளிந்து உரையினூடே விளக்கிச் செல்வது சேனாவரையரின் இயல்பு. இதனால் அவருக்கிருந்த பன்னூற் பயிற்சி நன்கு விளங்கும்.

“உரைநடையில் அமையும் பல்வேறு அணிகளுள் இடையிடையே மேற்கோள் காட்டுவதும் ஒன்று. ஓர் உரைநடை ஆசிரியர் தம் கருத்துக்கு அரண் செய்யும் வகையிலும், மேலும் தெளிவு வேண்டும் நிலையிலும் மேற்கோள்களைக் கையாளுகின்றார். அவர் இன்றியமையாது தேவைப்படும் இடங்களில் மட்டும் வலியுறுத்தும் பொருட்டு மேற்கோள்களைப் பயன்படுத்தலாம், வேண்டுமென்றே மிகுதியான மேற்கோள்களைக் கொட்டி எழுதுவது கூடாது. சுருங்கக் கூறினால், உரைநடையில் மேற்கோள் ஆட்சி - இல்லற வாழ்க்கையில் ஊடலைப் போல் - உணவில் உப்பைப் போல் - அளவாக இருக்க வேண்டும்” என்று **(இரா.மோகன், 20)** கூறுவது சேனாவரையரின் உரைக்கும் பொருந்தும்.

**கூறும் பெயர்கள்**

சேனாவரையர் இலக்கண உரையிலும் கூடப் பண்டைத் தமிழ் அறிஞர்களின் பெயர்களையும், அரசர்களின் பெயர்களையும், சில இயற்பெயர்களையும், விருதுப் பெயர்களையும் வேண்டிய இடங்களில் மேற்கோள்களாக எடுத்தாண்டு சிறப்பித்துள்ளார்.

இயற்பெயரும் சிறப்புப் பெயரும் அமையும் வகை குறித்த நூற்பாவினை விளக்கும் போது சேனாவரையர், “உம்மையால் தவம், கல்வி, குடி, உறுப்பு முதலாயினவற்றானாகிய பெயரும் கொள்ளப்படும். அவை முனிவனகத்தியன் எனவும், தெய்வப்புலவன் திருவள்ளுவன் எனவும், சேரமான் சேரலாதன் எனவும்,

குருடன் கொற்றன் எனவும் வரும்''. (தொல்.சொல்.41, உரை, ப.34) என்று மொழிகுவார்.ஏனாதி, காவிதி, எட்டி எனப் பண்டைய மன்னர்கள் அவர் கையாண்டுள்ளார் (தொல், சொல்.41, 166 ஆகிய நூற்பாக்களின் உரை).

தொல்காப்பியன், கபிலன் என்ற பெயர்களையும் (தொல். சொல்.114, உரை, ப.30) சேரமான், மலையமான் (தொல். சொல்.132, உரை, ப.98), அருவாளன், சோழியன், அத்தி சோசத்தார், அம்பர் கிழான், பேரூர்கிழான், பட்டிபுத்திரர், கங்கைமாத்திரர் (தொல். சொல்.165, உரை, ப.111), சீத்தலைச் சாத்தன், கொடும்புற மருதி (தொல். சொல்.174, உரை, ப.117), பாரி (தொல், சொல்.259, உரை, ப.169) பெருஞ்சேந்தனார், முடத்தாமக் கண்ணியார் (தொல். சொல்.270, உரை, ப.172) போன்ற இயற்பெயர்களையும், குடிப்பெயர்களையும், சிறப்புப் பெயர்களையும் அவர் சான்று கூறி விளக்குகின்றார்.

**பிறர் உரையினை மறுத்தல்**

சேனாவரையர் தம்முடைய உரையில் மிகுதியான இடங்களில் 'உரையாசிரியர்' என்று குறிப்பிடுகின்றார். இங்கு உரையாசிரியர் என்பது இளம்பூரணரையே குறிக்கின்றது. சேனாவரையார் பலவேறிடங்களில் இளம்பூரணரைத் தம்முடைய தருக்க நூலறிவால் மறுத்து உரை வழங்கக் காண்கிறோம்.

**மூல நூலாசிரியரிடம் மதிப்பும் மாறுபடும்**

தொல்காப்பியரிடம் சேனாவரையர்க்கு அளவுகடந்த மதிப்பிலிருந்து தாம் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைந்திருக்கும் நூற்பாக்களில் அவர் நூலாசிரியரை மதித்துப் போற்றத் தவறவில்லை.சேனாவரையர் உரையிலிருந்து மிகுதியான பாட

வேறுபாடுகளைக் காண இயலவில்லை, மிக அருகிய சான்றுகளையே காணமுடிகின்றது.

**வினா - விடைப் போக்கும் தருக்க நெறியும்.**

உரையாசிரியர்கள் அனைவருமே வினா விடைப் போக்கில் உரை எழுதிப்போவர். என்றாலும் சோனவரையர் இவ்வகையான போக்கினைச் சிறப்பாகக் கையாண்டு வெற்றி பெற்றுள்ளார்.

சேனாவரையரின் ஆழமான தருக்க நூற் புலமையின் திறத்தால் அவர் கூறுகின்ற உரை முடிபுகளும் கொள்கைகளும் நம் உள்ளத்தில் பசு மரத்தாணிபோற் பதியக் காண்கிறோம்.

‘‘பண்போடு இவற்றிடை வேற்றுமை யென்ன யெனின் - இன்மை, பொருட்கு மறுதலையாகலின், பொருளின்கட்கிடக்கும் பண்பெனப்படாது. அன்மையும் உண்மையும் பண்பிற்கு மொத்தலிற் பண்பெனப்படா, என்னை? குணத்திற்குக் குணமின்மையின்’’.

இவ்வாறு தருக்க முறையில் விளக்கங்களை எழுதிச் செல்லும் திறன் மிகச் சிறப்பாக இவரிடம் அமைந்துள்ளது.

**சொற்பொருள் விளக்கம்**

நூற்பாக்களுக்கு உரை எழுதும்போது சேனாவரையர், சில சொற்களுக்கு வரையறுத்துக் கூறுகின்ற பொருள் விளக்கம் நனி சிறப்பாக அமைந்து அவருடைய உரைத்திறனை நன்கு வெளிப்படுத்தக் காண்கின்றோம்.

காலம், உலகம், வினை, சொல் (57) போன்றவற்றிற்குப் பொருள் கூற வந்த சேனாவரையர் அவற்றைத் தெய்வங்களுடன் தொடர்புபடுத்திக் கூறுவர்.

சொற்களுக்குப் பொருள் கூறுவதோடு இவர், சொற்களின் வேறுபாடுகளையும் புலப்படுத்துகிறார்.

உரை விளக்கம் கூறிப் போகும் போதே சேனாவரையர் இலக்கணக் குறிப்புக்களையும் இடையிடையே எழுதிச் செல்லுகின்றார். சேனாவரையர் தம் உரைப்பகுதியில் அணிகளையும் பெயர் குறிப்பிட்டு விளக்கக் காண்கின்றோம். மேற்கோளாக வருகின்ற பாடல்களில் பொருந்தியிருக்கும் அலங்காரங்களையும் அவர் சுட்டிப் போகின்றார். 'ஊட்டியன்ன ஒண்டளிர் செயலை' என்ற அகநானூற்றடிக்கு விளக்கம் கூறும்போது 'பிறதோரலங்காரம்' என்கிறார் (55, உரை). இது தற்குறிப்பேற்றமாகும். 'இளைதாக முள்மரம் கொல்க' (குறள்.879) என்ற குறளில் அவர் பிறிதுமொழிதலணி அமைந்துள்ளமையினைச் சுட்டிக்காட்டுகின்றார். (157, உரை). இவ்வாறு சேனாவரையர் இலக்கணக் குறிப்புக்களையும், இலக்கண விளக்கங்களையும் கூறித் தம்முடைய இலக்கணப் புலமையை இயலும் இடங்களில் எல்லாம் புலப்படுத்தியுள்ளார்.ஓர் இயலுக்கும் அடுத்த இயலுக்கு, ஒரு நூற்பாவிற்கும் அடுத்த நூற்பாவிற்கும் இயைபு சுட்டிப் போகும் நயத்தினையும் சேனாவரையர் உரையில் காணலாகும்.

**உவமைகள்**

தாம் கூற வரும் கருத்தினைத் தெளிவுபடுத்த வேண்டி, உரையாசிரியர்கள் நல்ல உவமைகளைக் கையாண்டு தம் உரைக்கு மெருகேற்றுவர். அவ்வகையில் சேனாவரையரும் பொருத்தமான உவமைகளைக் கூறி உரை நயத்தைக் கூட்டுகின்றார். வழக்கில் பயின்று வரும் செய்திகளையும், பிற இலக்கணக் கருத்துக்களையும் உவமையாகக் காட்டுவது அவருடைய உரையில் காணப்படும் தன்மையாகும்.

‘‘கிளவியாக்கம்’ என்பதனை விளக்கும் போது ‘‘நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசி அமைத்தாரை, அரிசியாக்கினார் என்பவர்கலின்’’ (தொல்.சொல். 1, உரை, ப.3) எனவும், ‘‘திங்கள் கரிது என்பதுபோலப் பிறழ உணர்ந்தார் வழக்காய் ஆராயப்படாதென்க’’ (தொல்.சொல். 19, உரை, ப.18) எனவும், ‘‘ஈண்டிரட்டைக் கிளவியென்றது, மக்களிரட்டை விலங்கிரட்டை போல வேற்றுமை உடையனவற்றையன்றி இலையிரம்டையும் பூவிரட்டையும் போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையனவற்றையென்று உணர்க’’ (தொல். சொல். 48, உரை, ப.39) எனவும் அவர் கூறுவன சில சான்றாகும்.

**நாகரிகமும் பண்பாடும்**

சேனாவரையர் தம்முடைய உரையில் தம் காலப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் தகுந்த இடங்களில் எடுத்துக் கூறியுள்ளார். காட்டு வழியே செல்லும் யானை நூல் வல்லவன் ஒருவனை அவர் கூறுகின்றார். (தொல். சொல். 37, உரை, ப.31). ஏனாதி, காவிதி போன்ற விருதுகளைச் சான்று காட்டுவதன்மூலம் அவருடைய அரசியல் அறிவு பெறப்படும். கடிசூத்திரம் எனப்படும் பொன்னாற் செய்யப்பட்ட அரைஞாண் பற்றியும் (76, உரை), நிலத்தொற்றிகலம் (80, உரை) பற்றியும் அவர் குறிப்பிடுவன அக்காலப் பண்பாட்டை வெளிப்படுத்தும்.

சேனாவரையர் குறிப்பிடுகின்ற ஊர்களின் பெயர்கள் பலவாகும். கருவூரை அவர் பல இடங்களில் மேற்கோள் காட்டுதல் நம் நெஞ்சில் நியைத்தகக்க செய்தியாகும். சேனாவரையர் தொல்காப்பியச் சொல்லதிகார உரையினை வரையும் போது புலமை நுட்பம் பொருந்தவும், பண்பாடும் நாகரிகமும் இணைந்துவரவும், உரை மரபுகளையும் உரை நயங்களையும் சிறப்புறப் பின்பற்றியும் கற்பவரைக் கவர்கின்றார் எனலாம்.

சேனாவரையர், தம் உரையில், எழுத்ததிகாரத்தை எழுத்தோத்து (சொல்.143, 420) என்றும், பொருளதிகாரம் (250) என்றும், உவமஇயலை அணியியல் (சொல்.440) என்றும் குறிப்பிடுகின்றார்.

சேனாவரையர் உரை, திட்பமும் நுட்பமும் வாய்ந்தது சேனாவரையரின் புலமைப் பெருமிதமும் ஆராய்ச்சி வன்மையும் கருத்துத் தெளிவும் உரை முழுவதிலும் உள்ளன. சொல்லதிகாரம் அமைப்பையும் முழுமையாக நோக்கி, இயல் அடைவிலும், சூத்திரங்களின் அமைப்பு, பாடவேறுபாடு, ஓசை ஆகியவற்றிலும் ஈடுபடுகின்றார்.

தொல்காப்பியர் வகுத்துள்ள இலக்கண விதிகளையும் சூத்திரங்களையும் சேனாவரையர் தம் நுண்மாண் நுழைபுலம் கொண்டு நுணுகி நோக்கி, நூலாசிரியர் ஒவ்வொரு சொல்லையும் பொருளாழத்துடன் அளந்து அமைத்திருக்கின்றார் என்ற கருத்தைப் பல இடங்களில் வற்புறுத்திக் கூறுகின்றார்.

**இலக்கணக் கொள்கையும் ஆராய்ச்சியும்**

சேனாவரையர், இலக்கணத்தில் பயின்றுவரும் சொற்றொடர்களையும் கொள்கைகளையும் நுணுகி ஆராய்ந்து விளக்குகின்றார். சில சொற்றொடர்களின் வரலாறு, வழக்கு, வடிவம், பொருள் ஆகியவற்றை நன்கு சிந்தித்து நல்ல முடிவுகளை வெளியிடுகின்றார்.

'இலம்பாடு' என்னும் சொல்லைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகின்றார், 'இலம் என்னும் உரிச்சொல், பெரும்பாண்மையும் பாடு என்னும் தொழில் பற்றியல்லது வாராமையின் இலம்பாடு என்றார்'' (360)

'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே' (452) என்பதன் கீழ், சம்பு, சள்ளை, சட்டி, சமழ்ப்பு என்பவை பிற்காலத்தே தோன்றிய சொற்கள் என்று குறிப்பிடுகின்றார்.

இலக்கணத் தொடர்களையும், கொள்கைகளையும் சேனாவரையர் திறம்பட விளக்குகின்றார்.

**கிளவியாக்கம்:** ‘‘வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான், இவ்வோத்து கிளவியாக்கம் ஆயிற்று ஆக்கம் அமைத்துக் கோடல்’’ (1).

சேனாவரையர் தமிழ் இலக்கணத்தில் தேர்ச்சி பெற்றிருப்பதைப் போலவே, வடமொழி இலக்கணத்திலும் வல்லவராக விளங்குகின்றார். இருமொழியிலும் வல்லவரான சிவஞான முனிவர், இவரை ‘வடநூற்கடலை நிலைகண்டு உணர்ந்த சேனாவரையர்’ என்று வாயாரப் புகழ்ந்து போற்றுகின்றார்.

திருக்குறளைப் பல இடங்களில் மேற்கோளாகக் காட்டி, சேனாவரையர் இனிது விளக்குகின்றார். திருவள்ளுவரைத் ‘தெய்வப் புலவன்’ (41) என்று அழைக்கின்றார். ‘இகழ்ச்சியிற் கெட்டான் மகிழ்ச்சியின் மைந்துற்றான்’ என்று திருக்குறளை நினைவில் கொண்டு உதாரணம் காட்டுகின்றார். (78). தொல்காப்பியச் சூத்திரங்களை மேற்கோள் காட்டும் இடம் பல உண்டு. பத்துப்பாட்டு, மலைபடுகடாத்திலிருந்து மிகுதியான மேற்கோள் தருகின்றனார். இவர் காலத்தில் அணியிலக்கணம் செல்வாக்குப் பெற்றுப் பரவி இருந்தது என்பதற்குச் சான்றுகள் உண்டு.

கபிலரால் செய்யப்பட்ட நூலைக் ‘கபிலம்’ என்றும், ‘பரணரது பாட்டியல்’ என்றும், இவர் குறிப்பிடும் நூல்கள் (114) மறைந்து போயின.

**நன்னூலாரும் சேனாவரையரும்**

சேனாவரையர் நன்னூலார் கருத்துகளைத் தம் உரைகளில் ஆங்காங்கே சுட்டிச் செல்லுகின்றார்.

**பேச்சு வழக்கும் உலகியலும்**

சேனாவரையர், தம் காலத்து மக்கள் பேசிய முறையை உலகியலோடு பல இடங்களில் குறிப்பிடுகின்றார். அவை இவர் மக்களுடன் நெருங்கிப் பழகியவர் என்பதையும், உலகத்தோடு ஒட்ட ஒழுகியவர் என்பதையும் அறிவிக்கும். சேனாவரையர் இலக்கணப் புலமையுடன் மக்கள் பேசும் பேச்சினையும் நுணுகி அறிந்தவர் என்பதை விளக்கும்.

**காலத்தின் அடிச்சுவடு**

சேனாவரையர் காலத்தில், பாம்புக் கடியினால் உடம்பில் ஏறிய நஞ்சினைப் போக்க ஒருவகையான கருங்கல்லும் பயறும் பயன்பட்டன. அவ்விரு பொருள்களும் ஒரு சேர அக்காலக் கடைகளில் விற்கப்பட்டன. இச் செய்தியினைச் சேனாவரையர், ‘பாம்புணிக் கருங்கல்லுமத் பயறும் விற்பான் ஒருவனுழைச் சென்று’’ என்று குறிப்பிடுகின்றார் (35).

இக்காலத்தைப் போலவே அக்காலத்திலும் வீட்டின் தரையைக் கல்லும் செங்கல்லும் கலந்து போட்டு இடித்து வலிமை செய்யப்பட் நிலத்தை வலிதாயிற்று எனின் அது செயற்கைப் பொருளேயாம்’’ என்று அவர் கூறுவதால் அறியலாம் (19). நிலத்தை விற்கும் போதும் வாங்கும் போதும் பதிவேடுகிளல் அக்காலத்தில் குறித்து வைக்கப்பட்டன என்பதை ‘‘நிலத்தது ஒற்றிக் கலம் சாத்தனது விலைத்தீட்டு’’ என்ற எடுத்துக்காட்டுகளால் அறியலாம். (80).

நாட்டுப்புறங்களில் வாழ்ந்த அக்காலச் சிறுவர்கள், பல வகை விளையாட்டுகளை வியைாடும்போது குழுக்களாகப் பிரிந்து, அக்குழு ஒவ்வொன்றிற்கும் பெயர் வைத்து மகிழ்ந்தனர். இவ்வழக்கத்தினைச் சேனாவரையர், ‘‘கூடிவரு வழக்கின் ஆடியற் பெயர் - பட்டி புத்திரர், கங்கைமாத்திரர் என்பன.

காட்டு வழியில், கள்வர்கள் பதுங்கி இருந்து அவ்வழியில் சென்றவரை அடித்துத் துன்புறுத்தி அவர்களிடமிருந்த பொருளையும், ஆடைகளையும் பறித்துக் கொண்ட நிகழ்ச்சி ஒன்று சேனாவரையர் உள்ளத்தில் ஆழப்பதிந்திருக்கின்றது. அந்நிகழ்ச்சியினை அவர் பல இடங்களில் (101, 245, 395) குறிப்பிடுகிறார். மேலும், அவர் காலத்தில் திகம்பரஜைனா (கடவுளர்) காட்டு வழியிற் செல்வது உண்டு என்றும், அவர்களிடம் ஆடை இன்மையாலும், அவர்களிடம் கள்வருக்கு அச்சம் இருந்தமையாலும் அத்துறவிகளைக் கள்வர்கள் ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுவர் என்றும் தெரிகின்றது.

‘‘வழி போயினார் எல்லாம் கூறை கோட்பட்டார் என்ற வழி, கூறை கோட்படுதல் கடவுளரை (திகம்பரர்களை) ஒழித்து ஏனையோர்க்கே ஆயினவாறு போல’’ (101).

**போர்ச்செய்திகள்**

முற்காலப் போர்முறையை உணர்த்தும் உதாரணங்களைச் சேனாவரையர் காட்டுகின்றார். அவர், படைத்தலைவர் குடியில் பிறந்தவர் என்பதை அவை நமக்கு அறிவிக்கின்றன. சாத்தன் வந்தான், அ.்.து அரசர்க்குத் துப்பாயிற்று (40) அரசனோடு இளையர் (வீரர்) ந்தார் (91), யானை தேர் குதிரை காலாள் எறிந்தான் (45,291). இவர் யார் என்ற வழி, படைத்தலைவன் எனவும் செப்பிய வழி (68) வென்ற வேல் (234), கதி யாறும் உடைத்து இக்குதிரை (33) என்பவை அக்காலப்போர் முறையை உணர்த்துகின்றன.

**கலைகள்**

சேனாவரையர் காலத்தில், தமிழகத்தில் இசையும் கூத்தும் சிறப்புற்று விளங்கின. யாழ் (117, 173, 399), குழல் (117) முதலிய இசைக் கருவிகள்

இருந்தன. ‘பாணியும் தாளமும் ஒரு பொருள் ஆயினும், இசை நூலார் தாளத்துடன் ஒரு சாரணவற்றிற்குப் பாணி என்னும் பெயர் கொடுத்தாற்போல்’ என்று சேனாவரையர் கூறும் உவமை அவர் காலத்து இசைக் கலையின் சிறப்பை உணர்த்துகின்றது. ஆடரங்கு (415), ஆடிய கூத்தன் (234) என்ற சொற்றொடர்கள் அக்காலத்தில், நாடகக்கலை சிறப்புடன் இருந்ததைப் புலப்படுத்துகின்றன.

### பொது

உணவு, அணிகலன், இசைக்கருவி, படை ஆகியவற்றில் அக்காலத் தமிழ்மக்கள் பெரிதும் தேர்ச்சி பெற்று விளங்கினர் என்பதைப் பின்வரும் உரைப்பகுதி விளக்கும்.

**‘அடிசில’** என்பது, உண்பன தின்பன பருகுவன நக்குவன என்னும் நால்வகைக்கும்,

**‘அணி’** என்பது, கவிப்பன கட்டுவன செறிப்பன பூண்பன என்னும் தொடக்கத்தனவற்றிற்கும்.

## பேராசிரியரின் உரைச்சிறப்பு

தொல்காப்பிய பொருளதிகாரத்தின் இறுதி நான்கு இயல்களுக்கு உரை எழுதிய பேராசிரியர் 13 - ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழந்தவர் ஆவார். அவர் பொருளதிகாரம் முழுமைக்கும் விழுமிய உரை இயற்றியுள்ளார் என்பதற்குப் பல சான்றுகள் கிடைக்கின்றன. எனினும், இன்று மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என்னும் நான்கு இயல்களுக்கு மட்டுமே அவரது உரை கிடைக்கின்றது.

இளம்பூரணர் மிகச் சுருக்கமாக எழுதிச் சென்றுள்ள இடங்களை எல்லாம் பேராசிரியர் நன்கு விளக்கமாக எழுதியுள்ள பாங்கினையும் காண்கிறோம். மெய்ப்பாட்டியலின் முதல் நூற்பாவில் (பொருள்.249) வரும். 'பண்ணைத் தோன்றிய' என்னும் தொடருக்கு 'விளையாட்டாயத்தின்கண் தோன்றிய' என்னும் இளம்பூரணர் சுருக்கமாக விளக்கம் தருகின்றார். பேராசிரியரோ, 'முடியுடை வேந்தருங் குறுநில மன்னரு முதலாயினோர் நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டுங் கேட்டுங் காம நுகரும் இன்ப விளையாட்டினுள் தோன்றிய' என இத்தொடருக்கு விளக்கமாகப் பொருள் எழுதிச் செல்கின்றார்.

''தமிழ் உரைநடை பேராசிரியர் காலந் தொடக்கமாக ஒரு புதுவழியல் விருத்தியடைந்து வந்துள்ளது. இலக்கணச் சூத்திரங்களை விளக்குதல் நோக்கமாகத் தொடங்கி வழங்கி வரப்பட்ட உரைநடை, இலக்கிய நயங்களை எடுத்துக் கூறும் கருவியாகவும் பேராசிரியர் காலத்திற் கையாளப்படத் தொடங்கிற்று'' எனத் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் போராசிரியர் ஆற்றிய தொண்டினைப் போற்றிக் கூறுகின்றார். **(வி.செல்வநாயகம், தமிழ் உரைநடை வரலாறு, ப.56).**

தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர், கடல் போல் பரந்த புலமையுடையவர். இவரது புலமைத் திறனைத் தொல்காப்பியம் பொருளதிகார உரையில் கண்டு வியக்கலாம். இப்பேராசிரியர் தம் உரைகளில் நன்னூல், தண்டியலங்காரம், யாப்பருங்கலம் ஆகிய நூலாசிரியர்களின் கருத்துகளை எடுத்துக் கூறி மறுக்கின்றார். எனவே, இவர் பனிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்னலாம்.

மேலும், இவர் செய்யுளியல் உரையில் (செய்.149)

**“கொன்றை வேய்ந்த செல்வன் அடியினை**

**என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே”**

என்னும் கொன்றைவேந்தன் செய்யுளை மேற்கோள் காட்டுகின்றனார். மூதுரை என்னும் நீதிநூலிலிருந்து, ‘அட்டாலும் பல் சுவை’ என்ற படலையும் மேற்கோள் காட்டுகிறனார். இவை பேராசிரியரின் காலத்தை அறிவிக்கும் தக்க சான்றுகளாய் உள்ளன.

**அதிகார அமைப்பும் பெயரும்**

பேராசிரியர் தம் உரையில் தொல்காப்பிய அதிகாரங்களின் அமைப்பைப் பற்றியும், அவற்றின் பெயர்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

இவர் காலத்தில் பொருளதிகாரத்தில் எட்டாம் இயலாக உள்ள செய்யுளியலை ஒன்பதாம் இயலாகவும், மரபியலை எட்டாம் இயலாகவும் மாற்றி அமைத்தவர் இருந்தனர் என்பதைக் குறிப்பிடுகின்றார். ‘இக் கருத்து அறியாதார் செய்யுளியலினை ஒன்பதாம் ஒத்து எனப் என்று குறிப்பிடுகின்றார். (மரபியல்.93) அவ்வாறு மாற்றி அமைப்பது கூடாது என்பதற்குக் காரணமும் கூறுகின்றார்.இன்றும் அவ்விரு இயல்களை முன்பின்னாக மாற்றி (மரபியலை எட்டாவதாகவும், செய்யுள் இயலை ஒன்பதாவதாகவும்) அமைத்து, ஆராய்ச்சி நூல் வெளியிட்டவர் உண்டு.

அதிகாரம் என்ற பெயரோடு, ஒத்து என்ற பெயரும் அதிகாரங்களுக்கு வழங்கியது என்பதற்குப் பேராசிரியர் உரையில் பின்வரும் சான்றுகள் உள்ளன. ‘சொல் ஒத்தினுள், இவ்வாய்பாடு விரிந்து வருமாறு கூறாது. (மரபியல் -18, செய். 1) ‘எழுத்து ஒத்தினுள் குறிலும் நெடிலும்’ (செய்.2) இவர் காலத்தில் அதிகாரங்களுக்குப் படலம் என்ற பெயரும் வழங்கிற்று.

‘தொல்காப்பியம் என்பது பிண்டம் அதனுள் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்பன படலம் எனப்படும்’ (செம்- 172) என்று இவர் குறிப்பிடுகின்றார். பேராசிரியர் கருத்தை மேற்கொண்டு, இக் காலத்தும் அறிஞர்கள் சிலர், அதிகாரம் என்ற பெயரை நீக்கிவிட்டு, படலம் என்ற பெயரையே இட்டு வழங்கியுள்ளனர்.

தமக்கு முன் இருந்த உரையாசிரியர்களின் பெயரையோ நூலாசிரியர்களின் பெயரையோ இவர் கூறுவதில்லை. கருத்துகளை மட்டுமே கூறி மறுக்கின்றார். இளம்பூரணர், மிகச் சுருக்கமாக எழுதிச் சென்றுள்ள இடங்களை எல்லாம் இவர் நன்கு விளக்கியுள்ளார். மெய்ப்பாட்டியலின் முதற்சூத்திர உரையில், பண்ணைத் தோன்றிய என்பதற்கு ‘விளையாட்டு ஆயத்தின்கண் தோன்றிய’ என்று இளம்பூரணர் எழுதுகின்றார். பேராசிரியர், ‘முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் முதலாயினார் நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காமம் நுகரும் இன்ப விளையாட்டினுள் தோன்றிய’ என்று விளக்கமாக எழுதுகின்றார்.

**பழமையும் புதுமையும்**

பழைய மரபையும், பழைய நூற்கொள்கைகளையும் பேராசிரியர் பெரிதும் போற்றுகின்றார். புதிய நூல் வழக்கையும் கொள்கைகளையும் கடிந்து ஒதுங்கி விடுகின்றார்.

**மூல நூலாசிரியரைப் போற்றல்**

‘‘எவரும் திறனாய்வுக்கு உட்பட்டவர் என்பத பொதுவிதி எனினும் இதற்கு ஓர் விலக்குண்டு எனத் தமிழ் நூல்கள் புலப்படுகின்றன. மூல நூலாசிரியனை அந்நூலுக்கு உரை செய்யும் உரையாசிரியர்கள் நேர்திறம் செய்வார்களேயன்றி எதிர்திறம் செய்யார்க்ள. மூல நூலாசிரியன் கருத்தை விளக்கிக் காட்டுவதும். அது

தகாதது போல் ஒரு கால் தமக்குப் பட்டாலும் உரையாசிரியர்களின் பண்புகளாம்'' **(வ.சுப.மாணிக்கம், தொல்காப்பியத் திறன், ப. 37).** இப்பண்புத் திறனைப் பேராசிரியர் உரையில் சிறப்பாகக் காண்கிறோம்.

**பிற நூலார் கருத்தை மறுத்தல்**

மூல நூலாசிரியரைத் திறனாய்வுக்கு உட்படுத்ததாத உரையாசிரியர்கள் தம்முள் ஒருவரை ஒருவர் திறனாய்வு செய்து கொள்ளத் தவறுவதில்லை. கருத்து மறுப்பும் மாறுபாடும் கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கிக ˙கொள்ளத் தயங்குவதில்லை பேராசிரியர் இவ்வகையில் தமக்கு முன்தோன்றி நூலும் உரையும் எழுதிய ஆசிரியர்களின் கருத்துக்களைத் தக்க நியாயத்துடன் சாடியும் மறுத்தும் எழுதியுள்ள இடங்கள் பலவாகும்.

முந்காலத்து நூல்களை மிகவும் போற்றியும் மதித்தும் பிற்காலத்து நூல்களைப் பெரிதும் மறுத்தல் தாக்கியும் எழுதிச் செல்வது பேராசிரியரின் இயல்பாகும்.

**பன்னூற் பயிற்சி**

உரையாசிரியர்க்குத் தமிழ் இலக்கண இலக்கிய அறிவோடு வரலாற்று அறிவும் வடமொழி அறிவும் இன்றியமையாதனவாகும். அன்னோர் கலைநூல் அறிவு கைவரப் பெற்றவராக விளங்குதல் வேண்டும். அறிவியல் துறையிலும் ஓரளவு பயிற்சி உடையவராதல் வேண்டும், சோதிட நூல், கனா நூல், மருந்து நூல், அடிசில் நூல், குதிரை நூல் முதலானவற்றையும் அறிந்திருத்தல் வேண்டும் அவை மட்டுமா? உளவியல், அளவையியல், வானியல், மெய்யுணர்வியல், சமூகவியல், பாலியல் பொருளியல், அரசியல் சமயவியல், அறவியல் முதலானவற்றிலும் புலமை பெற்றிருத்தல் வேண்டும். எனவே தொன்னூல் உணர்வோடு பன்னூா் கல்வியும் ஒருங்கெ பெற்றவரே இலக்கிய உலகில் 'உரையாசிரியர்' என்ற சிறப்புடன் திகழ

முடியும். நம் உரையாசிரியர் அனைவரும் அத்தன்மையரே என நாம் பெருமிதம் கொள்ளலாம்.

'உரையெழுதும் பணி மிகச் சிக்கலானது, அதற்குப் பல நூற் கல்வி இன்றியமையாதது'' **(ப. 370)** எனபர் பேராசிரியர் பழுத்த தமிழ்ப் புலமை மட்டுமன்றி, பன்னூற் புலமையம் ஒருங்கே வாய்ந்தவராக விளங்குகிறார்.

அவர் முத்தமிழிலும் வல்லவர் என்பதை உரைக்கண் வரும் குறிப்புக்கள் உணர்த்துகின்றன. ''வழக்கியலும் வழக்கியலாற் செய்யப்பட்ட செய்யுளியலும் பற்றி எழுந்த இலக்கணம் இயற்றமிழெனப்படும் அச் செய்யுளின்றி அமையாத இசையிலக்கணம் இசைத் தமிழெனப் பெயரெய்தி அவ்வியற்றமிழ்ப் பின்னர் வைக்கப்பட்டதெனப்படும். இவ்விரண்டன் வழி நிகழ்த்துங் கூத்திலக்கணங் கூறிய நாடகத் தமிழ் அவற்றுப் பின்னாத் தாமென முறைமை கூறுதலும்'' (பொருள்.665) என்பத இயல் விளக்கம். இசை நாடகம் என்னும் வைப்பு முறைக்குப் பேராசிரியர் தரும் விளக்கம் . இசை நூல், கூத்த நூல், யாழ் நூல், கந்திருவ நூல், அவர் தம் காலத்தின் இயல்பிற்கு ஏற்ப, வடமொழிப் பயிற்சியிலும் சிறந்து விளங்குகிறார்.

ஒரு நூலை மொழி பெயர்க்கும் போது மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகளைக் குறித்தும் பேராசிரியர் மரபியல் நூற்பா ஒன்றின் (பொருள்.652) உரை விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**வினா - விடைப் பாங்கு**

வினாவும் விடையுமாக எழுதிச் செல்லும் பாங்கினைப் பண்டை உரையாசிரியர்களிடம் பரக்கக் காணலாம் பேராசிரியர் உரையிலும் ஆங்காங்கே இப்பாங்கு படிந்திருக்கக் காண்கிறோம்.

**மேற்கோள் காட்டுதல்**

தொல்காப்பியத்துள் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களிலிருந்தும் பேராசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார். ‘‘தொல்காப்பியமென்பது பிண்டம், அதனுள் எழுத்ததிகாரஞ் சொல்லதிகாரம் பொருளதிகாரமென்பன படலம் எனப்படும். அவற்றுள் ஓத்துஞ் சூத்திரமும் ஒழிந்து இரு கூறுமெனப்படும்’’ (பொருள்.484) என்பது அவர் கருத்து.

எட்டுத்தொகையுள் எட்டிலிருக்கும், பத்துப்பாட்டுள் குறிஞ்சிப் பாட்டு நீங்கலாக ஏனையவற்றிலிருந்தும் பேராசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார். அவர் அகநானூற்றை நெடுந்தொகை என்ற பெயராலும் சுட்டியுள்ளார் (பொருள்.548) ‘மலைபடு கடாத்தினை ஆனந்தக் குற்றமெனப் பிற்காலத்தானொருவன் ஒரு சூத்திரங் காட்டுதலை அவர் ‘தன்னான் ஒரு பொருள் கருதிக் கூற’லுக்குக் (பொருள்.663) காட்டாகக் குறிப்பிட்டுள்ளார்.

திருக்குறள், நாலடியார், ஐந்திணை ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, பழமொழி நானூறு ஆகியன பேராசிரியர் காட்டியுள்ள பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும். காப்பியங்களுள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகியவற்றிலிருந்து அவர் மேற்கோள் தந்துள்ளார். முத்தொள்ளாயிரத்திலிருந்தும் அவர் மிகுதியான பாடல்களை மேற்கொள் காட்டியுள்ளார்.

**நிரல் நயங்கள்**

நூலாசிரியர் அமைத்துத் தந்துள்ள கருத்து நிரலுக்குசக் காரணம் காண்பது உரை நயங்களுள் ஒன்றாகும். பேராசிரியர் உரையுள் காணலாகும் நிரல் நயங்களுக்கு இரு சான்றுகளைக் காண்போம்.

**“நகையே அழுகை இளிவரல் மருட்கை**

**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**

**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப”  (பொருள்.251)**

என்னும் மெய்ப்பாட்டியல் நூற்பாவில் எண் வகை மெய்ப்பாடுகள் நிரல்படுத்திக் கூறப்பட்டுள்ளன. இந் நிரலுக்குக் காரணம் என்ன? ஆசிரியர் நகையை ஏன் முதலில் கூற வேண்டும்? அழுகையை ஏன் அடுத்து வைக்க வேண்டும்? உவகையை ஏன் இறுதியில் அமைக்க வேண்டும்? பேராசிரியரின் உரை விளக்கம் இவ்வினாக்களுக்கு உரிய விடைகளைக் கூறுகின்றத. மெய்ப்பாட்டு நிரலுக்கான காரணத்தை நயமாக விளக்குகின்றது.

**அடைமொழி நயங்கள்**

சிறுசிறு அடைமொழிகளில் பெரும்பெரும் நயங்களையும் நுட்பங்களையும் பொதிந்து வைப்பது நல்லிசைப் புலவர்களின் இயல்பாகும். தொல்காப்பியர் வாக்கில் இத்தகைய அடைமொழிகள் அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கக் காண்கிறோம்.

‘‘உள்ளப்பட்ட நகை நான்கு என்றதனான் உள்ளத்தோடு பிறவாத நகையுமுள, அவை வறிதகத் தெழுந்த வாயண் முறுவலள் (அகம்.5) என்றாற் போல வருவனவெனக் கொள்க.

**தொடர் நயங்கள்**

இலக்கண உலகில் வழங்கும் கலைச்சொற்கள் (Technical Terms) கணக்கற்றவையாகும். இக்கலைச் சொற்களுள் சிலவற்றுக்குப் பேராசிரியர் தம் உரையின் இடையிடையே எழுதியுள்ள விளக்கங்கள் பயில்தொறும் பேரின்பம்

பயப்பனவாகும். நுண்ணறிவும் நூலறிவும் ஒருங்கே கைவரப்பெற்ற ஒருவரே இத்தகைய சிறந்த விளக்கங்களை எழுதுதல் இயலும்.

‘புகுமுகம் புரிதல்’, ‘பாராட்டெடுத்தல்’, ‘உடம்பு நனி சுருங்கல்’, ‘கனவொடு மயங்கல்’ என்னும் தொடர்களுக்கு இலக்கணக் கலைச்சொற்களுக்கு பேராசிரியர் எழுதியுள்ள இனிய விளக்கவுரைகள் முறையே வருமாறு.

‘புகுமுகம் புரிதல் என்பது ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டவழித் தன்னை அவன் நோக்குதற்கண் விரும்பும் உள்ள நிகழ்ச்சி. அதாவது, தலைமகன் காண்டலைத் தலைமகள் வேட்டல் என்றவாறாம், மற்றிது தலைமகற்கு உரித்தன்றோவெனின் அவன் தான் காண்பினல்லது தற்காண்டலை நயவான், அது தலைமையன்றாகலின்’’ (பொருள்.261).

**பொருள் நயங்கள்**

தொல்காப்பியர் நூற்பாக்களில் நயங்காண்பது ஒரு தனிக்கலை அக்கலையில் தனித்திறனும் தேர்ச்சியும் பெற்றவர் பேராசிரியர் அவர் இலக்கண நூற்பாவுக்கு இலக்கிய நயத்தோடு பொருள் கூறுவதில் வல்லவர். இக்கருத்திற்கு இரு சான்றுகளைக் காண்போம்.

**“மக்கள் தாமே ஆறறி வுயிரே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே”** **(பொருள்.588)**

என்பது ஆறறிவுயிர் பற்றிக் கூறும் மரபியல் நூற்பா. இந்நூற்பாவுக்குப் பேராசிரியர் வரைந்துள்ள உரைவிளக்கம் வருமாறு.

‘‘மக்களளெனப்படுவோர் ஐம்பொறியுணர்வேயன்றி மனமென்பதோர் அறிவும் உடையர் அக்கிளைப் பிறப்பு வேறும் உள முப்பத்திரண்டு அவயவத்தான் அளவிற்பட்டு அறிவொடு புணர்ந்த ஆடூஉ மகடூஉ மக்கள் எனப்படும்.

**சொற்பொருள் உரைத்தல்**

உரையாசிரியர் பின்பற்றும் அடிப்படையான மரபுகளுள் ஒன்று சொற்பொருள் உரைத்தல் ஆகும். இம்மரபினைப் பின்பற்றும் போது சொற்களுக்கு வெறும் அகராதிப் பொருளை மட்டும் தராமல், நயப்பொருளையும் நுண்பொருளையும் தருவது உரையாசிரியர் இயல்பாகும். இவ்வகையில் பேராசிரியர் காட்டியுள்ள சொற்பொருள் நயங்கள் பலப்பலவாகும்.

**மூல நூலாசிரியரைப் போற்றல்**

''எவரும் திறனாய்வுக்கு உட்பட்டவர் என்பது பொதுவிதி எனினும் இதற்கு ஓர் விலக்குண்டு எனத் தமிழ் நூல்கள் புலப்படுத்துகின்றன. மூல நூலாசிரியனை அந்நூலுக்கு உரை செய்யும் உரையாசிரியர்கள் நேர்திறம் செய்வார்களேயன்றி எதிர்திறம் செய்யார்கள். மூல நூலாசிரியன் கருத்தை விளக்கிக் காட்டுவதும் அது தகாதது போல் ஒரு கால் தமக்குப் பட்டாலும் உரையாசிரியர்களின் பண்புகளாம்'' **(வ.சுப.மாணிக்கம், தொல்காப்பியத் திறன், ப. 37).** இப்பண்புத் திறனைப் பேராசிரியர் உரையில் சிறப்பாகக் காண்கிறோம்.

**பிற நூலார் கருத்தை மறுத்தல்**

மூல நூலாசிரியரைத் திறனாய்வுக்கு உட்படுத்ததாத உரையாசிரியர்கள் தம்முள் ஒருவரை ஒருவர் திறனாய்வு செய்து கொள்ளத் தவறுவதில்லை. கருத்து மறுப்பும் மாறுபாடும் கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளத் தயங்குவதில்லை பேராசிரியர். இவ்வகையில் தமக்கு முன்தோன்றி நூலும் உரையும் எழுதிய ஆசிரியர்களின் கருத்துக்களைத் தக்க நியாயத்துடன் சாடியும் மறுத்தும் எழுதியுள்ள இடங்கள் பலவாகும்.

முற்காலத்து நூல்களை மிகவும் போற்றியும் மதித்தும் பிற்காலத்து நூல்களைப் பெரிதும் மறுத்தல் தாக்கியும் எழுதிச் செல்வது பேராசிரியரின் இயல்பாகும்.

**பன்னூற் பயிற்சி**

உரையாசிரியர்க்குத் தமிழ் இலக்கண இலக்கிய அறிவோடு வரலாற்று அறிவும் வடமொழி அறிவும் இன்றியமையாதனவாகும். அன்னோர் கலைநூல் அறிவு கைவரப் பெற்றவராக விளங்குதல் வேண்டும். அறிவியல் துறையிலும் ஓரளவு பயிற்சி உடையவராதல் வேண்டும், சோதிட நூல், கனா நூல், மருந்து நூல், அடிசில் நூல், குதிரை நூல் முதலானவற்றையும் அறிந்திருத்தல் வேண்டும். அவை மட்டுமா? உளவியல், அளவையியல், வானியல், மெய்யுணர்வியல், சமூகவியல், பாலியல், பொருளியல், அரசியல், சமயவியல், அறவியல் முதலானவற்றிலும் புலமை பெற்றிருத்தல் வேண்டும். எனவே தொன்னூல் உணர்வோடு பன்னூா் கல்வியும் ஒருங்கே பெற்றவரே இலக்கிய உலகில் ‘உரையாசிரியர்’ என்ற சிறப்புடன் திகழ முடியும். நம் உரையாசிரியர் அனைவரும் அத்தன்மையரே என நாம் பெருமிதம் கொள்ளலாம்.

‘உரையெழுதும் பணி மிகச் சிக்கலானது, அதற்குப் பல நூற் கல்வி இன்றியமையாதது’’ **(ப. 370)** எனபர் பேராசிரியர் பழுத்த தமிழ்ப் புலமை மட்டுமன்றி, பன்னூற் புலமையும் ஒருங்கே வாய்ந்தவராக விளங்குகிறார்.

அவர் முத்தமிழிலும் வல்லவர் என்பதை உரைக்கண் வரும் குறிப்புக்கள் உணர்த்துகின்றன. ‘‘வழக்கியலும் வழக்கியலாற் செய்யப்பட்ட செய்யுளியலும் பற்றி எழுந்த இலக்கணம் இயற்றமிழ் எனப்படும் அச் செய்யுளின்றி அமையாத இசையிலக்கணம் இசைத் தமிழெனப் பெயரெய்தி அவ்வியற்றமிழ்ப் பின்னர் வைக்கப்பட்டதெனப்படும். இவ்விரண்டன் வழி நிகழ்த்துங் கூத்திலக்கணங் கூறிய

நாடகத் தமிழ் அவற்றுப் பின்னர்த் தாமென முறைமை கூறுதலும்'' (பொருள்.665) என்பது இயல் விளக்கம். இசை நாடகம் என்னும் வைப்பு முறைக்குப் பேராசிரியர் தரும் விளக்கம் . இசை நூல், கூத்த நூல், யாழ் நூல், கந்தருவ நூல், அவர் தம் காலத்தின் இயல்பிற்கு ஏற்ப, வடமொழிப் பயிற்சியிலும் சிறந்து விளங்குகிறார்.

ஒரு நூலை மொழி பெயர்க்கும் போது மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகளைக் குறித்தும் பேராசிரியர் மரபியல் நூற்பா ஒன்றின் (பொருள்.652) உரை விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**பாட வேறுபாடுகளைச் சுட்டல்**

பேராசிரியர் தம் உரையில் பல இடங்களில் பாட வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். தாம் கொண்டுள்ள பாடத்தின் வலிமையையும் பொருத்தத்தையும் எடுத்துக்காட்டும் அவர், பிறிதொரு சாரார் கொண்டுள்ள பாடத்தின் பொருத்தமின்மையையும் முரண்பாட்டையும் விளக்கிக் காட்டியுள்ளார். மூல நூலாசிரியர் கருத்துக்கு இயைந்து வரும் பழம்பாடத்தை அவர் போற்றிக் கையாண்டுள்ளார். இனி, அவர் தம் உரையுள் சுட்டிக்காட்டியுள்ள சில பாட வேறுபாடுகளைக் காண்போம்.

**"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**
**மதிமை சாலா மருட்கை நான்கே" (பொருள். 255)**

என்பது மெய்ப்பாட்டியலில் மருட்கை (வியப்பு) பற்றி வரும் நூற்பா. இந்நூற்பாவின் உரை விளக்கத்தில் பேராசிரியர், 'புதுமை' என்பதற்கு மாறாக 'முதுமை' என ஒரு பாடம் வழங்குவதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

## வினாக்கள்

1. இறையனார் அகப்பொருளுரையின் சிறப்பியல்புகளை விளக்குக.
2. இறையனார் உரை பற்றி ஆராய்ச்சியாளர் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க
3. இறையனார் களவியல் உரையின் காலம் வரையறுக்க
4. இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர் எழுதிய உரையின் இயல்புகளை விவரி.
5. இலக்கண உரையாசிரியர்களின் உரைநடையினை தொகுத்துரைக்க
6. இளம்பூரணரின் உரைதிறனின் போக்கினை விவரிக்க
7. இளம்பூரணர் உரையின் உவமைகளை விளக்குக.
8. இளம்பூரணர் உரையில் நாகரிகத்தையும் பண்பாட்டையும் எவ்வாறு பதிவு செய்துள்ளார் என்பதை விளக்குக.
9. இளம்பூரணர் உரையில் நச்சினாக்கினியரிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறார் என்பதை நிறுவுக.
10. சேனாவரையர் உரையின் இயல்புகளை விளக்குக
11. சேனாவரையர் உரைபற்றி கணேசையர் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
12. உரையாசிரியர்களின் பேச்சு வழக்கும் உலகியியலும் - விளக்குக.
13. சேனாவரையின் இலக்கணப் புலமையினையும், அவர் கையாண்டுள்ள மேற்கோள்களையும் விளக்குக.

14. சேனாவரையாரும் நன்னூலாரும் உரையில் எவ்வாறு ஒன்றுபடுகிறார் என்பதை நிறுவுக.

15 சேனாவரையார் தன் உரையில் நாகரீகத்தையும் பண்பாட்டையும் எவ்வாறு பதிவு செய்துள்ளார் என்பதை நிறுவுக.

16 சேனாவரையார் உரை பிற உரைகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை நிறுவுக

17. சொல்லுக்கு சேனாவரையார் என்னும் கூற்றை நிறுவுக.

18 பேராசிரியர் உரைகளின் இயல்புகளை விளக்குக.

19 பேராசிரியர் பிற உரையாசிரியரிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறார் என்பதை நிறுவுக.

20. பேராசிரியரின் உரையில் உள்ள உவமைகளை விளக்குக.

21. இலக்கண உரையாசிரியர்களின் உரையை வேறுபடுத்துக.

## அலகு - 3

## நச்சினார்க்கினியரின் பத்துப்பாட்டு உரை வளம்

பத்துப்பாட்டிற்கு நச்சினார்க்கினியர் உரை எழுதவில்லை என்றால், பல பாடல்களின் சிறப்பான பகுதிகள், பொருள் தெளிவின்றி இருந்திருக்கும். இருளில் இருக்கும் வண்ண ஓவியமாய்ப் பார்த்துக் களிப்பாரின்றிப் போய் இருக்கும். பழந்தமிழ் இலக்கியங்களை மரபறிந்து, பொருள் தெளிவுடன் சுவையாக எடுத்து விளக்கிய பெருமை, நச்சினார்க்கினியர்க்கு உண்டு.

**“ஆன்றோர் புகழ்ந்த அறிவினில் தெரிந்து**
**சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல்**
**ஒருபது பாட்டும் உணர்பவர்க்கு எல்லாம்**
**உரையற முழுதும் புரைபட உரைத்தலும்”**

என்று சிறப்பாயிரம் இவரைப் பாராட்டுகின்றது.

பத்துப்பாட்டை இவர் பலநோக்குடன் கண்டு தெளிந்து உரை எழுதுகின்றார். பாடல்களின் தலைப்பை ஆராய்ந்து அவற்றின் கருத்தை எண்ணி வியக்கின்றார். பாடலின் பொருள் முடியும்தோறும் நிறுத்தி, வினை முடிபுகளை இயைத்துக் காட்டுகின்றார். விளக்கவேண்டிய பகுதிகளை நயமாக விளக்குகின்றார். இடையிடையே தொல்காப்பிய இலக்கணத்தைப் பொருத்திக்காட்டித் தமிழ்மரபை நினைவூட்டுகின்றார். சொற்களுக்குப் பொருள் எழுதி சங்ககால மக்களின் பழக்கவழக்கம், நாகரிகம், வரலாறு ஆகியவற்றை நினைவில் கொண்டு, வேண்டிய இடங்களில் தெளிவு பெறச் செய்கின்றார்.

**பெயர் விளக்கம்**

பத்துப்பாட்டின் பெயர்கள் யாவும் கலையழகு வாய்ந்தவை, பொருளாழம் மிக்கவை. தலைப்புகளை எண்ணிப் பார்த்து அத்தகைய சிறந்த தலைப்புகளைப் பாடலுக்கு இட்ட புலவர் பெரு மக்களின் கற்பனைத்திறனை வியக்கலாம். நச்சினார்க்கினியர் இப்பணியைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கி இருக்கிறார்.

'நெடுநல்வாடை' என்ற இனிய தலைப்பு, ஏழாம் பாடலுக்கு உரியதாக விளங்குகின்றது. வாடை என்றும், நெடுவாடை என்றும், நெடுல் வாடை என்றும் பெயர் சூட்டிய நக்கீரரின் கற்பனைத்திறன் மிக உயர்ந்தது. நச்சினார்க்கினியர் புலமைக்கு இத்தலைப்பு இனிய விருந்தாய் அமைகின்றது. 'நெடியதாகிய நல்ல வாடை' என்று பொருள்கூறி, மேலும் அதில் நயங் காண்கின்றார். 'தலைவனைப் பிரிந்திருந்து வருந்தும் தலைவிக்கு, ஒரு பொழுது ஓர் ஊழிபோல நெடிது ஆகிய வாடையாய்' நெடுவாடையாய் உள்ளது. அகத்து ஒடுங்கிப் போகம் நுகர்வார்க்குச் சிறந்த காலமாயினும் அரசன் போகம் வேண்டிய பொதுச் சொற்பொறானாய், அப் போகத்தில் மனமற்று வேற்றுப்புலத்துப் போந்து இருக்கின்ற இருப்பு ஆதலின், அவற்கு நல்லதாகிய வாடை ஆயிற்று.'' இவ்வாறு நச்சினார்க்கினியர் பாட்டின் தலைப்பிற்கு நயம் கூறுகின்றார்.

பட்டினப்பாலை என்பதைப் பின்வருமாறு விளக்குகின்றார். ''இது பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத் திணையாகலின், இதற்குப் பட்டினப்பாலை என்று பெயர் கூறினார்.

மலைபடுகடாம் என்ற தொடர் நச்சினார்க்கினியரால் சிறந்த விளக்கம் பெறுகிறது.

‘மலைபடுகடா அம் மாதிரத்து இயம்ப’ (348) என்ற அடிக்கு ‘மலைகளாகிய யானைக்கு உண்டாகின்ற ஒலி, திசைகள் எல்லாம் ஒலிப்ப’ என்று பொருள் எழுதி, ‘கடாம், ஆகுபெயராய் அதனாற் பிறந்த ஓசையை உணர்த்திற்று’ என்று விளக்கமும் தருகின்றார். பின்னர், ‘‘மலைக்கு யானையை உவமித்து அதன்கண் பிறந்த ஓசையைக் கடாம் எனச் சிறப்பித்ததனால், இப்பாட்டிற்கு ‘மலைபடுகடாம்’ என்று பெயர் கூறினார்’’ என்று நயம்பட உரைக்கின்றார்.

**உவமை விளக்கம்**

பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள பல உவமைகள், நச்சினார்க்கினியர் விளக்கத்தால் நன்கு விளங்குகின்றன. இவர் உரைஇன்றேல், பல உவமைகள் விளங்காமல் போய் இருக்கும்.

**“உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு**
**பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு**
**ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி” (திருமு.1-3)**

என்ற இனிய உவமை முருகனின் தோற்றத்தை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. இவ்வுவமையின் சிறப்பை நச்சினார்க்கினியர் நன்கு விளக்குகின்றார்.

பட்டினப்பாலையில், காவிரி கடலோடு கலப்பதை,

**“மாமலை அணைந்த கொண்மூப் போலவும்**
**தாய்முலை தழுவிய குழவி போலவும்**
**தேறுநீர்ப் புணரியோடு யாறுதலை மணக்கும்” (பட்.95-97)**

என்று சிறப்பிக்கின்றது. நச்சினார்க்கினியர், இவ்விரு உவமைகளைப் பின்வருமாறு விளக்குகின்றார்.

‘கரிய மலையைச் சார்ந்த செக்கர் மேகம் போலவும் - இது கரிய உயர்ந்த திரையின் மீதே சிவந்த ஆற்றுநீர் பரத்தற்கு உவமை தாயுடைய முலையைத் தழுவிய பிள்ளையைப் போலவும் - இ.்.து ஒன்றுபடுதற்கு உவமை.

**“காழ்மண்டு எ.்.கம் களிற்றுமுகம் பாய்ந்தென**

**ஊழ்மலர் உழிமுகை உயர்முகம் தோயத்**

**துறுகல் சுற்றிய சோலை வாழை” (மலை.129-131)**

என்று அழகிய மலைக்காட்சி ஒன்று இடம்பெற்றுள்ளது. நச்சினார்க்கினியர் உவமையின் பொருத்தத்தை, “வேல், யானையைக் குத்தினாற்போல வாழைப்பூ மலையைத் தீண்டி நின்றது என உணர்க, வாழைப்பூ உதிர்ந்து பின்பு உலராது நிற்றல் இயல்பு” என்று விளக்குகின்றார்.

நெடுநல்வாடையில், கத்தூரி முதலியவற்றை அரைக்கும் சாத்தம்மியினை நக்கீரர் கொள்உறழ் நறுங்கல் (50), என்ற உவமையுடன் குறிப்பிடுகின்றார். உவமையின் பொருத்தமும் சிறப்பும் நச்சினார்க்கினியரின் விளக்கத்தால் தெளிவு பெறுகின்றன. ‘கருங்கொள்ளரின் நிறத்தை ஒத்த நறிய நாத்தம்மி என்பது நச்சினார்க்கினியரின் விளக்கமாகும்.

உவமையை விளக்க, இரண்டு பொருளும் மூன்று பொருளும் கூறிப் பொருத்திக் காட்டுவது இவரது இயல்பு, பட்டினப்பாலையில்,

**“மழைநீங்கிய மாவிசும்பின்**

**மதிசேர்ந்த மகவெண்மீன்**

**உருகெழுதிறல் உயர்கோட்டத்து**

**முருகமர்பூ முரண்கிடக்கை**

**வரியணிசுடர் வான்பொய்கை” (பட்டி.34-38)**

என அடிகளுக்குப் பொருள் எழுதியபின்' 'மதியும் மீனும் பொய்கைக்கும் கரைக்கும் உவமிக்கும் பொருள். இனி, உயர் கோட்டத்தை, எல்லாரும் மதியைச் சேர்ந்த மக வெண்மீனைப் பார்க்கைக்கு இடமாகிய கோயிலாக்கி, கோயிலும் பொய்கையும் என எண்ணுதலாம். இனி, பொய்கைக் கரையிலே கோயிலாக்கிக் கோயிலும் பொய்கையும் மதி சேர்ந்த வெண்மீன் போன்ற என்றுமாம்' என வேறு சில கருத்துகளையும் கூறுகின்றார்.

**"தாரொடு பொலிந்த வினைநவில் யானைச்**

**சூழியிற் பொலிந்த சுடர்ப்பூ இலஞ்சி"   (மலை.227-228)**

என்ற இரண்டு அடிகளுக்கும் பொருள் எழுதியபின் மூன்று வேறு விளக்கங்களை, உவமையையும் பொருளையும் தொடர்புப்படுத்தி எழுதுகின்றார்.

**"குழுவித் திங்கள் கோள்நேர்ந் தாங்கு"   (பெரும்பாண.384)**

என்ற உவமையை இல்பொருள் உவமை என்று நச்சினார்க்கினியர் கூறுகின்றார். பௌர்ணமியன்றுதான் சந்திர கிரணம் ஏற்படும். ஆதலின், 'பிறைமதியைப் பாம்பு தீண்டினாற்போல்' என்ற உவமையை இல்பொருள் உவமை என்று இவர் குறிப்பிட்டுள்ளார்.

**மரபு**

பத்துப்பாட்டுள் ஒவ்வொரு பாட்டினது உரையின் இறுதியிலும், 'மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று' என்னும் தொடர் இடம்பெற்றிருந்தவை நோக்க, இவ்வுரையாசிரியரின் இயற்பெயர் நச்சினார்க்கினியர் என்பதும், இவர் பாரத்துவாச கோத்திரத்தைச் சார்ந்தவர் என்பதும், மதுரையம்பதியினர் என்பதும் தெளிவாகம் பாரத்துவாச கோத்திரம் என்பதால் இவர் அந்தண மரபினர் என்பது தெளிவு. "சங்க காலக் கபிலர், பரணர்,

பெருங்கௌசினார், உருத்திரங்கண்ணனார் என்பவர் அந்தண மரபினர், ஏனைய புலவராற் பாராட்டப்பட்ட பெரும்புலவராய்த் திகழ்ந்தனர். அங்ஙனமே பிற்காலத்தில் இந் நச்சினார்க்கினியரும் திகழ்ந்தனர் எனக் கருதலாம்'' என்பர் அறிஞர் **(மா.இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப.765-766).**

பாரத்துவாச கோத்திரம் வைணவர், ஸ்மார்த்தர், மாத்துவர் ஆகிய மூவரிடத்தும் காணப்படுகிறது. இம்மூவருள் நச்சினார்க்கினியர் அத்வைதக் கொள்கையைப் பின்பற்றும் ஸ்மார்த்தர் என்னும் பிரிவினைச் சார்ந்தவர். இதற்கு அவரது தொல்காப்பியப் பொருளதிகார உரையில் சான்று காணப்படுகிறது.

### உரை வகுத்துள்ள நூல்கள்

தமிழ் உரையாசிரியர் உலகில் நச்சினார்க்கினியர் தனிப்பெருஞ் சிறப்புடன் விளங்குகிறார். அவர், தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய இலக்கண உரையாசிரியராகவும், பத்துப்பாட்டு, குறுந்தொகை, கலித்தொகை, சீவகசிந்தாமணி ஆகிய இலக்கியங்களுக்கு உரை வகுத்த இலக்கிய உரையாசிரியராகவும் ஒருங்கே விளங்குகிறார்.

### பத்துப்பாட்டு உரைச் சிறப்பு

அறிஞர் மா.இராசமாணிக்கனாரும் தம் 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்னும் நூலில், ''நச்சினார்க்கினியர், எவ்வளவு நீண்ட செய்யுளாய் இருப்பினும் அதில் பல இடங்களில் சிதறிக் கிடக்கும் சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கூறுதலில் பெருஞ்சமர்த்தர் என்பதைப் பத்துப்பாட்டுகளுக்கு இவர் எழுதிய உரை நன்கு உணர்த்தும்'' **(மா.இராசாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப.781)** என விதந்து கூறுவர்.

‘‘எழில் மிகுந்த சொற்றொடர், உள்ளங் கவரும் உவமை, இனிய ஓசை கெழுமிய வாக்கியம், என்றும் நெஞ்சத்தில் நின்று நிலவும் எடுத்துக்காட்டு, இலக்கியச் சுவை முதிர்ந்த கவிதை மேற்கோள் - ஆகியவற்றை நச்சினார்க்கினியர் உரையில் காணலாம்’’ என்பது பேராசிரியர் **(மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.282)** நச்சினார்க்கினியருக்குப் பெருவிருப்போடும் மதிப்போடும் சூட்டும் புகழாரம்.

‘‘நச்சினார்க்கினியரின் உரைகளில், அவருடைய கடலனைய கல்வியும், செம்மையான பொருள் கூறும் திறனும், வாதாடும் ஆற்றலும், தெளிந்த தமிழ் ஆர்வமும் நன்றாய் விளங்குகின்றன’’ என்பது அறிஞர் **(ஏ.வி.சுப்பிரமணிய அய்யர், தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, ப. 313)** பாராட்டுரை.

‘‘நச்சினார்க்கினியர் கையாண்ட உரைநடையிலே அவர் மனப்போக்குத் தெளிவாகப் புலப்படுகின்றது. கல்வி காரணமாக அவருக்கு உண்டான பெருமிதத்தை அவருரையெங்கும் காணலாம். சேனாவரையருரையிற் காணப்படும் தருக்க முறையாகச் செல்லும் பண்பையோ அல்லது பரிமேலழகருரையிலுள்ள செறிவையோ அவருரையில் நாம் காணமுடியாது’’ என்பது பேராசிரியர் **(வி.செல்வநாயகம், தமிழ் உரைநடை வரலாறு, ப. 68)** மதிப்பீடு.

‘‘நச்சினார்க்கினியர் தமிழ் இலக்கியத்துக்கும் இலக்கணத்துக்கும் உரையெழுதுதற்கென்றே பிறந்த பெருமகனாவர். இலக்கியங்களில் உரை நயம் கண்டவராதலின் இவர்தம் இலக்கணவுரையிலும் நயக் காட்சிகளைக் காணலாம். இவர்தம் நடை இளம்பூரணத்துக்கும் சேனாவரையத்துக்கும் இடைப்பட்டதாகும். இளம்பூரணர்க்குப் பின் தொல்காப்பியத்திற்குப் பெரும்பாகம் உரை கண்ட பெருமையுடையவர் நச்சினார்க்கினியர்’’ இது அறிஞர் **(வ.சு.ப.மாணிக்கம், தொல்காப்பியத் திறன், ப. 23)** புகழுரை.

“நச்சினார்க்கினியர் பரந்த நூற்புலமையுள்ளவர். அவருக்கு நிகரான புலமையுடையவராக வேறு எந்த உரையாசிரியரையும் குறிப்பிட முடியாது” இது அறிஞர் **(மு.அண்ணாமலை, நச்சினார்க்கினியர் ப.11)** கருத்து.

**உரை நெறிகள்**

“செய்யுள் உரைநடைப்படுத்தல், பழமொழி ஆட்சி, பெயர்க் காரணம் கூறல், அருஞ்சொற்பொருள் சுட்டல், உலகியல், இலக்கிய, இலக்கண வழக்குகளைக் கூறிச் சொற்பொருளைத் தெளிவுபடுத்தல், பல்கலைப் புலமையால் கருத்துக்கு அரண் கூறல், மேற்கோள் கூறி நிறுவுதல், உவமை விளக்கல், செயற்கையாகக் கொண்டு கூட்டிப் பொருள் கூறல், இடைச் சொற்களை இடம் மாற்றிக் கூறிப் பொருள் விரித்தல், வைப்பு முறை காட்டல், கதைப்போக்குகளை அறிந்து நயம் சுட்டல் முதலாயின நச்சினார்க்கினியரின் உரை நெறிகள் எனலாம். இக்கூறுகளை இவர் உரை எழுதிய எல்லா நூல்களிலும் காணலாம்” என்பர் அறிஞர் **(இ.சுந்தரமூர்த்தி, ‘நச்சினார்க்கினியர்’, தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி 5, ப. 142).**

பத்துப்பாட்டு உரை வாயிலாகப் புலனாகும் நச்சினார்க்கினியரின் உரை நெறிகள்.

**விளக்கம் கூறுதல்**

பழுத்த இலக்கிய, இலக்கணப் புலமை வாய்ந்த நச்சினார்க்கினியர் உரை விளக்கம் தருவதில் தலைசிறந்தவர். பத்துப்பாட்டின் பெயர்களுக்கு விளக்கம் கூறுதல், பத்துப்பாட்டில் வரும் சிறந்த உவமைகளுக்கு விளக்கம் கூறுதல், பத்துப்பாட்டுள் இடம்பெறும் அரிய சொற்களுக்கும் தொடர்களுக்கும் விளக்கம் கூறுதல் என மூன்று நிலைகளில் இவ்வுரை நெறியினைக் காணலாம்.

பத்துப்பாட்டின் பெயர்கள் யாவும் பொருளாழம் மிக்கவை, கலையழகு வாய்ந்தவை. இப்பெயர்களைக் குறித்து நச்சினார்க்கினியர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் ஆழ்ந்த சிந்தனையின் அடிப்படையில் தோன்றியவை, அறிவுக்கு விருந்தாகும்.

**கொண்டு கூட்டி எழுதுதல்**

பத்துப்பாட்டின் இறுதிப் பாட்டான 'மலைபடுகடா'த்திற்கு காட்டியுள்ள கொண்டு கூட்டுப் பொருள் மிக நீண்டதாகும், ஏறக்குறைய மூன்று பக்க அளவில் அமைந்ததாகும்.

'எனக் கூட்டுக', 'என வினை முடிக்க', 'எனக் கூட்டி வினை முடிவு செய்க', 'மாட்டாக முடிக்க', 'என முன்னே கூட்டுக', 'எனப் பின்னே கூட்டுக', 'என மேலே கூட்டுக', 'என்பதனை இரண்டிடத்திற்கும் கூட்டுக', 'பின்னே கூட்டுதும்', என்பன போன்ற தொடர்களை நச்சினார்க்கினியரின் பத்துப்பாட்டு உரையில் காணமுடிகிறது. அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சானும், நீர் நீடு ஆடினால் கண்ணும் சிவக்கும், ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும் அதுபோல் நச்சினிர்க்கினியர் அளவிறந்து - வலிந்து - பாடல்களுக்குக் கொண்டு கூட்டிப் பொருள் எழுதுவதைப் படிக்கும்போது படிப்பவர் உள்ளத்தில் சலிப்பும் சோர்வுமே தோன்றுகின்றன. அறிஞர் வ.சு.ப.மாணிக்கம் கூறுவது பொல், "சொற்கிடந்தாங்குப் பொருள் கொள்ளாது, தாம் நினைத்தாங்குச் சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொண்டமையால் இவர்தம் (நச்சினார்க்கினியர் தம்) உரை உரையறங் கடந்த உரையாயிற்று பொருளறை செய்த இப்பெருங்குறை இவ்வுரையில் இல்லாதிருப்பின் நச்சினார்க்கினியர் உரைஞாயிறாகப் பெரும் புகழ் பெற்றிருப்பர்". **(18).கதைகளைக் கூறுதல்**

நச்சினார்க்கினியர் பண்டைத் தமிழ் நூல்களையும் இதிகாச புராணங்களையும் நன்கு கற்றவர். ஆதலின் அவர் தம் உரையில் ஆங்காங்கே பொருள் விளக்கத்திற்காகக் கதைகளைக் கூறியுள்ளார். நச்சினார்க்கினியர் 'திருமுருகாற்றுப்படையில்' அறுவேறு வகையின் அஞ்சவர மிண்டி (திருமுருகு.580) என வரும் வரிக்கு எழுதிய உரையின் இறுதியில் முருகன் பிறப்பைப் பற்றிய கதையினைக் கூறியுள்ளார்.

பிள்ளையார் அசுரரையழித்துத் தேவரைக் காத்தற்கு இந்திரன் மகள் தெய்வயானையாரை அவர்க்குக் கொடுத்த விடத்தே, பிள்ளையார் தம் கையில் வேலை நோக்கி, 'நமக்கு எல்லாந் தந்தது இவ்வேல்' என்ன, அருகிருந்த அயன், 'இவ்வேலிற்கு இந்நிலை என்னால் வந்ததன்றோ' என்றானாக? 'நங்கையில் வேலுக்கு நீ கொடுப்பதொரு சத்தியுண்டோ' என்று கோபித்து, 'இங்ஙனங் கூறிய நீ மண்ணிடைச் செல்வாய்' என்று சாபமிட்டதையும், முருகன் அயனைப் பழைய நிலையிலே நிறுத்தியதையும் நச்சினார்க்கினியர் திருமுருகாற்றுப்படை உரையில் (திருமுருகு. 162-165) எடுத்துக்காட்டியுள்ளார்.

### நூலாசிரியரைப் போற்றுதல்

நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டைப் பாடியருளிய நூலாசிரியர்களைத் தம் உச்சி மேல் வைத்துக் கொண்டாடுகின்றார், அவர்களை நல்லிசைப் புலவர்களாகத் தம் உள்ளத்தில் வைத்துப் போற்றுகின்றார்.

'மதுரைக் காஞ்சி' என்னும் தலைப்புக்கு விளக்கம் கூற வந்த நச்சினார்க்கினியர், "இப்பாட்டிற்கு மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியென்று துறைப் பெயரானன்றித் திணைப் பெயராற் பெயர் கூறினார். இத்திணைப் பெயர் பன்னிரு படல முதலிய நூல்களாற் கூறிய திணைப் பெயரன்று, தொல்காப்பியனார்

கூறிய திணைப் பெயர்ப் பொருளே இப்பாட்டிற்குப் பொருளாகக் கோடலின், இனி, மதுரைக் காஞ்சி யென்றதற்கு மதுரையிடத்து அரசர்க்குக் கூறிய காஞ்சியென விரிக்க. இஃது உருபும் பொருளும் உடன்றொக்கது. 'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே' (தொல். புறத். நூ.22) என்பதனாற் காஞ்சி பெருந்திணைப் புறனாயிற்று.

**பிறர் உரை கூறலும் மறுத்தலும்**

நச்சினார்க்கினியர் தமக்கு முன்பு வழங்கிய உரை நூல்கள் எல்லாவற்றையும் நன்கு பயின்றவர் என்பதற்கு அவருடைய உரையில் பல சான்றுகள் காணப்படுகின்றன. காட்டாகச் சிலவற்றைக் கீழே காண்போம்.

**"ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்**
**செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு**
**வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நமிர்தோள்"**

**(திருமுருகு. 103-105)**

என நக்கீரர் 'திருமுருகாற்றுப்படை'யில் முருகனின் தோள் நலத்தினைப் போற்றுவார். "சுடர் விடுபு வசிந்து வாங்கு தோள் சுடரையுடைய படைக்கலங்களை யெறிந்து பகைவர் மார்பைப் பிளந்து அவற்றை வாங்குதோள் நிமிர்தோள் - பொருகு தோள், நிறைந்து நிமிர் தோளென்க. வசிந்தென்பது பிளந்தென்னும் பொருட்டாதலின், செய்வதன் தொழிற்கும் செய்விப்பதன் தொழிற்கும் பொது. அசுரர் முதலியோரை அழிக்குங் காலத்துப் பன்னிரு கையினும் படைக்கலமேந்துவனென்று உணர்க, அஃது அறுவேறு வகையினஞ்சுவர மண்டி (58) என்றதனானுணர்க, வசிந்தென்பதற்குப் படைக்கலங்களால் வடுப்பட்டென்று பொருளுரைத்தல் இறைவனாதலிற் பொருந்தாது" (பக்.48-49) என இப்பகுதிக்கு உரை விளக்கம் எழுதுவார் நச்சினார்க்கினியர். 'வாண்மிகு வயமொய்ம்பின்' (பரி.9:57) என்னும்

பரிபாடல் தொடருக்குப் பரிமேலழகர் ‘வாட்டமும்பு நெருங்கிய வெற்றி மொய்ம்பினையுடைய முருகன்’ என்று உரைவிளக்கம் நச்சினார்க்கினியர், ‘வசிந்து’ என்ற சொல்லுக்குப் பரிமேலழகரைப் போல் ‘படைக்கலங்களால் மார்பில் வடுப்பட்டு’ என்று பொருள் கொள்ளாமல், ‘படைக்கலங்களால் பகைவர் மார்பைப் பிளந்து என்று பொருள் கொண்டுள்ளார். ‘இறைவன் ஆதலின் பகைவரது படைக்கலங்களால் வடுப்பட்டு என்று பொருளுரைப்பது பொருந்தாது’ என்று அவர் கூறுவது மனங்கொளத்தக்கதாகும். பிறர் கருத்தை மறுத்துத் தம் கருத்தை நிலைநாட்டுவதில் வல்லவர் நச்சினார்க்கினியர்.

**மேற்கோள் காட்டுதல்**

‘நச்சினார்க்கினியர் பழைய செய்யுட்களையேனும் அவற்றின் கருத்தையேனும் உரைநடையாக எழுதுவதுண்டு’ என்றும், ‘மேற்கோளாக எடுத்துக்காட்டும் நூலின் பெயரையாவது நூலாசிரியரின் பெயரையாவது எடுத்துக்கூறுதல் பெரும்பாலும் இவருக்கு வழக்கமின்று’’ **(உ.வே.சாமிநாதையர், பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், ப. ஔைை)** என்றும், ‘இவருரையில் 83 பழைய நூல்கள் மேற்கோளாக எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன’(20) என்றும் அறிஞர் உ.வே.சாமிநாதையர், மேற்கோள் காட்டுவதில் நச்சினார்க்கினியருக்கு இருக்கும் சிறப்பியல்புகளை எடுத்துக்காட்டுகின்றார். சுருங்கக் கூறின், ‘கற்றோர்க்குத் தாம் வரம்பு ஆகிய தலைமையர்’ (திருமுருகா. 133-134) என்னும் திருமுருகாற்றுப்படைத் தொடருக்கு இலக்கியமாக நச்சினார்க்கினியர் விளங்குகின்றார்.

நச்சினார்க்கினியர் எட்டுத் தொகையுள் நற்றிணை, பரிபாடல், புறநானூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, அகநானூறு ஆகியவற்றிலிருந்து மேற்கோள்

காட்டியுள்ளார். ‘பத்துப்பாட்டு’ என்பதுபோல், ‘புறப்பாட்டு’ (ப.50,353), ‘பரிபாடற்பாட்டு’ (ப.42) என்னும் தொடர்களை அவர் கையாண்டுள்ளார்.

‘திருமுருகாற்றுப்படை’ உரையுள் நச்சினார்க்கினியர் திருவாசகத்தை மூன்று இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார் (ப்.43,48,79). ஔவையார் பாடல் ஒன்றையும் அவ்வுரையில் அவர் எடுத்துக்காட்டியுள்ளார். (ப.60).

‘பொருநராற்றுப்படை’ உரையுள் (85) ‘சிறுபாணாற்றுப்படை’யில் வரும் அடியை (220) நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அகப்பாட்டாயினும் புறப்பாட்டாயினும் நச்சினார்க்கினியர் தொல்காப்பியர் கருத்தினையே மேல்வரிச் சட்டமாகக் கொள்கின்றார். அவர் தொல்காப்பியரைத் ‘தொல்காப்பியனார்’ என்று மதிப்போடு சுட்டுகின்றார். தொல்காப்பிய மரபியல் நூற்பாக்களை அவர் மிகுதியாக மேற்கோள் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ‘வருமுலை யன்ன வண்முகை உடைந்து திருமுகம் அவிழ்ந்த தெய்வத்தாமரை என்னும் ‘சிறுபாணாற்றுப்படை’ வரிகளுக்கு (72-73) எழுதிய உரை விளக்கத்தில் அவர் “பொருளே உவமஞ் செய்தனர்’ (தொல். உவம. நு.9) என்னும் சூத்திரத்தாற் பொருளை உவமஞ் செய்தார்” என எழுதியிருப்பதும் மனங்கொளத்தக்கதாகும்.

**பாட வேறுபாடு சுட்டல்**

பத்துப்பாட்டு நூல்களுக்கு அக்காலத்து வழங்கிய பாட வேறுபாடுகளையும் நச்சினார்க்கினியர் தம் உரையின் இடையிடையே காட்டிச் செல்கின்றார். பாட வேறுபாட்டைச் சுட்டுவதுடன், அப்பாடத்திற்கான பொருளையும் உரைப்பது நச்சினார்க்கினியரின் சிறப்பியல்பாகும். இனி, நச்சினார்க்கினியர் சுட்டிக்காட்டிள்ள பாட வேறுபாடுகளுக்குச் சில சான்றுகளைக் காண்போம்.

**“மடவரல்மகளிர் பிடகைப் பெய்த**

**செவ்வி அரும்பின் பைங்காற் பித்திகத்து**

**அவ்விதழ் அவிழ்பதம் கமழப் பொழுதறிந்து” (நெடுநல்.39-41)**

என்னும் வரிகள் ‘நெடுநல்வாடை’யில் வருவன. இவற்றுள் இடம்பெற்றுள்ள ‘செவ்வி அரும்பின்’ என்னும் தொடருக்கு அலருஞ் செவ்வியையுடைய அரும்பினது’ என்பது பொருள். ‘செவ்வி அரும்பின்’ என்பதற்கு மாறாக, ‘செவ்வரி அரும்பின்’ என்ற பாடமும் உள்ளது. “செவ்வரி யரம்பு பாடமாயிற் சிவந்த வரியினையுடைய அரம்பென்க” (ப.449) என அப்பாடத்திற்கும் பொருள் கூறுவார் நச்சினார்க்கினியர்.

‘அந்தீந் தெண்ணீர் குடித்தலின் நெஞ்சமர்ந்து’ என்பது ‘குறிஞ்சிப்பாட்டில் வரும் ஒரு வரி (2110 மலையில் அழகிய இனிய தெள்ளிய அருவிநீரைத் தலைவன் குடிக்கையினாலே தலைவியின் நெஞ்சு சூளுறவிலே பொருந்துகிறதாம். அருவி நீர் குடித்தல் அக்காலத்தில் ஒரு சூளுறவாகக் கொள்ளப்பட்டது. இவ்வரிக்கு எழுதிய உரை விளக்கத்தின் இறுதியில் நச்சினார்க்கினியர், ‘நெஞ்சமைந்தென்றும் பாடம் எனத் தம் காலத்து வழங்கிய பிறிதொரு பாடத்தினையும் எடுத்துக்காட்டுவார்.

**பல்கலை அறிவு**

நச்சினார்க்கினியர் பல்கலை அறிவும் பாங்குற வாய்க்கப் பெற்றவர் என்பதை அவர் உரை கொண்டு அறிய முடிகின்றது.

நச்சினார்க்கினியரின் ‘திருமுருகாற்றுப்படை’ உரையைப் பயில்வோர் அவரது தத்துவப் புலமையை நன்கு உணர்வர். ‘உலகம் உவப்ப’ என்பது ‘திருமுருகாற்றுப்படை’யின் தொடக்கச் சொற்றொடர். “உலகம் உவப்ப - சீவான்மாக்கள் உவப்ப. உலகமென்பது பல பொருளொரு சொல்லாய் நிலத்தையும்

உயிர்களையும் ஒழுக்கத்தையும் உணர்த்தி நிற்குமேனும் ஈண்டு உவப்பவென்றதனான், மண்ணிடத்து வாழும் சீவான்மாக்களை உணர்த்திற்று'' (ப.32) என இத்தொடருக்குத் தத்துவ நெறி நின்று விளக்கம் தருவார் நச்சினார்க்கினியர்.

**"அன்னாய் நின்னொடு முன்னிலை எவனோ**

**கொன்ஒன்று கிளக்குவல் அடுபோர் அண்ணல்**

**கேட்டிசின் வாழி கெடுகநினன் அவலம்'' (மதுரை.206-208)**

என்னும் 'மதுரைக் காஞ்சி' வரிகளுக்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரை விளக்கமும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாகும்.

**நாகரிகமும் பண்பாடும் உணர்த்தல்**

நச்சினார்க்கினியர் காலத்து மக்களின் வாழ்க்கை, நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலானவை அவர் உரையில் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. முதற் சூல் கொண்ட மகளிர் இடுக்கண் இன்றிப் புதல்வரைப் பயத்தல் வேண்டும் என்று தெய்வத்தைப் பரவுவர் (மதுரை.609). இச்செய்தியினை நச்சினார்க்கினியர் தம் 'மதுரைக்காஞ்சி' உரையுள் தெரிவித்துள்ளார். 'சூல் முற்றி அசைந்த இயல்பினையுடையராகிய மகளிரது பால் கட்டி வீங்கின முலையையொப்பம் பக்கம் உருண்டிருந்த குடத்தையுடையவாய அடி' என்னும் அறிய குறிப்பு நச்சினார்க்கியரின் 'நெடுநல்வாடை' உரையுள் (120-121) காணப்படுகின்றது. பிள்ளையைப் பெற்ற மகளிர் அக்காலத்தில் வளையல் அணிந்து கொள்ள மாட்டார்கள் (மலைபடு.253).

மன்னர்கள் அக்காலத்தில் தம் பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடுவது உண்டு. 'பேரிசை நன்னன் பெறும் பெயர் நன்னாள்' என்னும் 'மதுரைக்காஞ்சி' வரிக்கு (618) நச்சினார்க்கினியர், 'பெரிய புகழையுடைய நன்னன் கொண்டாடுகின்ற

பிறந்த நாளிடத்து, அவன் பெயரை அந்நாள் பெறுதலின், பெயரைப் பெற்ற நன்னாள் என்றார்' (ப.410) என விளக்கம் தருவர்.

அக்காலத்தில் அரசர்கள் படைத் தலைவர்க்கு ஏனாதிப் பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்தனர் (ப.423). 'சித்தன் வாழ்வு என்று சொல்லுகின்ற ஊர் முற்காலத்து ஆவினன்குடி என்று பெயர் பெற்றது' என்னும் செய்தி 'திருமுருகாற்றுப்படை', உரையில் (ப.60) காணப்படுகின்றது. 'ஏரகம்' என்பதற்கு 'மலைநாட்டகத்தொரு திருப்பதி' (ப.62) என நச்சினார்க்கினியர் விளக்கம் தருகிறார்.

கல்வியில் வல்ல சான்றோரைக் குறித்து, 'இவர் கல்வியைக் கரைகண்டார் எனக் கூறும் வழக்கு நச்சினார்க்கினியர் காலத்திலும் இருந்தது (திருமுருகு.133-134).

'ஒருசால் இருசால் என்றல் உழவுத் தொழிலுக்கு மரபு' (ப.231) என உழவுத் தொழிலுக்கு உரிய மரபினை நச்சினார்க்கினியர் 'பெரும்பாணாற்றுப்படை' உரையில் குறிப்பிடுகின்றார்.

துயிலுதற்குக் காலை வருடல் மரபு. 'மெல்லியல் மகளிர் நல்அடி வருட' என்னும் 'நெடுநல்வாடை' வரிக்கு (1510 'மெத்தென்ற தன்மையினையுடைய சேடியர் துயிலுண்டாகுமோவென்று அடியைத் தடவ' என விளக்கம் தருகின்றார் நச்சினார்க்கினியர்.

இக்காலத்தில் வீட்டினைப் பல அறைகளாகப் பிரித்துக் கட்டுவதைப் போல், முற்காலத்திலும் மண்டபம், கூடம், தாய்க்கட்டு, அடுக்களை எனப் பல அறைகளைக் கொண்டதாக வீட்டைக் கட்டினர் (மதுரை.357-358).

விழித்த கண் இமைக்கும் அளவிலே மறைகின்ற கள்வரும் அக் காலத்தில் இருந்தனர் (மதுரை.642) களவுகாண்டற்கும் காத்தற்கும் உரிய நூல்களைக் குறித்து நச்சினார்க்கினியர் 'மதுரைக்காஞ்சி' உரையில் குறிப்பிடுகின்றார்.

அண்ணன், அம்மான் என்னும் முறைப் பெயர்கள் 'மலைபடுகடாம்' உரையில் மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளன (ப.625).

**அடைமொழி நயங்கள்**

பத்துப்பாட்டில் பொருள் பொதிந்த அடைமொழிகள் பலப்பல காணப்படுகின்றன. இவ்வடைமொழிகளின் நயங்களை நச்சினார்க்கினியர் தம் உரையில் ஆங்காங்கே எடுத்துக்காட்டியுள்ளார்.

'திருமுருகாற்றுப்படை'யில் நக்கீரனார் 'எய்யா நல்லிசைச் செவ்வேல் சேஎய்' (திருமுருகு.61) என முருகப் பெருமானைப் போற்றுவர். ஈண்டு அவர் 'செவ்வேல்' என்று முருகப் பெருமானின் வேலுக்கு அடை கூறுவர். ''எக்காலமும் போர் செய்தலிற் 'செவ்வேல்' என்றார்'' (ப.42) என்பது நச்சினார்க்கினியர் இவ்வடைமொழிக்குக் காட்டும் நயம் ஆகும்.

**இலக்கண நயங்கள்**

இலக்கண நூலுக்கு இலக்கிய நெஞ்சம் கொண்டு உரை எழுதுவதிலும், இலக்கிய நூலுக்கு இலக்கண நெறி நின்று உரை வகுப்பதிலும் வல்லவர் நச்சினார்க்கினியர். அவரது தொல்காப்பியர் உரையில் இலக்கிய நயங்களும், பத்துப்பாட்டு உரையில் இலக்கண நயங்களும் நிறைந்த காணப்படுகின்றன. நச்சினார்க்கினியர் தம் பத்துப்பாட்டு உரையில் காட்டியுள்ள சில இலக்கண நயங்கள்.

“இப்பாட்டிற்கு நெடுநல்வாடை என்று பெயர் கூறினார். இப்பெயர் நெடிதாகிய நல்ல வாடையென விரிதலிற் பண்புத் தொகையாயிற்று. வாடையென, வாடைக்காற்றிள் றோன்றின கூதிர்ப் பாசறையை யுணர்த்தலிற் பிறந்தவழிக் கூறலென்னும் (தொல். வேற்றுமை மயங்கு. நு.31) “ஆகுபெயராய் நின்றது” (ப.444).

“மலைக்கு யானையை உவமித்து அதன்கட் பிறந்த ஒசையைக் கடாமெனச் சிறப்பித்தவதனால், இப்பாட்டிற்கு மலைபடு கடாமென்று பெயர் கூறினார். கடாம், ஆகுபெயராய் அதனாற் பிறந்த ஓசையை யுணர்த்திற்று” (பக்.640, 641).

“மதுரைக்காஞ்சி யென்றதற்கு மதுரையிடத்து அரசற்குக் கூறிய காஞ்சியென விரிக்க. இ∴து உருபும் பொருளும் உடன்றொக்கது” (ப.338).

**பொருள் நயங்கள்**

ஆற்றொழுக்காகக் கொண்டு கூறினாலும் அங்கங்கே உள்ள சொற்களைக் கொண்ட கூட்டிக் கூறினாலும் நயம்படப் பொருளுரைப்பது நச்சினார்க்கினியரின் நல்லியல்பாகும்.

**“ஒருமுகம்**
**குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்**
**மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தின்றே”**

என்பன ‘திருமுருகாற்றுப்படை’யில் வரும் வரிகள் (100-102). இவற்றுக்கு நச்சினார்க்கினியர் வரைந்துள்ள நுண்ணிய பொருள் விளக்கம் வருமாறு, “ஒரு முகம் குறவருடைய மடப்பத்தையுடைய மகளாகிய வல்லி போலும் இடையினையுடைய வள்ளியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று, மடவரல் நகையெனக் கூட்டித் தனக்கு ஓரறியாமை தோன்றுந் தன்மையுடைத்தாகிய நகையென்று கூறுக. அவளொடு நகையமர்தலின் அறியாமை கூறினார். காம

நுகர்ச்சியில்லாத இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான், உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கு என்றுணர்க'' (பக்.47-48).

வீடு பெறுதற்குக் சமைந்தான் ஓர் இரவலனை வீடு பெற்றான் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்துவது 'முருகாற்றுப்படை' என்பது நச்சினார்க்கினியர் கருத்து. வீடு பெற்ற இரவலன் வீடு பெற முயலும் இரவலனை நோக்கி, 'காண்தக, முந்துநீ கண்டுழி முகனமர்ந்து ஏத்துமாறும், கை தொழுது பரவுமாறும், காலுற வணங்குமாறும்' (திருமுருகு.250-525) கூறுகிறான். ''முகனமர்ந்து என்றார், அவன் தெய்வத்தன்மையைக் கண்ட பொழுது அச்சம் பிறவாது நிற்க வேண்டுமென்றற்கு'' (ப.71) என இப்பகுதிக்கு எழுதிய உரை விளக்கத்தில் நச்சினார்க்கினியர் குறிப்பிட்டிருப்பது நயமானதாகும்.

**அரிய நயங்கள்**

பிற உரையாசிரியர்களால் எடுத்துக்காட்ட முடியாத சில அரிய நயங்களை நச்சினார்க்கினியர் தம் பத்துப்பாட்டு உரையில் எடுத்துக்காட்டியுள்ளார்.

'பொருநராற்றுப்படை'யில் வரும் கரிகாற் பெருவளத்தான் தன்னை நாடி வந்த பொருநருக்குப் பல வகையான பரிசில் தந்து, காலாலே ஏழடி பின்னே வந்து வழியனுப்பி வைக்கிறான், தேரில் இங்ஙனம் ஏறுக என்று வழிகாட்டுகிறான், குதிரைகளை விரைவுபடுத்துவதற்கு உரிய தாறுகோலைக் களைந்து விடுகிறான். இக்காட்சியினை முடத்தாமக் கண்ணியார்.

**''கோட்டின் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்**
**ஊட்டுஉளை துயல்வர ஓரி நுடங்கப்**
**பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்**
**காலின் ஏழடிப் பின்சென்று கோலின்**

**தாறுகளைந்து ஏறுஎன்று ஏற்றி" (பொருந.163-167)**

என்னும் வரிகளில் அழகுறச் சித்தரித்துக் காட்டுவார். இவ்வரிகளுக்கு எழுதிய உரை விளக்கத்தில் நச்சினார்க்கினியர், "ஏழடி வருதல் ஒரு மரபு, ஏழிசைக்கும் வழிபாடு செய்தானாகக் கருதுதலின்" என்றும், "இன்தாறுகோல் களைந்த - செல்லுதற்கு இனிதாகிய செலவு முடுக்குங் கோலைப் போக்கி, என்றதனாற் கடுவிசைக்கு இவர் இருத்தலாற்றார் என்று கருதி இயற்கையிற் சேறல் அமையும் என்றான்" என்றும், "ஏறு என்று ஏற்றி" இங்ஙனம் ஏறென்று ஏறவிட்டு" (பக்.119-120) என்றும் குறித்துள்ள கருத்துக்கள் அருமையும் அழகும் பொருந்திவையாகும்.

**பால் நயங்கள்**

'மணநூல்' எனச் சிறப்பித்துக் கூறப்படும் சீவக சிந்தாமணிக்குப் பேருரை கண்டவர் நச்சினார்க்கினியர். அவர் தம் பத்துப்பாட்டு உரையிலும் ஆங்காங்கே பாலியல் பற்றிய சில நுட்பமான நயங்களை எடுத்துக்காட்டியுள்ளார்.

'ஆய்தொடி மகளிர் நறுந்தோள் புணர்ந்து கோதையின் பொலிந்த சேக்கை துஞ்சி' என்னும் 'மதுரைக்காஞ்சி' வரிகளுக்கு (712-713) "புணர்ந்து பின்னைத் துயிலுங்காலத்துத் தனியே துயிலுதல் இயல்பு என்பது தோன்றப் புணர்ந்து துஞ்சி என்றார்" (ப.421) என நுண்ணிதின் விளக்கம் கூறுவார் நச்சினார்க்கினியர்.

'விளையாடி வசிகரித்து உறவு கொண்டு பொருள் வாங்குதல் பரத்தையர்க்கு இயல்பு' (ப.405) என்னும் கருத்தை நச்சினார்க்கினியர் 'மதுரைக்காஞ்சி' உரையில் குறித்துள்ளார். அறிஞர் வி. செல்வநாயகம் குறிப்பிடுவது போல், "நச்சினார்க்கினியரை ஒரு சிறந்த இலக்கண உரையாசிரியர் என்று கூறுவதிலும், கவிநயங்களை நுண்ணிதாக ஆராய்ந்து கூறும் ஒரு சிறந்த இலக்கிய

உரையாசிரியர் என்று கூறுதல் மிகப் பொருத்தமுடைத்தாகும்''. **(வி.செல்வநாயகம், தமிழ் உரைநடை வரலாறு, ப.66).**

### பரிமேலழகரின் திருக்குறள் உரைச் செறிவு

பரிமேலழகர் என்னும் அழகிய பெயரைத் தாங்கியவர், சிறந்த தமிழ் நூலாகிய திருக்குறளுக்கு உரை இயற்றிப் பெருமையுடன் விளங்குகின்றார். பரிமேலழகர் என்று பெரிதும் வழங்கும் பெயரைப் பரிமேலழகியார், பரிமேலழகியன், பரிமேலழகரையன் என்று பலவாறு வழங்குகின்றனர். சிவஞான முனிவர் இவரைப் பரிமேலழகியார் என்றே குறிப்பிடுகின்றார். ரா.இராகவ ஐயங்கார் 'பரிப்பெருமாளைப் பரி என்று கொண்ட அவரினும் உரை வன்மையான் அழகு உடையர் ஆதலால், பரிமேலழகர் எனப்பட்டாரோ என்று ஊகிக்க இடமுண்டு' என்று கூறுவது. பரிமேலழகர் என்ற பெயர் திருமாலுக்கு உரியது. திருமால் பரிமேல் அழகராயும், யானைமேல் அழகராயும் எழுந்தருளுவது இன்றும் வைணவக் கோயில் விழாக்களில் உண்டு.

### வாழ்ந்த இடம்

பரிமேலழகர் மதுரையில் வாழ்ந்தவர் என்று சிலவரும், காஞ்சிபுரத்தில் வாழ்ந்தவர் என்று சிலரும் கூறுகின்றனர். இருவேறு கருத்தினரும் தம் தம் கருத்திற்குச் சான்றுகள் காட்டுகின்றனர்.

பெருந்திரட்டில் உள்ள செய்யுள் ஒன்று (பெருந்.1547) பரிமேலழகரைக் 'கலைதேர் ஒக்கைக் காவலன்' என்று குறிப்பிடுகின்றது. ஒக்கை என்பது ஒக்கூர் என்பதன் மரூஉ மொழி, அவ்வூர் பாண்டிய நாட்டில் உள்ளது. காவலன் என்று குறிக்கப்படுவதால், அரசியல் தலைவராய் இருந்திருக்கலாம். வேறொரு செய்யுள் (பெருந்.1548) 'போற்று தமிழ்க் கூடற் பரிமேலழகியான்' என்று இவரைக்

குறிப்பிடுவதால் மதுரையில் இவர் வாழ்ந்தவர் என்பது பெறப்படும். இரு கருத்துகளையும் இணைத்து நோக்கும் போது, பரிமேலழகர் ஒக்கூரில் அரசியலில் தலைமை பூண்ட குடியில் பிறந்து, பின் புலமைச் செல்வராய் விளங்கி, தமிழ் வளர்த்த மதுரையில் தங்கித் தமிழ்ப் பணிபுரிந்த வந்தார் என்று கருதலாம்.

இவரது உரையில் நெல்லை மாவட்டத்துப் பேச்சு வழக்கு இடம்பெற்றுள்ளது. ‘‘செவ்வி பெற மலர்ந்து வைத்தும் நாற்றம் இல்லாத பூ சூடப்படாதவாறு போல, நன்று மதிக்கப்பட்டார்’’ என்று பொருட்பாலில் உள்ள ‘இணர் ஊழ்த்தும்’ (650) என்ற குறளின் சிறப்புரையில் கூறுகின்றார். மலர்ந்து, கற்று என்ற சொற்களுடன் ‘வைத்து’ என்ற சொல்லைச் சேர்த்துள்ளார். வைத்த என்ற சொல்லை இன்றும் பாண்டிய நாட்டு மக்கள் தம் பேச்சில் வழங்குகின்றனர். எனவே, பரிமேலழகர் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர் என்பது உறுதிப்படுத்துகின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் பரிமேலழகர் என்ற பெயருடைய பலர்க்கு நினைவாகப் பல இடங்களில் கல்லறைகள் உள்ளன. **(முருக.தனுஸ்கோடி, மணிவிழா மலர், (1967), ப. 74-75)**

இன்னொரு சாரர் பரிமேலழகரைக் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தவர் என்பதற்குச் சான்றுகள் காட்டுகின்றனர். தொண்டை மண்டலச் சதகம் (41), ‘‘திருக்காஞ்சி வாழ் பரிமேலழகன், வள்ளுவர் நூற்கு வழிகாட்டினான்’’ என்று கூறுகின்றது.

**சமயம்**

பரிமேலழகர், வைணவ சமயத்தினர் என்பதற்கு, சான்றுகள் பல உள்ளன. ‘மடியிலா மன்னவன்’ என்னும் குறளில் (610) அடியளந்தான் என்பதற்கு. ‘தன் அடியளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன் என்று பொருள் கூறி, தாம் திருமாலுக்கு அன்பர் என்பதை வெளிப்படுத்துகின்றார்.

**காலம்**

உமாபதி சிவாசாரியார், ‘வள்ளுவர்சீர்’ என்னும் வெண்பாவில், ‘பரிமேலழகர் செய்தவுரை’ என்று இவர் உரையைக் குறிப்பிடுகின்றார். உமாபதிசிவனார், சங்கற்ப நிராகரணம் என்ற நூலை 1313 ஆம் ஆண்டில் இயற்றினார். ஆதலின் பரிமேலழகர் இக்காலத்திற்கு முற்பட்டவர்.

**திருக்குறள் உரை**

தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர் ஆகிய ஒன்பது உரையாசிரியர்களுக்கும் காலத்தால் பிற்பட்டவர் பரிமேலழகர்.

பரிமேலழகர் தமக்குமுன் தோன்றிய ஒன்பது உரைகளையும் கற்கும் வாயப்புப் பெற்றார். எல்லா உரைகளிலும் உள்ள நல்ல இயல்புகளை அறிந்தார், ஒவ்வொரு உரையிலும் காணப்பட்ட குறை நிறைகளை உணர்ந்தார். இதன் பயனாய் நல்லனவற்றை மேற்கொண்டு குற்றங்குறைகளை நீக்கி, சிறந்த உரை காயும் வாய்ப்பு உண்டாயிற்று.

மணக்குடவர் ஓர் அதிகாரத்திற்குள் குறட்பாக்களைப் பொருள் தொடர்போடு தொகுத்து நோக்குகின்றார். பரிமேலழகர் இம்முறையை மேற்கொண்டு புதுவிளக்கம் சில காணுகின்றார். காலிங்கர் அதிகாரம் தோறும் பத்தாவது குறளின் இறுதியில் அடுத்து வரும் அதிகாரத்திற்கு தோற்றுவாய் கூறுகின்றார். பரிமேலழகர் இம்முறையைச் சிறிது மாற்றி அதிகாரத்தின் தொடக்கத்தில் முறை வைப்புப் பற்றி ஆராய்ச்சி நிகழ்த்துகின்றார். இவ்வாறு ஒவ்வொரு உரையிலும் காணப்படும் நல்லனவற்றை எல்லாம் மேற்கொள்ளுகின்றார் பரிமேலழகர்.

குறட்பாவுக்கு உரை எழுதும் போதும், ஏனைய உரைகளை நினைவில்கொண்டே உரை எழுதுகின்றார். பிறர் கொண்ட வேறு பாடங்களைக் குறிப்பிடுகின்றார். பொருத்தமற்ற பாடங்களை விலக்குகிறார். தவறான உரையைக் காரணங்கூறி மறுக்கின்றார். தமன்கு உடன்பாடு இல்லாத கருத்துகளைக் சுட்டிச் செல்லுகின்றார். மாறுபட்ட கொள்கையை மதிக்கின்றார். போற்றத்தகுந்த வேறுபாடுகளைப் போற்றுகின்றார்.

எல்லா உரையாசிரியர்கள் கருத்தையும் நெஞ்சத்தில் நிறுத்தி, உரை எழுதுகின்றார் என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன.

**“இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்**

**குலன்உடையான் கண்ணே உள”  (குறள்.223)**

என்ற குறளுக்கு உரை எழுதியபின், வேறு உரைகளாக மூன்று கருத்துக்களைக் குறிப்பிடுகின்றார்.

‘‘இளிவரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தல்’’ என்பது மணக்குடவர் உரை.

‘‘அதனைப் பின்னும் பிறன் ஒருவன்பாற் சென்று அவன் உரையா வகையால் கொடுத்தல்’’ என்பத பரிதியார் உரை.

மூன்றாவது கருத்தைக் கூறிய உரையாசிரியர் யார் என்று இன்று நமக்குத் தெரியவில்லை. தருமா் நச்சா் தாமத்தா் ஆகியவா்களில் யாரேனும் ஒருவா் கூறியதாக இருக்கலாம்.

‘வன்கண் குடிகாத்தல்’ என்ற குறள் உரையில் (632) வேறு இரண்டு உரைகளைக் குறிப்பிடுகின்றார்.

இன்னும் சில இடங்களில் பரிமேலழகர் மற்ற உரையாசிரியர்களை எல்லாரும் உரைத்தார் (643), பிறர் எல்லாம் உரைத்தார் (817, 1069, 1262) என்று சுட்டுகின்றார்.

பரிமேலழகர் பிறர் உரைக்கருத்துக்களை ஆழ்ந்து பயின்று தெளிவு பெற்றதுடன், காலிங்கர் உரையின் சிறப்பியல்புகளுள் ஒன்றான தனித்தமிழ் நடையை மேற்கோண்டுள்ளார். பிற உரையாசிரியர்களின் நல்லியல்புகளுடன் பரிமேலழகரின் ஆழ்ந்த இலக்கண அறிவும் வடமொழிப் பயிற்சியும் தமிழ் இலக்கியப் புலமையும் அவர் உரைக்கு ஆக்கம் தந்தன.

**திருவள்ளுவரைப் பற்றி**

திருவள்ளுவரைப்பற்றிப் பரிமேலழகர் கூறும் கருத்துகள் மிகச் சிறந்தவை, திருவள்ளுவர் நெஞ்சத்தை அளந்து அறிந்து புலமை மாண்பை அளவிட்டுக் கூறப்பட்டவை.

''எல்லா நூல்களிலும் நல்லன எடுத்த எல்லார்க்கும் பொதுபடக் கூறுதல் இவர்க்கு இயல்பு'' (322) என்று திருவள்ளுவரைப் பற்றிக் கூறுகின்றார்.

**முரண்பாடு நீக்கல்**

**''ஊழிற் பெருவலி யாவுள'' (380)**

என்று கூறிய திருவள்ளுவர்,

**''ஊழையும் உப்பக்கம் காண்பர்'' (620)**

என்று கூறுகின்றார். இவை மாறுபட்ட கருத்துகளாக இருப்பதை உணர்ந்த பரிமேலழகர், ''ஊழ் ஒரு காலாக இரு காலாக அல்லது விலக்கல் ஆகாமையின்,

பலகால் முயல்வா் பயன் எய்துவா் என்பார் ‘உப்பக்கம் காண்பர்’ என்றார்’’ என்று தெளிவுபடுத்துகின்றார்.

**உலகியல் அறிவு**

பரிமேலழகா் உலக மக்களிடையே நன்கு பழகி, அவா்களின் பேச்சு, பழக்கவழக்கம் ஆகியவற்றை அறிந்திருக்கின்றார். மக்களைப் ‘பகைவா், நாட்டார், நொதுமலர்’ என்று மூன்றாகப் பிரிக்கின்றார் (752).

**சான்று காட்டுதல்**

திருக்குறளில் உள்ள சொற்களுக்குத் தாம் கொள்ளும் பொருள் முன்னோர் பாடல்களில் அவ்வாறே உள்ளது என்பதற்குத் தக்க சான்று காட்டி நிறுவுவது பரிமேலழகரின் வழக்கம். நாகரிகம் என்பது கண்ணோட்டமாதல், முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகா் (நற்.355) என்பதனாலும் அறிக.தம் உரையில் பல உவமைகளைக் கூறி, கருத்தை விளக்குகின்றார்.

**தமிழிலக்கியப் புலமை**

பரிமேலழகா் தமிழிலக்கியங்களை ஆழ்ந்து கற்றுத் தோ்ந்து தெளிந்த புலமை பெற்றுள்ளார். தாம் கற்ற நூல்களிலிருந்து கணக்கற்ற மேற்கோள்களைத் தருகின்றார்.

அகநானூறு (210), பதிற்றுப்பத்து (432), நற்றிணை (401), பத்துப்பாட்டு (811,1033,1144) நான்மணிக்கடிகை (121), (556) ஆகிய பழந்தமிழ் நூல்களிலிருந்து மேற்கோள் தருகின்றார்.

சீவகசிந்தாமணியிலிருந்து சில மேற்கோள்களைத் தருகின்றார் (384, 514, 771). பெரிய புராணக் கருத்து ஒரு குறளின் உரையில் இடம் பெற்றுள்ளது (442). இராமாயணக் கருத்து மற்றொரு குறள் உரையில் வருகின்றது (773).

சில இடங்களில் பழங்கதைகள் இடம்பெறுகின்றன. மகனை முறை செய்தான், தன் கை குறைத்தான் (547), பாண்டவர் (935), நகுடன் (899), திரிபுரம் எரித்தான் (900) ஆகியோருடைய வரலாறு ஆங்காங்கே சுட்டப்படுகின்றன.

திருவாய்மொழி (349, 570), முத்தொள்ளாயிரம் (576), திருக்கோவையார் (277) ஆகிய இலக்கியங்களிலிருந்தும் மேற்கோள்கள் தரப்பட்டுள்ளன.

**இலக்கணப் புலமை**

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து இலக்கணங்களிலும் புலமை நிரம்பியவர் பரிமேலழகர். அசைநிலை, ஆகுபெயர், வினைஎச்சத் திரிபு, தொகை மொழிகள், உருபு மயக்கம், வேற்றுமை, இடைச்சொல் ஆகியவற்றை நினைவூட்டி எழுதும் இடங்கள் பலவாகும்.

**வடமொழிப் புலமை**

வடமொழியில் உள்ள இலக்கணம் இலக்கியம், சமய நூல் ஆகியவற்றின் கருத்தை அறிந்து, தம் உரையில் பரிமேலழகர் கூறுகின்றார். வடமொழியில் உள்ள அறம் பொருள் இன்பம் பற்றிக் கூறும் நூல்களை ஆங்காங்கே பரிமேலழகர் குறிப்பிடுகின்றார்.

**பல்கலைப் புலமை**

பரிமேலழகர் இலக்கிய இலக்கண நூல்களையேயன்றி வேறு சில நூல்களையும் அறிந்துள்ளார். இவரது உரைகளில் அறத்துப்பாலில் அற

நூல்களையும் சமய நூல்களையும் அறிந்த புலமை வெளிப்படும், பொருட்பாலில் அரசியல் அறிவு புலப்படும், காமத்துப்பாலில் இன்பத்துறை நூலறிவு தோன்றும்.

**இசைப்புலமை**

பொருட்பாலில் “பண் என்னாம் பாடற்கு’ (573) என்ற குறளின் விளக்கவுரையில் இசைப்புலமை தோன்ற உரை எழுதுகின்றார்.

**மருத்துவ நூலறிவு**

மருந்து என்ற அதிகாரத்திற்கு, பரிமேலழகர் தம் மருத்துவ நூலறிவு தோன்ற உரை எழுதுகின்றார். ‘மிகினும் குறையினும்’ (941), ‘உற்றவன் தீர்ப்பான்’ (950) ஆகிய குறட்பாக்களின் உரை விளக்கம் படித்து மகிழத்தக்கன்.

**அரசியல் நூல் அறிவு**

பொருட்பாலில் உள்ள ஒவ்வோர் அதிகாரத்திலும் பரிமேலழகர் அரசியல் நூல் அறிவு வெளிப்படுகின்றது.

‘இயற்றலும் ஈட்டலும்’ (385) என்ற குறளின் உரையில், பொருள்கள், அவை வரும் வழிகள், அவற்றை அறம் பொருள் இன்பம் என்ற மூவகை வழியில் செலவிடல் ஆகியவற்றை நன்கு விளக்குகின்றார்.

**சமய நூலறிவு**

அறத்துப்பால் உரை, பரிமேலழகர், பரந்த சமய நூலறிவு பெற்றவர் என்பதை விளக்குகின்றது. சாங்கிய நூல் (27), ஆருகதர் சமயக்கொள்கை (286) ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றார். சமயம் பற்றிய பொதுவான கருத்துக்களை 21, 351, 355, 358, 338, 360 ஆகிய குறட்பாக்களின் உரைகளில் படித்து இன்புறலாம்.

**வான் புகழ்**

திருக்குறளுக்குப் பத்தாவது உரையாகத் தோன்றிய பரிமேலழகர் உரை மற்ற உரைகளைவிடச் செல்வாக்குப் பெற்றுப் பரவியது. திருவள்ளுவரைப் போலவே பரிமேலழகர் மதிக்கப்பட்டார், திருவள்ளுவரின் உள்ளக் கருத்தைத் தெள்ளிதின் உணர்ந்த பெரும் புலவராக அவர் கருதப்பட்டார்.

**உரையின் இயல்புகள்**

பரிமேலழகர் நூலின் தொடக்கத்தில் உரைப்பாயிரம் எழுதி, நூலின் பொருட்பாகுபாடுகளை விளக்குகின்றார். பால்தோறும் விரிவுரை தருகின்றார், இயல்களை ஆராய்கின்றார். அதிகாரம் தோறும் தோற்றுவாய் கூறுகின்றார். முன் அதிகாரத்திற்கு இயைபு உரைக்கின்றார். பத்துக் குறள்களும் கருத்துவகையால் பிரிந்து நிற்பதைக்காட்டி இன்ன பொருளை உணர்த்தின என்கிறார்.

குறட்பாக்களுக்குப் பரிமேலழகர் பொழிப்புரை எழுதி, பின்னர் அருந்தொடரை விளக்குகின்றார். ஏட்டுப் பிரதிகளில் பொழிப்புரையே உள்ளது என்றும், பதிப்பித்தவர்களே பதவுரையாக்கி வெளியிட்டனர் என்றும் கூறுகின்றனர்.

பொழிப்புரையில், அதிகாரத்திற்கு ஏற்பத் தேவையான சொற்களை வருவித்தும், வேற்றுமை உருபு முதலிய இடைச் சொற்களை விரித்தும் உரைக்கின்றார். பொழிப்புரையின் கீழ் எழுதும் விளக்கவுரையில் பல அரிய ஆராய்ச்சிக் கருத்துக்களைக் கூறுகின்றார். அருந்தொடரைத் தக்க மேற்கோளுடன் விளக்குகின்றார். உவமை காட்டியும், இலக்கியக் கதை வரலாறு முதலியன தந்தும் அழகு செய்கின்றார். தேவையான இலக்கணக் குறிப்புக்கள் தந்து தெளிவுபடுத்துகின்றார். தமக்கு முன் இருந்த உரையாசிரியர்கள் கருத்தைக் குறிப்பிடுகின்றார். மாறுபட்ட கருத்தை மறுக்கின்றார். தவறான பாடத்தைக்

கடிகின்றார். பொருத்தமானவற்றைப் போற்றுகின்றார். வடமொழி, தமிழ் ஆகிய இருமொழி இலக்கியங்களிலிருந்தும் கருத்துகளைக் கூறுகின்றார். வட சொற்களைத் தமிழ்மொழிக்கு ஏற்ப மொழி பெயர்க்கின்றார், தமிழ் மரபையும் பண்பாட்டையும் நினைவூட்டுகின்றார்.

**இலக்கண உரை**

பரிமேலழகர் உரையை இலக்கணவுரை என்று கூறுவதுண்டு. பரிமேலழகர் இலக்கணப் புலமை, அவர் உரை முழுதும் வெளிப்படுகின்றது. பலவகை இலக்கணங்களை ஆங்காங்கே எடுத்துக்காட்டும் இவர், பிற உரையாசிரியர்களை மறுக்கும் இடங்களில் கூட அவர்கள் இலக்கணத்தை மறந்ததையும், அவர்கள் உரையில் இலக்கணப் பிழைகள் இருப்பதையும் எடுத்துக்காட்டுகின்றார்.

**"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்" (643)**

என்ற குறளின் விளக்கவுரையில், ''தகையவாய் என்பதற்கு எல்லாரும் தகுதியுடையவாய் என்று உரைத்தார். அவர் அப்பன்மை, மொழிவது என்னும் ஒருமையோடு இயையாமை நோக்கிற்றிலர்'' என்று பிறர் உரைகளை மறுக்கின்றார்.

**குறள் பெற்ற புதுவிளக்கம்**

திருக்குறளைப் புதிய பார்வையுடன் கண்டவர் பரிமேலழகர். அதனால் பல குறட்பாக்கள் புதிய விளக்கம் பெற்றுள்ளன. அப்பாடல்களைப் பிறர் கூறுவதாக அமைத்துக்காட்டி அழகு செய்கின்றார்.

**"கான முயல்எய்த அம்பினில் யானை**
**பிழைத்தவேல் ஏந்தல் இனிது" (772)**

என்ற குறள், 'மாற்றரசன் படையோடு பொருதானோர் வீரன், அது புறங் கொடுத்ததாக நாணி, பின் அவன் தன் மேற் செல்லுற்றானது கூற்று' என்கிறார் பரிமேலழகர், இக் கூற்றால் மேலே கண்ட குறள், புதிய விளக்கம் பெறுகின்றது.

**உவமை விளக்கம்**

திருவள்ளுவர் கூறியுள்ள பல இனிய உவமைகள் பரிமேலழகர் உரையால், நன்கு பொருள் விளக்கம் அடைகின்றன.

'ஒருமையுள் ஆமைபோல்' (126) என்பதில் உள்ள உவமையினை இவர், ''ஆமை ஐந்து உறுப்பினையும் இடர் புகுதாமல் அடக்குமாறு போல, இவனும் ஐம்பொறிகளையும் பாவம் புகுத்தாமல் அடக்க வேண்டும் என்பார். ஆமை போல்' என்றார்'' என்று விளக்குகின்றார்.

**பொருள் விளக்கம்**

பரிமேலழகர் சில சொற்களுக்கும் தொடர்களுக்கும் மிக விளக்கமாகப் பொருள் எழுதுகின்றார். அவற்றுள் சில கீழே தரப்படுகின்றன.

**தவம்:** மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல் முதலாயின.

**சொல்லாராய்ச்சி**

பரிமேலழகர் செய்யும் சொல்லாராய்ச்சி சுவையானது சிந்தனைக்கு விருந்தாய் அமைவது, இல், குடி, குலம் என்பன ஒரு பொருள். மையாத்தல், ஈண்டு ஒவ்வாதவற்றை ஒக்கும் எனக் கோடல், இறுமாத்தல், செம்மாத்தல் என்பன போல ஒரு சொல். பரிமேலழகர் சொற்களை, செஞ்சொல், இலக்கணைச் சொல், குறிப்புச்சொல் என்ற மூன்று வகையாகக் குறிப்பிடுகின்றார் (குறள்.711).

**சொல்லும் பொருளும்**

பலசொற்களுக்குத் தெளிவாகப் பொருள் கூறி, பரிமேலழகர் தாம் ஓர் அகராதிக் கலைஞர் என்பதை வலியுறுத்துகின்றார்.

**உரைக்கு உரை**

பரிமேலழகர் உரை திட்ப நுட்பம் வாய்ந்து, கருத்துச் செறிவு உள்ளதாய், பலமுறை கற்றுத் தெளிந்தவரிடம் முறையாகப் பாடம் கேட்டறிய வேண்டியதாய் இருக்கின்றது. ஆதலின் அவ்வுரையை எல்லோரும் கற்றுப் பயனடைய வேண்டும் என்று விரும்பியவர்கள் உரைக்கு உரை கண்டனர், தெளிபொருளும் விளக்கவுரையும் எழுதி, குறிப்புரை வரைந்தனர்.

## அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரை நயம்

அடியார்க்குநல்லார் என்ற இனிய பெயரையுடையவர், சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றிய சான்றோர். இவருக்கு முன்னும் சிலர் சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றி இருக்கலாம் என்று கருத இடமுண்டு. இவரைப்பற்றி அறிய, சிறப்புப்பாயிரச் செய்யுள்கள் உதவுகின்றன. இவரைக் 'காரும் தருவும் அனையான்' என்றும், 'நிரம்பையர் காவலன்' என்றும் ஒருபாடல் கூறுகின்றது. "இவருக்கு நிரம்பையர் காவலன் என்னும் பெயர் ஊரால் வந்தது என்றும், நிரம்பை என்னும் ஊர் கொங்கு மண்டலத்தில் குறும்பு நாட்டில் பெருங்கதையின் ஆசிரியராகிய கொங்குவேளிர் பிறந்த விசய மங்கலத்தின் பக்கத்தில் உள்ளதென்றும் கொங்குமண்டல சதகம் தெரிவிக்கின்றது என்பர் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர்.

அடியார்க்குநல்லாரை ஆதரித்த வள்ளல் 'பொப்பண்ண காங்கேயர் கோன்' என்று சிறப்புப்பாயிரச் செய்யுள் ஒன்று கூறுகின்றது. இவர் கலிங்கத்துப் பரணியிலிருந்து சில செய்யுட்களை மேற்கோள் காட்டுவதால் இவர் சயங்கொண்டார் காலத்திற்கும் பின் வாழ்ந்தவர் எனலாம். முத்தமிழ் வித்தகராகிய இவர் பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஊறித்திளைத்தவர், சிறப்பாக உரை இயற்றும் திறன் வாய்ந்தவர். இவரது உரையின் வாயிலாகப் பழந்தமிழரின் பல திறப்பட்ட கலை வளங்களைப் பற்றி எத்தனையோ அரிய கருத்துகள் வெளிப்பட்டன. இவர் தரும் ஒளியில் தான் பழந்தமிழ்க் கலைகள் நன்கு தெரிகின்றன.

**காலம் கடந்த குரல்**

கணக்கற்ற நூல்களைக் கற்றுத் தெளிந்து இவர் தமிழ்க் கலைகளை விளக்குகின்றார். முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம் இசை நாடகக் கலைகளைப்பற்றிக் கூறும் கருத்துகள் மிகவும் அருமையானவை, பிற தமிழ் நூல்களில் இல்லாதவை. அவற்றிற்கெல்லாம் அடியார்க்குநல்லார் எழுதியுள்ள உரையும் விளக்கமும் காட்டியுள்ள மேற்கோளும் மூலத்தைவிட அரியவை, விளக்கமானவை.

இவர், தமிழ்க்கலைகளின் மாண்பைப் போற்றி விளக்கி உரைத்த குரல், காலங்கடந்து வந்து தெளிவாக ஒலிக்கிறது. இருபதாம் நூற்றாண்டில் தமிழிசை மறுமலர்ச்சிக்கு இவர் உரையே பெரிதும் உதவியது. தமிழ்க் கலைகளைப் பல நூற்றாண்டுகளாகக் காத்து வழங்கிய பெருமை இவ்வுரைக்கு உண்டு.

**திறனாய்வுக் கலைஞர்**

மேலைநாட்டுத் திறனாய்வாளரைப் போல, இவர் சிலப்பதிகாரத்தைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளார். காப்பிய அமைப்பு, கதையின் கட்டுக்கோப்பு,

நிகழ்ச்சி ஒருமைப்பாடு, காப்பிய மாந்தரின் பண்புகள், நூலாசிரியரின் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம், செயல் நிகழும் கால எல்லை, இடம் ஆகியவற்றை எல்லாம் அடியார்க்கு நல்லார் நுணுகி நோக்கி ஆராய்ந்து திறம் படக் கூறுகின்றார். காப்பியம், தொடர்நிலைச் செய்யுள் என்ற இரு சொற்களின் பொருத்தத்தை உரைப் பாயிரத்தில் ஆய்ந்து கூறுகின்றார்.

சிலப்பதிகாரம், பெண்ணின் பெருமையை உலகிற்கு உணர்த்த எழுந்த பெருங்காப்பியம். நூலின் தொடக்கம் முதல் இறுதி வரை அக்காப்பியத்தில் கண்ணகியின் பெருமையே பேசப்படுகின்றது. மங்கல வாழ்த்துப் பாடலிலும் முதன் முதலில் கண்ணகியே அறிமுகப்படுத்தப்படுகின்றாள். பின்னரே கோவலன் சிறப்புக் கூறப்படுகின்றது. அடியார்க்கு நல்லார் காப்பியத்தின் உட்கருத்தை நன்றாக உணர்ந்து மங்கல வாழ்த்துப் பாடலில் (56 - 9), 'கண்ணகியை முற்கூறினார், பத்தினியை ஏத்துதல் உட்கோளாகலான்'' என்று கூறுகினற்ார்.

**கதை நிகழ்ச்சியும் கட்டுக் கோப்பும்**

சிலப்பதிகாரத்தில் கலை நிகழ்ச்சியில் சில இடங்கள் சிக்கலாக உள்ளன. மேம்போக்காகப் பார்க்கும் போது கட்டுக் கோப்பு இல்லாமல் இருப்பதுபோலத் தோன்றுகிறது. அவ்விடங்களில் அடியார்க்குநல்லார் தம் ஆராய்ச்சி திறனை வெளிப்படுத்தி உரை கண்டுள்ளார்.

ஊர்காண் காதையில், கோவலன் மதுரையினுள் சென்று அந்நகரிலுள்ள வணிகரைக்கண்டு அவர்களிடம் உதவிபெறும் நோக்கத்துடன் கவுந்தியடிகளிடம் விடை பெறுகின்றான். இதனை,

**"தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு**

**என்னிலை உணர்த்தி யான்வருங் காறும்**

**பாதக் காப்பினள் பைந்தொடி"**

என்ற அடிகளில் மிகத்தெளிவாக இளங்கோவடிகள் உணர்த்துகின்றார். மேலும், கவுந்தியடிகள் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாகத் தரும்போது,

**மாதரி கேள்,இம் மடந்தைதன் கணவன்**
**தாதையைக் கேட்கில் தன்குல வாணர்**
**அரும்பொருள் பெருநரின் விருந்தெதிர் கொண்டு**
**கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்**
**உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகும் அளவும்**
**இடைக்குல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன்**

என்று கூறுகின்றார்.

ஆனால், மதுரை நகரினுள் சென்ற கோவலன் அந்நகரத்து வணிகர்களைச் சந்திக்கவில்லை, அங்கே தங்க எவ்வித ஏற்படும் செய்யவில்லை, நகரத்தின் பல்வேறு நெடுந்தெருக்களைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பிவிடுகிறான். இவ்வாறு செய்ததற்குக் காரணம் எதுவும் கூறப்படவில்லை. இந்த முரண்பாட்டை அடியார்க்கு நல்லார் நினைத்துப் பார்க்கின்றார். முன் பின் உள்ள நிகழ்ச்சிகளை இணைத்து நோக்குகின்றார். கோவலன் மதுரையில் தங்க எத்தகைய ஏற்படும் செய்யாமல் வந்ததை ஆராய்கின்றார். ஊர் காண் காதையின் இறுதியில், "இவற்றின் பந்தர் நிழலிலே திரிந்து, காவலனது பெரிய நகரினைக் கண்டு மகிழ்ச்சி எய்தலாலே பொருந்துழி யறிதலை மறந்து போந்தான் என்க" என்று எழுதுகின்றார். இளங்கோவடிகள்.

**"காவலன் பேரூர் கண்டு மகிழ்வெய்திக்**
**கோவலன் பெயர்ந்தனன் கொடிமதிற் புறத்தென்"**

என்றே கூறுகின்றார். "பொருந்துழி யறிதலை மறந்து" என்று அடியார்க்குநல்லார் தாமே விளக்கம் சேர்த்துக் கொள்ளுகின்றனர். இவ்வாறு கூறாவிடின், கதை நிகழ்ச்சிகள் முரண்படும்.

**நிகழ்ச்சியை இணைத்தல்**

கதை நிகழ்ச்சியை உற்றுநோக்கி உண்மை உணர்ந்து முன்னும் பின்னும் இணைத்துப் பார்த்தல் அடியார்க்குநல்லாரின் இயல்பு.

**நிகழ்ச்சியும் காலமும்**

சிலப்பதிகாரக்கதை நிகழ்ச்சிக்குரிய காலத்தை ஆங்காங்கே தம் உரையில் அடியார்க்குநல்லார் சுட்டிச் செல்லுகின்றார். ஆண்டு, திங்கள், நாள் இவற்றைக் கணக்கிட்டுக் கூறுகின்றார்.

**உரைநடைச் சிறப்பு**

அடியார்க்குநல்லர் உரை, பல இடங்களில் ஓசை இன்பம் பயக்கும் சிறந்த கவிதைபோல உள்ளது. பதிகத்தின் உரையில் இளங்கோ அடிகள் துறவுபூண்ட வரலாற்றினைக் கவிதைச் சுவை சொட்டச் சொட்ட எழுதுகின்றார். அத்தகைய இடங்கள் இன்னும் பல இவர் உரையில் உள்ளன. சான்றுக்கு ஓரிடத்தைக் காண்போம்.

'ஒழுக்கம் உடைய விழுக்குடிப் பிறந்தோர் நாணுடை மகளிரொடு நீணெறிச் செல்லார்' (ஊர்காண்-17) என்று ஓசை நயம் தோன்ற எழுதுகின்றார். அவ்வுரைப் பகுதியை,

**"ஒழுக்கம் உடைய விழுக்குடிப் பிறந்தோர்**
**நாணுடை மகளிரொடு நீணெறிச் செல்லார்"**

என அகவாற்பாவின் ஈரடியாக அமைக்கலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த உரைப்பகுதி பல இடங்களில் உள்ளன.

**பரந்தும் நிழலும்**

அடியார்க்குநல்லார், பருந்தும் நிழலும் எனப் பாவும் உரையும் பொருந்த அமைத்தவர்.

**நயமும் விளக்கமும்**

அடியார்க்குநல்லார் சில அடிகளுக்குப் பொருள் விளக்கம் கூறி நயம் கூறுகின்றார்.

> **“....என் காற்சிலம்பு**
>
> **கொள்ளும் விலைப்பொருட்டால் கொன்றாரே ஈதொன்று”**

என்பதற்கு, ‘என் காற்சிலம்பு என்றாள் - தான் அரசன், யான் ஒரு வணிகன் மனைவி, என காலணியின் ஒன்று பெற்ற விலை தாராமைக் கள்வன் என்று பெயரிட்டுக் கொள்றார்களே என்று இ.ஃ.தோர் அநியாயம் இருந்தபடி என்ன என்று தெளிந்து கூறினாள். கொன்றாரே எனப் பன்மை கூறினாள், அரசனோடு அமைச்சரையும் கருதி’ என்று நயம் கூறுகின்றார்.

**பலபொருள் கூறுதல்**

சில வரிகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களையும் அடியார்க்குநல்லார் தருகின்றார். சிலேடையாக அமைந்தவற்றையும் தெளிவுபடுத்துகின்றார். வேட்டுவ வரியில்,

> **“இட்டுத்தலைஎண்ணும் எயினர் அல்லது**
>
> **சுட்டுத்தலை போகாத் தொல்குடி”** **(20-21)**

என்ற இரு அடிகளுக்கு மூன்று வகையாகப் பொருள் கூறியுள்ளார்.

1. “தாம் சுட்டிய பகைஞர் தலையைத் தாமே அறுத்திட்டு எண்ணுவது அல்லது, பகைஞர் சுட்டி எண்ணுதல் அவரிடத்து முடிவு போகாமைக்குக் காரணமாகிய எயினர் தொல்குடி

2. தலைகள் அரிந்துவைக்க வைக்கப் பிறர் எண்ணப்படுவது அல்லது, ஈமத்திற் சுடப்பட்டு அவம் போகாக்குடி

3. அரச் சுட்டிய மாற்றரசர் தலையைப் பிறரிடத்துப் போகவிடாக்குடி”

## மேற்கோள் நூல்கள்

அடியார்க்குநல்லார் தாம் கூறும் மேற்கோள் எந்த நூலைச் சேர்ந்தது என்று பெயர் கூறியே விளக்குவார். மிகச் சில இடங்களில் மட்டுமே மேற்கோள் எந்த நூலில் உள்ளது என்று குறிப்பிடாமல் செல்வார். மேற்கோள் கூறும் நூல் அவற்றின் உட்பகுதி, பாடல் ஆகியவற்றையும் இவர் குறிப்பிடுகின்றார்.

சங்க நூல்களிலிருந்தும், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, பெருங்கதை முதலிய காப்பியங்களிலிருந்தும் புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கணங்களிலிருந்தும் இவர் பல மேற்கோள் தருகின்றார்.

## பல்கலைப் புலமை

இளங்கோ அடிகள் பல கலைகளை நுணுகிக் கற்ற கலைச் செல்வர், சிலப்பதிகாரத்தில் தொட்ட இடமெல்லாம் கலைமணம் கமழும். இளங்கோ அடிகள் முத்தமிழ் கற்றுத் துறைபோகிய வித்தகர். அவர் நூலுக்கு உரை இயற்றிய அடியார்க்குநல்லார். அவரது புலமைப் பரப்பைக் கண்டு வியந்தவர். அவர் கூறும் கலைகளை விளங்கிக் கொண்டவர்.ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய நெஞ்சையள்ளும் சிலம்பிற்குக் கிடைத்துள்ள பழைய உரைகள் இரண்டாகும்.

**காலமும் வாழ்விடமும்**

அடியார்க்கு நல்லாரின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறவந்த அறிஞர் உ.வே.சாமிநாதையர், ‘‘இவருடைய வருணம், சமயம், காலம் ஆகிய இவற்றுள் ஒன்றும் புலப்படவில்லை. ஆனாலும் நச்சினார்க்கினியரால் மறுக்கப்படுவனவற்றுட் சில இவருடைய கொள்கையாக இருத்தல் பற்றி இவரது காலம் நச்சினார்க்கினியருடைய காலத்திற்கு முந்தியதாக இருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றது’’ **(உ.வே.சாமிநாதையர், சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும், அடியார்க்குநல்லார் உரையும், ப. xx)** என்று கூறித் தொடங்குகின்றார்.

‘‘உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் காலத்தை உறுதிப்படுத்த எண்ணிய ஆசிரியர் மு.வை அரவிந்தன். ‘‘தொடர்நிலைச் செய்யுள் என்பதனைக் காப்பியம் என்று வழங்கலாம் என்று அடியார்க்குநல்லார் கருத்தை (சிலப்பாயிரவுரை) நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணியுரையின் தொடக்கத்தில் மறுப்பதால் அவருக்கு இவர் பிற்பட்டவர் என்பத விளங்கும்’’ **(மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.162)** என்கின்றார். இரு உரையாசிரியர்களின் உரைப்பகுதிகளையும் சுட்டிக்காட்டி, அறிஞர் ச.வே.சுப்பிரமணியன் பின்வருமாறு மறுத்துக் கூறுவார். ‘‘இவ்விருவுரைப்பகுதி கொண்டு அடியார்க்குநல்லார் கருத்தை நச்சினார்க்கினியர் மறுக்கிறார் என்றோ, நச்சினார்க்கினியர் கருத்தை நல்லார் மறுக்கிறார் என்றோ கூற முடியாது. இதனைச் சான்றாகக் கொண்டு நச்சினார்க்கினியர்க்கு நல்லார் முற்பட்டவர் எனக் கூறுவது பொருந்தாது’’ **(ச.வே.சுப்பிரமணியன், அடியார்க்குநல்லார் உரைத்திறன், ப. xxv)** இவருடைய கருத்தின்படி அடியார்க்குநல்லாரின் காலம் பதினான்காம் நூற்றாண்டு என்பதாகும் இது ஆய்விற்குரியது.

சிலப்பதிகாரத்தின் புகழைப் போன்ற சீரிய புகழை உடையது அடியார்க்குநல்லாரின் அருந்தமிழ் உரை. அவர் உரையில் மீது உண்ட உண்டெனா மயங்கிய சான்றோர் பலர். இவண் அன்னோர்தம் பாராட்டுரைகளைக் கண்டு நுகர்வோம்.

''.....அடியார்க்கு நல்லார், முத்தமிழிலும் தமக்குள்ள வித்தகத்தை இவ்வுரையில் நன்கு காட்டியுள்ளார். இவருரை இல்லையேல் இசைத்தமிழ் பற்றியும் நாடகத் தமிழ் பற்றியும் கூறும் பழைய நூல்கள் இருந்தன என்பதையே அறிய இயலாது'' **(கலைக்களஞ்சியம், தொகுதி 1, ப.48)** என்று ஆணித்தரமாகக் கூறுகின்றார் அறிஞர் செ.வேங்கடராமச் செட்டியார்.

''மேலைநாட்டுத் திறனாய்வாளரைப்போல், அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளார். காப்பிய அமைப்பு, கதையின் கட்டுக்கோப்பு, நிகழ்ச்சி ஒருமைப்பாடு, காப்பிய மாந்தரின் பண்புகள், நூலாசிரியரின் ஆழ்ந்திருக்கும் கவியுளம், செயல் நிகழும் கால எல்லை, இடம் ஆகியவற்றை எல்லாம் அடியார்க்கு நல்லார் நுணுகி நோக்கி ஆராய்ந்து திறம்படக் கூறுகின்றார்.'' **(மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.249)** என்று நல்லாரை மேலை நாட்டுத் திறனாய்வு நெறமுறையாளர்களுடன் ஒப்பிட்டு உயர்வு காட்டுகின்றார் பேராசிரியர் மு.வை.அரவிந்தன்.

''அடியார்க்குநல்லரின் சிலப்பதிகார உரைப் பெருமையை எல்லோரும் நன்கு அறிவர். அவர் உண்மையான முத்தமிழ்ப் பலவராய் இருந்தார். பண்டைக்காலத் தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்றாகப் பயின்று, அவைகளில் பொதிந்து கிடக்கும் தமிழறிவில் ஊறியவர் அவர். உரை எழுதுவதில் வன்மையும் ஆற்றலும் படைத்தவர். அவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியிரா விட்டால்,

ஐம்பெருங்காப்பியங்களில் சிறந்ததாயும், ஒரு தனித்தமிழ் நாட்டுக் கதையைப் பொருளாகக் கொண்டு அழகாகவும், நாடகப் பண்புடனும், பண்டைத் தமிழ்க் கவிதை நயத்துடனும் சமைக்கப் பெற்ற இந்தக் காப்பியத்தின் பெருமையை இக்காலத்தவரால் எளிதில் உணர முடியாது. மற்ற உரையாசிரியர்களைப் பின்பற்றி அடியார்க்குநல்லாரும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதத் தொடங்காமல் சிலப்பதிகாரத்திற்கு உரை செய்ய முனைந்தது தமிழ் செய்த பாக்கியம். அவரது உரைநடை பலவித இலக்கிய நயங்களையுடையது, சில இடங்களில் அது கவிதைத்தன்மையைப் பெற்றிருக்கிறது. இந்த உரையின் மூலம் அடியார்க்குநல்லார் ஆற்றியிருக்கும் தமிழ்ப்பணி மதிப்பரிது'' என்று பழம் பெருந்தமிழறிஞராய் **(ஏ.வி.சுப்பிரமணிய ஐயர், தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, ப.317-318)** கூறும் நடுநிலையான மதிப்புரை நம் நெஞ்சில் பளிச்செனப்படுகிறது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் நல்லார் உரை பெறும் இடத்தை உறுதிப்படுத்தும் அறிஞர் மு.வரதராசனார், ''சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையால், பழங்காலத்து இசை நூல்கள், நாடக நூல்கள் பலவற்றின் பெயர்களை அறிகிறோம். அந்த உரையாடல் பழந்தமிழ்நாட்டுக் கலைகளைப் பற்றி எவ்வளவோ அறிய முடிகிறது. முழுதும் தெளிவாக அறிய முடியாவிட்டாலும், கலை வரலாறு பற்றிய இருள் ஓரளவு விலகுகிறது என்று கூறலாம்'' **(மு.வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, ப.194)** என்பர்.

**நடைச் சிறப்பு**

அடியார்க்கு நல்லாரின் உரைநடை சில இடங்களில் செய்யுள் அழகு தோன்ற அமைந்துள்ளது. இனிய சுவையுடையதாய், எதுகை மோனை போன்ற தொடைவிகற்பங்கள் அவருடைய நடை சிறப்புடன் மிளிர்கின்றது. அவருடைய

நடையில் இழுமென் மொழியான் விழுமியது நுவல்கின்ற ஓசையின்பம் நிறைந்து கவிதைச் சுவை நனி சொட்டக் காண்கின்றோம்.

எதுகை, மோனை, அளபெடை இனைய செய்யுட் பண்புகள் நிறைந்து காணப்படும். உரையினைப் படிக்கும் உணர்வை விடவும் ஒரு செய்யுளைப் படிக்கும் உணர்வே அடியார்க்கு நல்லாருடைய உரையைப் படிக்கும் போது நமக்கு ஏற்படுகின்றது.

**பிறமொழிப் புலமை**

அடியார்க்குநல்லார் வடமொழிப் புலமை மிகவும் பெற்றவர் என்பதனை அவருடைய உரையின் வாயிலாக அறிய முடிகின்றது. முத்தமிழ்ப் புலமையும் நிறையப் பெற்ற அவர் பிறமொழியையும் கற்றுத் தேர்ந்த புலமையாளர் ஆவார். இசை, நாடகம், சமயக் கருத்துக்கள் ஆகியவற்றை விளக்கும்போது வடமொழிக் கருத்துக்களையும் தவறாது தந்து, அவர் தம்முடைய ஒப்புமையறிவை வெளிப்படுத்துகின்றார். மேலும் அவர் சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் உரை வகுக்கும் போதும் மிகுதியாக வடமொழிச் சொற்களைப் பயன்படுத்துகின்றார்.

வடசொற்கள் தமிழில் வந்து வழங்கும் போத தமிழ்மொழியின் இயல்புக்கு ஏற்ப வருதல் வேண்டும் இவ்வியல்பினை நன்குணர்ந்த அடியார்க்குநல்லார், ‘காவ்யம்’ என்ற சொல் காவியம் என்றாகிக் காப்பியம் எனத் தமிழ் மரபிற்கு ஏற்ப மாறியமைந்த நுட்பத்தினைத் தம்முடைய உரைப் பாயிரத்திலே விளக்கிப் போகின்றார்.

**திசைச்சொற்கள் பற்றிய குறிப்பு**

மூல நூலாசிரியர்கள் திசைச்சொற்களை வழங்கியிருத்தல் கூடும் நூலுக்கு உரை கூறுமிடத்து உரையாசிரியர்கள் திசைச் சொற்கள் வழங்கியிருக்கவும்

செய்வர். மூல நூலின்கண் வருகின்ற திசைச் சொற்களைச் சுட்டிக்காட்டிப் பொருளைத் தெளிவுபடுத்தும் பணியை உரையாசிரியர்கள் செம்மையாகச் செய்து வெற்றி கண்டுள்ளனர். இப்பாங்கினை, நாம் அடியார்க்கு நல்லாரிடமும் காண முடிகின்றது.

‘‘தேசிகத் திருவின் ஓசை கடைப்பிடித்தென்றது இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று சொல்லப்பட்ட சொற்கள் இசைபூணும்படியைக் கடைப்பிடித்தறிந்தென்றவாறு (சிலப். அரங். ப.107) என்று அவரே உரை கூறும் பகுதி இங்கு எண்ணத்தகும்.

**அடியார்க்குநல்லார் காட்டும் வழக்குகள்**

நாடக வழக்கு, உலகியல் வழக்கு என்னும் இருவகை வழக்கினையும் அடியார்க்குநல்லார் தம் சிலப்பதிகார உரையினூடே பயன்படுத்தி ஒருவகைச் சிறப்பியல்பைப் பின்பற்றியுள்ளார். பேச்சு வழக்கினையும் நாட்டார் வழக்காற்றில் பயின்றுவரும் பழமொழிகளையும் அவர் ஆங்காங்கெ எடுத்தாண்டுள்ளார். அவருடைய மொழியியல் உணர்வை நமக்குத் தெரிவிக்கும் சான்றுகளாக அவை துலங்குகின்றன.

‘‘விளையாட்டுப் பூசல் வினையாயிற்று என்னும் வழக்குப் பற்றி’’ (சிலப். வேனிற். ப.230) என்று அவர் கூறுவது விளையாட்டு வினையாயிற்று என்ற மரபுத் தொடர் போன்று இன்றும் நம் பேச்சுவழக்கில் பயின்று வருகின்றது.

அடியார்க்கு நல்லார் தமிழ் இலக்கியப் புலமை நிரம்பப் பெற்றவர் ஆவார். சங்க இலக்கியம் முதல் சிற்றிலக்கிய வகையான கலிங்கத்துப்பரணி வரையுள்ள நூல்களை நன்கு கற்றுத் தேர்ந்தமையினால், அவர் உரை வகுக்கும்போது அவ்வந்நூல்களைத் தெளிவாகக் கூறிச் செல்கின்றார். ஏனைய உரையாளர்களிடம்

காண இயலாத இப்பண்பினை நன்கு தெளிவுறுத்த எண்ணிய பேராசிரியர் மு.வை.அரவிந்தன், ‘‘நச்சினார்க்கினியர் தாம் கூறும் மேற்கோள் எந்த நூலில் உள்ளது என்று கூறுவதில்லை. என்றார் பிறரும், என்பவை போல, எனவம் கூறுவன காண்க என்று கூறி மேற்கோள் கூறுவார். ஆனால் அடியார்க்குநல்லார் தாம் கூறும் மேற்கோள் எந்த நூலைச் சேர்ந்தது என்று பெயர் கூறியே விளக்குவார்’’ **(மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.264)** என்பது எண்ணத்தக்க செய்தியாகும்.

மூலநூலின் சொற்பொருளை விளக்குமிடத்து அதே பொருளுடைய சொற்கள் பிற இலக்கியங்களில் வருமென்றால் தவறாது அச்சொற்களை அடியார்க்குநல்லார் மேற்கோள்காட்டுவார். இதே போன்று இலக்கணப் பகுதிகளை விளக்கும் போதும் அவர் பிற நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுவார். பொருளாராய்ச்சி செய்யும்போதும் அவர் இணையான இலக்கியச் சான்றுகளைக் கூறி விளக்குவார். பொருள் விளக்கம் செய்யும் போதும் ஒப்புமையான இலக்கிய அடிகளை மேற்கோள் கூறிச் செல்லுவது அவர் இயல்பாகும். இவ்வாறு தகுந்த மேற்கோள்களைப் பொருத்தமான இடமறிந்து பயன்படுத்தும் பாங்கினை எண்ணம்போது, அடியார்க்குநல்லாரின் பன்னூற் புலமையின் செறிவு நன்கு வெளிப்படுகின்றது.

திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, மலைபடுகடாஅம், அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, கலித்தொகை போன்ற நூல்களிலிருந்து அவர் மேற்கோள் காட்டுவார்.

சிலம்பில் வரும் காவிரிப்பூம்பட்டினத்தின் வளத்தினைக் கூறுமிடத்து அடியார்க்குநல்லார் பட்டினப்பாலையில் வரும் காவிரிப் பூம்பட்டினத்தைப் பற்றிய

பக்தியினையே மேற்கோளாகக் காட்டுகின்றமை அறிந்து இன்புறும் வண்ணம் உள்ளது.

அரங்கேற்றுகாதையில் யாழ், குழல் ஆகியன குறித்து அடியார்க்குநல்லார் விளக்கும் பாங்கு நம் நெஞ்சைப் பிணிப்பதாக அமைகின்றது. “யாழ் நால்வகைப்படும், அவை: பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டி யாழென்பன இவை நாலும் பெரும்பான்மைய, சிறுபான்மையான் வருவன பிறவுமுள” என்றும், “குழல் - வங்கியம் : அதற்கு மூங்கில் சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி என ஐந்துமாம், இவற்றுள் மூங்கிலிற் செய்வது உத்தமம், வெண்கலம் மத்திமம், ஏனைய அதமமாம். மூங்கில் பொழுது செய்யும், வெண்கலம் வலிது, மரம் எப்பொழுதும் ஒத்து நிற்கும்.

அரங்கின் அமைப்புக் குறித்து இளங்கோவடிகள் கூறும் செய்திகளையும் அடியார்க்கு நல்லார். மிக நுட்பமாக விளக்குகின்றார். சிற்ப நூலாசிரியர் கூற்றுக்களை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு அவர் விளக்குகின்றார். பரத சேனாபதியார், செயிற்றியனார் ஆகிய நாடகத் தமிழ் நூல் வல்லாரின் கருத்துக்களை அவர் மேற்கோள் காட்டிக் குறிப்பிடுவதும் இவண் எண்ணத்தகும்.

அடியார்க்குநல்லார் கூறுவது நம் சிந்தையைக் கவர்கின்றது பொதியின்மலை முதலிய புண்ணியவரைப் பக்கங்களிலே நெடிதாகி உயர வளர்ந்த மூங்கிலிற் கண்ணொடு கண்ணிடை ஒரு சாணாக வளர்ந்தது கொண்ட நூல்களிற் சொல்லுகிறபடியே அரங்கஞ் செய்ய அளக்குங்கோல் உத்தமன் கைப் பெருவிரலில் இருபத்து நாலு கொண்டது ஒரு கோலாகி நறுக்கியென்க” என உரை எழுதியபின், மேலும் அவர், “இதனுள் அணுமுதற் பெருவிரலளவு உயர்ந்த வருமாறு, அணு எட்டுக்கொண்டது தேர்த்துகள், தேர்த்துகள் எட்டுக் கொண்டது இம்மி, இம்மி எட்டுக்

கொண்டது எள்ளு, எள்ளு எட்டுக் கொண்டது நெல்லு, நெல்லு எட்டுக் கொண்டது பெருவிரல் எனக் கொள்க'' (சிலப். அரங். ப.114) என்று கணக்கிட்டுக் கூறுவது நினைதற்பாற்று.

**பிறர் உரையைச் சுட்டலும் மறுத்தலும்**

அடியார்க்குநல்லாரின் உரைக்குமுன் எழுந்த உரை அரும்பத உரையாகும். அவர் 'அரும்பத உரை' எனப்பெயர் கூறிச் செல்லுமிடம் உண்டு. அவர், பிறிது கூறுவாருமுளர்', 'என்பாருமுளர்', 'என்ப பொருள் உரைப்பாருமுளர்', என்றும் கூறிப்போகின்றார். ஏனைய உரையாளர்களைக் குறிப்பிட்டுச் செல்லும் அடியார்க்குநல்லார், அவர்தம் உரைகளை மறுத்துரைக்கும் இடங்களும் உண்டு.

ஐம்பெருங்குழுவினர், எண்பேராயத்தார் குறித்து விளக்குமிடத்து அடியார்க்குநல்லார், ''இனி, 'சாந்துபூ... அவைக்களத்தாரைந்து' எனக் காட்டுவர் அரும்பதவுரையாசிரியர்'' (சிலப். இந்தி. ப.166) என முன்னைய உரைகாரரின் பெயரையே குறிப்பிட்டுச் செல்வர்.

மற்றைய உரைகளை மதித்துச் சுட்டிப்பேசும் அடியார்க்குநல்லார், அவ்வுரைகளை மறுத்து உரைகூறவும் தவறவில்லை. ''இவ்வீணையை உருப்பசி கையில் வீணையென்பாருமுளர், அது பொருத்தமின்று'' (சிலப். கடலாடு. ப.186) என்றும், ''இனி உருப்பசிக்குச் சயந்தன்மேற் சென்ற காதன்மை புதல்வர்மேற் செல்லும் கண்ணோட்டமென்பார்க்கு அங்ஙனம் புதல்வரை நோக்கி மகிழ்வார்க்கு அன்பு சிறத்தலொழித்து நிலை கலங்கி ஆடல்பாடல் நெகிழ்தலும் மூன்று காலமும் உணர்ந்த முனிவன் அதனை அறியாது சபித்தானென்றலும் பொருந்தாமையின் அங்ஙனம் உரைத்தல் குற்றமென்க'' (சிலப். கடலாடு. ப.187) என்றும், ''வாரணம்கோழி, ஆவது உறையூர், முற்காலத்து ஒரு கோழி யானையைப் போர்

தொலைத்தலான் அந்நிலத்திற் செய்த நகர்க்குக் கோழியென்பது பெயராயிற்று. அந்நகர் காண்கின்றபொழுது சிறையும் கழுத்துமாக ஆக்கியவதனாற் புறம்பெ சிறையையுடைய கோழியென்றாயிற்றென்பாருமுளர், அற்றன்று (சிலப். நாடு. ப. 285) என்றும் அடியார்க்குநல்லார் பிறர் உரைகளை மறுத்துரைக்கின்றார்.

**பாட வேறுபாட்டைக் கூறல்**

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதும்போது அடியார்க்குநல்லார், ஆங்காங்கே பிறர் கொண்ட பாடங்களைத் தவறாது சுட்டிக்காட்டுவார். பொருந்தாத பாடமாயிருந்தால் மறுத்துக் கூறுவதனையும் அவரிடம் காண்கின்றோம்.

மங்கல வாழ்த்துப் பாடலில் மாசாத்துவானைக் கூறுமிடத்து இளங்கோவடிகள் ‘வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்துவான்’ என்பார். இதற்கு உரை கூறிய அடியார்க்கு நல்லார், “பலர்க்கு என்றும் பாடம், அதற்கு இல்லாராகிய பலர்கென்க” (சிலப். மங்கல. ப. 39) என்று கூறுவார்.

**உரை வளம்**

தருக்க நூலறிவுடன் வினாவிடைப் போக்கில் உரை சொல்லிப் போவது உரையாசிரியர்களின் திறன்களுள் ஒன்றாகும். அரிய சொற்களின் பொருள் கூறியும், சொற்பொருள் விளக்கம் கூறியும், இலக்கண நுட்பங்களை விளக்கியும் போவது அவ்வுரையாசிரியர் தம் போக்காகும். அணி நலன்களைச் சுட்டிக்காட்டியும், புலமை நயங்களை எடுத்துக்காட்டியும் அன்னோர் உரை கூறுவர். மேற்கண்ட திறன்களைச் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாரிடம் காண முடிகிறது. ஆகவேதான் அவர் உரை, வளம் நிறைந்து விளங்குகின்றது எனலாம்.

**வினா - விடைப் போக்கு**

மூல நூலாசிரியர் கூற்றினை விளக்கும் அடியார்க்கு நல்லார், வினாவை எழுப்பித் தருக்க முறையில் விடை கூறி உரை கூறுவார். இத்திறனால் மூலநூலுக்கு நல்லதொரு விளக்கம் கிடைக்கும் என்று அவர் கருதினார். ஒரு வினாவைத் தாமே எழுப்பிக் கொண்டு அதற்கு விடை கூறும் முறையில் அடியார்க்குநல்லார் உரை கூறியுள்ளமை அறிந்தின்புறத்தக்கது.

உரையாசிரியர்களின் திறன்களுள் ஒன்று சொற்களுக்கு அவர்கள் கூறுகின்ற பொருளாகும். அடியார்க்குநல்லார் எண்ணற்ற சொற்களுக்கு மிக நயமான பொருள் விளக்கங்களைக் கூறிச் சுவையூட்டுகின்றார். சொற்களின் பொருள் வேற்றுமையினையும் அடியார்க்குநல்லார் தவறாது குறித்துச் செல்கின்றார். இதனை ஒன்றிரண்டு சான்றுகள் வாயிலாகக் கண்டு தெளிதல் சிறப்பாகும்.

''இலக்கியங்களைக் கற்றுணர்ந்து உரையெழுதும் ஆசிரியப் பெருமக்கள் தாம் கருத்தியவற்றையெல்லாம் நன்கு அழகுபட எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்றவராதல் வேண்டும், அவ்வாறு சொல்லுக்கும் தொடருக்கும் - பொதுவாகப் பாடலுக்கும் உரைதரும் போது சொற்களின் இலக்கண வரையறை இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. எனவே, ஆங்காங்கே இன்றியமையாத இடங்களில் மட்டும் இலக்கணக் குறிப்பையும் இலக்கண விளக்கத்தையும் உரையாசிரியர்கள் தந்து செல்கின்றனர்'' என்று கூறும் **(இரா.குமரவேலன், 'இலக்கிய உரையாசிரியர்கள்', தமிழ் இலக்கியக் கொள்கை - தொகுதி 1, ப. 362-363)** கூற்றிற்கு ஏற்ப அடியார்க்குநல்லாரின் உரையும் அமைந்துள்ளது.

அடியார்க்குநல்லார் தொல்காப்பிய நூற்பாக்களை மட்டுமல்லாமல், புறப்பொருள் வெண்பாமாலையிலிருந்தும் திவாகரம், பிங்கலந்தை ஆகிய நிகண்டுகளிலிருந்தும் மேற்கோள்காட்டி உரை எழுதிச் செல்வதனையும் காணலாம்.

**தமிழ்ப் பற்று**

''தீபகம் என்ற அணி இலக்கணப் பெயரைத் தமிழாக்கி 'விளக்கு' என அடியார்க்குநல்லார் கூறித் தம் தமிழ்ப்பற்றைப் புலப்படுத்தியுள்ளார்'' என்பது பேராசிரியர் **(பி.தட்சிணாமூர்த்தி, புலப்பாட்டு நெறி, ப.68)** கருத்துரையாகும்.

**வினைமுடிவு கூறல்**

''உரைகூறும்போது பொருத்தி வினைமுடிவுகள் கூறுவதில் வல்லவர். புறஞ்சேரி இறுத்த காதையில், 184-188 அடிகளின் விளக்கத்தில் 'ஏங்கி என்னும் செய்தெனெச்சம் நடுங்க வென்னும் பிறவினை கொண்டு முடிந்தது' என வினை முடிவு கூறுகிறார்,'' **(பி.தட்சிணாமூர்த்தி, புலப்பாட்டு நெறி, ப.68)** என ஓர் ஆய்வாளர் அடியார்க்குநல்லார் தம் புலப்பாட்டு நெறியின் சிறப்பினைத் தக்க சான்றின்வழிக் கூறுவது இவண் அறியத்தகும்.

சிலப்பதிகாரக் காப்பிய உரையில் அணிகளுக்கு நிரம்ப இடமுண்டு. அவ்வாறு அணிகள் வரும் இடங்களை நன்கு அறிந்து தகுந்தவாறு விளக்கத் தவறவில்லை அடியார்க்குநல்லார். அவர் உதாரம் என்னும் அலங்காரத்தைப் பற்றிக் கூறுமிடத்து

**"உதார மென்ப தோதிய செய்யுளிற்**
**குறிப்பி னொருபெரு ணெறிப்படத் தோன்றல்"**

என வரும் அணியியல் என்னும் நூலின் நூற்பா ஒன்றினைச் சுட்டியுள்ளார். ஆக அவர் ‘அணியியல்’ என்றொரு அலங்கார நூலைக் கற்றுள்ள புலமையாளர் என்பது பெறப்படும்.

**திறனாய்வு உணர்வு**

அடியார்க்குநல்லார் மேலைநாட்டுத் திறனாய்வாளர்களைப் போலச் சிலப்பதிகாரத்தைப் பல்வேறு திறனாய்வுப் பார்வையில் ஆராய்ந்துள்ளார். காப்பிய அமைப்பு, கதையின் கட்டுக்கோப்பு, நிகழ்ச்சி ஒருமைப்பாடு, காப்பிய மாந்தரின் பண்புகள், நூலாசிரியரின் புலமைச் செறிவு, செயல்நிகழும் கால எல்லை, இடம்போன்ற செய்திகளை எல்லாம் தம் நுண்மாண் நுழை புலத்தினால் அடியார்க்கு நல்லார் நுணுகி ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

காப்பியப் பகுதியில் காலம் பற்றிய செய்திகள் குறிப்பாகச் சுட்டப்பெறும், கால நீட்டிப்பைக் காப்பியத்திலும் நீட்டிக் கூறமுனையின் அது சலிப்பு ஏற்படுத்தும். எனவே, சுருங்கிய சில சொற்களில் விரைவுபடுத்திக் கதை நிகழ்ச்சியினைக் கூறிப்போவது மூலநூலாசிரியரின் இயல்பாகும்.

**நாகரிகமும் பண்பாடும் புலப்படுத்தல்**

உரையாசிரியர்கள் உரைஎழுதிச் செல்லும்போது தாம் வாழுகின்ற காலத்துப் பண்பாடு, நாகரிகம், நடைமுறைப் பழக்க வழக்கம் போன்ற செய்திகளையும் துணைக்கொண்டு சான்று காட்டி எழுதுவர். இப்பண்பினை அடியார்க்குநல்லாரிடமும் காணலாம்.

**“நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்”**

**(சிலப்.மங்கல.49)**

என்பதற்கு அடியார்க்குநல்லார் விளக்கம் கூறும்போது, ‘‘நீல விதானங்கூறினார், முத்து ஒளிபெறுதல் நோக்கி, அஃது அக்காலத்து முத்து நோக்குவார் ஒப்புக்கு விரிந்து நோக்குப’’ (சிலப். மங்கல. ப.40) என்று கூறி அக்காலத்துப் பழக்கத்தைச் சுட்டிக் காட்டுவர்.

**“சுடுமண் ஏறா வடுநீங்கு சிறப்பின்**

**முடியர சொடுங்குங் கடிமனை வாழ்க்கை”**

**(சிலப். ஊர்காண்.146-147)**

என்ற அடிகளுக்கு விளக்கம் கூறும்போது அடியார்க்கு நல்லார், ‘‘ஈண்டு சுடுமண் என்றது செங்கலை. வடு - குடிக்குற்றம், ஆவது பதியிலாரிற் குடிக் குற்றப் பட்டாரை ஏழு செங்கற் சுமத்தி ஊர் சூழ்வித்துப் புறத்திடுதல் மரபு’’ (சிலப். ஊர்காண். ப.377) என்கிறார். இதுவும் அக்காலப் பண்பாட்டை நினைவுகூர்ந்து கூறும் இடமாகும்.

## வினாக்கள்

1.. இலக்கிய உரையாசிரியர்களின் உரைநடை போக்கினை விளக்குக.

2. திருக்குறளுக்கு உரையாத்த நச்சினார்க்கினியர் பரிமேலழகர் உரை நயத்தினைப் புலப்படுத்துக.

3. நச்சினார்க்கினியரின் உரை நூல்களை பட்டியலிட்டு வேறுபடுத்தி காண்க.

4. பரிமேலழகர் திருக்குறள் உரையின் சிறப்பியல்புகளை விளக்குக.

5. பரிமேலழகரின் உரைசிறப்படைந்த காரணங்களை எடுத்துகைக்க

6. திருக்குறளில் உள்ள உவமைக்கு பரிமேலழகர் உரை தரும் விளக்கம் யாது?

7. திருக்குறளுக்கு பரிமேலழகா் உரையே சிறந்தது என்னும் கூற்றை நிறுவுக

8. அடியாா்க்கு நல்லார் உரையின் சிறப்பினை தொகுத்துரைக்க

9. அடியார்க்கு நல்லார் அரங்கேற்று காதைக்கு எழுதியுள்ள விளக்கத்தை ஆராய்க.

10. அடியார்க்கு நல்லார் உரையின் மேற்கோள்களை தொகுத்துரைக்க

11 சிலப்பதிகார காப்பிய மாந்தா்களின் பண்புகளை விளக்குக.

## அலகு - 4

## நாலாயிர திவ்வியப் பிரபந்த உரைகள்

தமிழிலக்கிய உலகத்தில் இடைக்காலத்தில் செந்தமிழை வளர்த்துச் செழிக்கச்செய்த பெருமை ஆழ்வார்களுக்கு உரியது. இலக்கியச் சுவை முதிர்ந்த வளமான கவிதைக் கனிகளை நல்கித் தமிழிலக்கியத்திற்கு அளப்பெருந்தொண்டுகளை அவர்கள் செய்திருக்கிறார்கள். ஆழ்வார்கள் வழிபட்ட கண்ணனைத் தமிழ் மொழியின் மீது தணியாத காதல் கொண்டவன் என்றும், தமிழ்க் கவிதை அமுதம் உண்டு திளைத்தவன் என்றும் பெரியோர்கள் போற்றிப் புகழ்வர். ஆழ்வார்களின் பாமாலைகள் அனைத்தையும் கண்ணன் மிக விரும்பி ஏற்பதாய்க் காலந்தோறும் சான்றோர்கள் நம்பிவருகின்றனர். திருமாலையும் தமிழையும் தொடர்புபடுத்தித் தோன்றிய கதைகள் சில உள்ளன.

அருட்பெருங் கவிஞராகிய குமரகுருபரர்,

**"பழமறைகள் முறையிடப் பைந்தமிழின் பின்சென்ற**
**பச்சைப் பசுங் கொண்டலே"**

என்று திருமாலை அழைக்கின்றார். கம்பர் இயற்றிய சடகோபர் அந்தாதி,

**"கவிப்பா அமுதம் இசையின் கறியொடு**
**கண்ணற்கு உண்ணக் குவிப்பான்"**

என்று நம்மாழ்வாரைப் பாராட்டுகின்றது. உலகளந்த மாயவன் கோயில்கொண்டு நிற்கும் எழில்மலையாம் திருவேங்கட மாமலையை.

**"ஆழ்வார்கள் செந்தமிழை ஆதரித்த வேங்கடம்"**

என்று பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் புகழ்கின்றார். ஆழ்வார்கள் பன்னிருவரும், திருமாலை வணங்கி வாழ்த்தி அவரது பெருமைகளைப் புகழ்ந்து பாடிய பாடல்கள், திவ்வியப் பிரபந்தம் எனப்பட்டன.

ஆழ்வார்களின் அருட்கவிகள் நாதமுனிகளால் ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொகுக்கப்பட்டன. நாதமுனிகள் வைணவ சமயச் சான்றோர். இவர் தென்னார்க்காடு மாவட்டத்தில் (சிதம்பரம் வட்டத்தைச் சேர்ந்த) காட்டு மன்னார் கோயில் என்னும் வீர நாராயணபுரத்தில் கி.பி.829 -ல் தோன்றினார்.

**உரைகள்**

ஆழ்வார்களின் பாடல்களாகிய திவ்வியப் பிரபந்தத்தை வைணவர்கள் தங்கள் வேதம் என்று கருதினர். தென்கலை வைணவம் ஆழ்வார்களின் பாடல்களையே உயிர் என்று கொண்டு வளர்ந்து வந்தது. இப்பாடலுக்கு மரபு நிலை தவறாமல் இராமானுசர் காலத்திலிருந்து பல உரைகள் காலந்தோறும் தோன்றின. இராமானுசர் தம் விசிட்டாத்துவைதக் கொள்கையை, உருப்படுத்த ஆழ்வார்களின் பாடல்களை அடிப்படையாகக் கொண்டார். அப்பாடல்களுக்கு அவர் அழகான விளக்கவுரைகள் கூறினார். அவருக்குப் பின் பல வைணவப் பெரியோர்கள் தோன்றி ஆழ்வார்களின் பாடல்களுக்குப் பொருள் கூறி விளக்குவதை ஒரு பெருங்கலையாக வளர்த்து வந்தனர். அவர்கள் அனைவரும்,

**"வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும்**

**பூசித்தும் போக்கினேன் போது"      (தேர்த்தெழுதி)**

என்ற சான்றோரின் கொள்கையைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர்கள்.

**உரைகளின் சிறப்பு**

ஆழ்வார்களின் பாடலுக்கு உரை இயற்றிய வைணவப் பெரியோர்கள் தாம் கற்ற கலைகள் அனைத்தையும் தம் உரைகளில் வழங்கிச் சென்றுள்ளனர். அப்பெரியவர்களின் இதய ஒலிகள் பலப்பல வகையாய் உரைகளின் வாயிலாக வெளிப்படுகின்றன. பாடல்களின் ஆழ்ந்த பொருள்களை மிக்க நயம்படப் புலப்படுத்தி எழுதியுள்ளனர். மிக அரிய செய்திகளும் விளக்கங்களும், நுண்கலைச் சொற்களும் உரைகளில் பொதிந்து கிடக்கின்றன. இவ்வுரைகள் தனி இலக்கியமாகவும், வைண சமய தத்துவ விளக்கமாகவும் போற்றப்படுகின்றன. பிற்காலத்தில் வைணவர்கள் ஆழ்வார்களின் பாடல்களைவிட, உரைவிளக்கங்களையே சிறந்தவையாகக் கருதிப் பின்பற்றினர். விளக்கம் கூறிச் சமயக் கருத்துக்களைப் பரப்ப உரைகளையே ஏற்று சான்றுகளாகக் கொண்டனர்.

திவ்வியப் பிரபந்த உரையாசிரியர்களின் சிறப்பை டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர், ‘‘அவர்களுடைய உரையில் ஒரு பாடலுக்கு உரை கேட்டு விட்டால் மனம் வேறு ஒன்றில் செல்லாது’’ என்று கூறிப் புலப்படுத்துகின்றார். (சங்கத் தமிழும் பிங்காலத் தமிழும், ப.162)

**நடையும் மொழியும்**

வியாக்கியானங்கள் பேச்சு நடையில் அமைந்துள்ளன. கொச்சை மொழிகள் விரவியுள்ளன. இவற்றிலும் ஒருவகை அழகும் ஆற்றலும் வெளிப்படுகின்றன. கணக்கற்ற பழமொழிகள் வகைவகையான மரபுத் தொடர்கள், நல்ல நல்ல நாட்டுப்புறக் கதைகள், சுவையான பழக்க வழக்கங்கள், வியப்பூட்டும் நிகழ்ச்சிகள் ஆகியவை வியாக்கியானங்களில் நிரம்பியுள்ளன.

**மணிப்பிரவாள நடை**

வெண்ணிற முத்துமணிகளையும் செம்பவளங்களையும் கலந்து முத்தும் பவளமும் ஒன்றன்பின் ஒன்று வருமாறு அமைத்து மாலை கட்டுவதுபோல, வடமொழிச் சொற்களைத் தமிழ்மொழியுடன் இடையிடையே கலந்து எழுதும் இலக்கிய நடை மணிப்பிரவாள நடை என்று பெயர் பெற்றது. இருவேறு தனி இயல்புகளை உடைய இரு மொழிகளை ஒன்று சேர்க்கும் முயற்சியில் பிறந்ததே இந்நடையாகும். மணிப்பிரவாளம் என்ற தொடரில் உள்ள மணி முத்தையும், பிரவாளம் பவளத்தையும் குறிக்கும். தமிழ், வடமொழி இரண்டனுள் எது முத்து, எது பவளம் என்ற வினாவை எழுப்பி விடை காண்பது வீண் வேலையாகும். முத்து, பவளம் இரண்டும் விலையுயர்ந்த பொருள்களே வடமொழி, தமிழ் இரண்டையும் சிறப்பாகக் கருதியவர்களே மணிப்பிரவாள நடையைத் தோற்றுவித்தனர்.

மணிப்பிரவாள நடையில், வட சொற்களும் தொடர் மொழிகளும் தமிழுடன் விரவிவரும். தமிழில் உள்ள இடைச்சொற்களும் வினைமுற்று எச்சங்களும் வந்து கலக்கும் வடமொழி வினைச் சொற்களும் வந்து சேரும், வடமொழிப் பெயர்ச்சொற்கள் வடமொழி வேற்றுமை உருபேற்று வழங்கும் பிராகிருதமொழிச் சொற்களும் இடம்பெறும்.

**நாதமுனியின் வழித்தோன்றல்**

வீர நாராயணபுரத்தில் வாழ்ந்த நாதமுனியின் மைந்தர் ஈசுவரமுனி. ஈசுவர முனியின் மைந்தர் ஆளவந்தார். ஆளவந்தாருக்கு யமுனைத் துறைவர் என்ற பெயரும் உண்டு. ஆளவந்தார் வைணவ ஆசாரியர்களில் சிறப்புடன் விளங்கினார். இவருக்குச் சீடர் பலர் தோன்றினர்.

**6000 படி**

நாதமுனிகள் காலம் முதல் இராமானுசா் காலம் வரை, திருவாய் மொழிக்கு வாய்மொழி வாயிலாகவே உரைகள் கூறப்பட்டு வந்தன. ஆறாயிரப்படியே முதன் முதலில் எழுத்து வடிவில் தோன்றிய திருவாய்மொழி வியாக்கியானம். இதுவே பிற்கால வைணவ உரைகளுக்குத் தோற்றுவாய். இதனை இயற்றியவா், ஆளவந்தாரின் சீடராகிய பெரிய திருமலை நம்பியின் புதல்வாரன பிள்ளான் என்பவா். பிள்ளான் 1062 இல் தோன்றினாா். இவா் இராமானுசரின் உள்ளங்கவா்ந்த நன் மாணாக்கா், ஆசானின் குறிப்பறிந்து நடந்து கொண்ட சீடா்.

இராமானுசரின் கட்டளையை மேற்கொண்டு இவா், 6000 படி என்ற வியக்கியானம் இயற்றினாா். இவரது வியாக்கியானத்தைக் கண்டு மகிழ்ந்து இராமானுசா் இவருக்கு (நம்மாழ்வாா் நினைவாக) ‘திருக்குருகைப் பிரான்’ என்று பெயரிட்டாா். 6000 படியின் பெருமையையறிந்து, “யாம் செய்த ஹ பாஷ்யத்தைப் போலவே, இதுவும் காலட்சேபத்தில் வைக்கப்படுவதாக” என்று பணித்தாா் இராமானுசா்.

**பராசரபட்டா் (1192 - 1220)**

கூரத்தாழ்வாரின் மைந்தா். கி.பி.1123 -ல் பிறந்தவா். இராமானுசரின் சீடா் ஆன பின், இவருடைய கீா்த்தி விளங்கி வரும் காலத்தில் வடநாட்டிலிருந்து மாதவசூரி என்னும் வேதாந்தி, அனைவரையும் தா்க்கத்தில் வென்று மிக்க சிறப்போடு திருவரங்கம் வந்தாா். அவரைப் பட்டா் சென்று பாா்த்து வெற்றி கொண்ட செய்தியை நஞ்சீயா் வரலாற்றால் அறியலாம். தோற்ற அந்த வேதாந்தியே இவருடைய மாணாக்கராகி, நஞ்சீயா் என்று பெயா் பெற்றாா்.

பட்டர் திருநெடுந்தாண்டக வியாக்கியானத்தில் மிகவும் வல்லவர். அதிலும் சிறப்பாக 21 ஆவது பாடலாகிய,

**“மைவண்ண நறுங்குஞ்சிக் குழல்பின்தாழ”**

என்ற பாடலுக்கு மிகவும் விரிவாகப் பிரசங்கம் செய்வாராம்.

**மணவாள மாமுனி**

இராமானுசருக்குப்பின், ஆசாரியார் பரம்பரையில் சிறப்புடன் விளங்கியவர் மணிவாள மாமுனிகள். ஐவர் ஆழ்வார் திருநகரியில் 1370 இல் (சாதாரண ஆண்டு, ஐப்பசி மாதம் மூல நட்சத்திரத்தில் தோன்றினார். பெரியாழ்வார் திருமொழிக்கும், இராமானுச நூற்றந்தாதிக்கும் விளக்கம் எழுதிப் புகழ் பெற்றவர் இவர்.

**ஆழ்வார் பாடல்களும் ஆசாரியார்கள் விளக்கமும்**

திருவாய்மொழிக்கு வியாக்கியானங்கள் பல தோன்றியது போல, திருவிருத்தத்திற்கும் ஐந்து உரைகள் தோன்றியுள்ளன. நம்பிள்ளை பெரியவாச்சான் பிள்ளை அழகிய மணவாள சீயர் அப்பிள்ளை பெரிய பரகால சுவாமி ஐவரும் விளக்கவுரை கண்டுள்ளனர்.

இவற்றுள், இப்போது பெரியவாச்சான் பிள்ளை விளக்கம் ஒன்றே கிடைக்கின்றது. அப்பிள்ளையுரை, முதல் பதினைந்து பாடல்களுக்கு மட்டுமே கிடைக்கின்றது. ஏனையவை மறைந்து விட்டன. **(பூவராகம் பிள்ளை, கரந்தைக் கட்டுரைகள், ப.274)**

நம்பிள்ளை திருவாய்மொழிக்கு ஒன்பதாயிரப்படி (நஞ்சீயர் கூறிய விளக்கவுரை) எழுதி அருளியதோடு நம்மாழ்வாரின் பெரிய திருமொழி, திருவிருத்தம் தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பள்ளி எழுச்சி ஆகியவற்றிற்கு விளக்கம் எழுதியுள்ளார்.

நஞ்சீயர் மதுரகவியாழ்வாரின் கண்ணிநுண் சிறுதாம்புக்கு உரை இயற்றியுள்ளார். ஆண்டாளின் திருப்பாவைக்கு ஈராயிரப்படி, திருப்பல்லாண்டு வியாக்கியானம் ஆகியவற்றை அருளி இருக்கின்றார்.

அழகிய மணவாள சீயர் திருவிருத்த வியாக்கியானம் இயற்றியுள்ளார். மேலும், அவர் தீபப் பிரகாசிகை, கீதா சாரம் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார்.

பெரியவாச்சான் பிள்ளை, நாலாயிர திவ்வியப் பிரபந்தம் முழுமைக்கும் வியாக்கியானம் எழுதி வியாக்கியான சக்ரவர்த்தி என்னும் புகழைப் பெற்றார். இவரைக் குருபரம்பரா பிரபாவம், 'அநந்தரம் பெரியாழ்வார் திருமொழி முதலான ஆழ்வார்கள் அருளிச் செயல்களுக்கு எல்லாம் வியாக்கியானம் செய்தருளி லோகத்தை வாழ்வித்தருளினார்'' என்று புகழ்ந்து கூறுகின்றது.

இவர்களேயன்றி இவர்கள் காலத்திற்குப் பின்னும் பல சான்றோர்கள் தோன்றி, ஆழ்வார்கள் பாடலுக்கு உரை எழுதியதோடு வைணவ தத்துவப் பொருளை விளக்கிக் கூறும் நூல்களை இயற்றினர். அவர்களில் பிள்ளை லோகாச்சாரியார், மணவாள மாமுனிகள், வேதாந்த தேசிகர், அழகிய மணவாளப் பெருமான் நாயனார்.

**செய்யுள் வடிவ உரை**

நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பொருளைச் சுருக்கமாய் மதுரகவியாழ்வார் ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்ற பகுதியில் பாடித்தந்துள்ளார். கம்பர் இயற்றிய 'சடகோபர் அந்தாதி' நம்மாழ்வாரைப் போற்றிப் பாடுகின்றது. திருவாய்மொழிப் பதிகம் ஒவ்வொன்றின் கருத்தையும் சுருக்கி வெண்பா ஒன்றில் அமைத்துப்பாடும் நூல், திருவாய்மொழி நூற்றந்தாதி.

**தனியன் உரை**

திவ்வியப் பிரபந்தத்தில், ஒவ்வொரு நூலின் முன்னும் பின்னும் சிறப்புப் பாயிரப்பாடல் ஒன்றோ பலவோ உள்ளன. இவை நூலின் கருத்தைச் சிறப்பிக்கின்றன. நூலியற்றிய ஆழ்வார்களைச் சிறப்பிக்கின்றன. இவற்றைத் 'தனியன்' என்று கூறுவது வழக்கம், நூலுள் சேராமல், தனித்து நிற்றலின் தனியன் என்ற காரணப் பெயரால் வழங்குகின்றது. தனியன்கள் எல்லாவற்றிற்கும் பிள்ளை லோகாசார்ய ஜீயர் சிறந்த உரை இயற்றியுள்ளார்.

**குரு பரம்பரா ப்ரபாவம்**

மணிப்பிரவாள நடையில் வைணவச் சான்றோர்கள் ஆழ்வார்களின் பாடல்களுக்கு எழுதிய வியாக்கியானங்களோடு, ஆழ்வார்களின் வரலாற்றையும் வைணவத்தை வளர்த்த ஆசிரியர்களின் தொண்டையும் வியாக்கியானம் எழுதிய உரையாசிரியர்களின் அருட்செயல்களையும் விளக்கிக்கூறும் 'குருபரம் பரா ப்ரபாவம்' என்னும் உரை நடை நூல்களையும் இயற்றியுள்ளனர். குருபரம்பரையைக் கூறும் நூல்கள் வைணவச் சான்றோர்களின் வாழ்க்கையை, வரலாற்றுப் பின்னணியுடன் வாய்மொழிக் கதைகளை இணைத்துத் தெய்வீக நிகழ்ச்சிகளோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றன. கற்பவர் உள்ளத்தில் வைணவச் சான்றோரிடம் பெருமதிப்பும் பக்தியும் ஏற்படுத்தும் வகையில் அவை அமைந்துள்ளன. அது நூல்களில் இலக்கியச் சுவையும் நயமும் உண்டு.

குருபரம்பரையைக் கூறும் நூல்கள் பல உள்ளன. பின் பழகிய பெருமாள் சீயர் இயற்றிய (6000 படி) குருபரம்பரையே காலத்தால் முற்பட்டது. பலவகை நயங்களால் சிறந்து விளங்குவது அந்நூல் வைணவச் சான்றோர்களாலும் தமிழ் அறிஞர்களாலும் பெரிதும் போற்றப்படுகின்றது.

## திருமுறை உரைகள்

சைவசமயச் சான்றோர்கள் அருட்பாடல்களைப் பொழிந்து பக்திப்பயிர் வளர்த்தனர், தமிழை ஆண்டவனுக்கு உகந்த மொழியாக்கினர், தமிழுக்கு அளவற்ற தெய்வத் தன்மையை ஏற்றினார், தமிழ் மொழியையும் சிவ பெருமானையும் தொடர்புபடுத்தி, அதனை ஆற்றல் மிக்க மொழி என்று காட்டினர்.

சைவ அடியார்களை நாயன்மார்கள் என்று அழைப்பது வழக்கம், நாயன்மார்களுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் 'நால்வர்' என்று சிறப்பாக வழங்கப்படுகின்றனர். இவர்களுள் முதல் மூவரும் இயற்றிய பாடல்கள் தேவாரம் என்றும், மாணிக்கவாசகர் இயற்றிய பாடல்கள் திருவாசகம் என்றும் வழங்கப்பெறும்.

நம்பியாண்டார் நம்பி, திருமுறைகள் என்ற பெயருடன் நால்வர் அருட்பாடல்களையும் அவர்களுக்கு முன்னும் பின்னும் தோன்றிய ஏனைய சைவ நூல்களையும் அமைத்துப் பாகுபாடு செய்தார்.

திருமுறை என்பதில் உள்ள 'முறை' என்ற சொல்லுக்கு நூல் என்பது பொருள். சேக்கிழார், முறை என்ற சொல்லை 'நூல்' என்ற பொருளில், 'திருமுறை எழுதுவோர் வாசிப்போர்' என்று கணநாதர் புராணத்தில் ஆண்டுள்ளார்.

திருமுறைகள் பன்னிரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகள். திருநாவுக்கரசரின் தேவாரப் பாடல்கள் நான்கு முதல் ஆறு திருமுறைகள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடல்கள் ஏழாம் திருமுறை. திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறை. ஒன்பதாம் திருமுறை, சேந்தனார் முதலியோர் பாடிய திருவிசைப்பா திருப்பல்லாண்டு முதலியன. திருமூலர் பாடிய திருமந்திரம் பத்தாம் திருமுறை பதினோராம்

திருமுறை திருவாலவாயுடையார் காரைக்கால் அம்மையார் முதலியோர் பாடிய நூல்கள், சேக்கிழார் பாடிய பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறை.

**நால்வர் புகழ்**

சம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் ஆகியவரை 'நால்வர்' என்று குறிப்பிடுவர். மூவர் தேவாரமும், மணிவாசகரின் திருவாசகமும் பெரும் புகழ் பெற்றவை.

தாயுமானவர்,

**"மொழிக்கு மொழி தித்திப்பாக**

**மூவர் சொலும் தமிழ்"**

என்று பாராட்டுகின்றார்.

திருமுறைகளுக்குப் பழைய உரையாசிரியர்கள் உரை எழுதாதது நம் தவக்குறைவேயாகும். சைவ சமயவுலகில் திருமுறைகளுக்கு உரை எழுதக் கூடாது என்ற கொள்கை பன்னெடுங்காலமாக நிலவி வந்தது. திருவாதவூர்புராணம் கூறும் வரலாறு ஒன்று இக்கொள்கையை வற்புறுத்தப் பெருந்துணையாக இருந்தது. "தில்லைவாழ் அந்தணர் ஒருங்குகூடி, தில்லையில் எம்பெருமானைச் செப்பிய தமிழ் மாலையின் பொருளைக் கூறுமாறு மாணிக்கவாசகரை வேண்டினர் என்றும், அதற்கு அவர், அருளுக்கு இடமான செம்பொனின் அம்பலம் எய்தி 'ஒன்றிய இத் தமிழ்மாலைப் பொருள் இவர்' என்று உரை செய்து மன்றதனில் கடிதேகி மறைந்தனர்" என்றும் திருவாதவூரர் புராணம் கூறுகின்றது. இவ்வரலாற்றை நினைந்து, 'திருவாசகத்திற்கும் ஏனைய திருமுறைகளுக்கும் உரை எழுதக் கூடாது, அவற்றின் உட்பொருளை அடியவர்களே ஓதி ஓதி உணர்ந்து இன்புற வேண்டும், உள்ளத்தால் உணர்கின்ற உயர்கருத்தை நாவால் உரைப்பதும் கையால்

எழுதுவதும் கூடாது, எழுத்தும் சொல்லும் திருமுறைகளின் உட்பொருளை உணர்த்தா்' என்று சைவ அடியவர்கள் திருமுறைக்கு உரை எழுதாது விட்டனர்.

இக்கொள்கையால் காலப்போக்கில் திருமுறைகளைப் பொருளுணர்ந்து ஓதும் பழக்கம் குறைந்தது. பொய்யுரையும் போலி விளக்கமும் பெருகின. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சைவமும் தமிழும் நன்கு அறிந்த சான்றோர்கள், உரை இயற்றி இருந்தால் எவ்வளவு பெரும் பயன் விளைந்திருக்கும்! 'கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாள் போலத் திருமுறையும் உரையும் சேர்ந்து சைவர்களுக்குச் சுவையூட்டி இருக்குமே.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருமுறைகளுக்கு உரைகாணும் முயற்சி எழுந்தது. டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரின் நண்பராகிய வித்துவான் தியாகராச செட்டியார் சிறந்த தமிழ்ப் புலவர். அவரது பெரும் புலமையை அறிந்த அக்காலத்து திருச்சிராப்பள்ளிக் கலெக்டர் பட்டாபிராமபிள்ளை, செட்டியாரைத் திருவாசகத்திற்கு உரை எழுதுமாறு அடிக்கடி வற்புறுத்தி வந்தார்.

**வைணவமும் சைவமும்**

ஆழ்வார்களின் பாடல்களாகிய நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்குப் பழங்கால உரையாசிரியர்கள் விளக்கங்கள் எழுதி அப்பாடல்களுக்குச் சிறப்பு நல்கினர். திருமுறைகளில் திருக்கோவையாருக்குத்தான் பழங்காலத்தில் தோன்றிய உரைகள் இரண்டு உள்ளன. ஒன்று இயற்றியவர் பெயர் தெரியாத பழையவுரை, மற்றொன்று நல்லறிவுடைய தொல்பேராசான் எனச் சிறப்பிக்கப்பெறும் பேராசிரியர் இயற்றினார். திருக்கோவையாருக்குப் போராசிரியர் உரை இயற்றியது இலக்கியப் பணியேயன்றி, சமயப் பணி என்பதற்கு இடமில்லை.

ஆழ்வார்களின் பாடல்களுக்கு வைணவ உரையாசிரியர்கள் வியாக்கியானங்கள் இயற்றிய காலத்தில் சைவப் பெருமக்கள் வேறு துறையில் பணியாற்றினர். சைவ சித்தாந்த நூல்களை இயற்றிச் சாத்திர அறிவை வளர்க்கும் பணியில் முனைந்து நின்றனர். அதன் விளைவாய்ச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு தோன்றின. சாத்திர நூல்கள் தோன்றிய பின்னரும், சைவப் பெருமக்கள் திருமுறைகளுக்கு உரை இயற்ற முயலாமல், சாத்திர நூல்களுக்கே தம் அறிவுத் திறனையும் ஆராய்ச்சி வன்மையையும் காட்டி உரை வகுத்தனர். வைணவ உரையாசிரியர்களைப் போல மணிப்பிரவாள நடையை - பேச்சு மொழியை - கையாளாமல் தனித் தமிழ் நடையையும், வடித்த சொற்களையும் இலக்கண வரம்புடைய வாக்கிய அமைப்பையும் தம் உரையில் பயன்படுத்தினர். வடசொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களைத் தேடித் தந்தனர். கலைச் சொற்களைப் படைக்கும் போதும் தமிழ் வேர்ச்சொற்களைக் கொண்டே படைத்துக்கொண்டனர்.

**உரையும் விளக்கமும்**

திருமுறைகளில் திருவாசகம், திருமந்திரம், பெரிய புராணம் ஆகியவற்றிற்கே பல உரைகளும் விளக்கங்களும் பிற்காலத்தில் தோன்றியுள்ளன. ஏனைய திருமுறைகளில் சில பகுதிகளுக்கும் சில பாடல்களுக்கும் உரையும் விளக்கமும் எழுதப்பட்டுள்ளன. திருமுறைகள் பன்னிரண்டிற்கும் உரை இல்லாததால் ஏற்படும் துன்பத்தைத் தமிழறிஞர் கி.வ.ஜகந்நாதன் பின்வருமாறு உரைக்கின்றார்.

‘‘பன்னிரண்டு திருமுறை முழுவதையும் படித்துப் பொருள் உணர்ந்து இன்புறல் மிகமிக அருமையான காரியம், எல்லாப் பாடல்களுக்கும் பொருள் தெளிவாக விளங்கும் என்று சொல்ல முடியாது. பழங்காலத்தில் திவ்வியப் பிரபந்தத்துக்குச் சில பெரியோர்க்ள உரை வகுத்ததுபோல திருமுறைகளுக்கும்

யாரேனும் வகுத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும், இப்போதுள்ள மூலத்தில் எத்தனையோ பிழைகள் இருக்கின்றன. பல பாடல்களுக்கு எத்தனைதான் மண்டையை உடைத்துக் கொண்டாலும் பொருள் விளங்குவதில்லை.

திருவாசகத்திற்குப் பழைய உரைகள் இல்லை என்றாலும் சைவப் புலவர்கள் தாம் இயற்றிய செய்யுள் நூல்களிலும், உரை நூல்களிலும் வாய்ப்பு நேரும்போதெல்லாம் திருவாசகத்தின் சில பாடல்களுக்கு உரையும் விளக்கமும் கூறியுள்ளனர். குமர குருபரர், மாதவச் சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர், சிதம்பர முனிவர், மதுரைச் சிவப்பிரகாசர், வெள்ளியம் பலவாணர் ஆகிய சிவனருட் செல்வர்கள் தாம் இயற்றிய செய்யுள்களிலும் உரைகளிலும் திருவாசகப் பாடல்கள் பலவற்றிற்கு உரையும் விளக்கமும் கூறியுள்ளனர்.

பரஞ்சோதி முனிவரும், பெரும்பற்றப்புலியூர் நம்பியும் தம் திருவிளையாடற் புராணங்களில் திருவாசகத்தின் சில பாடல்களின் உட்பொருளை விளக்கியுள்ளனர். கடவுள் மாமுனிவர் திருவாதவூரர் புராணத்திலும், மீனாட்சிசுந்தரம் பிள்ளை திருப்பெருந்துறைப் புராணத்திலும் திருவாசகம் பகுதிகள் சிலவற்றிற்கு உரை இயற்றியுள்ளனர்.

### திருவாசக வியாக்கியானம்

திருவாசக வியாக்கியானம் என்னும் ‘திருவாச அனுபாதி உரை’ சீர்காழித் தாண்டவராயரால் எழுதப்பட்டது.

### திருமந்திரவுரைகள்

திருமூலர் இயற்றிய திருமந்திரத்திற்கு திருமந்திரமாலை என்ற பெயரும் உண்டு. இதனால், திருமந்திரம் அந்தாதி நூலாக இருக்கலாம் என்பர். இந்நூலைச் சைவ அன்பர்கள் தோத்திரமாகவும் சாத்திரமாகவும் கருதிப் பயில்கின்றனர்.

திருமந்திரத்திற்குத திரிசிரபுரம் அ.சிவானந்த சாகர யோகீசுவரர் இயற்றிய உரை ஒன்று உண்டு. யாழ்ப்பாணம் விசுவநாதம் பிள்ளை 1912 ஆம் ஆண்டில் திருமந்திரத்திற்குக் குறிப்புரை எழுதி வெளியிட்டார். 1913 ஆம் ஆண்டு சேற்றூர் இரா.சுப்பிரமணியக் கவிராயர் நூறு பாடல்களுக்கு உரை எழுதி வெளியிட்டார். இலங்கையில் பரமேசுவரக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த நவநீத கிருஷ்ண பாரதியார் (1889-1954) திருமந்திரத்திற்கு உரை இயற்றினார். இவர்களேயன்றிச் சேலம் சுந்தர முதலியார், (20-நூற்), வை.வே.ரமண சாஸ்திரியார் ஆகியோரும் உரை இயற்றியுள்ளனர்.

**பெரியபுராணவுரைகள்**

பெரியபுராணத்திற்கு அண்மைக் காலத்தில்தான் உரைகள் தோன்றின. தொழுவார் வேலாயுத முதலியார் (1832-1889) பெரியபுராண வசனம் எழுதி அந்நூலை மக்களிடையே பரப்பிப் பக்திப்பயிர் வளர்த்தார். ஆறுமுக நாவலர் பெரியபுராண வசனம், பெரியபுராண சூசனம் இரண்டும் இயற்றினார். காஞ்சிபுரம் சபாபதி முதலியார் (1870), ஆலால் சுந்தரம்பிள்ளை (1853-1923) ஆகியோர் பெரியபுராணத்திற்கு உரை இயற்றினர். திரு.வி.கல்யாண சுந்தரனார் பெரியபுராணக் குறிப்புரை எழுதினார். அவ்வுரையின் இரண்டாம் பதிப்பு, முதற் பதிப்பைவிடத் திருத்தம் பெற்றது.

சிவக் கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார் பெரியபுராணத்திற்கு மிக வரிவாக உரை எழுதியுள்ளார். இவர் உரை காலத்தை வென்று நிலைபெறும்.

## உரைமணி மு.கதிரேசன் செட்டியாரின் செந்தமிழ் உரை மரபு

“பிறர் காண்டற்கரிய இலக்கிய நயங்களையும் சைவ சமய உண்மைகளையும் கண்டு அவற்றைக் கல்வியறிவுடையோர் விரும்பத்தக் சீரிய

செந்தமிழ் நடையில் எழுதி உதவியதே கதிரேசன் செட்டியார் தமிழ் மொழிக்குச் செய்த பெருந்தோண்டாகும்.” **(வி.செல்வநாயகம், தமிழ் உரைநடை வரலாறு, ப. 123)**

**வரலாறு**

மு.கதிரேசக் செட்டியார் (1881-1953) தலைசிறந்த தமிழ்மணி, நகரத்தார் மரபில் - கணியன் பூங்குன்றனார் பிறந்த ஊரில் தோன்றிய பெருமணி, தென்மொழி, வடமொழி இரண்டிலும் பழுத்த புலமை பெற்றுப் புலவர்க்கெல்லாம் புலவராக விளங்கிய அறிவுமணி, இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியருள் ஒப்பற்ற புகழ்மணி அன்னாருக்கு மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையினர் அறிஞர் உ.வே.சாமிநாத ஐயர் தலைமையில் ‘பண்டிதமணி’ (1925) என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பத்தனர், நடுவண் அரசினர் ‘மகாமகோபாத்தியாய’ (1942) என்ற பட்டத்தை அளித்துப் போற்றினர், புலவர் பெருமக்கள் ‘முதுபெரும் புலவர்’ (1951) ‘சைவ சித்தாந்த வித்தகர்’, ‘தமிழ் நயத் தந்தை’ என்னும் பட்டங்களைச் சூட்டி மகிழ்ந்தனர்.

பண்டிதமணியின் வாழ்க்கை ‘பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து, ஆள்வினை இன்மை பழி’ என்னும் குறளுக்கு (618) இலக்கியமாக விளங்கவல்ல சிறப்புடையதாகும். அவர் இளமைப் பருவத்தில் இளம்பிள்ளை வாத நோயால் தாக்குண்டுப் பல ஆண்டுகள் வருந்தினர், எனினும் சோம்பிக்கிடக்காமல், அரிதின் முயன்று அறிய வேண்டியவற்றை அறிந்தார், அசைவிலா ஊக்கத்தோடு செயற்பட்டார். எனவே, ஆக்கமானது அவர் இருந்த இடத்திற்குத் தானே வழி கேட்டுக்கொண்டு வந்து சேர்ந்தது. அவர் வாழ்வில் பிறிதொரு தனிச்சிறப்பும் உண்டு. ஏழு திங்கள் கூடப் பள்ளிக்கூடத்தில் பயிலாத அவர், பன்னிரண்டு ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் (1934-1946) பேராசிரியராகப்

பணியாற்றும் அளவிற்கு உயர்ந்தார், பல்கலைக்கழகத்தில் முறையாகப் பயின்று எந்தப் பட்டமும் பெறாத அவர், காலப்போக்கில் தம் ‘உண்மை அறிவால் - நுண்மாண் நுழைபுலத்தால் - பல்வேறு சிறப்புப் பட்டங்களைப் பெற்றார். இச்சிறப்பியல்புகளைக் கருத்தில் கொண்டே அறிஞர் வ.சுப.மணிக்கம், ‘உழைப்பால் உயர்ந்த ஒருவன்’ என்றும், ‘பாவால் உரையால் பசித்த தமிழ்க்கு நாவால் அறிவுணர்வு நல்கியோன் **(வ.சுப.மாணிக்கம், தொல்காப்பியப் புதுமை, ப.66)** என்றும், ‘புலமையே உருவம் ஆனான், புலவர்தம் பாடல் பெற்றோன் **(வ.சுப.மாணிக்கம், மாமலர்கள், ப.26)** என்றும் தம் ஆசிரியப் பெருந்தகையாகிய பண்டிதமணியை நெஞ்சாரப் போற்றுகின்றார்.

**திருவாசகத்திற்கு உரை**

திருவாசகத்திற்கு விரிவுரை காணும் பணியை முதலில் மேற்கொண்டவர் மறைமலையடிகள். அவர் திருவாசகத்தின் முதல் நான்கு பகுதிகளுக்கு மட்டும் (சிவபுரணம், கீர்த்தித் தீருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல்) விரிவுரை எழுதி வெளியிட்டுள்ளார். கா.சுப்பிரமணிய பிள்ளை திருவாசகம் முழுமைக்கும் எளிய முறையில் சுருங்கிய அளவில் உரை எழுதி வெளியிட்டுள்ளார். பண்டிதமணி, மறைமலையடிகள் உரை எழுதிய பகுதிகளை விட்டுவிட்டு, ‘திருச்சதக’த்திலிருந்து தொடங்கி உரை எழுதியுள்ளார். அவர் திருவாசகத்தின் ஐந்தாவது பகுதியாகிய ‘திருச்சதகம்’ நூறு பாடல்களுக்கும், ஆறாவது பகுதியாகிய ‘நீத்தல் விண்ணப்பம்’ ஐம்பது பாடல்களுக்கும், ஏழாவது பகுதியாகிய ‘திருவெம்பாவை’ இருபது பாடல்களுக்கும் பேருரை கண்டுள்ளார். அவரே தம் உரைக்குக் ‘கதிர்மணி விளக்கம் என்னும் பேருரை எனப் பெயர் கொடுத்துள்ளார். ‘ஒளிமிக்க திருவாசக மணியை விளக்கிக் காட்டும் பெரிய உரை’

என்றும், ‘கதிரேசனார் விளக்கிய பேருரை’ என்றும் இருவகையாகப் பொருள் கொள்ளும் வகையில் இத்தொடர் மொழி அமைந்துள்ளது.

“கருத்துரை பாட்டைத் தெளிவு படுத்துகின்றது, பதவுரை சொல்லின் பொருளை எடுத்துக் காட்டுகின்றது, விளக்கவுரை சொல்லின் நயத்தையும் பொருளின் நுட்பத்தையும் விளக்கிக் காட்டுகின்றது. இதுதான் உரையாசிரியர்கள் கையாள வேண்டிய சரியான முறை. இம்முறையில் தமிழ் இலக்கிய நூல்களுக்கெல்லாம் உரைகள் வெளிவந்தால்தான் தமிழ் மறுமலர்ச்சியின் பயனைத் தமிழ் மக்கள் அடையலாம்” என்பது அறிஞர் **(ஆர்.கே.சண்முகம் செட்டியார், ‘முகவுரை’, திருவாசகம் - திருவெம்பாவை, கதிர்மணி விளக்கம், ப.xviii)** புகழுரை ‘திருவாசகத்தைத் தமிழ் மக்கள் பொருள் தெரிந்து படிக்கும் வண்ணம் உதவியவர் பண்டிதமணி என்பது அவரது கருத்து. மூதறிஞர் ராஜாஜி, பண்டிதமணியின் திருவாசக உரையை ‘ஒப்புயர்வற்ற உரை’ **(திருவாசகம் - திருவெம்பாவை, கதிர்மணி விளக்கம், ‘மதிப்புரைச் சுருக்கத் திரட்டு’, g.xvx)** எனப் போற்றுவார்.

**சொற்பொருள் விளக்கம் கூறுதல்**

பண்டைய உரையாசிரியர்களை அடியொற்றிப் பண்டிதமணியும் சொற்களுக்கு நயப்பொருளும் நுண்பொருளும் கூறுகின்றார்.

**வடமொழிப் பயிற்சி**

பண்டிதமணி தருவை நாராயண சாத்திரியார் என்பவரை ஆசிரியராகக் கொண்டு ஐந்து ஆண்டுகள் வடமொழி பயின்றார். அவருக்கு மாதம் எட்டு ரூபாய் வீதம் சம்பளம் கொடுத்து வந்தார்” **(சோமலெ, பண்டிதமணி, ப.46)** “தமிழும் வடமொழியும் கற்றவர்களில் முதன் முதல் பெரும்பேராசிரியர் (மகாமகோபாத்தியாயர்) என்னும் பட்டம் பெற்றவர் பண்டிதமணியே” என்பர்

பேராசிரியர் **(கா.சுப்பிரமணியன் பிள்ளை, இலக்கிய வரலாறு (இரண்டாம் பாகம், ப.464)**

பண்டிதமணியின் வடமொழிப் புலமையைக் காட்டும் சான்றுகள் பல அவரது திருவெம்பாவை உரையுள் காணப்படுகின்றன. அவற்றுள் சில வருமாறு.

திருவெம்பாவையின் பதினொன்றாம் பாடலில் வரும் 'செல்வா்' என்னும் விளக்குப் பண்டிதமணி 'வீட்டுத் திருவிளையுடையாய்' எனப் பொருள் கூறுவாா், விளக்கவுரையுள் செல்வம் வீட்டுத் திரு, மோக்ஷ ஐசுவரியம் என்பா் வடநூலாா்'' (ப.61) எனக் குறிப்பிடுவாா்.

**பிறா் கருத்தைச் சுட்டல்**

பிறா் கருத்தைச் சுட்டியும் மறுத்தும் எழுதித் தம் கருத்தை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு ஓா் உரையாசிரியருக்கு உண்டு. பண்டிதமணி தம் திருவாசகப் பேருரையில் இப்பொறுப்பினைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளாா்.

'திருவெம்பாவை' உரையில் பண்டிதமணி பிறா் கருத்தைச் சுட்டும் இடங்களே காணப்படுகின்றன, மறுக்கும் இடங்கள் காணப்படவில்லை.

'பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் என்பது 'திருவெம்பாவை'யில் வரும் இரண்டாம் பாடலின் தொடக்க வரி. இவ்வரிக்கு எழுதிய விளக்கவுரையில் பண்டிதமணி ''என்பாய் - என்று கூறுவாய். என்பாய் என்றதற்கு எலும்பாகக் கரையுமாறு எனப் பொருள் கூறுவாருமுளா்'' (ப.21) எனப் பிறா் கருத்தினைச் சுட்டிக்காட்டியுள்ளாா்.

**பாட வேறுபாடு தருதல்**

பண்டிதமணி ‘திருவெம்பாவை’ உரையின் இடையிடையே தம் காலத்து வழங்கிய பாட வேறுபாடுகளையும் சுட்டிச் செல்கின்றார்.

> **“மானே நீ நென்னலை நாளைவந்து உங்களை**
> **நானே எழுப்புவன் என்றலுமே நாணாமே**
> **போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ”**

என்னும் வரிகள் ‘திருவெம்பாவை’யின் ஆறாம் பாடலில் வருவனவாகும். இப்பாடலுக்கு எழுதிய விளக்கவுரையில் பண்டிதமணி, ‘‘என்றலும் நாணாமே’ என்பதும் பாடம்’’ எனப் பிறிதொரு பாடம் வழங்குவதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

**வினா - விடைப் பாங்கு**

‘ஒரு வினாவையும் அதற்கு இறுக்கும் விடையையும் ஒருங்கு சேர்த்து உரைநடையில் அமைக்கும்போது அவற்றை ‘எனின்’ என்ற சொல்லாலே தொடுத்து ‘என்பது’ என்ற சொல்லால் முடிப்பது பண்டைக் காலத்தில் பெருவழக்காக இருந்தது’’ **(வி.செல்வநாயகம், தமிழ் உரைநடை வரலாறு, ப.28)** என்பர். பண்டைய உரையாசிரியர்களிடம் பரவலாகக் காணப்படும் இவ் வழக்கினைப் பண்டிதமணியின் உரையிலும் ஆங்காங்கே காணமுடிகின்றது.

**அடைமொழி நயங்கள்**

திருவாசகத்தில் சொல்லினிமையும் பொருளழகும் வாய்ந்த அடைமொழித் தொடர்கள் மலிந்து கிடக்கின்றன. பண்டிதமணி தம் ‘கதிர்மணி விளக்க’த்துள் இவ் அடைமொழிகளின் நயங்களை ஆங்காங்கே அழகுற எடுத்துக்காட்டியுள்ளார்.

**சொல் நயங்கள்**

“சொற்களின் நயங்களைப் பண்டிதமணியவர்கள் இன்பஞ் சுரக்க எடுத்துக்காட்டும் பகுதிகள் நினைக்க நினைக்க இன்பப் பெருவிருந்தாக நம்மை மகிழ்விக்கின்றன” எனத் **(தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், ‘அணிந்துரை’, திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம், கதிர்மணி விளக்கம், ப.15)**

**தொடர் நயங்கள்**

‘பாவெனப்படுவது உன் பாட்டு என்று மாணிக்கவாசகரைப் பார்த்து, சிவப்பிரகாசர் கூறுவது, முழு உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை. ‘திருவாசகம் ஒரு தித்திக்கும் தேன் விருந்து பாட்டுலகில் எழுந்த விந்தைகளில் எல்லாம் சிறந்த விந்தை இதுவே ஆம்’ **(ப.12)** என்பர் அறிஞர் நூலறி புலவரால் ஒருங்கே பாராட்டப்பெறும் திருவாசகத்தில் பொருள் பொதிந்த தொடர்கள் பற்பல காணப்படுகின்றன. இத்தொடர்களின் நயங்களையும் நுட்பங்களையும் பண்டிதமணி தம் உரையுள் செவ்விதின் எடுத்துக் காட்டியுள்ளார்.

மாணிக்கவாசகர் ‘திருவெம்பாவை’யின் தொடக்கப் பாடலில் இறைவனை, ‘ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி’ எனப் போற்றிப் பாடுகின்றார். இப்பாடலில் வரும் ‘அரும்பெருஞ்சோதி’ என்னும் தொடருக்குப் பண்டிதமணி எழுதியுள்ள உரை விளக்கம் வருமாறு, “ஒளி நிலையைத் திருமூலர், அண்டவொளி, பிண்டவொளி, அகண்டவொளியென மூவகைப்படுத்திக் கூறுவர். அண்டவொளி உடம்போடு கூடிய உயிரறிவிலுள்ளது. அகண்டவொளி ஞான மயமாகிய இறைவன் பாலுள்ளது. ‘அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்’ என்று தாயுமானவர் கூறியதுங் காண்க. ஒற்றுமை நயத்தால் பரஞ்சோதி யெனவும்,

பெருஞ்சோதி யெனவும், பேரொளிப் பிழம்பு எனவும் பெரியோர் வழங்குவர். இங்ஙனம் இறைவன் பேரொளிப் பிழம்பாகத் திகழவும், மாயாகாரியமாகிய உலகப் பார்வையுடைய ஆன்மாக்கள் உணர்தற்கு அரியனாவன் என்பது தோன்ற, 'அரும்பெரும் சோதியை' என்றார். அருமை - பாசஞான பசு ஞானங்களாகிய வாக்கு மனங்களுக்கு எட்டாத தன்மை, பதி ஞானமாகிய அநுபவ வுணர்வுக்கெ புலப்படும் இயல்பினன் என்பதாம்'' (ப.13)

## உரை வித்தகர் பெரியவாச்சான் பிள்ளையின் மணிப்பிரவாள நடைத்திறன்

### வரலாறு பிறப்பும் வளர்ப்பும்

பெரியவாச்சான் பிள்ளையை 'வியாக்கியானச் சக்கரவர்த்தி' என்று போற்றுவர் சான்றோர். ''இப்பெரியார் சோழவள நாட்டில், திருவெள்ளியங்குடி என்கிற திவ்ய தேசத்திற்கு ஒரு கல் தொலைவில் உள்ள சேங்கநல்லூர் எனும் ஊரில் பிறந்தார். வைணவ மரபில் ஆச்சான் என்று மட்டும் சொன்னால் இவரே.

### பெரியவாச்சான் பிள்ளையின் பிற நூல்கள்

பெரியவாச்சான்பிள்ளை நாலாயிர திவ்விய பிரபந்தம் முழுமைக்கும் வியாக்கியானம் இயற்றியுள்ளதோடு வேறுபல நூல்களையும் படைத்துத் தந்துள்ளார். மாணிக்கமாலை, நவரத்னமாலை.

''ஆழ்வார்கள் அருளிச் செயல்கள் அனைத்திற்கும் வியாக்யானம் கண்டவர் இவர் ஒருவரே. இக்காரணம்பற்றி இவர் 'வ்யாக்யான சக்ரவர்த்தி' என்று புகழப்பெறுவர்'' என்று புகழ்மாலை சூட்டுகின்றார் பதிப்பாளர் **(மயிலை மாதவதாசன், திருப்பாவை வியாக்கியானங்கள், ப.519).**

''உரை மன்னன் பெரியவாச்சான் பிள்ளை'' என்று சுட்டி அறிஞர் **(ந.சுப்பு ரெட்டியார், திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும், ப.118)** பெரியவாச்சான் பிள்ளையின் உரைத் திறனைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பார்.

“திருப்பாவைக்கு மூவாயிரப்படி என்ற வியாக்கியானம் எழுதினார். திருப்பாவைக்குப் பலர் வியாக்கியானம் எழுதியிருப்பினும், இவர் உரையே மிக்க சிறப்புற்று விளங்குவது” என்று பாராட்டுரை மொழிவார் அறிஞர் **(மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு - 13 ஆம் நூற்றாண்டு, ப.337)**

“பெரியவாச்சான் பிள்ளை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முழுமைக்கும் வியாக்கியானம் எழுதி வியாக்கியானம் சக்ரவர்த்தி என்னும் புகழைப் பெற்றார்.

**உரை நெறி**

ஆழ்வார்க்ள் பன்னிருவர் அருளிச் செய்த தெய்வப் பனுவல்களை ‘அருளிச்செயல்’ என்று போற்றுவர். அவ்வருளிச் செயல்களுக்குக் கற்கவல்ல சான்றோர்களால் இயற்றப் பெற்ற பேருரைகளாகிய ‘வியாக்யானங்கள்’ தமிழும் வடமொழியும் கலந்து விளங்கும் நடையினவாக அமைந்துள்ளன. அவர்கள் ‘தென்சொற் கடந்து வடசொற்கலைக்கு எல்லை தேர்ந்த’ அருளாளர்களாக விளங்கினர். இவ்வாறு அமையும் நடையினை ‘மணிப்பிரவாள நடை’ என்று கூறும் தமிழ் கூறும் நல்லுலகம். “ஆழ்வார்களின் பாடல்களுக்கு உரை எழுதியவர்கள் வடசொற்களும் தமிழ்ச் சொற்களும் விரவிக் கலந்த மணிப்பிரவாள நடையில் எழுதினார்கள். (முத்தும் பவளமும் கலந்த மாலை போல் தமிழும் வடமொழியும் கலந்த நடை என்னும் பொருளில் அந்த நடைக்கு ‘மணிப்பிரவாளம்’ என்ற பெயர் வழங்கினார்கள். பக்திப் பாடல்களின் பொருளாழத்தையும் பலவகை நயங்களையும் விளக்குவதில் அவர்களின் உரைகள் நகரற்று விளங்குகின்றன. அவர்கள் கல்வி வல்ல அறிஞர்களாக மட்டும் நிற்காமல், சமயத்துறையில் ஈடுபட்டுத் தம் வாழ்வைத் தியாகம் செய்த சான்றோர்களாகவும் வாழ்ந்தமையால், அவர்களின் உரைகள் சாத்திர நூல்கள்போல் வைணவ அறிஞர்களால் அளவற்ற பக்தியுடன்

போற்றப்படுகின்றன.'' என்று அறிஞர் **(மு.வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, ப.195)** கூறுகிறார்.

**நடைச் சிறப்பு**

திருக்குறள், திருக்கோவையார், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி போன்ற இலக்கியங்களுக்கு எழுந்துள்ள உரைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட நடைத்தன்மை (UniQue Style) உடையது திருப்பாவையின் உரை. பெரியவாச்சான் பிள்ளையின் உரையில், ''அஃதென்னென்னில்'', ''என்கிறபடி'', ''தோற்றும்படி'', ''என்கை'', ''இன்றிக்கெ'', ''அன்றிக்கே'', போன்ற சில அரிய சொல்லமைப்புக்களை மிகுதியும் காணலாம். ஆங்காங்கே வான்மீகி ராமாயணம், கீதை, விஷ்ணுபுராணம், சாந்தோக்யோபநிஷத், பாகவதம், மகாபாரதம், யஜுர்வேதம் போன்ற வடமொழி நூற்பகுதிகளையும் ஆழ்வார்களின் பாடல் அடிகளையும் சான்றுக்காட்டி விளக்கம் எழுதிச் செல்லும் நடையை காணலாம். நல்ல தமிழ் நடையினையும் அவரிடம் காணமுடிகின்றது. இதனை பின்வரும் உரைப்பகுதியினால் உணரலாகும்.

**சொல்லாட்சி**

வைணவ சமுதாயத்திற் பயின்று வழங்கும் பல சொல்லாட்சிகளைப் பெரியவாச்சான் பிள்ளையின் பேருரையில் நாம் கண்டு சுவைக்க முடிகின்றது. அவர் உரையில் புதிய சொல் வழக்குகளைக் காண்கின்றோம். வேறு இலக்கிய உரையாசிரியர்களின் உரையில் காணவியலாத சொல்லாட்சிகளை அவர் உரையில் காண முடிகிறது. பெரியவாச்சான் பிள்ளை உரையில் வரும் இடைச் சொற்கள் சில புதுமையாக அமைந்துள்ளன. சான்றாக, ''இறே, ஆய்த்து'' என வருவனவற்றைச் சுட்டலாம்.

**தூய தமிழ்ச் சொல்லாட்சி**

கணக்கற்ற வடசொற்களை மிகுதியும் கலந்து எழுதும் போக்கினைப் பெரியவாச்சான் பிள்ளையிடம் பரக்கக் காணலாகும். ஆயினும் தனித்தமிழ்ச் சொற்களையும் அவர் கையாண்டுள்ளார் என்பதும் அவர் உரையினைக் கற்பவர் நன்கறிவர். தமப்பன், இட்டீடு, ஆழங்கால்பட்டு, தட்டில்லை, பொசியாதபடி, கண்ணெச்சிற்படுவர், தலைஎடுத்தல், மேனாணிப்பு இனைய நற்றமிழ்ச் சொற்களையும் அவர் பதித்துள்ளார்.

**புதிய சொல்லாட்சி**

பெரியவாச்சான் பிள்ளை சில பதிய சொல்லாட்சிகளையும் தம்முடைய உரையில் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். வேறு பொருளில் வழங்கும் சொற்களை மற்றொரு பொருளின்கண் வழங்குதல் அவரின் இயல்பு.

‘புதைத்து’ என்பதன் பொருளை நாம் நன்கறிவோம். அப்பொருளில் பெரியவாச்சான் பிள்ளை கையாளாமல், ‘சிலபகுதிகளில் மழை பொய்யாமல் நீரை அடக்கிக்கொண்டு என்ற பொருளில் கையாளுகின்றார்.

**அடிக்கடி அவர் பயன்படுத்தும் சொற்கள்**

பெரியவாச்சான் பிள்ளை தம் பேருரையில் பல இடங்களில் குறிப்பிட்ட சில சொற்கூறுகளை, தொழிற்பெயர் அமைப்புகளைக் கையாண்டுள்ளமையினையும் காண முடிகின்றது.

‘படி (உதவின்படி, என்றபடி, இருக்கிறபடி’), ‘இறெ’, ‘போகை’, ‘பெறுகை’, ‘காண்கை’, ‘என்கை’, ‘சொரிகை’, ‘போகை’, ‘இருக்கை’, ‘கலக்குகை’, ‘அனுமதி பண்ணுகை’ என்பன அவர் பயன்படுத்துவன. ‘இழவுக்கு’ என்ற சொல்லையும் அவர் பல இடங்களில் கையாளுகின்றார். ‘என்?’, ‘என்னென்ன’, ‘என்ன?’ போன்ற

சொல்வடிவங்களையும் அவர் அடிக்கடி பயன்படுத்துகின்றமையும் அறியத்தக்க செய்தியாகும். ‘‘வியாக்கியானங்கள் பேச்சுநடையில் அமைந்துள்ளன. கொச்சை மொழிகள் விரவியுள்ளன. இவற்றிலும் ஒரு வகை அழகும் ஆற்றலும் வெளிப்படுகின்றன’’ என்று இவ்வுரைநடை குறித்து அறிஞர் **(மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.337)** கருத்துரைக்கின்றார்.

**வடமொழிப் பயிற்சி**

பெரியவாச்சான் பிள்ளை திருப்பாவை மூவாயிரப்படி உரையில் விளக்கங் கருதியும், ஒப்பீடு கருதியும், வைணவ சமய ஈடுபாடு கருதியும் வடமொழிச் சுலோகங்களை முழுவதுமாகவோ தொடராகவோ மேற்கோள் காட்டி விளக்குகின்றார். அந்த அளவிற்கு அவருடைய வடமொழிப் புலமை மேலோங்கி விளங்கிற்று எனலாம். வடமொழிச் சொற்களை மட்டுமல்லாமல் வடமொழிப் பாடலடிகளையும் அவர் எடுத்துக் காட்டுவதன் வாயிலாக அவரின் வடமொழிப் பயிற்சி நன்கு வெளிப்படக் காண்கின்றோம். அவர் வாழ்ந்த நாளில் வடமொழியின் செல்வாக்கு வைணவ மரபிலே எந்த அளவிற்கு ஆழமாக வேருன்றி விழுதுவிட்டிருந்தது என்று உணர முடிகின்றது.

**பன்னூற் பயிற்சி**

உரையாசிரியர்கள் பணி பன்முகப் பணியாகும். அவர்கள் உரை கூறும்பொது தமிழ் நூல்களிலிருந்து மேற்கோள் காட்டித் தம்முடைய உரைக்கு மேலும் வலுவூட்டுவர். அவ்வகையில் பெரியவாச்சான் பிள்ளை பன்னிரு ஆழ்வார்களும் பாடியருளிய அருளிச் செயல்களிலிருந்து மிகப் பல மேற்கோள்களைக் காட்டித் தம்முடைய சமய ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றார்.

பெரியவாச்சான் பிள்ளை ஆண்டாள் இயற்றிய திருப்பாவைக்கு உரை வகுக்கும் போதும் பிற ஆழ்வார்களின் பெயர்களைச் சுட்டிக் கூறுவதில் இன்பங் காண்கின்றார். அவர் ‘திருமங்கையாழ்வார்’ (திருப. பெரிய. ப.62), ‘திருமழிசைப்பிரான்’ (திருப். பெரிய. ப.71), ‘பிள்ளைப் பிள்ளையாழ்வான்’ (திருப். பெரிய. ப.107), ‘பெரியாழ்வார் திருமகள் இரேயிவள்’ (திருப். பெரிய. ப.209). ‘பெரியாழ்வாரைப் போல’ (திருப். பெரிய. ப.294) என்று கூறும் இடங்கள் இவ்வகையில் அறியத்தக்கன.

பெரியவாச்சான் பிள்ளை ஏனைய தமிழ் இலக்கியங்களை மேற்கோளாக எடுத்தாளுவதனை விடவும் ஆழ்வார்களின் திருப்பாடல்களையே பெரிதும் போற்றிச் சான்று காட்டியுள்ளார்.

**இராமாயண மேற்கோள்கள்**

பெரியவாச்சான் பிள்ளை வான்மீகி இராமாயணத்தை ஆழ்ந்து அனுபவித்த ஆர்வலர். வான்மீகி இராமாயணம் வலியுறுத்தும் உட்கருத்துக்களை அவர் அழகுற எடுத்து மொழியும் திறம் வியந்து பாராட்டுமாறுள்ளது.

**மூல நூலாசிரியரிடம் ஈடுபாடு**

பெரியவாச்சான் பிள்ளையின் பேருரையினைப் படிக்கும் போது அவருக்கு மூல நூலாசிரியராகிய ஆண்டாள் பால் எவ்வளவு ஆழமான பற்று இருந்தது என்பது நன்கு புலனாகின்றது. அதன் விளைவுதான் அவரைத் திருப்பாவைக்கு மிக நீண்ட அவதாரிகை எழுதும் வண்ணம் தூண்டியது எனலாம். வான்மீகி இராமாயணம், மாபாரதம், விஷ்ணுபுராணம், உபநிடதங்கள் போன்றவற்றிலிருந்தும் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்திலிருந்தும் மூல நூலாசிரியரின் எண்ணங்களுக்கு வலுவூட்டும்

தொடர்களையும், கருத்துக்களையும் பெரியவாச்சான் பிள்ளை எடுத்துக் காட்டி விளக்கியுள்ளார்.

**உரையாடல் நயம்**

திருப்பாவை வியாக்கியானத்தில் பெரியவாச்சான் பிள்ளை உரையாடல் நயம் தோன்றும் வண்ணம் தம்முடைய விளக்கத்தினை எழுதிச் செல்கின்றார்.

திருப்பாவைப் பேருரையின் முன்னுரை அல்லது உரைப்பாயிரம் பெரியவாச்சான் பிள்ளையால் நனி சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. அது நூலின் சிறப்பினையும் நூலாசிரியரின் உயர்வினையும் விளக்கமாகச் சுட்டுகின்றது. மேலும் அவர் ஒவ்வொரு பாடலுக்கும் உரைப்பாயிரமென்னும் அவதாரிகை கூறிச்செல்லும் தன்மையினையும் நூலாசிரியரின் உயர்வினையும் விளக்கமாகச் சுட்டுகின்றது. மேலும் அவர் ஒவ்வொரு பாடலுக்கும் உரைப்பாயிரமென்னும் அவதாரிகை கூறிச்செல்லும் தன்மையினையும் காணமுடிகின்றது. திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகரின் உரைப்பாயிரங்கள் போன்றும் ஒவ்வோர் அதிகாரத்திற்கும் அவர் கூறுகின்ற தோற்றுவாய் பொன்றும் பெரியவாச்சான் பிள்ளையின் இலக்கியப் பேருரையின் அவதாரிகைகள் அமைந்துள்ளன.

**சொற்பொருள் நயம்**

பெரியவாச்சான் பிள்ளையின் பேரறிவின் ஆழத்தை அறிந்து கொள்வதற்குக் களமாக அமைவன அவர் கூறுகின்ற சொற்பொருள் நயங்கள் எனலாம்.

பெரியவாச்சான் பிள்ளை சொற்களுக்குப் பொருள் கூறும்போது பல பொருள்களைச் சொல்லிநயம் புலப்படுத்துவார். சொற்களின் பொருளை வேற்றுமைப்படுத்தும் இயல்பினைப் பெரியவாச்சான் பிள்ளை தம் உரை விளக்கத்தில் ஆங்காங்கே கடைப்பிடித்துள்ளார்.

**இலக்கணக் குறிப்பு**

பெரியவாச்சான் பிள்ளை தம்முடைய உரையில் இலக்கணக் குறிப்புக்களை அவ்வளவாகக் கூறவில்லை. ஒரே ஓர் இடத்தில் மட்டும் அவர் இலக்கணக் குறிப்புக் கூறுவார். ‘‘கப்பம் தவிர்க்கும்’’ என்பது இருபதாம் பாட்டில் வருவது. இங்குக் ‘கப்பம்’ என்பது குறித்து அவர், ‘‘கம்பம்’’ என்கிற வித்தை ‘‘கப்பம்’’ என்று வலிந்து சொல்லுகிறது’’ (திருப.பெரிய. ப.247) என்கிறார்.

**உவமை நயம் காட்டி விளக்குதல்**

பெரியவாச்சான் பிள்ளை தம்முடைய பேருரையில் பல உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். அவை கற்பவர் உள்ளத்தில் களிப்பை ஏற்படுத்துவதோடு அவர் வழக்கிலிருந்தும். இராமாயணம் போன்ற இலக்கியங்களிலிருந்தும் பற்பல உவமை கூறி விளக்குவார். அவர் எடுத்துப் பேசும் உவமைகள் நம் அறிவிற்கு விருந்தாக அமைவனவாகும்.

பாம்பணைப் பள்ளியிலே பையத்துயின்று கொண்டிருக்கிறான் பரமன். இதனை விளக்கும் போது அவர், ‘‘தகட்டில் அழுத்தின மாணிக்கம் போலே, திரவநந்தாழ்வான் மேலே சாய்ந்தருளின் பின்பு வடிவிற் பிறந்த புகாரின் பெருமையைச் சொல்கிறது’’ (திருப்.பெரிய. ப.43) என்று எழுதுகிறார்.

**பழக்க வழக்கங்களும் பண்பாடும்**

உரைகள் அவை எழுந்த காலத்து மக்களின் பழக்க வழக்கங்களையும், ஒழுகலாறுகளையும், பண்பாட்டையும் பாங்குடன் பதிவு செய்து வைத்திருக்கும் கருவூலங்களாக விளங்குகின்றன. பெரியவாச்சான் பிள்ளையின் பேருரையிலும் பழக்க வழக்கங்களும், பண்பாடும் இன்னபிற செய்திகளும் பயின்று வருவதைக் காணலாம்.

உறுதிமொழி சொல்வது போன்றதொரு பழக்கத்தினைப் பெரியவாச்சான் பிள்ளையின் உரையில் காணலாம். ''செய்யக் கடவ படியை', 'இன்ன படியும் இன்ன படியும்' என்று கையோலை' செய்து கொடுக்கிறார்கள்'' (திருப். பெரிய. ப.72) என்பது அவரது உரைப் பகுதி.

பெரியவாச்சான் பிள்ளை, ''குப்பி, குழைச்சரக்கு, பூசினி, நிலை விளக்கு, சூடகம், பரியட்டம்'' போன்ற பல்வேறு பொருள்களையும் தம் உரையிலே குறிப்பிட்டுச் செல்வார். இவ்வாறு பெரியவாச்சான் பிள்ளையின் திருப்பாவை மூவாயிரப்படி உரை தமிழ் இலக்கிய வானத்தில் தனிச்சிறப்புடன் ஒளிவீசும் முழு நிலவாய் விளங்குகின்றது.

## வினாக்கள்

1. பெரியவாச்சான் பிள்ளையின் உரைநயத்தினைப் புலப்படுத்துக.
2. பெரியவாச்சான் பிள்ளையின் உரையில் வினாவிடை, உரையாடல் நயத்தினைப் புலப்படுத்துக.
3. திருப்பாவை உரையில் சொல்நயம், பொருள்நயம், உவமைநயம் - எவ்வாறு அமைந்துள்ளது என்பதை நிறுவுக.
4. வைணவ உலகிற்கு புத்துயிர் ஊட்டிய பெரியவாச்சன் பிள்ளையின் உரைநயத்தினைப் புலப்படுத்துக.
5. பெரியவாச்சான் பிள்ளையை ''வியாக்கின சக்கரவர்த்தி'' என இலக்கிய உலகம் புகழ காரணம் யாது?

6 பண்டிதமணியின் திருவெம்பாவை உரை மரபுகளை விளக்குக.

7 பண்டிதமணி, பெரியவாச்சான் பிள்ளை உரை சிறப்பினையும் உரை

மரபுகளையும் விவரிக்க

8. பண்டிதமணி கதிரேசன் செட்டியார் உரையின் பாங்கினைப் புலப்படுத்துக

# அலகு - 5

## சரவணப் பெருமாள் ஐயர்

பத்தொன்பதாம் நூற்றாண்டு உரையாசிரியர்களில் புகழ் பெற்றவர் சரவணப் பெருமாள் ஐயர், இவர் தொண்டை நாட்டில் உள்ள திருத்தணிகையில் வீர சைவமரபில் கந்தப் பையரின் மகனாகத் தோன்றினார். இவர் இராமாநுச கவிராயரிடம் கல்வி பயின்று புலமை பெற்றார். சென்னையில் தங்கிப் பல ஆண்டுகள் தமிழ்ப்பணி புரிந்தார்.

இவர் உரை இயற்றிய நூல்கள், நாலடியார், நன்னூல், வெங்கைக்கோவை, திருவள்ளுவமாலை, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நறுந்தொகை, மூதுரை, நன்னெறி என்பன.

1830 ஆம் ஆண்டில் திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு விளக்கம் எழுதிப் பதிப்பித்தார்.

நைடதம் (கைக்கிளைப் படலம் வரை) பிரபுலிங்கலீலை (மாயை உற்பத்தி வரை) ஆகிய இரு நூலுக்கும் உரை இயற்றத் தொடங்கி முடிக்காமல் மறைந்தார். அவற்றின் பிற பகுதிகளுக்கு இவரது மகன் கந்தப்பையர் உரை எழுதி முடித்தார்.

### திருவள்ளுவமாலை உரை

சரவணப் பெருமாளையர் இயற்றிய திருவள்ளுவமாலை உரை, சிறந்த ஆராய்ச்சியுரையாக உள்ளது. பாடல்களின் பலவகை நுட்பங்களை எடுத்துக்காட்டி விளக்குகின்றது. இவ்வுரையையும் விளக்கத்தையும் பலர் மேற்கொண்டனர்.

இவ்வுரையிலும் சில திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர், ''திருவள்ளுவமாலையில், ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும் என்னும் செய்யுளில் (16) உள்ள 'வீற்றிருக்கலாம்' என்ற சொல்லிற்கு 'ஒரு சபை நடுவிலே உயர்வாகிய ஆசனத்தில் ஏறியிருக்கலாம்' என்று ஒருவர் (சரவணப் பெருமாளையர்) எழுதிவிட்டார். கவலையற்றிருக்கலாம் என்பதே அதன் பொருள். சிந்தாமணி உரையிலும், திருமுருகாற்றுப் படையிலும் வீற்றிருத்தல் என்பதற்குக் கவலையற்றிருத்தல் என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறியிருக்கிறார்'' என்று உரைக்கின்றார்கள்.

திருவள்ளுவமாலையுரையில் மற்றோரிடம் மறுக்கப்படுகின்றது. 'உப்பக்கம் நோக்கி' என்ற பாடலில் (21) 'உபகேசி தோள்மணந்தான்' என்ற வரிக்குச் சரவணப் பெருமாளையர் எழுதியுள்ள உரை, சைவ சமயச் சார்பாய் உள்ளது. சமயப் பற்றின் காரணமாய் உண்மை உரை காணத் தவறி விட்டார். 'உபகேசி தோள்மணந்தான்' என்பதற்கு, 'உமாதேவியினது தோளை மணந்த கடவுள் ' என்று பொருள் கூறி, ''கேசி திருமால், இது அக்கடவுள் சகசிர நாமத்தில் கண்டது. கேசிக்கும் பின்னே பிறந்தவள் உபகேசி என்றாயது'' என்று விளக்குகின்றார்.

ஆனால், மற்ற உரையாசிரியர்கள் உபகேசி என்பதற்கு நப்பின்னை என்றும், உபகேசி தோள்மணந்தான் என்பதற்குத் திருமால் என்றும் பொருள் கூறுகின்றனர்.

நேமிநாத உரையாசிரியர், 'உட்பக்கம் நோக்கி' என்ற பாடலைக் காட்டி, ''உபகேசி ஆவாள் நப்பின்னைப் பிராட்டியார்'' என்று கூறுகின்றார் (நேமி.30)

''இச்செய்யுளில் 'உபகேசி தோள்மணந்தான்' என்றது கண்ணபிரானை. உபகேசம் - மயிராற்பின்னிய பின், அதனால் பெயர் சிறந்தாள் பின்னைப் பிராட்டி உபகேசத்தை உடையாளை உபகேசி என்பது தமிழ் நூல் முடிபு. குண்டலகேசி

நீலகேசி பீங்கலகேசி என்றாற் போலக் கொள்க. இதனால் உபகேசியும் பின்னையும் ஒரு பொருட் பன்மொழியாதல் காண்க'' என்று ரா. இராகவ ஐயங்கார் செந்தமிழ் முதல் தொகுதியில் கூறியுள்ளார்.

''நப்பின்னை என்பதில் உள்ள 'ந' சிறப்புப் பொருள் உணர்த்துவதோர் இடைச்சொல், நச்செள்ளை நப்பாலத்தன் நக்கீரன் என்றாற்போல. நப்பின்னை (என்பதன்) விகாரமும் ஆம்'' என்கின்றார் நச்சினார்க்கினியர் (சீவக-74).

## ஆறுமுக நாவலர்

நாவலர் என்று கூறினாலே ஆறுமுக நாவலர் தான் முதலில் நம் நினைவுக்கு வருவார். தாம் வாழ்ந்த காலத்தில் நாவலர் என்ற பெயரைத் தமக்கு உரியதாக்கிச் சிறந்து விளங்கிய வித்தகர் இவர். நாவலர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்ற இவர் சைவ சமயத்தின் காவலராய் - தமிழ் மொழியின் புரவலராய் விளங்கினார். நாவலர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே செல்வாக்கு மிகுந்த சைவ வேளாளர் குடியில் 1822 ஆம் ஆண்டில் (மார்கழி மாதம்) பிறந்தார். தந்தையார் கந்தப்பிள்ளை. தாயார் சிவகாமியம்மை.

இளமை முதற்கொண்டே கல்வியில் ஆர்வமுடைய இவர், தமிழும் ஆங்கிலமும் பயின்று இருமொழிப் புலமை பெற்றார். சைவசமய நூல்களைப் பயின்று தெளிந்து சிவனருட் செல்வர் ஆனார்.

இவர் சொற்பொழிவாற்றும் திறனை வியந்து போற்றி, திருவாவடுதுறை ஆதீனத்தலைவராய் இருந்த சுப்பிரமணிய தேசிகர், நாவலர் என்ற பட்டத்தை வழங்கினார்.

மேடைத்தமிழின் வீறெல்லாம் அறிந்த இவர், உரை நடைத் தமிழின் நுட்பத்தை, அறிந்து பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தமிழ் உரைநடைத் தந்தையாக விளங்கினார் அறிஞர் பெருமக்களின் புகழுக்கும் போற்றுதலுக்கும் உரியவரானார்.

சி.வை. தாமோதரம் பிள்ளை, “நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே? சுருதி எங்கே?” என்று நாவலரின் தமிழ்த் தொண்டினைப் போற்றுகின்றார். பரிதிமாற் கலைஞர் “வசன நடை கை வந்த வல்லாளர்” என்று இவரது உரைநடைத்திறனைப் பாராட்டுகின்றார்.

ஆறுமுக நாவலரின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டித் தமிழகத் செய்தித்தாள் ஒன்று, நாவலர் வாழ்ந்த காலத்திலேயே புகழ்ந்து எழுதியது டாக்டர். உ.வே.சாமிநாத ஐயரின் ஆசிரியராகிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஒரு சமயம் வேதநாயகம் பிள்ளையைச் சந்தித்து வரச்சென்றார். அப்போது வேதநாயகம் பிள்ளை தாம் படித்த செய்தித்தாளில், தமிழ்ப் புலவர்கள் இருவரைப் போற்றி எழுதியிருந்த புகழுரையைப் படித்துக் காட்டினார். அப்புகழுரை பின்வருமாறு.

தமிழ்நாட்டிற்கு இரண்டு கண்களாக விளங்குகின்றவர் இருவர். அவருள் ஒருவர் வசனம் எழுதுவதில் ஆற்றலுடையவர், மற்றொருவர் செய்யுள் இயற்றுவதில் ஆற்றலுடையவர், வசனம் எழுதுபவர் ஆறுமுக நாவலர், செய்யுள் செய்பவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, நாவலர் சிதம்பரத்தில் பாடசாலை வைத்துத் தமிழைப் பரிபாலித்து வருகிறார். மற்றொருவர் தாமே நடையாடு புத்தக சாலையாக இருந்து தம்முடைய செலவிலேயே பிள்ளைகளைப் படிப்பித்து வருகிறார்.

ஆறுமுக நாவலர், சைவ சமயத்திற்கும் தமிழ் மொழிக்கும் பலவகையாய்த் தொண்டு புரிந்தார். சைவ சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியும், சைவத்தை எதிர்த்தவர்களை எதிர்த்துக் கண்டன நூல்கள் இயற்றியும் சைவத்தை வளர்த்தார். பழந்தமிழ் இலக்கணங்களையும் உரைகளையும் இலக்கியங்களையும் பதிப்பித்தும், உரை இல்லாதவற்றிற்கு உரை எழுதியும், தமிழ் கற்கும் மாணவர்களுக்கு ஏற்ற உரை நடை நூல்கள் இயற்றியும் தமிழ் மொழியை வளர்த்தார்.

ஆறுமுக நாவலர் இயற்றிய உரைகள், கோயிற்புராணவுரை நன்னூல் காண்டிகையுரை, மருதூர் அந்தாதியுரை, திருச்செந்தில் நிரோட்டயமக அந்தாதியுரை, சைவ சமய நெறியுரை, சிவதருமோத்தரவுரை திருமுருகாற்றுப்படையுரை, நீதிவெண்பாவுரை என்பன. இவையேயன்றித் திருவிளையாடற் புராண வசனம், பெரிய புராண வசனம், பெரியபுராண வசனம் ஆகியவற்றையும் எழுதியுள்ளார்.

ஆறுமுக நாவலர் உரைத்திறனுக்கு ஒரு சான்று காண்போம். நீதி வெண்பா உரையில்,

**“நன்றறியாத் தீயோர்க் கிடங்கொடுத்த நல்லோர்க்கும்**
**துன்று கிளைக்கும் துயர்சேரும் - குன்றிடத்தில்**
**பின்இரவில் வந்தகரும் பிள்ளைக் கிடங்கொடுத்த**
**அன்னமுதற் பட்டதுபோ லாம்” (74)**

என்ற பாடலில் உள்ள கதையை நாவலர் பின்வருமாறு விளக்குகின்றார்.

‘‘எவராலும் ஏற முடியாத ஒரு பெரிய மலைக்குகையில் ஓர் அரச அன்னம் அன்னப் பட்சிகளோடு வாசம் பெய்து கொண்டிருக்கும் போது. ஒருநாள் இரவு பெருமழையினால் வருந்திய ஒரு காக்கை, தான் இருக்க இடம்கேட்டது.

மந்நதிரியாகிய அன்னம் காக்கைக்கு இடம் கொடுக்கலாகாது என்று சொல்லவும், அரச அன்னம் அதன் சொல்லைக் கேளாமல் காக்கைக்கு இடம் கொடுத்தது. காக்கை அன்று இரவில் அங்கே தங்கி எச்சமிட அவ்எச்சத்தில் இருந்து ஆலம் வித்து முளைத்து எழுந்து பெரிய விருஷமாகி, விழுதுகளை விட்டது. ஒரு வேடன் விழுதுகளைப் பற்றிக் கொண்ட அம்மலையில் ஏறிக் கண்ணிவைத்து அன்னங்களைப் பிடித்தான்''.

ஆறுமுக நாவலர் நன்னூலுக்குக் காண்டிகை உரை எழுதி வெளியிட்டார். இவ்வுரை தமிழ் கற்கும் இளைஞர்க்கு நாவலர் தந்த நல்ல பரிசாகும். இவ்வுரை இளைஞர் உலகில் என்றும் நிலைத்து வாழும்.

நாவலர் பல ஆண்டுகள் தமிழ் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டு மாணவர் உள்ளத்தை அறிந்து சிறந்த முறையில் உரை இயற்றியுள்ளார். ஒவ்வொரு சூத்திரத்தின் கீழேயும் 'பரிட்சை வினாக்கள்' இடம் பெற்றுள்ளன. ஆகுபெயர், அன்மொழித் தொகை வேறுபாடுகளை மிகத்தெளிவாக இனிய முறையில் சிறுசிறு வாக்கியங்களில் விளக்குகின்றார் நாவலர்.

நூலின் இறுதியில் பிற்சேர்கையாக அப்பியாசம் என்னும் தலைப்பில் பல பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இவ்வாறு அறுபது பகுதிகளில் பல்வேறு பயிற்சிகள் இடம்பெற்றுள்ளன. இலக்கண அமைதி என்ற பகுதியில் சொல்லுக்கும் வாக்கியங்களுக்கும் இலக்கணம் கூறும் முறை விளக்கப்பட்டுள்ளது. பல சொற்களுக்குப் பகுபத இலக்கணம் காட்டப்பட்டுள்ளது. சொல்லிலக்கண சூசி என்ற தலைப்பில் சொற்களின் வகைகளை விரிக்கின்றார். தொடர் இலக்கணம் கூறிப் பல வாக்கியங்களைத் தெளிவுபடுத்துகின்றார்.

## இராமலிங்க அடிகள்

இராமலிங்க அடிகள், வள்ளலார் என்ற பெயரோடு, உலக மக்கள் போற்றும் அருட்பெருஞ்சுடர், இவரது வாழ்க்கை வரலாற்றை நாடு நன்கு அறியும். வள்ளார், உரையாசிரியராய் - பதிப்பாசிரியராய்ச் சிறந்து விளங்கினார். இவர் இயற்றிய உரை நூல்கள்:

1. பொன்வண்ணத்தந்தாதி (பாடல்-22) உரை
2. வேதாந்ததேசிகர் குறட்பா உரை
3. தமிழ் என்பதன் உரை
4. ஒழிவிலொடுக்க உரை
5. பெரியபுராண உரை
6. தொண்ட மண்டல சதக உரை

வள்ளலாரின் உரைத்தொண்டு, திருவருட்பா வியாக்கியானப்பகுதி (மூன்றாம் புத்தகம் பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு) யில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள பாயிரம் என்ற அரிய ஆராய்ச்சி முன்னுரை, பல நல்ல கருத்துக்களைத் தெரிவிக்கின்றது. அவற்றைக் காண்போம்.

''சுவாமிகள் மறந்தும் தாம் ஓர் வியாக்கியான கர்த்தாவாகத் தொழிற்படவிரும்பவில்லை. தம்மைவியாக்கியான கர்த்தாவாக அவர்கள் கருதவில்லை. இவ்வியாக்கியானங்களில் பெரும் தொடர்ந்து மறுக்க மனம் வராத பரம தாக்ஷிண்ய நிலையில் அவரவர் பொருட்டு அப்போதப்போது எழுதி உதவியன''.

இவ்வாறு உரை நூல்கள் வாயிலாக அவரது பல திறப்பட்ட புலமைகள் வெளிப்படுகின்றன. ‘‘ஒழிவிலொடுக்க உரையினின்றும் அவர்களது சித்தமார்க்க ஞானத்தையும், குறட்பா உரையினின்றும் அவர்களது சித்த மார்க்க ஞானத்தையும், தமிழ் உரையினின்றும் அவர்களது மந்திர சாஸ்திர ஞானத்தையும், தொண்ட மண்டல சதக உரையினின்றும் அவர்களது இலக்கிய இலக்கண தர்க்க ஞானத்தையும், பெரியபுராண உரையினின்றும் அவர்களது வேதாகம தத்துவாநுபவ ஞானத்தையும் அறிந்து கொள்ளலாம்’’. (பாயிரம் ப.21).

வள்ளலார் காலத்தில் வாழ்ந்த ஆறுமுகநாவலர், இவரது உரை நூல்களில் உள்ள குற்றங்களை எடுத்துக் காட்டினார். தொண்ட மண்டலமா? தொண்டை மண்டலமா? என்ற வினாவை எழுப்பினார். வள்ளாரின் ஒழிவிலொடுக்க உரைப்பதிப்பில் இருந்த தவறுகளைப் பட்டியல் போட்டு, சிறு நூல் ஒன்று வெளியிட்டார்.

நாவலரின் மறுப்புரை, நம் ஆராய்ச்சியைத் தூண்டுகிறது, நாவலரின் புலமை மாண்பைக் காட்டுகின்றது. ஆதலின் நாவலர் வெளியிட்ட மறுப்பை அறிய விரும்புவோர், ஆறுமுக நாவலர் பிரபந்த திரட்டு என்ற நூலில் உள்ள ‘பொலியருட்பா மறுப்பு’ என்ற கட்டுரையைப் படித்துப் பார்க்கலாம்.

### டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர்

சிறந்த பதிப்பாசிரியராகிய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் சில நூல்களுக்கு உரையும் எழுதியுள்ளார். குறுந்தொகைக்கு உரையும், பெருங்கதை, மணிமேகலை,

குமர குருபரர் நூல்கள் ஆகியவற்றிற்குக் குறிப்புரையும் இயற்றியுள்ளார்கள் இவரது உரைகள் ஆராய்ச்சிக் களஞ்சியம்.

**குறுந்தொகை உரை**

குறுந்தொகையுரையில் 'முளிதயிர் பிசைந்த' என்னும் பாடலுக்கு (167) இவர் தரும் பொருள் பொருத்தமாக இல்லை.

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**

**கழுவுறு கலிங்கம் கழாஅது உமஇ"**

என்ற அடிகளுக்கு, "முற்றிய தயிரைப் பிசைந்த காந்தள் மலரைப் போன்ற மெல்லிய விரலைத் துடைத்துக் கொண்ட ஆடையைத் துவையாமல் உடுத்துக்கொண்டு" என்று பொருள் கூறுகின்றார்.

மறைமலை அடிகள் முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரையில் (1931, ப.10) மேலே காட்டிய வரிகளுக்கு, "வற்றக் காய்ச்சின கட்டித்தயிரைப் பிசைந்த காந்தள் மலர் முகிழ் போற் சிவந்த மெல்லிய விரல்களால், நன்கு கழுவி வெண்மையான உயர்ந்த ஆடை, சமையல் செய்யும் விரைவினால் இடுப்பினின்றும் அவிழ்த்து கழல அதனைக் கை கழுவாமலே உடுத்திக் கொண்டு என்று பொருள் உரைக்கின்றார். இப்பொருளே பொருத்தமாய் உள்ளது.

குறுந்தொகை, உரையைப் பற்றி எஸ்.வையாபுரிப் பிள்ளை பின்வருமாறு உரைக்கின்றார்.

'இவர் தாமாக முழுப் பொறுப்பையும் ஏற்று நன்றாக உழைத்து வந்தது சுமார் 1930 வரை என்றுதான் சொல்லுதல் வேண்டும். இதற்குப்பின் தளர்ச்சி மேலீட்டினால் ஐயர் தமது சிஷ்யர்களையே முற்றும் நம்பிவிட வேண்டியதாயிற்று இதனால் முன் பதிப்பித்த நூல்களின் செம்மைப் பாடு பின்வந்தவற்றுள் இல்லை.

இதற்கு உதாரணமாகக் குறுந்தொகை பதிப்பைக் கூறலாம். இதன் கண்ணே பாட நிச்சயத்திலும், பொருள் உணர்ச்சியிலும் பிழைகள் பல உள்ளன என்பது தமிழிறிஞர்கள் நன்கு உணர்ந்ததே''

பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் பணியில் தம் வாழ்நாட்களைக் கழித்துவிட்ட பெரியவர் இவர். புதுமைக் கவிஞர் பாரதியார் இவரை.

**பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்**

**காலமெல்லாம் புலவோர் வாயில்**

**துதியறிவாய் அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்**

**இறப்பின்றித் துலங்கு வாயெ**

என்று வாயாரப் புகழ்கின்றார்.

சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குறுந்தொகை ஆகிய நூல்களை இவருக்கு முன்னரே தமிழறிஞர்கள் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர்.

சீவகசிந்தாமணியை 1868 -ஆம் ஆண்டு நாமகள் இலம்பகம் மட்டும், எச்.பவர் ஆங்கில விளக்கத்துடன் வெளியீட்டார். ப. ரங்கசாமிப் பிள்ளை 1883 -ஆம் ஆண்டில் புதுமையார் இலம்பகம் வரை வெளியிட்டார். டாக்டர் ஐயர் 18 88 -ஆம் ஆண்டில் நச்சினார்க்கினியர் உரையுடன் சீவக சிவந்தாமணியைத் திருத்தமாக வெளியிட்டார். சிந்தாமணியை வெளியிடுமாறு டாக்டர் ஐயரைத் தூண்டியவர் சேலத்தில் வாழ்ந்த இராமசாமி முதலியார். அப்பெரியவர் இறந்துபோன செய்தியைக் கேட்டபோது தம் நெஞ்சத்தில் தோன்றிய எண்ண அலைகளைப் பின்வருமாறு டாக்டர் ஐயர் தம் வாழ்கை வரலாற்றில் எழுத்து வடிவில் தருகின்றார்

“1892 -ஆம் வருஷம் மார்ச்சு மாதம் இரண்டாம் தேதி அவர் (இராமசாமி முதலியார்) உலக வாழ்வை நீத்தார். அந்த துக்கச் செய்தியைக் கேட்டு நான்

துடித்துப் போனேன். அவருடைய பழக்கம் எனக்கு ஏற்பட்டதையும் அதனால் பழந்தமிழ் நூலாராய்ச்சியிலே நான் புகும்படி நேர்ந்ததையும் எண்ணிப் பார்த்தேன். அவருடைய தூண்டுதல் இல்லாவிட்டால் சிந்தாமணியை நான் அச்சிடுவது எங்கே? சங்க நூல்களின் பெருமையை உணர்ந்து இன்புற்று வெளிப்படுத்தும் முயற்சிக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்.

சீவகசிந்தாமணியை நன்கு பதிப்பித்துத் தேர்ச்சி பெற் பின், டாக்டர் ஐயர் பல தமிழ் நூல்களை ஒன்றன்பின் ஒன்றாய் வெளியிட்டார். சிலப்பதிகாரத்தை 1892 -ஆம் ஆண்டில் அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரை ஆகியவற்றுடன் வெளியிட்டார். இவருக்கு முன்னரே 1872 -ஆம் ஆண்டில் சோடசாவதானம் சுப்பராய் செட்டியாரும், 1876 -ல் (புகார்க் காண்டம் மட்டும்) தி.ஈ.ஸ்ரீவாச ராகவாசாரியரும் தாமே உரை எழுதி வெளியிட்டுள்ளனர்.

மணிமேகலையை ஐயர் 1898 -ஆம் ஆண்டில், குறிப்புரையுடன் வெளியிட்டார். ஆனால் அதற்கு முன்னரே மணிமேகலை 1894 -ஆம் ஆண்டில் திருமயிலை சண்முகம் பிள்ளையால் வெளியிடப்பட்டது.

இவ்வாறு இவருக்கு முன்னரே இந்த நூல்களும் பிறரால் வெளியிடப்பட்டிருப்பினும் செவ்வையாகவும் திருத்தமாகவும் பதிப்பித்து ஆராய்ச்சிப் பகுதிகளைச் சேர்த்த பெருமை இவருக்கு உண்டு.

எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, கலித்தொகை, அகநானூறு தவிர ஏனைய ஐந்து நூல்களைப் பழைய உரைகளுடன் மிகத்திருத்தமாக வெளியிட்டார். பத்துப்பாட்டை நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பித்தார். நன்னூலை, மயிலைநாதர் உரை, சங்கர நமச்சிவாயர் உரை ஆகிய இரு உரைகளுடன் பதிப்பித்தார். இவைகளேயன்றிப் பல சிற்றிலக்கியங்களை பதிப்பித்தார்.

ஆராய்ச்சியாளருக்கு இவரது பதிப்புப் பெரிதும் பயன்படுகிறது. இவர் பதிப்பித்த எல்லா நூல்களின் முன்னும் பின்னும் ஆராய்ச்சிக் குறிப்புகள் நிறைந்திருக்கும் நூலாசிரியர் உரையாசிரியர் பற்றி வரலாறுகள் இடம் பெற்றிருக்கும். உரையில் காட்டப்பட்ட மேற்கோள் நூல்களின் பட்டியல் சேர்ந்திருக்கும் செய்யுள் அகராதியும் அரும்பத அகராதியும் தரப்பட்டிருக்கும்.

ஒரு பெரிய தமிழ்ப் பேரவையில் பல புலவர்கள் கூடிப் பல ஆண்டுக்ள பொறுமையாக ஆய்ந்து பதிப்பித்திருக்க வேண்டிய பல நூல்களை இவர் ஒருவரே பதிப்பித்துப் பெருந்தொண்டு ஆற்றியுள்ளார்.

## ந.மு.வேங்கடசாமி நாட்டார்

ந.மு.வேங்கடசாமி நாட்டார் தலைசிறந்த தமிழ் நூல்களுக்கு உரை இயற்றித் தம் பெயரை நிலைநாட்டிச் சென்றுள்ளார். இவருடைய தமிழ்நடை, ஆற்றல் நிறைந்தது, எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவாக விளக்குவது. இலக்கண வரம்புடையது. இவரது உரை, தமிழ் மரபுணர்ந்து எழுதப்பட்ட செவ்விய உரையாகும்.

இவர் அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, நானாற்பது, திருவிளையாடற் புராணம் ஆகியவற்றிற்கு உரை இயற்றியுள்ளார்.

ந.மு.வேங்கடசாமி நாட்டார் 'ஈன்று புறந்தருதல்' என்னும் புறநானூற்றுப்பாடலை (312) விளக்கியபோது அப்பாடலில் உள்ள சான்றோன் என்ற சொல்லுக்கு 'வீரன்' என்ற பொருள் கூறி, 'நன்னடை' என்ற பாடத்தை நீக்கிவிட்டு, அடிக்குறிப்பில் பாடவேறுபாடாகத் தரப்பட்டுள்ள 'தண்ணடை' என்ற பாடத்தைப்

பாட்டில் அமைத்துக் கொண்டு நல்லதொரு விளக்கம் கூறினார் என்று அவருடைய மாணவர்கள் கூறுகின்றனர். அவர் கருத்தின்படி, அந்தப் புறப்பாட்டு பின்வருமாறு அமையும்.

**“ஈன்றுபுறம் தருதல் என்றலைக் கடனே**

**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**

**---------------------------------------------------**

**களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே” (புறம்.312)**

இப் பாடலுக்கு அப் பெரியார் கூறிய விளக்கத்தையும் அதன் சிறப்பையும் காண்போம்.

இப்பாடலின் திணை, வாகை, துறை, மூதின் முல்லை. ‘மூதின் முல்லை’யைப் புறப்பொருள் வெண்பாமாலை பின்வருமாறு விளக்குகின்றது.

**“அடல்வேல் ஆடவர்க்கு அன்றியும் அவ்இல்**

**மடவரல் மகளிர்க்கும் மறமிகுத் தன்று” (3:21)**

மறக்குடியில் பிறந்த ஆண்மக்களுக்கேயன்றி பெண் மக்களுக்கும் வீரம் உரியது என்று இத்துறை கூறுகின்றது.

மேலே காட்டிய ‘ஈன்று புறம் தருதல்’ என்னும் பாட்டு மறக்குடி மகள் ஒருத்தியின் கூற்றாக அமைந்துள்ளது. ‘‘நான் சிறந்த ஆண்மகனைப் பெற்றெடுக்கிறேன், தந்தை அவனை வீரனாக்கட்டும், கொல்லன் வேல்வடித்துக் கொடுக்கட்டும், யான் பெற்ற காளை போரில் புகுந்து யானையைக் கொன்ற வீழ்த்தட்டும், மன்னன் அவனுக்கு வளமான வயல்களைத் தரட்டும்!’’ என்று அவள், தான் தோன்றிய வீரக்குடிக்கு ஏற்பக் கூறுகின்றான்.

இவ்வாறு பொருள் கொள்ளும் போது துறைக்கு ஏற்ற பாடாக அது விளங்குகிறது.

**சான்றோன் ஆக்குதல்**

சான்றோன் என்ற சொல்லுக்குப் போர்வீரன் என்ற பொருள் உண்டு. புறநானூற்றுக்குக் குறிப்புரை எழுதிய டாக்டர் உ.வே.சா. 'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே என்ற அடிக்கு, "தன் குலத்துக்குரிய படைக்கலப் பயிற்சியாகிய கல்வி, அதற்குரிய அறிவு, அதற்குரிய செய்கைகள் ஆகிய இவற்றால் நிறைந்தவனாகச் செய்தல் தகப்பனுக்குக் கடமையாம்" என்று எழுதியுள்ளார். பாட்டின் திணை, துறை ஆகிய இரண்டையும் மனத்தில் கொண்டு எழுதிய நல்ல விளக்கம் இது.

பதிற்றுப்பத்தில், சான்றோன் என்ற சொல், போர் வீரனைக் குறிக்கும் இடங்கள் பல உள்ளன.

**நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை - 14:12**

**ஏந்தெழில் ஆகத்துச் சான்றோர் மெய்ம்மறை - 58:11**

**சாந்தெழில் மறைத்த சான்றோர் பெருமகன் - 67:18**

என்ற இடங்களில் சான்றோர் என்ற சொல் போர் வீரனையே குறிக்கின்றது. எனவே, பாட்டின் திணை துறை இவற்றிற்கேற்ப, சான்றோன் என்ற சொல்லுக்குப் போர்வீரன் என்று பொருள் கொள்வதே பொருத்தமாகும்.

**தண்ணடை நல்கள்**

போரில் சிறந்த வெற்றிச் செயல்களைச் செய்த வீரர்களுக்கு மருத நிலங்களைத் (தண்ணடை) தருதல் அக்காலத்தில் வழக்கமாய் இருந்தது. (புறம்.285), (புறம்.287), (புறம்.297) என்று வரும் புறநானூற்றுப் பாடற்பகுதிகள், மன்னர்கள் வீரர்களுக்குத் தண்ணடை நல்கும் வழக்கம் இருந்ததை உணர்த்தும். மேலும், புறப்பொருள் வெண்பாமலையுள், (2:12), (3:2) என்று வரும் இடங்கள், வீரர்கள் தண்ணடை பெற்றதை அறிவிக்கின்றன.

## திரு.வி.க

திரு.வி.க அவர்களைத் தமிழகம் நன்கு அறியும் இவர் நாவலராய் - பாவலராய் - செந்தமிழ்க்காவலராய் - எழுத்தாளராய் விளங்கினார். இவர் சில நூல்களுக்கு உரையும் இயற்றியுள்ளார்.

இவர் பெரிய புராணத்திற்குக் குறிப்புரை இயற்றி வெளியிட்டார். திருக்குறள், முதல்நூறு குறள்களுக்கு விளக்கவுரை கண்டார். பட்டினத்தார் பாடல், பத்திரகிரியார் புலம்பல் ஆகியவற்றிற்கு விருந்தியுரை இயற்றினார்.

இவர் இயற்றியுள்ள திருக்குறள் விளக்கவுரை நயம் பல கொண்டது புதுமைப்போக்கு உடையது. விரிவானது எண்குணத்தான் (10) என்பதற்கு ''எண்ணும் குணத்தான். அன்பர் என்னும் குணங்களை உடையவன்'', என்றும் 'குணம் என்னும் குன்றேறி நின்றார்' என்ற குறளுக்கு, ''குணம் என்னும் மலை ஏறி நின்றவர், தம்முள் கோபத்தை ஒரு நொடிப் பொழுதேனும் பாதுகாத்தல். இல்லை குணக்குன்றுகட்குக் கோபம் பிறப்பதில்லை'' (27) என்றும் புதிய விளக்கம் தருகின்றார்.

'அன்பிற்கும் உண்டோ' என்னும் குறளுக்கு இவர் தரும் விளக்கம் இயக்கியச்சுவை மிகுந்ததாகும். பட்டினத்தார் பாடல்களுக்கு மிக அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் விளக்கவுரை தருகின்றார்.

**''வித்தை கற்கும் ஆசையது விட்டொழியேன் என்குதே**
**சித்து கற்கும் ஆசை சிதையேனே என்குதே''**

என்பது பத்திரகிரியார் புலம்பல். இதற்குத் திரு.வி.க. உரை பின்வருமாறு உள்ளது.

(பொ-ரை) ‘‘கல்வி பயிலும் விருப்பம் என்னை விட்டு நீங்கேன் என்கிறது. சித்துக்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்னும் ஆசை அழயென் என்கிறது.

(வி-ரை) ‘கல்வி என்னும் பல கடல் பிழைத்தும், என்றார் வாதவூரர். சித்தாசை பெரும் பைத்தியம். ஆசைகயில் தலையாயது சித்தாசை என்னலாம்.

## வினாக்கள்

1. சரவணபெருமாள் ஐயர் உரைநயத்தினை விளக்குக
2. இராமலிங்க அடிகள் உரைநயத்தினைப் எடுத்துரைக்க.
3. ஆறுமுக நாவலர் உரை நயத்தினை தெளிவுப்படுத்துக.
4. உ.வே.சாமிநாத ஐயர் உரை நயத்தினைப் புலப்படுத்துக.
5. திரு.வி.க.உரைநடை திறனை விவரிக்க?
6. ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரையின் இயல்புகளை விளக்குக

**பாட நூல்கள்**


1. மு.வை.அரவிந்தன், 2012 - உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. இரா.மோகன், ந.சொக்கலிங்கம், 1985 - உரைமரபுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.


**பார்வை நூல்கள்**


1. மு.முனிஸ் மூர்த்தி, 2016 - உரையாசிரியர்களின் செவ்வியல் நோக்கு, இராச.குணா பதிப்பகம், சென்னை.
2. தசரதன், 1983 - இலக்கிய உரையாசிரியர்களின் தொடரியல் கோட்பாடுகள், இண்டர்நேஷனல் பிரிண்டர்ஸ் அண்டு பப்ளிகேஷன்ஸ், சென்னை.
3. ச.தண்டபாணி தேசிகர், 1999 - திருக்குறள் உரைக்கொத்து (பாயிரவியல்), பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
4. தி.சு.நடராசன், உரைகளும் உரையாசிரியர்களும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.



**முனைவர் சு.பேச்சியம்மாள்,**

தமிழியல் துறை,

உதவிப்பேராசிரியர்,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,

9788749246.

spetchi29@gmail.com